கல்கி

KALKI 1.2.98 ரூ. 4.50

தேர்தல் ஸ்பெஷல் - II

வடக்கு முழுவதும் சோனியா அலை!
— நேரடி ரிப்போர்ட்



"நம்புங்க, நான் +2தான்!"


சாரதா'ஸின்
இவ் வருடத்தின் புதிய
டிசைன்கள்
சிம்ரன்
பண்டிகை வந்தால் –
புது உடை கொள்வது
அக்காலம்
சாரதா'ஸ்
வந்தால்
பண்டிகைதானே
எப்போதும்!
சாரதா'ஸ்
(முகூர்த்த பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)
827, அண்ணா சாலை,
தன்பில்டிங், சென்னை - 2.
போன் : 852 11 77
32, என்.எஸ்.பி. ரோடு,
திருச்சி - 2.
போன் : 702077
சாரதாஸ் திருச்சி - 2, சென்னை - 2.
தவிர வேறு எங்கும் கிளைகள் கிடையாது.

தேர்தல் '98 — நேரடி ரிப்போர்ட்

பத்திரிகைத் தொடர்கதைகளும் மாதாந்திர நாவல்களும் சினிமா இடைவேளைக்கு முந்தைய காட்சிகளும் தராத திடுக்கிடும் திடீர் திருப்பத்தைத் தருவதற்காகப் பன்னிரண்டாவது மக்களவை இடைத் தேர்தல் வருகிறது. சமயம் அதிகம் இல்லை. தலைநகரில் கட்சிகள் வெறிபிடித்தாற்போல் வேலையில் இறங்கி விட்டன. பிரதான கட்சிகள் யாவும் தம் முதல் வேட்பாளர் பட்டியலை அறிவித்து விட்டன. சீட் கிடைத்தவர்கள் நன்றி அறிவித்துக் கொண்டும் (கட்சி மூலவர்களுக்கு ஓபராய், ஷெராட்டனில் விடிய விடிய பார்ட்டி) கிடைக்காதவர்கள் கட்சி மாறிக் கொண்டு, சீட் கிடைக்காததால் மாறவில்லை என்று அப்பன் குதிரைக் காட்டிக் கொண்டும் (லேட்டஸ்ட் - பிஜேபியின் முன்னாள் எம்.பி. திருமதி ரஜினிபாடீல் காங்கிரஸில் சேர்ந்திருப்பது) சுடச்சுட அறிக்கை, எதிர் அறிக்கை விட்டுக்




வடக்கு முழுவதும் சோனியா அலை!

கொண்டும் பொதுக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து கொண்டும் நிதி வசூலுக்கு ஆட்களை அனுப்பிக் கொண்டும் (பிஜேபி தலைமை அலுவலகத்தில் இதற்காக ஒரு கௌண்ட்டரே திறந்து விட்டார்கள்!) பசி, தூக்கம் மறந்து வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் தேர்தலைப் பொறுத்தவரை நேரடிப் போட்டி பி.ஜே.பிக்கும் காங்கிரஸுக்கும்தான். பிஜேபிக்கும் ஐக்கிய முன்னணிக்கும் இல்லை! காரணம் - சோனியா.

கடந்த தமிழக சட்டசபைத் தேர்தலின் போது, ரஜினியின் எதிர்பாராத, அதிரடி பிரசாரப் பிரவேசம் எப்படி ஒரு புயலைக் கிளப்பியதோ, அதே மாதிரி சோனியாவின் பிரவேசம்

காங்கிரஸுக்கு வடஇந்திய மக்கள் மத்தியில் ஒரு புதிய செல்வாக்கை உண்டுபண்ணி இருக்கிறது என்பது மறுக்க முடியாத விஷயம். இந்த உவமை கூட நாம் சொல்லவில்லை. புதுதில்லி அக்பர் ரோடிலுள்ள காங்கிரஸ் காரிய கமிட்டியின் தலைமை அலுவலகத்தில் சில விநாடிகள் மட்டும் பேசக் கிடைத்த சீதாராம் கேசரி சொன்னது. ("நான் உளமார சந்தோஷப்படுகிறேன். அவரது வரவு காங்கிரஸுக்கு பலமும் நாட்டுக்கு நலமும் தரும்.") சோனியாவின் வரவால் மிக பாதிக்கப்படப் போகிறவர் கேசரிதான் என்பது வேறு விஷயம்.



• அத்வானி

காங்கிரஸின் கோஷ்டிப் பூசல்கள், ஊழல் கறைகள், மோசமான அரசியல் கலாசாரம், செல்வாக்குச் சரிவு எல்லாமே சோனியாவின் வரவால் சரி செய்யப்பட்டு விடும் என்று காங்கிரஸில் எஞ்சியுள்ள தலைவர்கள் தீவிரமாக நம்புகிறார்கள். (காண்க – சிந்தியா பேட்டி) தேர்தல் பணிகளில் அவர்களின் தீவிரம் கூடியிருக்கிறது. ஒவ்வொரு வேட்பாளரும் (இன்னும் அறிவிக்கப்படாதவர்களும்) தம் தொகுதியின் மேல் சோனியாவின் விமானமாவது பறந்து போகாதா என ஏங்குகிறார்கள். ஆனால் எங்கெல்லாம் காங்கிரஸ் படுமோசமாக அடிவாங்கி இருக்கிறதோ, அந்தப் பகுதிகளில் மட்டுமே இருக்குமாறு சோனியாவின் சுற்றுப் பயணத் திட்டத்தை அமைக்கிறார்கள் அர்ஜுன்சிங் போன்றோர். ஸ்ரீபெரும்புதூரிலிருந்து அவர்தம் பயணத்தைத் தொடங்கியது கூட, ராஜீவ் நினைவிடத்திலிருந்து தொடங்க வேண்டும் என்கிற சென்டிமென்ட் காரணத்தால் மட்டும் அல்ல. எப்படியாவது ஒரே ஒரு சீட்டேனும் த.நா.வில் பெற்று விட வேண்டுமென்கிற நோக்கம்தான். தேர்தலுக்குப் பத்து நாட்கள் முன்பு ரீ-விசிட் இருக்கலாம் என்கிறது காங்கிரஸ் வட்டாரம்.

அவரது பேச்சுக்கள் மிகக் கவனமாகத் தயாரிக்கப்படுகின்றன. அரசியல் 'பி.வாக'க்களால் உருவாக்கப்படும் சென்டிமென்ட் நிறைந்த வசனங்களால், மகுடிப் பாம்பாக அவர் மக்களைச் சொக்க வைக்கிறார்.

நாம் பயணம் மேற்கொண்ட தில்லி, உ.பி., பீகார், மேற்கு வங்க மாநிலங்களில் சந்தித்த பெரும்பாலான பெண்கள், ராஜீவின் கோர மரணத்தை நினைத்து நினைத்து ஞாபகப்படுத்திக் கொண்டு, சோனியா மேல் அனுதாபப் பார்வை வீசுகிறார்கள். சோனியாவுக்காக மட்டும் காங்கிரஸை மன்னிக்க அவர்கள் தயாராயிருப்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

இதனால் மத்தியபிரதேசம், ஒரிசா தவிர வடக்கே அநேகமாக அத்தனை மாநிலங்களிலுமே சரிந்துள்ள கங்கிரஸின் செல்வாக்கை மறுபடி மீட்டுவிட முடியும்; பெண்கள் தவிர, கிறிஸ்தவர்கள், தலித் இனத்தவர், சிறுபான்மை முஸ்லிம் வோட்டுக்களைக் கூடச் சுலபமாகப் பெற்றுவிடலாம் என்று காங்கிரஸ் தலைவர்கள் நினைக்கிறார்கள். (பீகாரில் லாலுவுடன் கூட்டணி அமைத்ததன் நோக்கமே, அவரது ஆதரவாளர்களான முஸ்லிம் மற்றும் யாதவ் இனத்தவர்களின் வோட்டுக்களைப் பெறலாம் என்ற நம்பிக்கையால் தான்!)


• சுஷ்மா ஸ்வராஜ்

தவிர கேசரி மேல் உள்ள கடுப்பால் பிரிந்து போன மணிசங்கர ஐயர், மம்தா பானர்ஜி, சித்தார்த்த சங்கர் ரே, அஜித் பாஞ்சா இன்ன பிற முக்கிய முன்னாள் காங்கிரஸ் தலைவர்கள் தேர்தலுக்குக் கொஞ்சம் முன்பாகவேனும் மறுபடி ஒன்றுசேர்ந்து வந்து விடக்கூடும் என்று நப்பாசைப்படுகிறார்கள். இதற்குத் தோதாக, "நான் எப்போதுமே ராஜீவ் குடும்பத்தின் நெருங்கிய நண்பன்" என்கிறார் மணிசங்கர ஐயர்.

"சோனியா மேல் என் மரியாதை கொஞ்ச நஞ்சமல்ல. அவர் விரும்பினால் நான் பேசத் தயார்" என்கிறார் மம்தா.

இணைப்பு * முயற்சிகளுக்கான ஆலோசனை – செயல் திட்டங்களுக்காக, அறிவிக்கப்படாத ஒரு குழுவே தில்லியில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்கிறது செய்தி நிறுவன வட்டாரம். இந்த அறிவிக்கப்படாத குழுவின் நியமிக்கப்படாத தலைவராகச் செயல்பட்டுக் கொண்டிருப்பவர் மாதவராவ் சிந்தியா – ஏற்கெனவே 96-ல் காங்கிரஸிலிருந்து விலகி தனித்து நின்று (குவாலியர் தொகுதி – ம.பி.) ஜெயித்து, பின் மறுபடி காங்கிரஸில்

இணைந்திருப்பவர்.

இதெல்லாம் போதாது; காங்கிரஸின் இமேஜ், ஒரேயடியாக உச்சத்துக்கு உயர்ந்தாலொழிய பிஜேபியை வரவிடாமல் தடுக்க முடியாது. அதற்கான நடவடிக்கையை எடுங்கள் என்று சோனியாவுக்கு தினசரி சாம்பிராணி போட்டுக் கொண்டிருக்கிறார்கள், அவரது தீவிர ஆதரவாளர்கள்.

அதாவது, தேர்தலுக்குச் சரியாகப் பதினைந்து நாட்களுக்கு முன்பு சோனியா தாமாக முன்வந்து கட்சித் தலைமைப் பொறுப்பை ஏற்பது!

இந்த விஷயத்தில் சற்றுக் குழம்பியிருக்கும் சோனியா, இம்முடிவுக்கு வரக் கொஞ்சம் தாமதமாகலாம் என்று காங்கிரஸ் தரப்பிலேயே சொல்லப்பட்டாலும் அப்போதைக் கிப்போதே சொல்லி வைப்போம் என்று கேசரி மட்டும், "அவர் வந்தால், நான் வரவேற்று மாலையிட்டு வழிவிடத் தயார்'' என்று கருதி குறைந்த குரலில் சொல்கிறார்.

கடந்த தேர்தலில் பெற்ற 142 சீட்களில் குறைந்தது அறுபதையாவது இழக்க நேரிடும் என்று அஞ்சிய காங்கிரஸ், இன்று சோனியாவின் வரவால் 142-க்கு மேல், குறைந்தது 50 சீட்களாவது கிடைக்கும் – ஐ.மு. ஒத்துழைப்புடன் ஆட்சியைப் பிடிக்கலாம் என்று கணக்குப் போட்டுப் பார்த்துக் கொண்டிருக்கிறது.


• வாஜ்பாயி


• முரளி மனோகர் ஜோஷி

பெண்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், புதிய முகங்களுக்கு மட்டுமே இம்முறை அதிக சீட்; ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்களுக்குப் போட்டியிட சீட் தரப்பட மாட்டாது என்று உறுதியாக அறிவித்து, அதன்படியே இதுவரை செயல்பட்டு வருகிறது. (நரசிம்மராவுக்கு இதுவரை சீட் ஒதுக்கப்படவில்லை.)

"காங்கிரஸின் மொத்த வேட்பாளர்களில் நாற்பது சதவீதத்தினர், இம்முறை பெண்களாக இருப்பார்கள்'' என்றார் பொதுச் செயலாளர் தாரிக் அன்வர்.

இத்தனை புதிய உத்வேகமும் உற்சாகமுமாகக் காங்கிரஸ் மறுபடி எழுந்திருக்கும் என்று கனவிலும் நினைத்திருக்காது பிஜேபி. தமது ஒரே போட்டி, ஐக்கிய முன்னணிதான்; இம்முறை நிச்சயம் அதனை வீழ்த்தி, அறுதிப்பெரும்பான்மை பெற்று விடலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தது பிஜேபி. இந்தக் கனவை சோனியா கவிழ்த்துவிடவே, எந்த ஐமுவை '13 கட்சிகளால் ஒட்டுப் போட்டது' என்று சொன்னார்களோ, அந்தப் பதிமூன்றையும் தாண்டி இதுவரை மொத்தம் 18 பிராந்தியக் கட்சிகளுடன் கூட்டணி அமைக்க வேண்டிய நிலைமை பிஜேபிக்கு உருவாகி விட்டது!

அதிகம் கூட்டணிகள் இல்லாமல், சென்ற '96 தேர்தலில் தாமாகவே 180 சீட்களும் ஓரிரு தோழமைக் கட்சிகளின் இடங்களைச் சேர்த்து 193 சீட்டுகளுமாய்ப் பெறமுடிந்த பிஜேபி, இம்முறை இத்தனை மாநிலக் கட்சிகளுடன் தேர்தல் உடன்படிக்கை செய்து கொள்ள நேர்ந்த அவசியம் என்ன?

''நாட்டுக்கு நிலையான ஆட்சியைத் தருவது ஒன்றே எங்கள் நோக்கம். இக்கூட்டணிகள் யாவும் அதற்காக உருவாக்கப்பட்டவையே. நிலையான ஆட்சி என்பது பிஜேபியைத் தவிர வேறெந்தக் கட்சியாலும் இனி தர முடியாத ஒன்று!'' என்கிறார் முரளி மனோகர் ஜோஷி.

எக்கச்சக்க முரண்பாடுகளுள்ள இத்தனை பிராந்தியக் கட்சிகளுடன் கூட்டணி வைத்துக் கொண்டு எப்படி நிலையான ஆட்சியைத் தரப் போகிறது?

கூட்டணி அறிவிக்கப்படுவதற்கு முன்பே லட்சுமி பார்வதி, அமைச்சரவையில் (ஒருவேளை ஏற்படுமானால்!) தம் கட்சிக்கு என்னென்ன துறைகள் ஒதுக்கப்பட வேண்டும் என்று மளிகை சாமான் லிஸ்ட் மாதிரி ஒரு பட்டியல் தருகிறார்.

ஒரிஸாவில் ரவிபட்நாயக்கோ, 'மத்தியில் எக்கேடும் கெடட்டும், எப்படியாவது நான் ஒரிஸாவின் முதல்வராவதற்கு வழிசெய்யுங்கள்' என்று மறைமுகமாக நச்சரித்துக் கொண்டிருக்கிறார்.

கூட்டணி அறிவிக்கப்பட்டாலும், பிஜேபியைக் கண்டுகொள்ளவே செய்யாமல், தம் இஷ்டத்துக்குத் தம் கட்சி ஆட்களை

எல்லா இடங்களிலும் நிறுத்தி பிஜேபி வயிற்றில் புளியைக் கரைக்கிறார் மேற்கு வங்க மம்தா (விரிவான கட்டுரை தனியே).

இதெல்லாம் கூடப் பரவாயில்லை. 'க்ளீன் இமேஜ்' உள்ள பிஜேபி, ஊழல் கோட்டையான அதிமுகவுடன் கூட்டு வைத்திருப்பது; விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான பா.ம.க.; ம.தி.மு.க.வுடன் (வேறு வழியில்லாமல்) தோழமை கொள்வது - இதெல்லாம் எத்தனை நாட்களுக்கு ஆட்சியை நிலைக்கச் செய்யும்?

தவிர, ''வட இந்தியாவைப் பொறுத்தவரை பெரும்பான்மை மக்கள் மத்தியில் பாஜகவின் செல்வாக்கு உயரக் காரணமே அவர்களது ஹிந்துத்வா கொள்கையும் ஜென்மபூமி சமாசாரங்களும்தான். சிவசேனா, பிஜேபியுடன் உறவு கொண்டாடுவதன் காரணமும் இதுதான். இது இப்படி இருக்க, மதச்சார் பற்ற கட்சிகள் என்று சொல்லிக் கொள்ளும் பிராந்தியக் கட்சிகளுடன் கூட்டணி வைத்துக் கொண்டது எப்படி? 'இந்துத்வா'வை மறந்தால், வடக்கே பிஜேபியின் செல்வாக்கு அடிபடும். அதைப் பிடித்துக் கொண்டாலோ, கூட்டணிக் கட்சிகள் காலைவாரி விட்டு விடும்! ரொம்பப் பரிதாப நிலையில் இருக்கிறது பிஜேபி' என்கிறார் மாதவராவ் சிந்தியா.

யார் என்ன சொன்னாலும் தேர்தல் முடியும் வரை அயோத்தி பிரச்னை பற்றி வாயைத் திறப்பதில்லை என்கிற உறுதியில் இருக்கிறது பிஜேபி.

'நிலையான ஆட்சி;

புதுதில்லி பிரஸ்கிளப் வளாகத்துக்கு அநேகமாக தினசரி ஒரு தலைவர், பகல் பன்னிரண்டு மணிக்கு வந்து சொற்பொழிவாற்றுகிறார்கள். கடந்த வாரம் நாம் புதுதில்லி சென்றிருந்தபோது அப்படியொரு சொற்பொழிவைக் கேட்க வாய்ப்புக் கிடைத்து. நிகழ்த்தியவர் காங்கிரஸின் தலைவர்களுள் ஒருவரான மாதவராவ் சிந்தியா. "We will draw up a blue print to build a modern India" என்று அங்கே அறிவித்து அனைவரையும் சற்றே வியப்புக்குள்ளாக்கிய சிந்தியாவுடன் கூட்டத்துக்கு முன்னும் பின்னும், நடுவில் கேள்வி நேரத்திலுமாகக் கொஞ்சம் பேச முடிந்தது. அதிலிருந்து :

''**கா**ங்கிரஸின் அடுத்த தலைவராக நீங்களே கூட ஆகலாம் என்று ஒரு பலமான பேச்சு இருந்தது. ஆனால், சோனியாவை உள்ளிழுக்கும் முயற்சியில் உங்கள் பங்கும் கணிசமாக இருந்திருக்கிறது என்கிறார்களே?''

''தலைவராக வேண்டும் என்றெல்லாம் எனக்கு விருப்பமில்லை. சோனியாஜி வரவேண்டிய நேரம் இது. எல்லாம் கூடி வந்ததால் அவரும் பிரசாரத்துக்கு வர ஒப்புக் கொண்டிருக்கிறார். ராஜீவ் குடும்பப் பின்னணியும், அக் குடும்பம் செய்திருக்கிற தியாகங்களும் மறக்க முடியாதவை. கட்சியின் நலனுக்காக சோனியா இன்று இம்முடிவை எடுத்திருக்கிறார். அவரது கரங்களை வலுப்படுத்துவதே நான் உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்களின் இன்றைய பிரதான நோக்கம்.''

''சோனியாவின் வரவு பெரிய அளவில் ஏதேனும் திருப்பம் உண்டுபண்ணலாம் என்று கருதுகிறீர்களா?''

''எதையும் பாஸிடிவாகவே பார்க்கலாமே? காங்கிரஸ் கட்டாயம் அதிக இடங்கள் பெறும். இது உறுதி. தோழமைக் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைக்க முனைவோம்.''

''சமீப காலத்தில் இத்தனை பலத்த சரிவு காங்கிரஸுக்கு உண்டாக என்ன காரணம்? எல்லா மாநிலங்களிலுமே கட்சி பிரிந்து புதுப்புது கோஷ்டிகள், கட்சி மாறும் தலைவர்கள் என்று இத்தனை மோசமான நிலை உருவாக என்ன காரணம்?''

"It is the essence of democracy. இந்திரா காலத்திலெல்லாம் எத்தனை பலம் பொருந்திய கட்சியாக நாங்கள் இருந்தோம்? இன்று இப்படி ஆகியிருக்கிறதென்றால் - அது... அது... கட்சியின் இறங்குமுகம் என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் இந்தத் தேர்தலில் மறுபடி உயரே ஏறப் போகிறோம், பாருங்கள்! ஒரு புதிய - இனிய அலை உருவாகியுள்ளது. இது மிக 'ஹெல்தி'யான விஷயம். எம் தொண்டர்கள் இப்போது உற்சாகமாக இருக்கிறார்கள்.''

''நிலையான ஆட்சியை காங்கிரஸ் தரும் என்று நீங்கள் இங்கே பேசுகிறீர்கள். ஆனால் ஐ.மு. அரசைக் கவிழ்த்ததே காங்கிரஸ் தானே? உண்மையிலேயே நாட்டுநலனில் அக்கறை இருந்தால் அப்படிச் செய்ய வேண்டிய அவசியம் என்ன?''

''நீங்களே சொல்லுங்கள். ஒரு தன்மானமுள்ள கட்சி, எப்படி அவமானங்களைச் சகித்துக் கொண்டே இருக்கும்? ஐ.மு.வின் தலைமை சரியில்லை. காங்கிரஸை எப்போதும் குறைகூறிக் கொண்டும் விமர்சித்துக் கொண்டும் பொய்யான பிரசாரங்களைச் செய்து கொண்டும் இருந்தால் எப்படிச் சகிப்பது? அதைக் கூட சகித்துக் கொண்டுதான் இருந்தோம். ஆனால் ஜெயின் கமிஷன் அறிக்கை விஷயத்தில் நாங்கள் கேட்டது என்ன? ஜெயின் கமிஷன் அறிக்கையானது, ராஜீவ் கொலை வழக்கில் தி.மு.க.வைக்

குற்றம்சாட்டுகிறது. ஆகவே அதனை அமைச்சரவையிலிருந்து நீக்க வேண்டும் என்று 'ரிக்வெஸ்ட்' செய்து கொண்டோம். கவனியுங்கள். நாங்கள் அப்போது கூட 'டிமாண்ட்' செய்யவில்லை! 'ரிக்வெஸ்ட்'தான் செய்தோம். அதைக் கூட ஏற்க மறுத்தால் வேறு என்ன செய்ய முடியும்? தவிர இது ஒன்றும் நிரந்தரமான கோரிக்கை இல்லையே? நாளைக்கே ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணை முழுவதுமாக முடிந்து, தி.மு.க. குற்றமற்றது என்று நிரூபணமானால், மறுபடி அவர்கள் ஆட்சியில் சேர்ந்து கொள்ளவாமல்லவா?"

''காங்கிரஸ் மேலிடத்தில் என்னதான் நடக்கிறது? தலைவர்கள் ஏன் வரிசையாக விலகிக் கொண்டே இருக்கிறார்கள்?''

''காங்கிரஸ் மிகப் பெரிய, பிரும்மாண்டமான ஒரு கட்சி. இதுபோன்ற சிறு சிறு சலசலப்புகளைப் பெரிதுபடுத்த வேண்டாம். எல்லா

— மாதவராவ் சிந்தியா

தேர்தலின்போதும் இப்படி யாராவது வந்து, போய்க் கொண்டுதான் இருப்பார்கள்."

''இன்றைய தேதியில் சோனியா காங்கிரஸ் தலைவரும் இல்லை, பிரதமர் பதவிக்கான வேட்பாளராக அவர் அறிவிக்கப்படவும் இல்லை. தேர்தலில் அவர் போட்டியிடவும் இல்லை. இந்நிலையில் அவரது பிரசாரம் மட்டும் எத்தனை தூரம் எடுபடும் என்று நினைக்கிறீர்கள்?''

''நிச்சயம் எடுபடும். அடிமட்டத் தொண்டர்கள் - நாடெங்கிலும் - இன்று உற்சாகம் கொண்டு இருப்பதே அவரது வரவால்தானே? இன்று நாடு முழுக்க இதே பேச்சுத்தானே? நான் உளமார நம்புகிறேன். This impact is very real and emotional."

''சோனியாவின் வரவு பிஜேபியின் வெற்றியை எத்தனை தூரம் பாதிக்கும் என்று கருதுகிறீர்கள்?''

''அவர்களின் வெற்றி பாதிக்கப்படப் போவது இதனால் அல்ல. அவர்கள் கொண்டுள்ள கூட்டணிகளால்தான். தேசியக்கட்சி என்று சொல்லிக் கொள்ளும் பி.ஜே.பிக்கு, உங்கள் மாநிலத்தைச் சேர்ந்த பிரிவினைவாதக்

ப.ஜே.பியின் தடுமாற்றத்தை ரசிக்கிறேன்!



கட்சிகளான பாமக., ம.தி.மு.கவுடனெல்லாம் எப்படி இணைய மனம் வந்ததோ? ஓர் அரசியல் மாணவன் என்ற முறையில் பிஜேபியின் இந்தத் தடுமாற்றத்தை மிகவும் ரசிக்கிறேன். உபியில் பாருங்கள். தொண்ணூற்று மூன்று அமைச்சர்கள்! எந்த நாட்டில் இப்படியொரு அக்கிரமம் நடக்கும்? அதிலும் பல முக்கியத் துறைகள் கிரிமினல்களுக்குத் தரப்பட்டுள்ளன. அங்கே கலாசாரத் துறையை கவனிப்பவர் யார் தெரியுமா? ஒரு சாராய வியாபாரி! தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களெல்லாம் இன்று அங்கே அமைச்சர்கள்! பிஜேபியை மக்கள் இனி எப்படி நம்புவார்கள்? எப்படிப் பார்த்தாலும் இம்முறை காங்கிரஸ் ஆட்சி அமைக்கப் போவதுதான் உறுதி." ●

* வண்ணப்படம்: ஜிண்டு

திறமைவாய்ந்த தலைவர்; பொருளாதார முன்னேற்றத்துக்கான உடனடி ஏற்பாடுகள், வளர்ச்சித் திட்டங்கள் – இவைதான் எங்கள் பிரசாரத்தில் முக்கிய அம்சங்களாக இருக்கும்'' என்கிறார் சுஷ்மா ஸ்வராஜ்.

ஆனால், "அரசியல் ஸ்திரத்தன்மைதான் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு வழிவகுக்கும் என்று பிஜேபி தவறாகப் பிரசாரம் செய்கிறது. பன்முகத் தன்மை கொண்ட நாட்டில், பரஸ்பரம் விட்டுக் கொடுக்கிற சகவாழ்வு, குறைந்தபட்ச வாழ்க்கைத்தரத்துக்கான பொருளாதார உத்தரவாதம்தான் மிக முக்கியத் தேவை. இதை பிஜேபி சுலபமாக மறைத்து, ஏமாற்றப் பார்க்கிறது!'' என்று சாடுகிறார் புதுதில்லி கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையகத்தில் CITU பிரிவு மத்தியக்குழுச் செயலாளராக உள்ள டபிள்யூ. ஆர். வரதராஜன்.

"பிஜேபியின் சென்ற தேர்தல் வெற்றியான 180 சீட்கள் மட்டுமே இம்முறையும் கிடைக்கும். அதற்கு மேல் கிடைக்கும்; அறுதிப் பெரும்பான்மை பெறலாம் என்று அவர்கள் நம்புவதெல்லாம் நடக்காது!'' என்பது கம்யூனிஸ்ட் தரப்புக் கணிப்பு.

ஆனால், "பொறுத்திருந்து பாருங்கள். 230 சீட்களுக்கு மேல் பிஜேபி பெற்று விடுகிறதா, இல்லையா என்று! இந்த வகையில் உங்களுக்குச் சந்தேகமே வேண்டாம், அடுத்த ஆட்சி எங்களுடையதுதான்'' என்று அடித்துச் சொல்கிறார் யஷ்வந்த் சின்ஹா (பீகார்).

ஆனால், உத்திரபிரதேசத்திலும், மேற்கு வங்காளம், மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களிலும் பிஜேபி எதிர்பார்க்கிற வெற்றி நிச்சயம் கிடைக்காது என்று தீர்மானமாகச் சொல்கிறார்கள் புதுதில்லி பத்திரிகையாளர்கள்.

குறிப்பாக உ.பி.யில். கல்யாண் சிங்கின் ஜம்போ அமைச்சரவை உண்டாக்கிய கேலிக்கூத்துக்குப் பிறகு உபியில் பிஜேபியின் செல்வாக்கு கணிசமாகச் சரிந்துள்ளதாக அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்.

"இங்கே ஆறிலிருந்து எட்டு சதவீதம் வரை கூடுதலான இடங்களில் வெல்வோம்'' என்று நாம் சந்தித்த உத்திர பிரதேச மாநில பிஜேபி தலைவர் ராஜ்நாத்சிங் நம்பிக்கை தெரிவித்தாலும், பத்து சதவீத வீழ்ச்சி நிச்சயம் இருக்கும் என்கிறார்கள், உ.பி. பத்திரிகையாளர்கள்.

"பகுஜன் சமாஜ் கட்சி, சமாஜ்வாதி கட்சிகளின் செல்வாக்கு சரிந்து விட்டது. இங்குள்ள குர்மிக்கள், தாக்குர்கள், அந்தணர்களின் வோட்டுக்கள் சுலபமாக பிஜேபிக்கு வந்து விடும்'' என்று சாதி ரீதியாக வோட்டுக்களை எண்ணுகிறார் ராஜ்நாத் சிங்.

இதே சாதிக் கணக்கைத்தான் காங்கிரஸ், பி.எஸ்.பி., ஆர்.ஜே.டி., ஜனதா தளம் போன்ற பிற கட்சிகளும் கூடப் போடுகின்றன.

உயர் சாதியினரின் வோட்டுக்கள் பி.ஜே.பிக்குப் போவதைத் தடுக்க முடியாது. ஆனால் மாநில வாரியாகச் சிதறிக் கிடக்கும் கிறித்தவ, முஸ்லிம், தலித் வோட்டுக்களை சோனியாவை வைத்துக் கொண்டு வாங்கி விடலாம் என்று நினைக்கிறது காங்கிரஸ். தவிர 'உ.பி.யில் எப்படியும் மாநில ஆட்சியைப் பிடித்து விட்டால் போதும்' என்கிற முனைப்பில் உள்ள முலயம்சிங் யாதவ், வெளியில் காட்டிக் கொள்ளாத ஒரு 'அண்டர்ஸ்டாண்டிங்'கை (கேசரி நீங்கலான) காங்கிரஸுடன் வைத்துக் கொண்டு, சோனியாவுடன் நல்லுறவு காப்பதால், அவர் மூலம் உபியில் யாதவாக்களின் வோட்டுக்களையும் கணிசமாகப் பெற முடியும் என்று நம்புகிறது காங்கிரஸ். இத்தனைக்கும் '96 தேர்தலில், உபியில் இரண்டே இரண்டு சீட்களை மட்டுமே காங்கிரஸால் பெற முடிந்திருக்கிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். (இன்றைய தேதியில் உபியில் பிஜேபி, பகுஜன் சமாஜ், சமாஜ்வாதி கட்சிகளுக்குப் பிறகு நாலாவது இடம்தான் காங்கிரஸுக்கு.)

• சந்திரபாபு நாயுடு



• கன்ஷிராம்





• முலாயம் சிங் யாதவ்

ஐக்கிய முன்னணியின் கணக்கு, எத்தனை சீட் கிடைக்கும் என்பதில் இல்லை. யார் பிரதமராவார் என்பது பற்றித்தான்!


'பிரமாதமாக எந்த மாறுதலும் வந்து விடாது; இதே காங்கிரஸின் ஒத்துழைப்பால் மறுபடி ஆட்சிக்கு வந்து விடலாம்' என்கிற நினைப்பிலேயே இன்னமும் ஐ.மு இருப்பதாகச் சொல்கிறார்கள் புதுதில்லி செய்தி நிறுவன உயர் அதிகாரிகள்.



• கேசரி



• டபிள்யூ. ஆர். வரதராஜன்



• குஜ்ரால்

தேவேகௌடா, கன்ஷிராம், முலயம்சிங் யாதவ், லாலு பிரசாத் யாதவ், சந்திரபாபு நாயுடு எல்லாருக்குமே பிரதமர் நாற்காலி மேல் கண் இருக்கிறது. தப்பித் தவறி ஒரு வேளை மறுபடி ஐ.மு ஆள வருமானால் பிரதமராக நிச்சயம் குஜ்ரால் இருக்க மாட்டார் என்கிறது புதுதில்லி பத்திரிகையாளர் வட்டாரம்.

ஆனால் இந்தத் தேர்தலில் ஐமுவின் செல்வாக்கு சரிந்து, அது மூன்றாவது இடத்துக்கு உறுதியாகத் தள்ளப்பட்டுவிடும் என்றுதான் பரவலாக எல்லா கட்சியினருமே சொல்கிறார்கள்.

"லாலுவின் ராஷ்ட்ரீய ஜனதா தளம் ராட்சஸ வேகத்தில் வளர்ந்து வருவதைப் பார்த்தால், கொஞ்சநாளில் ஜனதா தளமே மறைந்து போய், ஆர்ஜேடி மட்டுமே இருக்கிற நிலை வந்துவிடும் போலிருக்கிறது. அப்படியொரு நிலை வருமானால் அந்தப் 'பெருமை' தேவேகௌடாவையே சாரும்" என்கிறார் ராஞ்சியிலுள்ள (பீகார்) கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த தமிழரான பாலசுப்ரமணியம். (விரிவான கட்டுரை தனியே).

ஐமுவின் பிரதான உறுப்பினர் ஜனதா தளம்தான். அது லாலுவின் முழுக் கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டால், பிறகு என்ன நடக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

இந்தத் தேர்தலுக்காக அரசுத் தரப்பில் ஆகப் போகிற செலவு சுமார் 800 கோடிகள். (அறிவிக்கப்பட்டுள்ள தோராயத் தொகை மதிப்பீடு) ஒரு தொகுதிக்குப் பதினைந்து லட்சம் வரை வேட்பாளர்கள் செலவு செய்து கொள்ளலாம் என்று தேர்தல் கமிஷன் தன் தாராள உள்ளத்தைக் காட்டியிருக்கிறது. நாட்டில் மொத்தம் 543 தொகுதிகள் உள்ளன. ஆக, ஆகப்போகிற செலவு எண்பத்தோரு கோடியே நாற்பத்தைந்து லட்சம். அரசுத் தரப்புச் செலவு 800 கோடியையும் சேர்த்து, கூட்டிக் கழித்துப் பார்த்தால் கிட்டத்தட்ட ஆயிரம் கோடி ரூபாய் செலவில் ஒரு தேர்தல்.

எந்த ஒரு கட்சிக்கும் அறுதிப்பெரும்பான்மை கிடைக்கப் போவதில்லை. மறுபடி கூட்டணி ஆட்சிதான். குழப்பங்கள்தான்! ஓரிரு வருடங்களில் ஆட்சிக் கலைப்பு, மறு தேர்தல்...

ஒருவேளை சோனியா வராமல் இருந்திருந்தால் பிஜேபி மெஜாரிடி பெற்றிருக்கக்கூடும் என்று பிஜேபி தொண்டர்களே புதுதில்லி தலைமை அலுவலகப் புல்வெளியில் வேர்க்கடலை சாப்பிட்டபடி பேசிக் கொள்கிறார்கள், கும்பல் கும்பலாக. அவர்கள் உற்சாகம் இழந்து விடாமலிருக்க தினசரி பொதுக் கூட்டங்கள், தொகுதிவாரியாகத் தனிப்பட்ட சந்திப்புகள், பத்திரிகை அறிக்கைகள் மூலம் தெம்பூட்டிக் கொண்டிருக்கிறார்கள் தலைவர்கள்.

பிஜேபி அலுவலகத்தில் ரதம் ஒன்று நின்று கொண்டிருக்கிறது. பணியாளர்கள் அதை தூசு தட்டி, நட், போல்ட்கள் மாட்டிக் கொண்டிருக்கிறார்கள். விரைவில் அத்வானியின் நாடுதழுவிய ரதயாத்திரையை எதிர்பார்க்கலாமா என்று கேட்டால் அறிவிப்பு வந்தால் பார்த்துக் கொள்ளுங்கள் என்கிறார்கள் கட்சி நிர்வாகிகள்.

காங்கிரஸ் தரப்பில், இன்று கல்கத்தா, நாளை ஒரிசா, மறுநாள் கோவா என்று சோனியா பறந்து கொண்டிருக்கிறார். யாரும் எதிர்பாராத அளவுக்கு வடக்கு முழுவதும் சோனியா அலை அடிக்க ஆரம்பித்து விட்டது!

(பீகார் விசிட் - பக்கம் 26; தில்லி டிப்ஸ் - பக்கம் 29; மேற்கு வங்காளம் - பக்கம் 30; சந்திரசேகர் சந்திப்பு - பக்கம் 96)

சுற்றுப்பயணம்-பேட்டிகள்-கட்டுரைகள்:

ஔரங்கசீப்

நடிப்பு...? கௌசல்யாவிடம் அதற்கான திறமை இருக்கிறதோ என்னவோ... இதுவரையில் எந்த இயக்குனரும் அதைக் குறிப்பிடும்படி வெளிப்படுத்தியதாகத் தெரியவில்லை...! ஆனாலும் இன்று கௌசல்யாவின் கையில் எட்டு படங்கள்! சின்னத்திரை சினிமா நிகழ்ச்சிகளிலும் அவர் ஆக்கிரமிப்பு...

தமது முதல் படமான 'காலமெல்லாம் காதல் வாழ்க'வில் முழுக்க முழுக்கச் சேலை கட்டி நடித்த கௌசல்யா, 'நேருக்கு நேர்' என்கிற அடுத்த படத்திலேயே கவர்ச்சி ஆடைகளில் உலா வந்ததென்பது மிகப் பெரிய முரண்பாடாகத்தான் இருந்தது. 'நல்ல குடும்பப் பாங்கான ஒரு பெண்' என்று அவர் முதல் படத்திலேயே ஓர் இமேஜை பெற்று விட்டதால்தான் அடுத்த படத்தில் அவர் காட்டிய கவர்ச்சி எடுபடாமல் போனது என்று ரசிகர்களுக்கு ஓர் அபிப்பிராயம். இதை நாம் கௌசல்யாவிடமே சொன்னோம்.

"நேருக்கு நேர்' படம் அவ்வளவாக வெற்றி பெறவில்லை என்பது உண்மைதான். அதனாலேயே எனது கவர்ச்சிகரமான தோற்றத்தை ரசிகர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று அர்த்தமாகி விடாது. இப்போதுகூட 'ப்ரியமுடன் உன்னுடன்' படத்தில் விஜய்யுடன் ஹோம்லி கேரக்டரில்தான் நடிக்கிறேன். அப்பாஸ் கூட நடிக்கும் 'ஜாலி' படத்தில் மாடர்ன் கேர்ளாகத்தான் நடிக்கிறேன். ஆக, ஹோம்லி, மாடர்ன் என்று நானாகவே எதையும் வகுத்துக் கொண்டு நடிக்கவில்லை. கேரக்டருக்குத் தகுந்த மாதிரிதான் நடிக்கிறேன். எந்தப் படம் அமோக வெற்றிப்படமாக அமைந்து விடுகிறதோ, அந்தப் பட கேரக்டரின் இமேஜ் அந்தந்த ஆர்டிஸ்டுகளுக்கும் ஏற்பட்டு விடுகிறது. மாடர்ன் டிரஸ்ஸில் நான் நடிக்கிற ஒரு படம் வெளிவந்து வெற்றி பெறட்டும்; அப்போது நீங்களே என்னையொரு கிளாமர் ஆர்டிஸ்ட் என்று ஒப்புக் கொள்ளுவீர்கள்!"

"ரசிகர்கள் மத்தியில்

"நம்புங்க, நான் +2 தான்!"



'என்ன மாதிரியான இமேஜ் வரணும்னு நீங்க எதிர்பார்க்கறீங்க?" ரொம்பவும் காஷுவலாகப் பேச்சைத் தொடர்ந்தோம்.

"ஹோம்லின்னும் வந்திடக் கூடாது. கிளாமர்னும் வந்திடக் கூடாது. எதுவானாலும் நல்லா நடிக்கிறாங்கிற இமேஜ் வர்றதைத்தான் நான் விரும்பறேன்."

"அப்படீன்னா எந்த ரோல் கொடுத்தாலும் நடிக்கத் தயார்னு சொல்லுங்க!"

"ஷ்யூர். வில்லி கேரக்டரா



இருந்தாலும் நடிக்கத் தயாராத்தான் இருக்கேன். ஆனாக் கூட அது 'இந்தியன்' படத்துல கமல் நடித்த மாதிரியான 'வில்லி' கேரக்டரா இருக்கணும். அவ்வளவுதான் என்னோட எதிர்பார்ப்பு."

"மாடலிங்கிலேர்ந்து சினிமாவுக்கு வந்திருக்கீங்க. அதுக்கும் இதுக்கும் என்ன வித்தியாசம்?"

"மாடலிங்கில வேலை கம்மி. வருமானம் அதிகம். சினிமாவுல வேலையும் அதிகம். வருமானமும் அதிகம். இதைத் தவிர வேறு வித்தியாசம் இருக்கறதாத் தெரியல."

" 'காலமெல்லாம் காதல் வாழ்க' படத்தில் நீங்க சாதாரணமா வந்து போற ஒரு பெண்ணாத்தான் தெரிஞ்சீங்களே தவிர, உணர்ச்சிகளைக் காட்டி நடித்த மாதிரி தெரியலையே?"

"நீங்கதான் இப்படிச் சொல்றீங்க..!" சிரிக்கிறார். "அந்த கேரக்டர் யதார்த்தமான ஒரு கேரக்டராக இருக்கணும்னுதான் டைரக்டர் சொன்னார். ரொம்பவும் உணர்ச்சிகளைக் கொட்டினா அது யதார்த்தத்தை மீறினதாயிடும்னும் சொன்னார். அவர் சொன்னபடி நடிச்சதாலதான் அதுவொரு இயல்பான கேரக்டரா அமைஞ்சு, படமும் வெற்றிப் படமா அமைஞ்சதுன்னு நினைக்கிறேன். உண்மையும் அதுதான்."

"உங்க பெற்றோர் எப்படி? உங்களுக்கு முழு சுதந்தரம் கொடுத்திருக்காங்களா?"

"நிச்சயமா. என் பேரண்ட்ஸோட நான் வெளியில போறபோது, எதிர்ல வர்ற ஒரு இளைஞனைப் பார்த்து, 'ரொம்ப ஸ்மார்ட்டா இருக்கான்'னு அவங்ககிட்டயே சொல்ற அளவுக்கு எனக்குச் சுதந்தரம் கொடுத்திருக்காங்க. என்னோட பிரண்ட்ஸுங்களோடு பழகற மாதிரியான சுதந்தரத்தோடதான் நான் அவங்களோடு பழகறேன்."

"அப்படீன்னா உங்க காதலுக்குக் கூட பிரச்னையில்லைன்னு சொல்லுங்க."

"ஆமாம். ஆனாலும் நான் கல்யாணத்துக்கப்புறம்தான் காதலிப்பேன்!"

"ஐயய்யோ! அது ரொம்பத் தப்பாச்சே!"

"தப்பா நெனைக்காதீங்க. அப்பா–அம்மா பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்கிற மாப்பிள்ளையைக் காதலிப்பேன்னு சொல்றேன்!"

"சரி சரி. உங்களுக்குன்னு லட்சியம் ஏதாவது வெச்சிருக்கீங்களா?"

"இப்போதைக்கு எதுவும் இல்லை. பிசியான ஆர்டிஸ்டா நடிச்சுக்கிட்டே இருக்கணும். அவ்வளவுதான். எதிர்காலத்துல டைரக்ட் செஞ்சாலும் செய்வேன். இதுக்கு இடையில் குழந்தைத் தொழிலாளர்கள் மேல் எனக்கு எப்பவுமே அக்கறை உண்டு. அது மிகப் பெரிய கொடுமைன்னு நினைக்கறேன். அதை ஒழிக்க என்னால ஏதாவது செய்ய முடியுமானா நிச்சயம் செய்வேன்."

"நீங்க இன்னும் கொஞ்சம் சதை போடலாம்னு தோணுது– உங்களுக்கு அப்படித் தோணலையா?"

"நான் என்ன அத்தனை ஒல்லியாவா இருக்கேன்?" என்றவர் தம்மையே ஒருதரம் பார்த்துவிட்டுத் தொடர்ந்தார். "நீங்க நம்பினாலும் சரி, நம்பா விட்டாலும் சரி, நான் ப்ளஸ் டூ படிக்கிற ஒரு மாணவிதான். தெரியுமா?"

"எந்தப் படத்துல?"

"மறுபடியும் இன்டல் பண்றீங்களே.. நான் நிஜமாவே ப்ளஸ் டூ படிக்கிற ஒரு மாணவிதான்!"

"பொழுது போக்கா ஏதாவது செய்வீங்களா?"

"படிப்பேன். ம்யூசிக் கேட்பேன். கிரிக்கெட் பார்ப்பேன்."

"கிரிக்கெட்ல யாரைப் பிடிக்கும்?"

"அஜய் ஜடேஜா."

"பேட்டிங்குக்காகவா, பர்சனாலிட்டிக்காகவா?"

"இரண்டுக்கும் சேர்த்துத்தான்!" என்று சிரித்துக் கொண்டே சொன்ன கௌசல்யாவுக்குத் தற்சமயம் தமிழ், தெலுங்கு, கன்னடம் என்று கைவசம் இருக்கிற படங்களின் எண்ணிக்கை எட்டாம். வயது மாதிரி இதையும் நம்ப முடியாதவர்களுக்கு நாம் என்ன செய்ய முடியும்!

சந்திப்பு: **குணா**

அட்டை வண்ணப்படம், படங்கள்: **பிரவீன்குமார்**

காதில் விழுந்தவை:

● பொங்கலை ஒட்டி நிருபர்களைச் சந்தித்தார் மூப்பனார். பேச்சோடு பேச்சாக, "தமாகாவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகுதிகளில் ஏதேனும் ஒன்றில் நிற்க பத்திரிகையாளர்களுக்கு வாய்ப்புத் தரத் தயார். நீங்கள் கூடிப் பேசி யாரேனும் ஒருவரைத் தேர்ந்தெடுத்து என்னிடம் சொல்லுங்கள்" என்று சொல்லி பத்திரிகையாளர்களை இன்ப அதிர்ச்சியில் மூழ்க வைத்தார் மூப்பனார்.

● பிரபல ஆங்கில தினசரியின் நிருபர் ஒருவர் வாழப்பாடிக்கு டெலிபோன் செய்து "சோனியா பிரசாரத்தால் தமிழ்நாட்டில் காங்கிரஸ் பலம் பெறுமா?" என்று கேட்டிருக்கிறார். அதற்கு வாழப்பாடியார், "இரண்டு பெரிய அணிகள் மோதுகின்றன. இடையில் அகப்பட்ட 'எலி'யின் கதைதான் (காங்கிரஸுக்கு)" என்று பதில் சொல்லியிருக்கிறார். உடனே நிருபர் ஏடாகூடமாக, "அப்படியென்றால் சோனியாவை எலி என்கிறீர்களா?" என்று கேட்க, வந்ததே கோபம் வாழப்பாடியாருக்கு. "நான்சென்ஸ்" என்று டெலிபோனை கட் பண்ணி விட்டாராம்.

வை.கோ. பெயரைச் சுருக்கியது ஏன்?

ராஜீவ் காங்கிரஸ் வட்டாரத்தில் கிடைத்த செய்தி இது.

● "நல்லவேளை நாங்கள் தப்பித்தோம்" என்று (சந்தோஷப்) பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறார்கள் பாமக (ராமதாஸ்) பிரமுகர்கள். "தீரன் பேச்சைக் கேட்டு தி.மு.க. அணியில் இணைந்திருந்தால், எம்ஜி-ஆர் மன்றம், ஜனதா தளம், முஸ்லிம் லீக் போன்ற கட்சிகளுக்குத் தொகுதி கொடுக்காமல் இதயத்தில் இடம் கொடுத்தது போல எங்களுக்கும் கொடுத்திருப்பார் கலைஞர். அ.இ.மு.க. அணியில் சேர்ந்ததால் ஐந்து இடங்களைப் பெற்றோம்" என்று பூரித்துப் போயிருக்கிறார்கள் அவர்கள். இப்போது அவர்களது கவலை ஐந்து தொகுதிகளில் தேர்தலைச் சந்திக்க 'டப்பு'தான். "டாக்டர் ஐயா என்ன செய்யப் போகிறார் என்று தெரியவில்லை" என்றார் ஒரு பிரமுகர். அம்மா இருக்க பயம் ஏன்?

● "எங்கள் தலைவர் மஞ்சள் துண்டு போட்டுக் கொண்டிருப்பதைக் கிண்டல் செய்கிறார்கள் மதிமுகவினர். ஆனால் இப்போது வை. கோபால்சாமி தன் பெயரை 'வைகோ' என்று சுருக்கி வைத்துக் கொண்டு கெஜட்டிலும் அறிவித்து உள்ளாரே. இதன் ரகசியம் தெரியுமா? என்று கேட்டார் உடன்பிறப்பு ஒருத்தர். நாம் அப்பாவித்தனமாகத் "தெரியாதே" என்றோம். "சிவகாசித் தொகுதியில் ஏற்கெனவே இரண்டுமுறை தோற்றாகி விட்டது. அந்த பயத்தில் இந்த முறையாவது வெற்றி கைகூடி வர வேண்டுமென்ற நோக்கத்தில் எண் கணிதப்படி பெயரை மாற்றிக் கொண்டிருக்கிறார் அவர்" என்றார் அந்த உ.பி. அது சரி, அம்மாவுடன் சேர்ந்தாகி விட்டதல்லவா, மாற வேண்டியது தானே!

● லத்தீப்பும், அப்துல் சமதும் முஸ்லிம் அரசியலில் எதிர் எதிராக இருந்தவர்கள் இப்போது தேர்தலை ஒட்டி சமுதாய நன்மைக்காக ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். ஆனால் ஒன்றாகச் சேர்ந்தும் கலைஞரிடம் ஒரு சீட் வாங்க முடியவில்லையே என்று இப்போது வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். 51 முஸ்லிம் பிரமுகர்கள் சமீபத்தில் சென்னையில் சந்தித்து நிலைமையை ஆராய்ந்தார்கள். "நம்மை அவமானப்படுத்துகிறார் போலிருக்கிறது. பா.ஜ.க. எதிரணியில் இருப்பதால், முஸ்லிம்கள் வோட்டு வேறு வழியின்றி தி.மு.க. தமாகவுக்குத்தான் கிடைக்கும் என்ற இறுமாப்பில் இருக்கிறார்கள். மனசாட்சிப்படி வோட்டு போடுங்கள் என்று அறிவித்தால் அவ்வளவுதான்" என்று கொஞ்சம் ஆத்திரத்துடன் சொன்னார், இளம் முஸ்லிம் பிரமுகர் ஒருவர்.



● தங்கபாலு மீது மிகவும் கோபமாக இருக்கிறார் குமரி அனந்தன். காங்கிரஸ் கட்சியின் சார்பாக வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் மிகவும் ஒரு தலைப்பட்சமாக, அவருக்கு வேண்டியவர்களையே project செய்கிறாராம். இதனால் வருத்தமுற்ற அனந்தன் இது சம்பந்தமான கூட்டம் நடக்கும்போது பாதியிலேயே எழுந்து வந்து விட்டார். இப்போது மேலிடத்திலிருந்து "நீங்கள் டெல்லிக்கு வாருங்கள் சேர்ந்து பேசி முடிவெடுக்கலாம்" என்று தகவல் வரவே, குஷியோடு கிளம்பிச் சென்றிருக்கிறார் அனந்தன். ●

— தில்லப்பா



* இச்சலுகை சென்னை வாடிக்கையாளர்களுக்கு 15-2-1998 வரை வழங்கப்படும்.

இன்று வாழ்வோம் வா!

ஜீவா, துப்பாக்கியில் வித்தகன்; கத்தியில் சித்தன்; பாம்களில் விற்பன்னன்; தந்திரத்தில் தேர்ந்தவன், கடைசியில் அவன் முடிவு, எவனோ ஒரு குறுந்தாடி கையால்தானா...

மிக அலர்ட்டாக இருந்தான். இரவு 8:50. இன்னமும் வாகனங்கள். நசநசத்த தூறலிலும் நகரம் லேசில் ஓயாது போல. ஷீலா என்ன செய்து கொண்டிருப்பாள்? பாவம். கவலையுடன் காத்திருப்பாள்.

நினைவில் ஷீலா வந்ததும், சூழ்நிலை மீறி ஊறும் பரவசம் அவனுள். அன்றும் திங்கள்தான்; இதே நேர இரவுதான்–

தோட்டம். ஒரு பாயில் தூங்கும் கௌதம். இருவரும் அருகருகே. ஜில்லென்ற புல் தரையில் அமர்ந்திருந்தார்கள். வீட்டின் விளக்குகளை அணைத்திருந்தார்கள். பொழியும் பௌர்ணமி நிலவு. வீசும் மென் காற்று. மெல்ல ஆடும் கிளைகள். தலை அசையும் செடிகள். செல்லமாகச் சிணுங்கும் இலைகள். கம்மென்ற வாசம். எங்கிருந்து? எங்கிருந்து? பூச் செடிகளிலிருந்தா? மலர் போன்ற மனைவியிடமிருந்தா? ஜீவா கையில் கிடார்; காலையில்தான் வாங்கியிருந்தான்.

"உங்களுக்கு வாசிக்கத் தெரியுமா?"

"துப்பாக்கி பிடித்த கை இது! கிடாரை வாசிப்பதாவது..."

"பின் ஏன் வாங்கி வந்தீர்கள்?"

"ஒரு முயற்சிதான்! இவ்வளவு வருடங்களாக மென்மையான ஒரு தேவதையை ஸ்பரிசித்த என் விரல்களில் விசேஷம் ஏதும் வந்திருக்கிறதா பார்ப்போம்!" சிரித்தான்.

கிடாரைத் தட்டினான். அபசுரம் தட்டியது!

"ஐயோ! ஜீவா! என்ன செய்கிறீர்கள்?" என்றாள் காதுகளைப் பொத்திக் கொண்டு.

"வாசிக்கிறேன் டியர்!"

"இதுவா!" என்றாள் அதிர்ந்தவள் போல்.

"ஸ்வரங்கள் வருகிறதா பார்?"

"ஜுரம்தான் எனக்கு வருகிறது!"

ஜீவா விழித்தான். சட்டென்று பிரகாசமானான். "ஒரு ஐடியா! இப்போது பார் அன்பே!"

ஷீலாவின் கன்னத்தை தொட்டான். தொட்ட விரல்களால் கிடாரைத் தொட்டுத் தூண்டினான். கம்பிகள் இனிமையாக அதிர்ந்தன. ஷீலா அதிர்ந்தாள். அனாயாசமான இசை. நிறுத்தினான், மனைவியின் உதட்டைத் தொட்டான். வாசித்தான். தேனாகப் பாய்ந்தது, இசை! அடுத்து, சிரம். இசை. கரம். இசை. இடை. இசை. கிடார் இழையில் இசை. இழைந்ததில் இசை.

"என் ஃப்ராடு ஜீவா! வாசிக்கத் தெரிந்து கொண்டே..."

"சே! தெரியாதுடா! உன்னிடம்தான் ஏதோ இருக்கிறது!"



4

ஒரு தமிழ் சினிமாப் பாடல் தொடங்கினான். மீண்டும் மீண்டும் வா. வேண்டும் வேண்டும் வா. மேகம் நிலவை மறைத்தது. அவன் தோளில் முகம் சாய்த்து கண் மூடினாள் ஷீலா. அங்கே மீட்டலும் அதிர்வும் பொதுவாக, இட்டும் அனுபவம் இனிமையாக...

ராஜா அண்ணாமலைபுரம். அலுவலகம். ஜீவா வாசலில் காரை நிறுத்தினான். பகல் போல் சாலை விளக்குகள். இங்கே இருள் ஏது? மறைந்து கொள்ள இடம் ஏது? குறுந்தாடிதான் எங்கே?

வாட்ச்மேனையும் காணோமே! காரிலிருந்து வெளிப்பட்டான். சோடியம் வேப்பரில் தூறும் தங்க ஊசிகள். கேட்டைத் திறந்தான். மரக் கூண்டை அணுகினான். உள்ளே எட்டிப் பார்த்தான்.

வாட்ச்மேன் இருந்தான். இறந்தானா? தூங்குகிறானா? மடங்கிச் சுருண்டு கிடந்தான். உள்ளே சென்றான். குனிந்தான். வாட்ச்மேன் மூக்கில் விரல் வைத்தான். மெலிய சுவாசம். ஆனால் சீராக. மயக்கந்தான். மருந்தின் பாதிப்பு அகன்றதும், எழுந்துவிடுவான்.

ஜீவா வெளியே வந்தான். நெட்டை அசோக மரங்கள். குட்டை குரோட்டன்ஸ்கள். பிற பூச் செடிகள். ஓரத்தில் சதுரமாக ஆஸ்திரேலியப் புல் பராமரிப்பு. நடுவே அகன்ற காங்க்ரீட் பாதை. நேராகச் சென்றால் வாகன ஷெட். நடுவில் வளைந்தால், அலுவலக வாசல். சென்றான்.

திடுக்கிட்டான். அலுவலக வாசல் விரியத் திறந்திருந்தது! அவன் அலுவலகம்தானே இது... சாவிகள், இவன் வசம். வாட்ச்மேனிடம் கூடக் கிடையாது.

உள்ளே இருட்டாக இருந்தது. விளக்குகளை ஆன் செய்தான். மேசை மேல் திறந்திருந்த பூட்டுக்கள். கேலி செய்வது போல வரிசையாக! கள்ளச் சாவி? கம்பி? அரம்? அல்லது எதுவோ ஒன்றை நூதனமாக நுழைத்துத் திறந்து அத்து மீறிய அந்த வல்லவன் யார்? குறுந்தாடிதானா? எதற்காக?

அலுவலகத்தில் எதும் கலையவில்லை. பின், எதற்காக இந்தத் திருட்டுத்தனமான திறப்பு வைபவம்? அப்போதுதான் கவனித்தான். தரையில் ரத்தப் புள்ளிகள்! உள்ளே நெடுகச் சென்றது.

வாசல் கதவுக்கு வெளியேயும்! பாதை, படிகளிலிருந்தே ரத்தப் புள்ளிகள் துவங்கி இருந்தது. பின் கட்டிற்குச் சென்றான்.

பாத்ரூம் முன் தரையில் கவிழ்ந்திருந்த அந்த உருவத்தைப் பார்த்தான். யார் ஐயா நீ? என் அலுவலகம் தேடி வந்து விழுந்து இறக்க எந்த ஜென்ம வேண்டுதல் ஐயா? உருவத்தைப் புரட்டினான்.


ஆ! குறுந்தாடி! குரூரமாகக் கொலை செய்யப்பட்டிருந்தான். இவன் தன்னைக் கொல்லக் காத்திருப்பதாக நினைக்க, இது என்ன ஆன்ட்டி க்ளைமாக்ஸ்! அவன் என்ன சொல்ல வந்தான்? எதற்காகக் கண்காணித்தான்? ஏன் சிலரைக் கொன்றான்? குழப்பம். நெற்றிப் பொட்டில் புல்லட். எவர் கொன்றார்? ஏன் கொன்றார்? துல்லியமான துப்பாக்கிக் குறி.

துப்பாக்கி! ஜீவா ஏறக்குறைய ஓடினான். அவன் அறை நோக்கி.

அறையில் அவசரமுடன் மேசை டிராயரை இழுத்துத் திறந்தான். அவன் சந்தேகம் ஊர்ஜிதமானது. ஜீவாவின் துப்பாக்கியைக் காணவில்லை! எங்கே? எங்கே? முறையான லைசென்ஸ் உள்ள துப்பாக்கி.

அறையினின்று வெளிப்பட்டான். சுற்றிலும் பார்த்தான். அலுவலகத்தில் எல்லாம் இருந்தது; அவன் துப்பாக்கி தவிர! எங்கே என்று

பத்மா ரவிசங்கர்



தேடுவது?

அது அப்புறம். அலுவலகத்தில் இல்லாத துப்பாக்கியை விட, இருக்கும் பிணம்தான் அவனைப் பதற்றப்பட வைத்தது. உளவாளி யாக இருந்தபோது, கதையே வேறு. உயிர் விடும் கடும் ரகசிய தேச சேவை என்பதால், எவருமே தலையிட முடியாத சுதந்தரம். ஓர் ஏஜண்டிற்கு எந்த வித சென்டிமெண்ட்டும் கிடையாது. கொல்வது, ஊழியத்தின் ஒரு பகுதி. அவசியம் எனில் கொல். தடை எனில் தீர்த்து விடு. ஆபத்து எனில் சடுதியில் உயிர் பறி. களை எடுக்க என்றும் தயங்காதே. சிறிது தாமதித்தாலும், உளவாளியின் உயிரை எதிரி எடுத்து விடுவான்; நாட்டிற்கு வேறு பெரிய பல நஷ்டங்களுக்கும் எதிரி வழி கோலுவான். கொன்றதும், என்றும் தலைமைக்கு அறிவித்து விடு. ஒரு பிணம் சிறு தொந்தரவு. அவ்வளவே. அப்புறப்படுத்த, வெளியே சொல்ல முடியாத பல வழிகள் உள்ளன.

இப்போது, ஜீவா ஒரு சாதாரணக் குடி மகன். போலீஸிடம்தான் புகார் செய்ய வேண் டும். விசாரிப்பார்கள். கேள்விகள் வரும். விழிப்பான். பதில்கள் தெரிந்தால்தானே... பத்திரிகைகளில் வரும். அலுவலகப் பெயர் நாறப் போகிறது. என்ன ஒரு இக்கட்டு...

"ஹலோ ஜீவா!"

திடுக்கிடலுடன் நிமிர்ந்தான் ஜீவா.

குப்தா! புன்முறுவலுடன் உள்ளே வந்து கொண்டிருந்தான். இவன் எங்கே இங்கு...

"எனக்குத் துளி ஓசை கூடக் கேட் கவில்லை குப்தா! நீ ஒரு தேர்ந்த பூனை!"

"உன்னை விடவா ஜீவா?"

"அதெல்லாம் பழைய கதை. உன் அளவு நான் என்றும் இல்லை."

"சும்மா சொல்லாதே. வா ஜீவா. உள்ளே சென்று பேசுவோம்."

"உள்ளேயா?"

"ஏன்? குறுந்தாடி கோபித்துக் கொள் வானா?" குப்தா கண்களில் குறும்பு.

ஜீவா வியப்புடன், "உனக்குத் தெரியுமா?"

"அவனைச் சுட்டதே நான்தானே!" என் றான் சாதாரணமாக.

"என்னது!"

"பதறாதே! நான் சென்னை வந்ததே அதற் குத்தான்! நம் தலைவர் ஆத்மாவுடன் நேரடித் தொடர்பு வைத்திருக்கிறேன். அவர் உத்தர வின் பேரில் இயங்குகிறேன்."

"நம் ஒற்றில் ஓட்டை இருக்குமோ என்று அவருக்குச் சந்தேகமா?"

"ஆம்! குறுந்தாடியைச் சுட்டது ஆத் மாவுக்கு மட்டும் தெரியும். சற்று முன்னர்தான் சென்று போன் செய்தேன்."

விட்டம் வெறித்த நிலையில் பிணம்.

"இவன் உன்னைத் தொடர்ந்தானா?"

"ஆம்!"

"ஏன் குப்தா?"

"பிறகு சொல்கிறேன். இவன் மறைவுடன் இந்த கேஸ் முடியவில்லை. ஒரு பெரிய ஆபத்து சூழ்ந்திருக்கிறது. இவன் பின்னால் ஒரு சதிக் கும்பல் இருக்கிறது!"

பிணத்திடம் குப்தா தேடுவதை ரசனை யுடன் பார்த்தான் ஜீவா. லாகவமான வேக மான தேர்ந்த விரல்கள். எங்கே என்று தெரிந்த விரல்கள். எல்லாம், குறைந்த கலோரிச் செலவில். ஹூம்... உளவு ஒரு கலை!

ஒரு துப்பாக்கி, கத்தி கிடைத்ததும், "பார்த் தாயா?" என்றவன் முனைப்புடன் மேலும் சோதனையிட குறுந்தாடியின் உள்ளாடையில் ஒரு ரகசிய பாக்கட் இருப்பது தெரிந்தது. அதனுள் விரல் செலுத்தி எதையோ வெளியே எடுத்தான்.

ஜீவா வாங்கிப் பார்த்தான். அது ஒரு பிளாஸ்டிக் தகடு. அடையாள அட்டை மாதிரி இருந்தது. அதில், சிறகு விரித்த கரிய கழுகு படம்!

"என்ன இது?"

"அது ஒரு குற்றக் குழு. அவர்கள் இலச்சினை கழுகு. பணத்திற்காகத் தீவிர வாதம் புரிபவர்கள்."

"அப்படியா? நான் கேள்விப்பட்ட தில்லை."

"எவருக்குமே தெரியாத ரகசியக் கும்பல்

இதோ ஓர் ஆட்டோ கூட்டணி!

அருள்ராஜ் என்பர் ஓர் ஆட்டோ டிரைவர். ஆனால் சொந்தமாக அவரிடம் ஆட்டோ எதுவும் இல்லை. தினசரி வாடகைக்கு வண்டி எடுத்து ஓட்டி வந்தார்.

சென்னை அண்ணா நகரில், வி.எம். மருத்துவமனை அருகே உள்ள ஸ்டாண்டில்தான் அருள்ராஜ் இருப்பார். அவரது சக ஆட்டோ ஓட்டுநர்கள் 32 பேர் கூட்டாகச் சேர்ந்து தங்கள் சேமிப்பைப் போட்டு ஓர் ஆட்டோவை வாங்கி அருள்ராஜுக்குக் கொடுத்து விட்டார்கள்.

சேமிப்புப் பணம் குறைவாக இருந்தது. எனவே மீதிப் பணம் தர முன் வந்த நிதி நிறுவனம், "காரண்டி கையெழுத்து யார் போடுவார்கள்?" என்று கேட்டது. 32 ஆட்டோ டிரைவர்களும் 'கோரஸ்'லாக தாங்களே காரண்டி கையெழுத்துப் போடுகிறோம் என்று அறிவித்தார்கள்!

ஓர் ஆட்டோ ஓட்டுநருக்கு, பல ஆட்டோ டிரைவர்கள் சேர்ந்து கூட்டுறவு முறையில் முன்

பணம் போட்டு, ஆட்டோ வாங்கிக் கொடுத்திருப்பது இதுவே முதல் தடவை!

இதற்குக் காரணமாய் இருந்த ஆட்டோ டிரைவர்கள் நீலகண்டன், குப்புசாமி, அக்பர் அலி, குமார் ஆகியோர் படு ஜாலி மூடில் இருந்தார்கள் அன்று!



• அருள்ராஜுக்குப் புதிய ஆட்டோ...

வி.எம். மருத்துவமனை இயக்குநர் டாக்டர் சி. முனிரத்தினம் தமது மருத்துவமனைக்கு வந்து போகும் நோயாளிகளுக்கு மிகவும் உதவியாக இந்த ஆட்டோ ஸ்டாண்டும், ஆட்டோ ஓட்டுநர்களும் இருப்பதாகச் சந்தோஷத்துடன் பாராட்டியது 'போனஸ்' மகிழ்ச்சியாய் இருந்தது அவர்களுக்கு.

'இனோடா' என்ற தொண்டு நிறுவனம் ஏற்பாடு செய்த இந்த நிகழ்ச்சியில், அதன் நிறுவனத் தலைவர் நாராயணன், ''ஆட்டோ டிரைவர்களுக்கு என்றே ஒரு கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்க, இது அடித்தளம் இட்டிருக்கிறது. காலையில் நான் ரஜினியைச் சந்தித்தபோது, இந்தச் சம்பவம் பற்றி அவரிடம் எடுத்துச் சொன்னேன். மகிழ்ச்சி அடைந்து வாழ்த்துத் தெரிவித்தார்!'' என்றார். அண்ணா நகரில் பத்துப் பெண்களுக்கு ஆட்டோ வாங்கிக் கொடுக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறது 'இனோடா'. பத்துப் பேரும் பெண் ஆட்டோ ஓட்டுநர்கள்!

– சாருகேசி

அது. மகா திறமைசாலிகள். அவர்களின் அடுத்த சதியை ஒடுக்க, ஆபத்தைத் தடுக்க, கழுகுகளைப் பிடிக்க–'' சற்று நிறுத்திவிட்டு, ''உன் உதவியும் சேர்ந்தால்தான் என்னால் முடியும்.''

''சாரி!'' என்றான் தீர்மானமாக.

ஜீவாவை உற்றுப் பார்த்தான் குப்தா. பெருமூச்சு விட்டான். ''எனக்கு வேறு வழியில்லை நண்பா. நீ உதவ மறுத்தால், போலீஸில் உன்னைக் காண்பித்துக் கொடுத்து விடுவேன்!''

''என்ன சொல்கிறாய்?''

''குறுந்தாடி கிடப்பது உன் அலுவலகத்தில். கொலையானது உன் துப்பாக்கியால்!''

ஜீவா அதிர்ந்தான். இமைக்காமல் பார்த்தான்.

''உன் துப்பாக்கி என்னிடம் பத்திரமாக! போலீஸிற்குச் செல்ல சித்தமாக!''

''குப்தாவின் பிளாக்மெயில்!'' என்றான் மென்மையாக. உளவு! இந்தத் தொழிலில் எதிர்பாராத அதிரடிகளுக்கு என்றும் பஞ்சமில்லை. குப்தா பிளாக்மெயில் வரை வந்து விட்டான். பிரச்னை மிகத் தீவிரமானதாக இருக்க வேண்டும். குப்தா ஏதோ ஒரு நெருக்கடியில் என்பது புரிந்தது. இனி தயங்குவதில் அர்த்தமில்லை. ஆபத்திலிருந்து தப்ப வேண்டும். சீசர் கொலை, டெலிபோன், கார் ஸ்டிக்கர் என்று விடுபடாத மிரட்டல்கள் வேறு. கழுகுக் குழு என்று கேஸில் ஏதோ சற்றே வெளிச்சம். இந்தச் சிக்கலின் வேரைப் பிடிக்காமல் தனக்கும் குடும்பத்திற்கும் நிம்மதி இல்லை.

ஆடிப் பார்த்து விட முடிவெடுத்தான் ஜீவா. ஒரு முறை! இன்னும் ஒரே ஒரு முறை... ஜீவா யார் என்பதை உலகுக்குக் காண்பித்து விட வேண்டும்.

''சம்மதம்!'' என்றான் சுருக்கமாக.

''நன்றி நண்பா! பிளாக் மெயில் போல் உன்னை நெருக்கியதற்கு மன்னித்து விடு. அவனை எப்படியும் தீர்த்திருப்பேன். உன் துப்பாக்கியில் என்பது என் சமயோசிதம்! உன் திறமை உனக்குத் தெரியாது ஜீவா! உன்னுடன் சேர்ந்து உலகைக் கலக்குவேன் பார்!'' என்ற குப்தா முகத்தில் மித மிஞ்சிய மகிழ்ச்சி.

''சரி. அடுத்து?'' என்றான் அமைதியாக.

''இதுதான் ஜீவா! இதற்குத்தான் ஜீவா! எவ்வளவு வேகமாக, நேரடியாக விஷயத்துக்கு வருகிறாய்!'' என்றான் சந்தோஷமுடன். ''குறுந்தாடி இறந்தது எவருக்கும் தெரியாது...''

''முக்கியமாக, எதிரணி கழுகுக் குழுவினருக்கு! நாம் மோப்பம் பிடித்தது அவர்களுக்குத் தெரியாத வரை நமக்கு நல்லது. அப்படித்தானே?''

''கரெக்ட் ஜீவா! கமுக்கமாகப் பிணத்தை மறைக்க வேண்டும். ஏகாந்தமான இடம் உசிதம். எங்கே ஜீவா?''

மகாபலிபுரம் செல்லும் சாலையில் உள்ள ஒரு பங்களா ஞாபகம் வந்தது. அரசியல்வாதி

பட்டுப்புடவைப் பரிசுப் போட்டி-1; முடிவு!

கடந்த 11.1.98 இதழின் 67-ம் பக்கத்தில் இடம் மாறியிருந்தது லல்லு, கேசரி ஆகியோரின் புகைப்படங்கள்தான் என்கிற சரியான விடையை ஆயிரக்கணக்கான வாசகர்கள் எழுதியிருந்தனர். என்றாலும் பட்டுப் புடவையை ஒருவருக்குத்தானே பரிசளிக்க முடியும்! எனவே குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த அதிர்ஷ்டசாலி வாசகர்:

எஸ். ராஜாமணி,
4, சாந்தி நகர், 6வது தெரு,
ஆதம்பாக்கம், சென்னை - 600 088.

வாழ்த்துக்கள் ராஜாமணி!

பூவரகவுக்குச் சொந்தமானது. அவரின் கேளிக்கை விஜயங்களுக்கு மட்டும் மேற்படி இடம் என்று கேள்வி. பூர்வாசிரமத்தில், பூவரகவின் படிப்பு சொற்பம்; சொத்து பூஜ்யம். இப்போது பூவரக வசம் பல பூஜ்யம் கொண்ட கோடிகள்! ஜீவாவுக்கு ஊழல் அரசியல்வாதிகளைக் கட்டோடு பிடிக்காது. அதுவும், பூவரக ஊழல் செய்வதில் ராஜா! ஜீவா, அந்த இடம் பற்றிச் சொன்னான். மிகவும் தனிமை அங்கே என்றான்.

"இதற்குத்தான் லோகல் ஆசாமியின் உதவி தேவை!" என்றான் குப்தா.

காரை உள்ளே கொண்டு வந்து வாசல் முன் நிறுத்தினான் ஜீவா. டிக்கியைத் திறந்து வைத்தான்.

பின், இருவருமாகப் பிணத்தைத் தூக்கி வந்து திணித்ததும் டிக்கியை அமுக்கிச் சாத்தினார்கள். பூட்டினான்.

குப்தா ரத்தக் கறைகளைச் சுத்தம் செய்யத் துவங்கினான். ஷீலாவிற்குப் போன் செய்தான் ஜீவா.

"ஷீலா!" எவ்வளவு 'யுகங்களாயிற்று' காதல் மனைவியுடன் பேசி!

"ஜீவா!" உணர்ச்சிக் கலவையில் குரல் "ஆர் யூ ஆல்ரைட்?"

"ஷ்யூர்! குந்தாடி பிரச்னை தீர்ந்தது!" ஆனால், வேறு பிரச்னை துவங்கி விட்டது அன்பே!

"இனி, பின் தொடரமாட்டானாமா?"

"தொடர மாட்டான்!" எவரையுமே!

"என்னாயிற்று ஜீவா?"

"நேரில் வந்து எல்லாம் சொல்கிறேன்."

எவ்வளவு தூரம் சொல்லலாம்...

"எப்போது வருவீர்கள்?"

"இன்னும் ஒரு முக்கிய வேலை...!" ஒன்றுமில்லை டார்லிங்; ஒரு பிணத்தைப் புதைக்கப் போகிறேன்!

"எனக்காகக் காத்திராதே. கவலைப் படாதே. நிம்மதியாகத் தூங்கு ஷீலா." எனக்கு நிம்மதி எப்போது திரும்பும்...?

எல்லாம் 'திருப்தியாக' முடிந்தது. ஊர் அடங்கச் சற்று காத்திருந்து விட்டுப் புறப்பட்டார்கள். ஜீவாதான் காரைச் செலுத்தினான். இரவு 11.00. அருகில் குப்தா. பின்னால் பிணம். விடாத தூறல். சிறிது தூரம்தான் கடந்திருப்பார்கள்.

பின்னால் ஒரு போலீஸ் வேன் முளைத்தது!

வெள்ளை டிராக்ஸ் ஜீப் அது; வேகமெடுத்தது; சடுதியில் ஜீவாவின் காரைத் தாண்டியதும் ஆசுவாசமானது. ஜீப்பிலிருந்து ஒரு போலீஸ் கரம் வெளிப்பட்டு காரை நிறுத்தச் சொல்லி அலட்சியமாகச் சைகை செய்தது!

(தொடரும்)




"ஹலோ! க.கா.மு.க. கட்சி தலைமையகமா!"

"ஆமாம்! நீங்க யாரு?"

"நான் அ.ஆ.இ.க.தலைவர். எங்க கட்சி சார்பா இன்று மயிலாப்பூர்ல நடக்க இருந்த மீட்டிங் கேன்சல் ஆயிடுச்சு! அதுக்காக, நாங்க ஏற்பாடு செஞ்ச நூறு லாரி ஜனங்களை உங்க கட்சி மீட்டிங்குக்கு உபயோகப்படுத்திக்க முடியுமா?"

— பாஸ்கி







1998 பிப்ரவரி 1
ஈசுவர தை 19
மலர் : 56
இதழ் : 27

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




சோனியாவின் சவால்!

'போஃபர்ஸ் பற்றிய புலனாய்வு விவரங்களை வெளியிடுங்கள்!' என்று சோனியா காந்தியே சவால் விடும் அளவுக்கு நிலைமை உருவாகியிருக்கிறது! தாம் காங்கிரஸுக்காகப் பிரசாரம் செய்வது என்று முடிவெடுத்தால், எதிர்க்கட்சிகள் போஃபர்ஸ் விவகாரத்தை வேகமாகக் கிளற ஆரம்பிக்கும் என்பது சோனியாவுக்குத் தெரியும். அதனால்தான் அவர்களை முந்திக் கொண்டு தாமே அப்படியொரு அறைகூவல் விடுத்திருக்கிறார்! விசாரணை விவரங்களை அரசால் வெளியிட முடியாது என்பதும் சோனியாவுக்கு நன்றாகவே தெரியும்.

சுவீடன் அரசிடம் சிறப்பு அனுமதி வேண்டி ரகசிய விவரங்களைப் பெற்றிருக்கிறது இந்திய அரசு. இவ்விவரங்களை நீதிமன்ற விசாரணைக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்பது நிபந்தனை. 'அதை மீறி, விசாரணை விவரங்களை வெளியிட்டு தேர்தல் போக்கை நிர்ணயிக்க முயன்றால் சுவீடிஷ் அரசின் நீடித்த ஒத்துழைப்பு கிடைக்காது; விசாரணைப் போக்கு பாதிக்கப்படும்' என்பது பிரதமர் குஜ்ராலின் வாதம். பிரதமரின் இந்த பதிலை எதிர்பார்த்துத்தான் சோனியாவும் தைரியமாகச் சவால் விட்டிருக்கிறார்!

சவாலும் சமாளிப்பும் ஒருபுறமிருக்க, போஃபர்ஸ் பீரங்கிகள் வாங்கியதில் ஊழல் நடந்துள்ளது என்பதும் அந்த வியாபாரத்தில் பெறப்பட்ட கையூட்டு, யாரைச் சென்றடைந்தது என்பதும் ஏற்கெனவே உலகறிந்த உண்மைகள். அந்த உண்மைகளை நிரூபிக்க ஆவணச் சேகரிப்புத்தான் இன்னும் நடந்து முடியவில்லை. போஃபர்ஸ் ஊழல் குறித்த முக்கியமான ஆதாரங்களைப் புலனாய்வு செய்து வெளியிட்ட சித்ரா சுப்ரமணியம் சொல்கிறார் : "சுவீடன் நாட்டு உளவுத் துறைத் தலைவர் லிண்ட்ஸ்ட்ராம், "குவாட்ரோச்சியை விசாரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும்" என்று இந்தியாவுக்கு ஏற்கெனவே குறிப்புணர்த்தியிருக்கிறார். ஆனால்,



இந்தியாவோ குவோட்ரோச்சியின் பெயர் அடிபட்டதுமே விசாரணையை கிடப்பில் போட்டு விட்டது! குவோட்ரோச்சியைத் தப்பவும் அனுமதித்து விட்டது!"

இத்தாலியரான குவோட்ரோச்சி, யாருக்கு நெருக்கமானவர் என்பது யாவரும் அறிந்ததே. மேலும், சுவிஸ் வங்கி தந்துள்ள ஆதாரங்களும் சுவீடன் அரசு கொடுத்துள்ள சாட்சியங்களும் (கிட்டத்தட்ட ஆயிரம் ஆவணங்கள் இந்திய அரசின்வசம் உள்ளன!) லஞ்சம் தரப்பட்டதையும் பெறப்பட்டதையும் சந்தேகத்துக்கிட மின்றி நிரூபிக்கின்றன. இறுதியாகப் பயனடைந்த நபர் யார் என்பது வேண்டுமானால் ஆதாரபூர்வமாக அறியப்படாமல் இருக்கலாம். ஆனால் ராஜீவ் காந்தி ஆட்சியில்தான் இந்த ஊழல் மௌனதானத்துடன் நடைபெற்றது என்பதை சோனியாவே கூட மறுக்க முடியாது.

இதையெல்லாம் மீறியும் சோனியா சவால் விடுகிறார்; சவடால் பேசுகிறார் என்றால், அது அரசியல் சூழ்நிலை அவருக்கு அளித்திருக்கிற பலம்தான்.


தேர்தல் முடியும்வரை உள்ள இந்த காபந்து அரசு விசாரணையைத் தொடரவோ, பெயர்களை வெளியிடவோ முடியாது என்பது சோனியாவுக்குத் தெரியும். தேர்தலுக்குப் பிறகு காங்கிரஸ் ஆட்சி அமைந்து விட்டாலோ எல்லாவற்றையும் ஒரே அமுக்காக அமுக்கி விடலாம் என்ற துணிவு!

ஜெயலலிதாவின் அலறல்!

"ஸ்ரீபெரும்புதூரில் பிரசாரத்தைத் துவக்கிய சோனியா காந்தி, ஜெயின் கமிஷன் அறிக்கை குறித்து வாயே திறக்கவில்லை... இதன் பின்னணியில் ஒரு மாபெரும் சதி இருக்கிறது! பத்திரிகையாளர்கள் அதைப் புலனாய்வு செய்து வெளியிட வேண்டும்...." என்று ஜெயலலிதா ஒரேயடியாகப் புலம்பியிருக்கிறார்.

பத்திரிகையாளர்கள் புலனாய்வு செய்யும் அளவுக்கு சோனியாவின் நடவடிக்கையில் எந்த மர்மமும் இல்லை.

ஐ.மு. ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு காங்கிரஸுக்கு அகப்பட்ட ஒரு சாக்குதான் ஜெயின் கமிஷன் அறிக்கை. ஆட்சி அமைக்கப்பட்ட நாள் முதலாகவே காங்கிரஸ் அரை மனத்துடன்தான் ஐ.முவை ஆதரித்து வந்தது. காங்கிரஸ் ஆட்சி அமைக்கவோ தேர்தலைச் சந்திக்கவோ நாள்பார்த்துக் கொண்டிருந்தார்கள். எனவே,



ஆதரவு வாபஸ் பயமுறுத்தல்கள் அவ்வப்போது எழுந்து மத்திய அரசை மிரட்டிக் கொண்டிருந்தன. ஜெயின் கமிஷன் அறிக்கை அந்த மிரட்டலை நிஜமாக்குவதற்குக் கிடைத்த கடைசி ஆயுதம்! ஆயுதத்தின் உபயோகம் முடிந்து விட்டது. எனவே அதைப் பற்றி இனி காங்கிரஸுக்குக் கவலையில்லை. சோனியா அதைத் தமது பேச்சில் குறிப்பிடாததும் ஆச்சர்யமில்லை.

சோனியா பிரசாரத்துக்கு வந்த புதிதில் இருந்ததைக் காட்டிலும் இப்போது நிலைமை மாறியிருக்கிறது. காங்கிரஸை விட்டுப் பிரிந்து வந்த மணிசங்கர அய்யர், மம்தா பானர்ஜி போன்றோர் அக்கட்சிக்கே திரும்பிவிட விரும்புகிறார்கள். வடக்கே சோனியா அலை வீச ஆரம்பித்திருக்கிறது. பி.ஜே.பியின் ஹிந்துத்வா பிடிவாதமும் கூட்டணிச் சிக்கல்களும் அதிகரிக்க அதிகரிக்க, அக் கட்சியின் வெற்றி வாய்ப்புகள் குறைகின்றன. காங்கிரஸின் வெற்றி வாய்ப்புகளோ இதற்கு நேர் எதிர் விகிதத்தில் அதிகரிக்கின்றன!

தேர்தலில் அதிக இடங்களைப் பெற்றும் பெரும்பான்மை பலத்தைப் பெறாவிட்டால், அதை எவ்வாறு உருவாக்கிக் கொள்ளலாம் என்ற நோக்குடன்தான் காங்கிரஸ் செயல்படுகிறது. இதை கேசரியே வெளிப்படையாக ஒப்புக் கொண்டுமிருக்கிறார்.

ஊழல் குற்றச்சாட்டுகளைத் தாங்கி நின்ற அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்ததை எதிர்க்கப் பிறந்ததுதான் த.மா.கா. எனவே, அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டு இல்லை என்னும்போது, த.மா.காவின் காங்கிரஸ் விரோதமும் அடிபட்டுப் போய்விட, தேர்தல் முடிந்தபின் வியூகங்களைத் தேவைக்கேற்ப மாற்றியமைக்கலாம் என்ற நோக்கில்தான் த.மா.கா. தலைவர்களும் இயங்குகிறார்கள்.

இதைப் புரிந்து கொண்டால், தி.மு.க. - த.மா.காவைத் தாக்காத சோனியாவின் போக்கும், சோனியாவை மௌனமாக வரவேற்ற மூப்பனாரின் சாமர்த்தியமும், 'காங்கிரஸ் இம்மாநிலத்தில் ஒரு பெரிய சக்தியே அல்ல...' என்று தட்டிக் கழித்த தி.மு.க.வினுடைய டேக் இட் ஈஸி பாலிஸியும் சதித்திட்டமல்ல; அரசியல் சதுரங்கம் என்பது தெளிவாகும்.

ஆனால், ஜெயலலிதாவின் நோக்கில் இந்தச் சதுரங்கம் சதியாகத் தோன்றத்தான் செய்யும். பி.ஜே.பியின் வெற்றி கேள்விக்குறியாகும்போது புரட்சித் தலைவி போட்டுள்ள திட்டங்களும் தடுமாற ஆரம்பிக்கின்றன. அவர் 'ஐயய்யோ, சதி வேலை!' என்று அலறுவதில் வியப்பென்ன...?

தொலைக்காட்சிக் கனவுகள்

சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில், எங்கள் காலனியிலுள்ள பாஷ் மார்க்கெட்டில் ஜன்னல் ஷாப்பிங் செய்வது எனது தலையாய பொழுது போக்கு. இப்படி, கடைத் தெருவில் உலாவரும் சமயங்களில், நான் அடிக்கடி காணும் ஒரு காட்சி. சமீபகாலமாக என் மனத்தில் பெருத்த ஏக்கத்தை உண்டாக்க ஆரம்பித்துள்ளது.

கையில் மைக்கும், தோளில் வீடியோ காமெராவையும் சுமந்த வண்ணம், ஏதாவது ஒரு தொலைக்காட்சி சானலைச் சார்ந்த குழு, போவோர் வருவோரையெல்லாம் பிடித்து நிறுத்தி, இனவட்டங்கள் புடைசூழ பேட்டி கண்டு கொண்டிருக்கும்.

"தங்களுக்கு கோவிந்தா போடும் குட்டிக் கரணங்கள் பிடிக்குமா அல்லது பிரபு தேவாவின் பாம்பாட்டம் பிடிக்குமா?" போன்ற அதி முக்கியமான கேள்விகளுக்கு, ஐ.ஐ.டி. நுழைவுத் தேர்வுக்கு விடையளிப்பது போல், படு சீரியஸாக யாராவது ஒருவர் பதிலளித்துக் கொண்டிருப்பார். அல்லது, தனக்கு மிகவும் பிடித்தமான சினிமா பாடல் ஒன்றை, கதவிடுக்கில் அகப்பட்டுக் கொண்ட சுண்டெலி போல் ஒரு பெண் கீச்சுக் குரலில் மந்திரம் ஓதிக் கொண்டிருப்பாள். இவர்களைச் சுற்றி நிற்கும் கூட்டம் "கெக்கே பிக்கே" என்று இளித்துக் கொண்டிருக்கும்.

நாட்டில் உண்ண உணவிற்குப் பஞ்சம் இருந்தாலும், டீவி சானல்களுக்கு மட்டும் நிச்சயமாக பஞ்சம் இல்லை. ஆனால், இத்தனை சானல்கள் இருந்தும், என்னுடைய திருமுகம் மட்டும் ஏன் ஒரு முறை கூட தொலைக்காட்சியில் காட்சியளிக்கவில்லை? நானும் அரசமரத்துப் பிள்ளையாரைச் சுற்றி வருவது போல், சனி, ஞாயிறு தவறாமல் கடை வீதியை வலம் வருகிறேன். ஒரு காமெரா சுமைதாங்கியாவது தனது கடைக் கண் பார்வையை, அல்லது காமெராவை என் பக்கம் வீசக் காணோமே?

அன்றும் அப்படித்தான், கடை வீதியைக் கால் வலிக்கச் சுற்றிவிட்டு, ஏக்கப் பெருமூச்சுடன் வீடு வந்து சேர்ந்தேன். வீட்டிற்குள் நுழையவும் அசரீரி போல் டெலிபோன் மணி அடிக்கவும் சரியாக இருந்தது! என்ன ஆச்சரியம்! தெய்வத்தின் காதுகளுக்கு (அதாவது தொலைக் காட்சித் தயாரிப்பாளர்களுக்கு)



எனது வேண்டுதல் கேட்டு விட்டதா? தொலைக் காட்சியில் வாராவாரம் ஒளிபரப் பாகும் மக்களின் நீதி மன்றம் நிகழ்ச்சியின் உதவித் தயாரிப்பாளர் என்று தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார், தொலை பேசியவர். இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே என்று ஆனந்தத் தாண்டவம் ஆடலாம் போலிருந்தது, எனக்கு. தமிழ் நாட்டைச் சார்ந்த தலைவர்

ரமாமணி சுந்தர்



ஒருவரைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி, கேள்விக் கணைகளால் துளைத் தெடுக்க வேண்டும் என்றும், அப்படித் துளை போடுவதில் நான் மிகவும் சாமர்த்திய சாலி என்பதனால் என்னை இந் நிகழ்ச்சியில் பங்கு கொள்ள அழைப்பதாகவும் அவர் சொன்னவுடன், தில்லியின் டிசம்பர் குளிர் போல் உச்சி குளிர்ந்து போனது, எனக்கு. இன்ப அதிர்ச்சியில் எனக்குக் கையும், காலும் ஓடவில்லை. நிகழ்ச்சியின் படப்பிடிப்பிற்கு இன்னும் இரண்டு நாட்கள்தானே இருக்கின் றன! அதற்குள் எத்தனை ஆயத்தங்கள் செய்ய வேண்டும் என்று நான் பரபரத்தேன்.

முதல் வேலையாக கழுவில் ஏறப் போகும் அந்தத் தலைவர், என்னென்ன வம்பு தும்பு களில் ஊழல் விவகாரங்களில் மாட்டிக் கொண்டிருக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ள, சென்ற ஒன்றிரண்டு மாதங்களில் வெளியான செய்தித் தாள்கள், பத்திரிகை களைக் குடைந்தெடுத்தேன். குழந்தைகள் பரீட்சைக்குப் படிப்பது போல் இராப் பகலாகக் கண்விழித்து நான் படித்தது போதாதென்று, என் கணவரையும் படித்து குறிப்பெடுக்கச் சொல்லி, ஒரு கேள்வித் தாளையே தயாரித்து வைத்துக் கொண்டேன்.

முதன் முதலாக தொலைக் காட்சியில், அதுவும் தேசிய சானலில் காட்சியளிக்கப் போகிறேன். பார்ப்பதற்கு பளிச்சென்று இருக்க வேண்டாமா? பியூட்டி பார்லருக்குப் போய், நானூறு ரூபாய் வரையில் செல வழித்து, தலைக்குச் சாயம், முகத்திற்கு மசாஜ், அலங்காரம், என்று ஒன்று விடாமல் பண்ணிக் கொண்டேன்.

படப்பிடிப்பன்று காலையில் சுறுசுறுப்பாக சீக்கிரமே எழுந்திருந்து, பிரபல கம்பெனியின் வெள்ளரிக்காய் பேக்கை, என்னுடைய பூசணிக்காய் முகத்தில், பூச்சாண்டி போல் பூசிக் கொண்டு அது உலருவதற்காக அரை மணி நேரம் காத்திருந்தேன். அந்த அரைமணி நேரத்தில், வீட்டிற்குள் நுழைந்த பால்காரன், வேலைக்காரி எல்லோரும் என்னைக் கண்டு பயந்து அலற, அன்று காலை எங்கள் வீடு அமளிதுமளிப்பட்டது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவோர்களுக்கு, தடபுடலாக டிபன், காபியெல்லாம் வழங்கப்படும் என்று ஏற் கெனவே சில நிகழ்ச்சிகளில் பங்கு பெற்ற நண்பர்கள் ஆசை காட்டியிருந்தார்கள். அதனால், காலை ஆகாரம் கூட அருந்தாமல், கொலைப்பட்டினியாக, நாக்கைத் தீட்டிக் கொண்டு வீட்டை விட்டுக் கிளம்பினேன். காலை பத்து மணிக்கெல்லாம் ஷூட்டிங் ஆரம்பித்து விடும் என்றும், ஒன்பதரை மணிக்கெல்லாம் ஆஜராகி விட வேண்டும் என்றும் உதயாரிப்பாளர் கறார் கந்தசாமியாக அறிவித்திருந்ததால், ஆட்டோ வைத்துக் கொண்டு "அடிச்சுக்கோ பிடிச்சுக்கோ" என்று படப்பிடிப்பு நடக்கும் இடத்திற்குப் போய்ச் சேர்ந்தேன்.

நீதி மன்றம் போல் 'ஜோடனை செய்யப் பட்டிருந்த ஹாலில், பார்வையாளர்கள் உட் காரும் இடத்தில் என்னை உட்கார வைத்தார் கள். அங்கு அமர்ந்திருந்தவர்கள் எல்லோரும், பரீட்சை ஹாலுக்கு வெளியே நின்று கொண்டு, கடைசி நேரத்தில் பாடங்களை மனப்பாடம் செய்வது போல், மனதிற்குள் கேள்விகளைக் கேட்டு ஒத்திகை பார்த்துக் கொண்டு படு டென்ஸாக இருந்தார்கள். பக்கத்து இருக்கையில் உள்ளவர், தனது கேள்விகளைப் பார்த்து காப்பி அடித்து விடு வாரோ என்ற பயத்தில் சிலர் தங்கள் கேள்வித் தாளை ஒளித்து மறைத்து வைத்துக்


கொண்டனர்.

இப்படியே ஒரு மணி நேரம் நாங்கள் பரீட்சை ஹாலில் உட்காருவது போல் மூச்சுக் காட்டாமல், சமத்தாக கையை கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தோம். ஷூட்டிங் ஆரம்பிப்பதற்கான எந்த விதமான அறிகுறியும் காணப் படவில்லை. ஏதோ நான்கைந்து பேர், காமராவையும், விளக்கு களையும் இப்படியும் அப்படியும் திருப்பிக் கொண்டிருந்தார்கள். உதயாரிப்பாளர் ஒருவர் நடமாடும் தொலைபேசியைக் காதில் ஒட்டிக் கொண்டு இங்கும் அங்கும் நடமாடிக் கொண் டிருந்தார். எங்களில் ஒருவர் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு,

"ஷூட்டிங் எப்பொழுது துவங்கும்?" என்று கேட்டார்.

குற்றவாளி, அதாவது தலைவர் ஏதோ தலை போகிற அதாவது பதவி போகிற மீட்டிங்கில் பிஸியாக இருப்பதாகவும், இன்னும் அரை மணியில் வந்து விடுவார் என்றும் சொல்லி எங்களைச் சமாதானப் படுத்தினார் உதயாரிப்பாளர்.

தலைவர் வரும் வரையில் காத்திருக்கப் பொறுமையின்றி, "பார்வையாளர்கள்" ஓடிப் போய் விடுவார்களோ என்ற பயத்தில் வெளியே செல்லும் கதவைத் தாளிட்டு, துவார பாலகர் போல் இருவர் கதவின் அருகில் நின்று கொண்டார்கள். அவசரமாக பாத்ரூம் இருக்க வேண்டியவர்கள், நர்சரி வகுப்புக் குழந்தைகள் போல் எழுந்திருந்து ஒற்றை விரலைக் காண்பித்து அனுமதி பெற்றுப் போய் வந்தனர். அடாடா! விசார ணைக் கூண்டில் ஏறப் போகும் தலைவர் குற்றவாளியா, அல்லது பார்வையாளர்களான நாங்கள் குற்றவாளிகளா என்று எங்களுக்கே சந்தேகம் உண்டாகும்படி, எங்களைக் கைதிகள் போல் அடைத்து வைத்திருந்தார் கள்.



"நீ போஸ்ட்மேனை காதலிச்சது எப்படி உங்க வீட்டுக்குத் தெரிஞ்சது?"

"லவ் லட்டர் குடுக்கும் போது கூட 'போஸ்ட்'ன்னு கத்திக்கிட்டே குடுத்துட்டார்!"

— தாரமங்கலம் மகேஷ்

இப்படியே பகல் பன்னிரெண்டு மணி வரையில் பல்லைக் கடித்துக் கொண்டு, சிறைத் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருந்தோம். திடீரென்று ஆபத்பாந்த வனாக எங்கிருந்தோ ஒருவர் அவதரித்து, "தலைவர் வந்து கொண்டே இருக்கிறார். அதற்குள் நான் உங்களை வைத்து சில ஷாட் கள் எடுக்கப் போகிறேன்" என்று அறிவித்தார். ஏதோ காம்ப்ளான் குடித்துப் புத்துணர்ச்சி பெற்றது போல் எல்லோரும் புதிய உற்சாகத் துடன், தலைமுடி, புடைவைத் தலைப்பு எல்லாம் சீர் செய்து கொண்டு, காமெராவுக் குப் 'போஸ்' கொடுக்கத் தயாரானார்கள்.

புதிதாகத் தோன்றிய அந்த அவதார புருஷர், குற்றவாளிக் கூண்டில் போடப் பட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்து,

"நான் தான் அந்தத் தலைவர் என்று கற்பனை செய்து கொண்டு, எல்லோரும் என்னையே கண்கொட்டாமல் பாருங்கள்" என்று கட்டளையிட்டார். ஆஜானுபாகுவான அந்த தலைவர் எங்கே, இந்த குள்ளக் கத்திரிக் காய் எங்கே? கற்பனை செய்வது அவ்வளவு சுலபமாக இல்லை.

"கம்மா முறைத்துப் பார்க்காதீர்கள் தலைவர் பேசுவதை சுவாரசியமாக ரசிப்பது போல் பாவனை செய்ய வேண்டும்" என்று எங்களை அதட்டினார். பயந்து நடுங்கிக் கொண்டு, எல்லோரும் முடிந்த வரையில் நன்றாகவே பாவனை செய்தோம்.

இந்த பாவனைகள் முடிந்த உடன், மற் றொரு நபர் நீதிமன்றத்தில் தோன்றி,

"நான் தான் இந்த கோர்ட்டின் நீதிபதி என்று கற்பனை செய்து கொள்ளுங்கள். இப் பொழுது நான் இந்த நீதி மன்றத்திற்குள் நுழை வேன். எல்லோரும் மரியாதையாக எழுந் திருந்து, ஆரவாரம் செய்யாமல் அமர வேண் டும்" என்று ஆணையிட்டார். 'டேக்' ஒழுங் காக வரவில்லை என்று எங்களை ஐந்தாறு முறை எழுந்து உட்கார வைத்து 'டிரில்' வாங்கினார்கள். நாங்களும் அந்த நீதிமன்றத் துப் பிள்ளையாருக்கு, உட்கார்ந்து எழுந் திருந்து மூச்சுவாங்க பல முறைகள் தோப்புக் கரணம் போட்டோம்.

எங்களது கற்பனைத் தலைவரின் புத்தி சாலித்தனமான பதில்களுக்கு, பாராட்டு தெரிவிக்கும் விதத்தில் பல முறைகள் எங் களைக் கைதட்ட வைத்தார்கள். ஜூபின் மேத்தா தனது இசைக் குழுவை ஆட்டி வைப்பது போல், ஒருவர் எங்கள் முன்பு நின்று கொண்டு, எங்களை மேல் ஸ்தாயி, கீழ் ஸ்தாயி என்று ஏற்றம் இறக்கம் கொடுத்து வலியால் கைகள் சிவந்து, துடிக்கும் அளவிற்கு கைதட்ட வைத்தார்கள்.

• ஆந்திரா போச்சம்பள்ளி காட்டன் சேலை • கோரா சில்க் சேலை • வெங்கடகிரி சேலை

அல்லூரியின்

சுடிதார் '98



சுடிதார் மற்றும்

ரெடிமேட்

பிளவுஸ்களுக்கு

மட்டும்

மாபெரும்

தள்ளுபடி

10% முதல் 25%

பிப்ரவரி **1** முதல் **15** வரை

• எண்ணற்ற ரகங்கள் / வடிவங்கள் / மாடல்கள்

• ரெடிமேட் சுடிதார் ரெடிமேட் பிளவுஸ்களுக்கும் தள்ளுபடி

• இந்த தள்ளுபடி விற்பனை சேலைகளுக்கும், சுடிதார் துணிகளுக்கும் பொருந்தாது

அல்லூரி சாரீஸ்

4/38, R.K. Mutt Road, Luz Bazaar, Mylapore,

Chennai-600 004. **Ph: 4935791**

• ரெடிமேட் பிளவுஸ் • நைட்டீஸ், பெட்டிகோட்ஸ்

• கரிஷ்மா காட்டன் சேலை & சுடிதார்ஸ் • பெல்காம் பாலியெஸ்டர் சேலை • நெகமம் காட்டன் சேலை

• பெங்கால் காட்டன் சேலை • டஸ்ஸார் சில்க் சேலை • இக்காட் சில்க் சேலை • பேன்ஸி ரெடிமேட் சுடிதார்ஸ்

கல்கி–சரவணா ஸ்டோர்ஸ்

இணைந்து வழங்கும்

வாரம் ஒரு பட்டுப் புடைவை!

இந்த வாரப் பட்டுப் புடைவையைப் பெறுவதற்கான கேள்வி:

இந்த இதழ் முழுவதையும் கவனமாகப் படியுங்கள். ஒரு கட்டுரையில், தாம் போகிற இடங்களுக்கெல்லாம் பின் தொடர்ந்து வந்து, 'ஜிந்தாபாத்' என்று சொல்லுவதற்கு அனைத்திந்தியக் கட்சித் தலைவர் ஒருவர், இருபது பேர் கொண்ட ஒரு குழுவையே வைத்திருக்கிறாராம்! **யார் அந்தத் தலைவர்?**

கீழுள்ள கூப்பனில் எழுதி அனுப்புங்கள். ஒருவர் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். அத்தனை கூப்பன்களும் ஒரிஜினலாக இருக்க வேண்டும். ஜெராக்ஸ் பிரதிகள் செல்லாது.

கூப்பன்கள், ஆசிரியர், கல்கி, 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல் சென்னை-600 097 என்ற முகவரிக்கு வந்து சேரக் கடைசித் தேதி: 9.2.98.

உறையின் மேல் 'பட்டுப் புடைவைப் போட்டி - 4' என்று தவறாமல் குறிப்பிடவும்.

ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

பட்டுப்புடைவை பரிசுப் போட்டி – 4

'ஜிந்தாபாத்' போட ஒரு குழுவையே வைத்துள்ள தலைவர் : ....

பெயர்: ....

முகவரி: ....

....

....


....

கடைசியாக, தலைவர் அடிக்கப் போகும் ஜோக்குகளுக்காக எங்களைச் சிரிக்க வைத்தார்கள். அந்தத் தலைவர் ஜோக் அடித்தோ, சிரித்தோ நிச்சயமாக ஒருவரும் பார்த்திருக்க முடியாது! அப்படியிருக்கையில் அவருடைய ஜோக்கிற்குச் சிரிப்பதா? மேலும், இதற்குள் நாங்கள் எல்லோரும் ஏகமாக களைத்துப் போயிருந்தோம். ஒருவருக்குமே சிரிப்பு வரவில்லை, அழுகைதான் வந்தது! ஆனாலும், எல்லோரும் அழுது கொண்டே சிரித்தோம். ஒவ்வொருவரும் வினோதமான ஒலிகளை எழுப்பியவாறு சிரிப்பதைப் பார்த்து, இன்னும் பெரியதாகச் சிரித்தோம். ஆக, நாலு பேர் எங்களைப் பார்த்து சிரிக்கும்படி நாங்கள் எல்லோரும் சிரிப்பாய்ச் சிரித்தோம்.

ஒரு வழியாக இந்த 'டேக்குகள்' அதாவது கேலிக் கூத்துகள் முடியும் பொழுது, மணி பிற்பகல் ஒன்றடித்து விட்டது. தலைவர் இன்னமும் தலை காட்டவில்லை. எல்லோருக்கும் நல்ல பசி. "அம்மா பசிக்குதே! ஐயா பசிக்குதே" என்று குசேலர் வீட்டுக் குழந்தைகளாக மாறி, 'ஜூபின் மேத்தா' கொடுத்த பயிற்சியில் கோரஸாக கத்த ஆரம்பித்தோம். உ.தயாரிப்பாளர்கள் பார்த்தார்கள். வெளியே சாப்பிட அனுப்பினால், அதுதான் சாக்கு என்று எல்லோரும் ஓடிவிடுவார்களோ என்று பயந்து, பக்கத்திலுள்ள ஹாலில் மேஜை, நாற்காலிகளைப் போட்டு, எங்கிருந்தோ சப்பாத்தி, கறிகாய் வகைகளை வாங்கி வந்து, எங்கள் எல்லோருக்கும் விநியோகிக்க ஆரம்பித்தார்கள். எல்லோரும் பஞ்சத்தில் அடிப்பட்டவர்கள் போல், ஆலாய் பறந்து கொண்டு சாப்பிட ஆரம்பித்தார்கள்.

இனி அங்கு ஒரு நிமிடம் கூட இருக்கக் கூடாது என்று உறுதி பூண்ட நான், சாப்பாட்டு கலாட்டாவில் ஒருவரும் என்னை கவனிக்காத பொழுது, ஜெயிலிலிருந்து தப்பித்து ஓடும் கைதியைப் போல், நைசாக நழுவி, தப்பித்தோம் பிழைத்தோம் என்று அங்கிருந்து எடுத்தேன் ஓட்டம்!

அடுத்த வாரம் மக்களின் நீதிமன்றம் நிகழ்ச்சி தொலைக்காட்சியில் ஒளிபரப்பான பொழுது, என் அழகிய முகத்தைக் காண எங்கள் குடும்பத்தினர் அனைவரும் டீவியின் முன்பு ஆஜராகிவிட்டனர். அடாடா! தலைவரின் பதில்களை நான் எவ்வளவு அழகாய்த் தலையை ஆட்டி ரசிக்கிறேன், கைதட்டிப் பாராட்டுகிறேன், அவர் பேச்சைக் கேட்டு சிரித்து மகிழ்கிறேன்! தொலைக்காட்சியில் காட்சியளிக்க வேண்டும் என்ற என் நீண்ட நாள் கனவு, நிச்சயமாக இதை விடச் சிறப்பாக நிறைவேறியிருக்க முடியாது!



பீகார்:

மன்னருக்கே மரியாதை!

பீகாரில் மொத்தம் 54 மக்களவைத் தொகுதிகள் இருக்கின்றன. மூன்று முக்கிய அணிகளுக்கிடையேதான் போட்டி. ஒன்று - லாலுவின் ராஷ்ட்ரீய ஜனதா தளம் + காங்கிரஸ் கூட்டணி. இரண்டாவது - பிஜேபி + சமதா கட்சிக் கூட்டணி. மூன்றாவது கூட்டணி இடதுசாரிகளும் ஜனதா தளமும் இணைந்து உருவாக்கியிருப்பது. நாம் பீகாரில் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு திரும்புகிற வேளையில் முலயம்சிங் யாதவின் சமாஜ் வாதிக் கட்சி, ஜகன்னாத் மிஸ்ராவின் பீகார் ஜன் காங்கிரஸுடன் புதிய கூட்டணி ஒன்றை அறிவித்து, நாலாவது அணிக்குப் பிள்ளையார் சுழி போட்டிருக்கிறது.

இந்தியா ஒரு மக்களாட்சி நாடு என்றாலும் பீகார் மாநிலத்தைப் பொறுத்தவரை அவர்கள் லாலுவை முதல்வராக (முன்னாள்!) அல்ல; மன்னராகவே எண்ணிக் கொண்டிருப்பதை பாட்னா, ராஞ்சி, ஆரா தொகுதிகளில் மக்களிடம் பேசியபோது உணர முடிந்தது.

"இதற்கு முக்கியக் காரணம் லாலு, மக்களுக்கு மிக அருகாமையில், அணுகக்கூடியவராக இருப்பதும் மக்களின் எளிய மொழியிலேயே பேசுவதும் அரசியலை முழுவதுமாகத் தெரிந்தவராக இருப்பதும்தான்" என்கிறார்கள் பாட்னாவிலுள்ள ராஷ்ட்ரீய ஜனதா தள அலுவலகத்தில் நாம் சந்தித்த கட்சிச் செயலாளர்கள்.

"மேலும் அவரை விட்டால் இங்கே ஸ்டார் வேல்யூ உள்ள வேறு தலைவர் ஒருவர் கூட இல்லை என்பதும் காரணம்" என்கிறார் மார்க்சிஸ்டான பாலசுப்ரமணியம். (ராஞ்சிக்காரர்)

வருகிற இடைத் தேர்தலில் பீகாரிலுள்ள 54 தொகுதிகளில் குறைந்தது 30-35 சீட்களை ஆர்ஜேடி - காங்கிரஸ் கூட்டணி பிடித்து விடும் என்று உறுதியாகச் சொல்கிறார்கள் பாட்னாவிலுள்ள செய்தி நிறுவன நிருபர்கள். (சென்ற தேர்தலில் 36).

லாலுவின் வோட்டு வங்கி என்பது முஸ்லிம்கள் மற்றும் யாதவர்களால் நிரப்பப்படுவது. 'M-Y' என்பது லாலுவின் பிரசித்திபெற்ற ஸ்லோகன். ('My men' என்று அவர்களைக் குறிப்பிடுகிறார்.) இந்த முஸ்லிம், யாதவர் வோட்டுக்களுடன் பலம் பொருந்திய ராஜபுத் இனத்தவரின் வோட்டுக்களையும் இழுத்து நிறுத்தும் விதமாக MYRஎன தம் ஸ்லோகனைச் சற்றே மாற்றியமைத்துப் பேசி வருகிறார் லாலு.

இனி ஒருக்காலும் மாநில அரசியலுக்குத் திரும்புவதில்லை; அதைப் பார்த்துக் கொள்ளத் தம் மனைவி போதும் என்று முடிவெடுத்துவிட்டு, இம்முறை மதேபுரா தொகுதியிலிருந்து போட்டியிடுகிறார் லாலு.

மதேபுராவில் லாலுவை எதிர்த்துப் போட்டியிடுகிறவர் - அவரது முதல் சிஷ்யரும் முதல் எதிரியுமான சரத்யாதவ் (ஜனதா தளம்).

"பீகாரைப் பொறுத்தவரை கடவுளே லாலுவுக்கு எதிர் வேட்பாளராக நின்றாலும் டெபாஸிட்டை இழக்க நேரிடும்" என்கிறார் பீகார் பிரதேஷ் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸர்ஃபரார் அகமது.

மொர்ஹபாகி திடலில் சோனியாவின் பிரசாரக் கூட்டத்துக்காகத் தீவிர ஏற்பாடுகளில் இருந்தவர், "லாலுவுடன் கூட்டணி ஏற்பட்டது, பீகாரில் கொஞ்சமாவது காங்கிரஸ் காலூன்ற வழிவகுக்கும்" என்று உறுதியாக நம்புகிறார்.

உண்மையில் யாருடனும் கூட்டணி வைத்துக் கொள்ள லாலு முதலில் விருப்பப்படவே இல்லை என்கிறார்கள் பாட்னாவிலுள்ள ஆர்ஜேடி அலுவலகத்து முக்கியஸ்தர்கள்.

"ஆனால், கேசரி ஒரு பீகாரி என்பதால் அவரது வேண்டுகோளைக் 'கருணையுடன்' ஏற்றுக் கொண்டிருக்கிறார் எங்கள் தலைவர். மற்றபடி காங்கிரஸுடன் சேருவதால் எங்களுக்கு எதுவும் லாபமில்லை" என்றார் ஆர்ஜேடியின் ஆரா நகரச் செயலாளரான பிட்டு தன்வர்.

லாலுவின் கணக்கு வேறு. என்னதான் பீகார் மக்கள் அவரது 800 கோடி தீவன ஊழலை ஒரு பொருட்டாகக் கருதாதபோதிலும் (லாலு பதவி விலகியபோது ஒரு பூச்சி கூடக் கட்சி மாறவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்) கோர்ட் கேஸ்கள் இழுத்தடித்துக் கொண்டு போவதில் அவருக்கு விருப்பமில்லை. சோனியாவின் 'என்ட்ரி'யை ஓரிரு மாதங்கள் முன்னதாகவே

• படங்கள் - நன்றி: வீக், அவுட்லுக்

''அவ்வளவு பெரிய காயம் படுற வரைக்கும் என்ன பண்ணிக்கிட்டிருந்தீங்க?''

''அடி வாங்கிக்கிட்டிருந்தேன், டாக்டர்!''

— பெ.பொன் ராஜபாண்டி



எதிர்பார்த்த லாலு, கட்டாயம் ஐமு உதவியுடன் காங்கிரஸ் ஆட்சியைப் பிடிக்கும்; தம் விஷயத்தில் ஒரு 'கப்' முடிவை அதன் மூலம் ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று நினைக்கிறார்.

ஆனால், ''லாலு கட்சியுடனான கூட்டணியை ஒரு தவிர்க்க முடியாத அரசியல் நிர்ப்பந்தமாக சோனியா நினைக்கிறாரே யொழிய லாலுவை அவர் விரும்பவில்லை'' என்கிறது தில்லி காங்கிரஸ் வட்டாரம்.

லாலு – காங்கிரஸ் கூட்டணிக்கு அடுத்தபடியாக பீகாரில் செல்வாக்குப் பெற்றுள்ள கூட்டணி பிஜேபி – சமதாவுடையது.

ஜார்கண்ட் பகுதியில் உள்ள பன்னிரண்டு தொகுதிகளைத்தான் தெய்வமாக நம்பிக் கொண்டிருக்கிறது பிஜேபி. உயர் வகுப்பினர் நிறைந்த அப்பகுதி வாக்குகள் தமக்கு மொத்தமாகக் கிடைத்து விட வேண்டும் என்பதில் முனைப்புக் காட்டுகிறது அது.

முஸ்லிம் இனத்தவர் அதிகமுள்ள பீகாரின் வானன்சல் (Vananchal) பகுதியினர் தங்களைத் தனி மாநிலமாக அறிவிக்கக் கோரி நீண்ட நாட்களாகப் போராடி வருகிறார்கள்.

ஜாம்ஷெட்பூரில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட பாஜக தலைவர் அத்வானி, இது வரை எந்தத் தலைவரும் வாய்திறக்காத இவ் விஷயத்தில் முதல் முறையாகத் திருவாய் மலர்ந்துள்ளார்.

''பிஜேபி ஆட்சிக்கு வந்தால், பஞ்சாபிலிருந்து ஹரியானாவைப் பிரித்துத் தனி மாநிலமாக்கியது போல, பீகாரிலிருந்து வானன்சல் பிரித்துத் தரப்படும்'' என்று அவர் அறிவித்திருப்பது, கிட்டத்தட்ட அனைத்துக் கட்சியினரையுமே விழி உயர்த்தச் செய்துள்ளது.

''காங்கிரஸ், சிபிஐ, ஜனதாதளத்தை நம்பி, எதுவும் கிடைக்காத முஸ்லிம்கள், இன்று பிஜேபியை நம்புகிறார்கள்.(!) பிஜேபி ஆட்சிக்கு வரவேண்டும் என்று விரும்புகிறார்கள்'' என்று தம் விருப்பத்தைச் சொல்லி, சிறுபான்மையினரின் வோட்டுக்களைக் கவரப் பார்க்கிறார் அத்வானி.

ஆனால், பிஜேபியின் கூட்டணிக் கட்சியான சமதாவின் கூடாரத்தில் என்ன நடக்கிறது?

சமதா கட்சித் தலைவர் ஜார்ஜ் பெர்ணாண்டஸ், நாலந்தா தொகுதியில் போட்டியிடுகிறார், முன்னாள் சிபிஐ ஆபீசர் என்.கே. சிங், லாலுவுக்கு எதிராக மதேபுரா தொகுதியில் போட்டியிடுகிறார் என்பதைத் தவிர வேறு எதுவுமே தீர்மானத்துக்கு வராமல் தொகுதி ஒதுக்கீடு விஷயத்தில் குடுமிப்பிடி சண்டை போட்டுக் கொண்டிருப்பதை நாம் பாட்னாவிலுள்ள சமதா தலைமையகத்துக்குச் சென்ற போது நேரில் காண முடிந்தது.

சாதி வாரியாகத் தேர்தலில் நிற்க டிக்கெட் கொடுப்பதில் ஆரம்பித்தது சிக்கல். சமதா கட்சி, பீகாரில் பலம் பொருந்தியதாகக் கருதப்படும் 'ராஜ்புத்'களின் வோட்டுக்களை லாலுவிடமிருந்து பிடுங்குவதன் பொருட்டு ஆறு சீட்களை ராஜ்புத் இனத்தாருக்கு ஒதுக்கியதால் பிரச்னை தீவிரமாகி, வெடித்தது! கட்சி அலுவலகத்துக்கு நாம் சென்ற போது செருப்புகள் பறந்ததைக் காண முடிந்தது.

ராஜ்புத் சாதியினருக்கு ஆறு சீட்களை ஒதுக்கி விட்டு, குர்மி சாதிக்கு இரண்டு; கோரி இனத்தவருக்கு இரண்டு, பூமிஹார் இனத்தவருக்கு இரண்டு என்று ஜார்ஜ் பெர்ணாண்டஸ் அறிவித்ததால் அவ்வகுப்பினர் கலவரத்தில் இறங்கி விட்டார்கள்.

''விளக்கம் கூறி சமாதானப்படுத்தும் வேலைதான் இப்போது நடைபெறுகிறது. பிரசாரத் திட்டம், வெற்றி வாய்ப்புக்கான வேலைகளெல்லாம் இது தீர்ந்த பிறகுதான் அங்கே!'' என்று கிண்டலடிக்கிறார்கள் பாட்னாவிலுள்ள ஆர்ஜேடிக்காரர்கள்.

''எப்படியும் பத்திலிருந்து பன்னிரண்டு சீட்கள் வரை பிஜேபி – சமதா கூட்டணிக்கு ஜார்கண்ட் மூலம் கிடைத்துவிடும். அதற்கு மேல் சாத்தியமே இல்லை'' என்றார் நாம் பாட்னாவில் சந்தித்த 'ஆஜ்' பத்திரிகையின் செய்தியாளர் தீபக் மல்ஹோத்ரா.

லாலுவுக்கு முப்பத்தைந்து, பிஜேபி சமதாவுக்குப் பன்னிரண்டு என்றால் மிச்சமுள்ள ஏழு சீட்களுக்குத்தான் இங்கே கம்யூனிஸ்டும் ஜனதா தளமும் சமாஜ்வாதியும் ஜகன்னாத் மிஸ்ராவின் ஜன் காங்கிரஸும் போட்டியிடுகின்றன!

காவிநிறக் கடைகளில் கனஜோரான வியாபாரம்!

● பா.ஜ.க. அலுவலக வாசலில் காவி நிறத்தில் இரண்டு கடைகள் திறந்திருக்கிறார்கள். கட்சிக் கொடிகள், புகைப் படங்கள் பாட்ஜுகள் வியாபாரம் கனஜோராக நடக்கிறது. இவற்றுடன் சில தேர்ந்தெடுத்த நல்ல நூல்களையும் விற்பனைக்கு வைத்திருக்கிறார்கள். பாபர் மசூதி இடிப்பு தொடர்பாகப் பலரால் பலவித நோக்கில் எழுதப்பட்ட நூல்கள் இங்கே விற்பனைக்குக் கிடைக்கின்றன. (பாஜகவை விமர்சித்து எழுதப்பட்டதும்!) நூதன முறையில் நிதி வசூல்!



• கேசரி

● காங்கிரஸ் தலைமையகத்தில் கேசரியின் எதிர் கோஷ்டியினர் அவருக்கு வைத்துள்ள நிக்நேம் தெரியுமா? சிக்கன்-65! (சோனியா விரும்பிச் சாப்பிடும் உணவாம்!)

● பீகார் முதல்வர் ராப்ரி தேவியுடன் பேட்டி வேண்டுமா? 'லல்லுவிடம் அப்பாயின்ட்மென்ட் வாங்குங்கள்!' என்கிறார்கள் ஆர்ஜேடி அலுவலகத்தினர். கணவர் உத்தரவின்றி, அம்மணி யாரிடமும் வாய் திறப்பதில்லையாம்!

● நாட்டையே கலக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிற நரசிம்மராவின் புதிய நாவல் 'தி இன்ஸைடர்' (கிட்டத்தட்ட சுயசரிதை) சரியாகத் தேர்தல் சமயத்தில் வெளிவருவதற்கான சகல ஏற்பாடுகளையும் துரிதமாகக் கவனித்துக் கொண்டிருக்கிறாராம் ராவ்! (சீட் கிடைக்காத கடுப்பு?)

● சீதாராம் கேசரி செல்லுமிடமெல்லாம் அவரைப் பின்தொடர்ந்து சென்று 'சாச்சா கேசரி ஜிந்தாபாத்' என்று கத்துவதற்காக இருபது பேர் கொண்ட குழு ஒன்று இருக்கிறதாம்! இளைஞரணியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, 'பயிற்சி அளிக்கப்பட்ட' இக் குழுவுக்கான உணவு, தேனீர் வகையறா செலவுகளைக் கேசரியே ஏற்றுக் கொள்கிறார் என்று கிண்டலாகப் பேசுகிறார்கள் தில்லிப் பத்திரிகையாளர்கள்.

● புதுதில்லியிலுள்ள யு.என்.ஐ. செய்தி நிறுவனத்தின் கேன்டீன், தேசிய அளவில் புகழ்பெற்றது. பல பிரபல அரசியல் புள்ளிகள், பத்திரிகையாளர்கள் அனைவரும் இங்கு வந்து சுவையான டிபனுடன் அரசியலைச் சேர்த்து அரைத்து விட்டுப் போவார்கள். இந்த லிஸ்டில் லேட்டஸ்டாக இணைந்திருக்கிறார் ஒரு தொழிலதிபர் திருபாய் அம்பானி!



• ஜோரான வியாபாரம்

● கட்சிகளின் தேர்தல் நிதிக்காகப் பெரிய தொழிலதிபர்கள் கோடிகளைக் கொண்டு கொட்டுவது வழக்கம். (கட்சி, ஆட்சிக்கு வந்தால் பல மடங்கு சம்பாதித்து விடலாமல்லவா?) அவ்வகையில், 'எப்படியும் சோனியாவால் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்து விடும்' என்று நம்பி, காங்கிரஸுக்குத் தேர்தல் நிதியாக மூட்டை மூட்டையாகக் கொண்டு வந்து கொட்டத் தயாராகி இருக்கிறது ஒரு பிரபல தேயிலை நிறுவனம் என்கிறது புதுதில்லி பத்திரிகை வட்டாரம். சமீபத்தில் பல சிக்கல்களில் மாட்டி, பிரச்னைகளுக்கு 'பைபை' சொல்லத் துடித்துக் கொண்டிருக்கிற நிறுவனம் அது!

"மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட்தான் எங்கள் ஒரே எதிரி. அவர்களை இம்முறை வீழ்த்தாமல் ஓயமாட்டோம்!" என்று சபத மெடுத்துவிட்டுக் களத்தில் குதித்திருக்கிறார் கேசரியை எதிர்த்துக் கொண்டு, காங்கிரஸிலிருந்து பிரிந்து 'த்ரினாமூல் காங்கிரஸ்' என்கிற புதுக்கட்சி தொடங்கியிருக்கும் மம்தா பானர்ஜி.

யாரையும் எதிரி என்று சொல்லாமல், ''வழக்கம் போல் ஜெயிப்போம்'' என்று கூறியதோடு மட்டுமின்றி, முதல் முறையாக அனைத்து கம்யூனிஸ்ட்களையும் இணைத்துத் தேர்தல் அறிக்கை தந்துள்ளார் மார்க்ஸிஸ்ட் தலைவர் ஜோதிபாசு.

மம்தாவின் த்ரினாமூலுடன் கூட்டணி வைத்துக் கொண்டு எப்படியாவது ஐந்து இடங்களையேனும் பிடித்து விட வேண்டும் என்பதற்காக, மம்தா என்ன சொன்னாலும் பொறுத்துக் கொண்டு, எப்படி நடக்கச் சொன்னாலும் கேட்கத் தயாராக இருக்கிற பாஜக தலைவர் தபன் சிக்தர்.

கட்சியின் பெரும்பலமாக இருந்த மம்தா போய் விட்ட பிறகு, என்ன செய்வது என்று புரியாமல் தவித்து, அவசர அவசரமாக இப்போது சோனியாவை பிரசாரத்துக்கு வர வழைக்க முயற்சி செய்து கொண்டிருக்கிற காங்கிரஸின் மாநிலத் தலைவர் சோமன் மித்ரோ...

இத்தனை பேர் இருந்தாலும் மேற்கு வங்காளத்தில் இத் தேர்தலைப் பொறுத்த வரை மிக நேரடியான போட்டி மார்க்ஸிஸ்டுகளுக்கும் மம்தாவுக்கும்தான். அடிக்கிற புயலில் காங்கிரஸ் காணாமல் போய்விடும் என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள்.

மொத்தம் நாற்பத்தொரு மக்களவைத் தொகுதிகள். ஏற்கெனவே மெஜாரிடி இடங்களைப் பிடித்திருப்பது மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிதான்.

"ஆனால், இம்முறை மம்தா அலை, ஓரிரு இடங்களை மார்க்ஸிஸ்டிடமிருந்து அடித்துச் சென்று விடும்'' என்கிறார்கள் கல்கத்தா பத்திரிகையாளர்கள்.

"மம்தாவின் பலம், அவரது அஞ்சாமை. தவிர மக்களுக்குப் புரியும் மொழியில் காரசாரமாகப் பேசுவது. பெண் என்பது பாமர வாக்காளர்களிடையே அவருக்குக் கூடுதல் தகுதி தருகிறது'' என்கிறார் ஹெளராவில் நாம் சந்தித்த த்ரினாமூல் தொண்டர் வினோத் பானர்ஜி.

" 'த்ரினாமூல்' என்கிற வங்கச் சொல்லின் அர்த்தமே 'பாட்டாளி மக்கள்' என்பதுதான்" என்கிறார் கல்கத்தா தமிழ்ச் சங்கத் தலைவர் ராமமூர்த்தி. த்ரினாமூலை இங்கே TMC என்று அழைக்கிறார்கள்!

"ஒன்றரை லட்சத்துக்கும் அதிகமாக உள்ள தமிழ் வாக்காளர்களைக் கவரவா?" என்று

மேற்கு வங்காளம் : ஒரு ஹீரோயினின்



• ஜோதிபாசு : சுலப வெற்றி!

கேட்டால், "அத்தனை தூரம் யோசித்திருப்பார்கள் என்று தோன்றவில்லை" என்கிறார்.

தமது முதல் வேட்பாளர் பட்டியலை (29 பேர் - இது 33 ஆகிவிடும் என்கிறார்கள்.) இங்கே அறிவித்துள்ள மம்தா, அதன் மூலம் கூட்டணிக் கட்சியான பாஜகவை பலத்த கலவரத்தில் ஆழ்த்தி இருக்கிறார். காரணம், பாஜக கேட்டிருந்த டார்ஜிலிங், மிட்னாபூர் தொகுதிகளிலெல்லாம் மம்தா தம் த்ரினாமூல் வேட்பாளர்களை அறிவித்திருக்கிறார்.

ஒரிசாவில் பயணம் மேற்கொண்டிருந்த பாஜக தலைவர் வாஜ்பாயி, இதைக் கேள்விப்பட்டதும் அவசர அவசரமாக, ''சீட் அட்ஜஸ்ட்மென்ட் மாதிரி கஷ்டமான காரியம் வேறில்லை - ஒரே கட்சிக்குள் கூட!'' என்று மேற்கு

வங்க பாஜக தொண்டர்களைச் சமாதானப் படுத்தும்விதமாக புவனேஸ்வரிலிருந்து அறிக்கை விட, கல்கத்தாவில் நாம் சந்தித்த பிஜேபியின் மாநிலத் தலைவர் தபன் சிக்தர், "இன்னும் பேச்சு வார்த்தை முடியவில்லை. முடிவுகள் மறு பரி சீலனை செய்யப்படலாம்" என்றார் சுருதி இறங்கிய குரலில்.

ஒரு பக்கம் மம்தாவுடன் கூட்டணி என்று பாஜக அடிக்கடி அவர்களுக்கு 'ஞாபகப் படுத்தி'க் கொண்டிருக்க, மறுபக்கம் "அப்படி ஏதும் முடிவாகவில்லையே?" என்று ஜகா வாங்குகிறார் மம்தா.

த்ரிணாமூலின் முக்கியத் தலைவர்களுள் ஒருவரான அஜித் பாஞ்சாலைச் சந்தித்த போது, "நாங்கள் போட்டியிடாத தொகுதி களில் பிஜேபிக்கு ஆதரவாக இருப்



• மம்தா பானர்ஜி



• மணிசங்கர ஐயர்

இரட்டை வேடம்!

போம்!" என்று கூறி விட்டுப் பறந்து விட் டார்.

பிரச்னைக்குரிய டார்ஜிலிங் தொகுதியில் தற்சமயம் தாற்காலிகமாக ஒரு டம்மி வேட் பாளரை அறிவித்திருந்தாலும், அதிகாரபூர்வ மாக அங்கிருந்து த்ரிணாமூல் சார்பாகப் போட்டியிடப் போகிறவர் மணிசங்கர ஐயர்தான்.

"டார்ஜிலிங் எனக்கு மிகவும் பழக்கமான பிரதேசம். நான் ராஜீவின் வலதுகரமாக இருந்தபோது, அவருடன் அங்கு பலமுறை சென்று தொகுதி மக்களுடன் நல்ல பரிச்சயம் பெற்றுள்ளேன். கட்டாயம் ஜெயிப்பேன்" என்று சொல்கிறார் மணிசங்கர ஐயர்.

முதல் நாள் இப்படி ஒரு அதிர்ச்சி என் றால், மறுநாள் மம்தா பிஜேபிக்குக் கொடுத்த அதிர்ச்சி சாமான்யமானதல்ல.

"தேர்தல் உடன்பாடு எதுவும் நாங்கள் பிஜேபியுடன் செய்து கொள்ளவில்லை. கூட்டுத் தேர்தல் பிரசார ஏற்பாடுகளும் ஏதும் செய்யப்படவில்லை. த்ரிணாமூல் தனித்து இயங்கும்!" என்று அவர் அறிக்கை விட, துடிதுடித்துப் போனது பாஜக.

கட்சி மேலிடத்திலிருந்து அதிகாரபூர்வ செய்தி எதுவும் வராத நிலையில் மாநில பாஜக தலைவர் தபன்சிக்தர், "அவர்கள் எங் களுக்காகப் பிரசாரம் செய்யாவிட்டாலும், நாங்கள் த்ரிணாமூலுக்காகப் பிரசாரம் செய் வோம்" என்று அபத்தமாக உளறிக் கொட்டிய போது, கூடியிருந்த பத்திரிகையாளர் களிடையே பலத்த சிரிப்பொலி.

மம்தா ஏன் இப்படி முன்னுக்குப்பின் முரணாக நடந்து கொள்கிறார்? பாஜகவுடன்

கூட்டணி அறிவித்து விட்டுப் பின்வாங்க வேண்டிய கட்டாயம் என்ன?

''அவர் கேசரியைத்தான் வெறுத்து, எதிர்த்தாரே தவிர, காங்கிரஸை அல்ல! கூடிய சீக்கிரம் கேசரி 'தூக்கப்பட்டு' விடுவார் என்பதால், தேர்தலுக்குச் சற்று முன்னோ பின்னோ, மம்தாவின் த்ரிணாமூல், ஒரிஜினல் காங்கிரஸுடன் இணைந்து விடும். அப்போது மேற்கு வங்காள காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பொறுப்பு சோமனிடமிருந்து 'பிடுங்கி', மம்தாவிடம் தரப்பட்டு விடும். இது நடக்க வெகு நாட்கள் ஆகாது!'' என்கிறார்கள், கல்கத்தாவிலுள்ள காங்கிரஸ் காரிய கமிட்டி அலுவலக முக்கியஸ்தர்கள்.

மம்தா அளவுக்கு சோமன் மித்ரா மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறாததைக் காரணம் காட்டி, காங். மேலிடம் அவரை அடக்கி வாசிக்கச் சொல்லிவிடும் என்கிறார்கள்.

சோனியாவின் வருகை, எப்படியும் கேசரியை வீட்டுக்கு அனுப்பிவிடும் என்கிற முடிவில், காங்கிரஸ் – மம்தா இணைப்புக்கு இங்கே பாலம் போட்டுக் கொண்டிருப்பவர், ராஜீவ் குடும்பத்துக்கு மிக நெருக்கமான நபரான மணிசங்கர ஐயர்.

ஆனால் இதை ஐயர் மறுக்கிறார்.

''நான் சோனியாவுக்கு நெருக்கமானவன் என்பது நாடறிந்த உண்மை. அதனால் மட்டுமே நான் சோனியா – மம்தாவுக்கிடையே இணைப்பு நடவடிக்கையில் ஈடுபடுகிறேன் என்று சொல்வது பொய்!'' என்கிறார் ஐயர்.

ஆனால் த்ரிணாமூல் மறுபடி காங்கிரஸுடன் இணையாது என்று தீர்மானமாகச் சொல்ல யாருமே இங்கு தயாராக இல்லை!

''சோனியா விரும்பினால் அவருடன் பேச நான் தயார். அவர் மேல் எனக்கு எப்போதும் நல்ல, உயர்ந்த அபிப்பிராயமும் மரியாதையும் உண்டு'' என்கிறார் மம்தா பானர்ஜி.

காங்கிரஸிலிருந்து விலகி வந்த வேகத்தில், அவர்களை மேலும் வெறுப்பேற்றும்விதமாக பாஜகவுடன் கூட்டணி அறிவித்து விட்டாலும், சூழ்நிலைகள் மாறுவதால் எந்த நிமிடமும் மறுபடி காங்கிரஸுடன் இணையலாம் என்ற நிலையில், பாஜகவுடன் தமது உறவுகளை ஆரம்பத்தோடேயே நிறுத்திக் கொள்ளலாம் என்று நினைக்கிறார் மம்தா. பலியாடு ஆகிவிட்ட பாஜக, என்ன செய்வதென்று புரியாமல் திருதிருவென்று விழிக்கிறது.

மேற்கு வங்காளத்தில் மம்தா நீங்கலான காங்கிரஸுக்குப் பிரமாதமான ஆதரவு ஏதுமில்லை என்று இங்குள்ள நிருபர்கள் சொல்கிறார்கள்.

இதன் பொருட்டே, ''ஏதாவது செய்யுங்கள்'' என்று சோனியாவை நச்சரிக்கிறார் காங்கிரஸ் தலைவரான சோமன் மித்ரா. சோனியா ஒப்புக் கொள்வதற்கு முன் தாமாகவே மால்டாவிலும் ஹூக்ளியிலும் பிரசாரக் கூட்டம் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்து விட்டார் – எப்படியும் ஒப்புக் கொண்டு விடுவார் என்கிற நம்பிக்கையில்!

த்ரிணாமூல், காங்கிரஸ், பாஜகவெல்லாம் இப்படிப் பறந்து கொண்டிருக்க, சலசலப்பு ஏதுமில்லாமல் மிக அமைதியாக இருக்கிறது கல்கத்தாவிலுள்ள மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம். தலைவர்கள் யாருமே இல்லை! ''எல்லாரும் வெளியூர் கூட்டங்களுக்குப் போயிருக்கிறார்கள். ஜனவரி 31 அன்று பிரிகேட் பரேட் மைதானத்தில் இடதுசாரி முன்னணியின் ஒருங்கிணைந்த பொதுக் கூட்டம் நடக்க இருக்கிறது. அப்போது வந்தால் பாசுஜி உட்பட அனைவரையும் சந்திக்கலாம்'' என்றார் அலுவலக சிப்பந்தி ஒருவர்.

அலட்டிக் கொள்ளாமல் ஜெயிக்கப் போகிறார் ஜோதிபாசு.

''வித்தியாசமான 'லெக்'ஸ்பின்னர்னு சொன்னீங்களேன்னு பார்த்தா, இப்படியா! இந்த மாதிரி பௌலிங்கை அனுமதிக்க முடியாது...!''

— பாஸு





• மலைக் கோயில் முகப்பு...


மலைக் கோயிலுக்குள் செல்ல தலித்துகள் தடுக்கப்படுகிறார்களா...?

'கோவை - திருப்பூர் பக்கம் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு குழந்தை வேலாயுதசாமி மலைக்கோயிலில் ஜாதி இந்துக்கள், தலித் மக்களை தரிசனத்துக்கு விடுவதில்லை. அவர்களின் இந்த ஊர்க் கட்டுப்பாட்டையும் மீறி ஆயிரக்கணக்கான தலித்துகள் கலெக்டர் முன்னிலையில் மலை ஏறி சுவாமி தரிசனம் செய்து சமபந்தி போஜனம் செய்தனர். அதற்கு எதிர்ப்புக் காட்டி குறிப்பிட்ட ஜாதிப் பெண்கள் கலெக்டரையே மறித்து... பலத்த வாக்குவாதம் நடத்தினர்...' - என்பதெல்லாம் கோவை நாளேடுகளின் பழைய செய்தி. இப்போது அந்தக் கோயில் தீட்டுப் பட்டுப் போனதாகவும் அதனால் அர்ச்சகர்கள் பூஜை செய்வதில்லையெனவும், மலையேறி தரிசனம் செய்த தலித்துக்களை ஊரை விட்டே விரட்டி ஒதுக்கி வைத்து விட்டதாகவும் கோயிலுக்கு வரும் கூட்டம் கூட இப்போது பன்மடங்கு குறைந்து விட்டதாகவும் நமக்குத் தகவல்கள்... அங்கு அப்படி என்னதான் நடக்கிறது என்று ஒரு விசிட் அடித்தோம்...!



• லக்ஷ்மணக் கவுண்டர்

"**யா**ரோ சில அரசியல்வாதிக, அதிகாரிகளோட வெளியூர்லயிருந்து எங்க ஆளுகளைக் கூட்டிட்டு வந்து, மலையேறிட்டு'



• வள்ளி - தெய்வானையுடன் குழந்தை வேலாயுத சாமி...

போய்ட்டாங்க. அதுல புடிச்சது சாமி கோயிலுக்கே ஏழரை நாட்டுச் சனி.. பழைய கூட்டம் இப்ப இல்லை!"

– கோயில் வழியிலேயே எதிர்ப்பட்ட ஒரு தலித் பெரியவர் இப்படித்தான் நம்மிடம் பேசினார்.

"கோவில்ல பூஜையெல்லாம் நடக்குதில்ல..!"

"ம்... ம்... நடந்தென்ன செய்யறது? பழைய கூட்டிப்பு இப்ப இல்லையே சாமீ..."

கிளை பரப்பும் நான்கு சாலைகளில் எந்தப் பக்கம் போனாலும் சுத்தமாய் அரை கி.மீ. போக வேண்டும், பஸ்நிறுத்தத்திற்கோ டீக்கடை தேடவோ. அடிவாரத்தில் பூஜைக்குக் காத்திருக்கும் ஒரு வாகனம். கீழிருந்து மேலே செல்ல எண்ணி இருபது இருபத்தைந்து படிக்கட்டுகள். எதிர்கொள்ளும் முன் மண்டபம். மண்டபத்தின் வலது பக்கம் உற்சவமூர்த்தி, வள்ளி தெய்வானையுடன். நேர் எதிரே பக்தருக்கு அருள் பாலிக்கும் குழந்தை வேலாயுதசுவாமி...

– இதுதான் மலைக்கோயில்.

"ஒரு மணி நேரத்துக்குள்ள கோயில் வாசல்ல 10-15 ஆயிரம் பேர் திரண்டதை நாங்கள் அப்போதுதான் பார்த்தோம். அதுவும் இங்கே சுத்தியிருக்கிற பதினெட்டு ஊர்களிலிருந்து வந்த பெண்களின் எண்ணிக்கையை வாய்விட்டு எண்ண முடியாது... அவ்வளவு கூட்டம்...! அவ்வளவு ஆக்ரோஷம்...!"

– நாம் போனபோது உச்சிவேளை பூஜை முடித்து வந்த ராஜு குருக்கள், இன்னமும் பிரமிப்பு அடங்காமல்தான் நம்மிடம் பேசினார்.

"சம்பவ அன்றைக்கு நாங்கதான் இங்கு இருந்தோம். மலைக்கோயில் வரலாற்றுல நாங்க இவ்வளவு போலீஸைப் பார்த்தது கிடையாது. ஜெ.சி., ஏ.சி., கலெக்டர்ன்னு எல்லாரும் வந்துட்டாங்க. அவங்களையே மலையேற விடாம தடுத்த ஆயிரக்கணக்கான ஜாதி இந்துப் பெண்கள், தம் ஜாதிப் பெண்களை இழிவு படுத்திக் கோஷம் போட்ட தலித்துகள் மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லி சத்தம் போட்டனர். அதிகாரிகளும் சில அரசியல்வாதிகளும் தலித்துகளோடு மலையேற முற்பட, 'நீங்க என்ன ஏறுவது... நாங்களே எங்க தலித்துகளோட மலையேறுவோம்...' என்று ஜாதி இந்துக்களில் ஆண்கள் சொல்ல, ஒரே வாக்குவாத மயம். காலையில் 4.30, 5.00 மணிக்குத் துவங்கின பிரச்னை, மதியம் இரண்டு மணி வரை நீடித்தது. கடைசியில் ஜாதி இந்துக்கள் திரும்பிப் போக, தலித்துகள் சிலரை அழைத்துக் கொண்டு மலையேறினர் சில அதிகாரிகள்!"

– என்று தொடர்ந்து கூறினர் பாலு குருக்களும், ஞானஸ்கந்த குருக்களும், கோவில் பண்டாரமும்.

"அதிகாரிகளும் சரி, உயர் ஜாதி இந்துக்களும் சரி தலித் மக்களோடு மலையேறுகிறோம் என்றுதான் சொல்லியிருக்கின்றனர். அப்புறமென்ன பிரச்னை...?"

"எல்லாம் ஈகோ ப்ராப்ளம்தான்..." என்கின்றனர் குருக்கள் மூவரும்.

அதாவது உள்ளூர் தலித்துகளைக் அழைத்துக் கொண்டுதான் மலையேறுவோம் என்று கூறினர் ஜாதி இந்துக்கள். இல்லை நாங்கள் கூட்டி வந்த வெளியூர் ஆட்களுடன் தான் மலையேறுவோம் என அதிகாரிகள். தங்கள் ஜாதிப் பெண்களை அவமதித்த அவர்களை ஏற விடமாட்டோம் என்று சுற்றுப்புற பதினெட்டு கிராமப் பெண்களும் கூடிவிட்டனர். இதுதான் இங்கு பிரச்னையேயன்றி வேறில்லை!" என்றனர்.

சரி.... உண்மையிலேயே இக்கோயிலில் தலித்துகள் நுழைவது தடுக்கப்படுகிறதா?

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை!" என சுத்தமாய் மறுக்கின்றனர் பக்கத்திலுள்ள வேலாயுதம்பாளையம் கிராமத்து மக்கள்.

"எந்தக் கோயிலுக்குள்ளேயும்... வர்றவங்க ஜாதியை நெற்றியிலா எழுதி ஒட்ட வச்சிருக்கு...?

பழைமையில் ஊறிப் போன உள்ளூர் தலித்துகள் சிலர் மேலே வரவே சங்கோஜப்படுகின்றனர். இது கடவுளின் மீதான பக்தியா... பயமா? இல்லே... ரெண்டும் கலந்த பயபக்தியா என்பது அவர்களைப் பொறுத்தது. இதுதான் இங்கு உள்ள விஷயம். இதை வச்சு வெளியூர் தலித்து இளைஞர்களை ஆவேசப்படுத்தித் தூண்டி விட்டு, இப்படியொரு 'பப்ளிசிட்டி' தேடிட்டிருக்கு ஓர் அரசியல் கட்சி. இதற்கு முன்னரே அந்த ஜாதிய அமைப்பு சார்ந்த அரசியல் பிரமுகர் தூண்டுத லால் 'இரட்டை தம்ளர் (டீக் கடைகளில் தலித்துகளுக்குத் தனி தம்ளர்) உடைப்புப் போராட்டம்' ஊர்வலம், கோஷம்ன்னு நடத்தியது. அதன் பின்னால் தான் இப்படி...!" என்கின்றனர் பலரும்.

சரி கோயில் திட்டுப்பட்டு விட்டது. பூஜை நடப்பதில்லை. பூட்டப்பட்டுள்ளது என்பதெல்லாம்...

"வீண் வதந்தி சார்... பிரச்னை வெடித்தப்ப மட்டும் கோயில் கமிட்டியே பூட்டிவிட்டு பூஜை சமயம் மட்டும் திறந்து விட்டது. அப்போது கொஞ்சம் பூஜை வேளையும் தாமதப்பட்டது. வருடா வருடம் வெகு விமரிசையாய் நடக்கும் சூரசம்ஹாரம், கந்தசஷ்டி விழாக்களை பிரச்னை கருதி நடத்தவில்லை. இதனாலேயே இந்தப் புரளி என நினைக்கிறோம். மற்ற படி முக்கால பூஜையும் நடந்து கொண்டுதானிருக்கிறது. கூட்டமும் கணிசமாக வந்து கொண்டு தானுள்ளது!" என்றனர் கோயில் குருக்கள்மார் மாறி மாறி...!

மலையேறின தலித்துகள் ஊரை விட்டே ஒதுக்கி வைக்கப்பட்டனர், தறிப் பட்டறைகளில் வேலை நீக்கம் செய்யப்பட்டு விட்டனர் என்கிற செய்தி குறித்து இக்கோயில் தர்மகர்த்தாக்களில் ஒருவரும், விசைத்தறி அதிபருமான வேலாயுதம்பாளையம் பி. லஷ்மணக் கவுண்டரிடம் கேட்டோம்.

"இது உண்மையிலேயே தொழில் பிரச்னைங்க. அதை ஜாதிப் பிரச்னையாக்கி விட்டவங்க தொழிலாளிகதான். பொதுவா தறிப் பட்டறைகள்ல அவங்க வாங்கற அபரிமித முன்பணம், அதைக் கட்டாமலும் வேலைக்கு வராமலும் போக்குக் காட்டினதை முதலாளிக கேட்கப் போக, இதை இப்படி ஜாதிப் பிரச்னையா - ஜாதி சொல்லி திட்டினதா - தனி தம்ளர் வச்சதா - கோயிலுக்குள்ள விடாம தடுக்கிறதா - திசை திருப்பி விட்டுட்டாங்க. இதுக்கு ஒரு எம்.எல்.ஏவும், சில அரசியல்வாதிகளும், சில அதிகாரிகளும் கூட உடந்தைன்னு பேச்சு அடிபடுது...



குருக்கள்

"தலித்துக மலையேறப் போறதா செய்தி வந்தப்ப, இவங்களைக் கூட்டிட்டு நாங்களே ஏறுகிறோம். இவங்க ஏறுவதற்கு எங்க ஜாதிக்காரங்க யாரும் தடையில்லேன்னுதான் நாங்க அறிவிச்சோம். சமபந்திக்குன்னு அரிசி, பருப்பு எல்லாம் நாங்களே செலவு செஞ்சு வாங்கி வச்சோம். ஆனா அதுக்கு முன்னால 'எங்க ஜாதிப் பொண்ணுகளை இழிவுபடுத்தி கோஷம் போட்டவங்களை' ஏற விடமாட்டோம்ன்னு எங்க ஜாதிப் பொண்ணுக குறுக்கிட்டுத் தடுத்ததுல தான் பிரச்னையே. அதிகாரிக அதை தட்டிக் கேட்கல. நாங்களும் திரும்பி வந்துட்டோம். அப்புறம் அவங்க மலையேறி அதிகாரிகளோட சமபந்தி சாப்பிட்டதாகவும் தகவல்.

"இதுக்குப் பின்னால யாருமே அவங்க (தலித்) ஆளுக வேலைக்கு வரலை. அப்புறம் முன்பணம், அது இதுன்னு கணக்கு முடிக்கப் பேசினப்ப.. அப்புறமா வேலைக்குத் திரும்பினாங்க. கடனைக் (20 ஆயிரம் வரை) கொஞ்சம் கொஞ்சமா பிடிச்சுட்டு வரவும் சம்மதிச்சுருக்காங்க. இவங்களை யாரும் இங்கே மலையேற வேண்டாம்ன்னு தடுக்கல. ஊரை விட்டு ஒதுக்கியும் வைக்கலே! அவங்களே ஏறாம, ஏற விடமாட்டேங்கறாங்கன்னா என்ன அர்த்தம்? அதுவும் இந்தப் பிரச்னையைக் கிளப்பறது வெளியூர் ஆட்களே தவிர, எங்க ஊர் தலித்துகள் அல்ல!" என்றார் அவர்.

கட்டுரை, படங்கள் : **கா.சு. வேலாயுதன்**



யோகி

இரண்டு நாளாய் மஞ்சுவைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. மஞ்சுவைப் பார்த்தால்தான் மனம் சாந்தியடையும் என்று தோன்றியது. அதோடு புகுந்த வீட்டிற்குப் போய் ஒரு வாரம் ஆயிற்று. போன இடத்தில் எப்படி நடந்து கொள்கிறாளோ... அது வேறு பயமாய் உள்ளது. நல்லபடியாய்ச் சென்று இருந்தால் எதைப் பற்றியும் கவலை இல்லை... இவனை மிரட்டித்தான் கல்யாணத்திற்குச் சம்மதிக்க வைத்தது.

இப்போது தோன்றுகிறது... அப்படிச் செய்தது தவறோ... அவள் விரும்பினவனுக்கே அவளைக் கொடுத்து இருக்கலாமோ என்று.

ஆனால் எப்படிக் கொடுக்க முடியும்? அவன் சரியானவனாய் இல்லையே...

விஜயாவிடம்– ''வெளியே போறேன்'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பி விட்டேன்.

பஸ் ஸ்டாண்ட் வந்து விட்டது. வரிசையாய் ஸ்வீட் கடைகள். மஞ்சுவுக்கு ஜாங்கிரி என்றால் வெகு இஷ்டம். அரை கிலோ ஜாங்கிரி, அரை கிலோ காரம் வாங்கிக் கொண்டேன். திராட்சைப் பழம் கொஞ்சம் வாங்கிக் கொண்டேன். காலியாய் இருந்த பஸ்ஸில் ஏறிக் கொண்டேன். அமர்ந்தேன்.

இந்த பஸ் ஸ்டாண்டில் வைத்துத்தான் மஞ்சுவை அந்தப் பையனோடு பார்த்தது...

தெரிந்தவர் ஒருவர் கல்யாணத்திற்குப் போய் விட்டு, பஸ்ஸில் இருந்து இறங்கியபோது– மஞ்சுவைப் பார்த்தேன். கூட ஒரு பையன். நீட்டாய் டிரஸ் பண்ணி, டை கட்டி இருந்தான். மஞ்சு ஏன் இங்கு நிற்கிறாள்? யார் இவன்? காலேஜுக்குப் போகாமல் இங்கு என்ன பண்ணிக் கொண்டு இருக்கிறாள்?

மஞ்சு தற்செயலாய் என்னைப் பார்த்தாள். அவள் முகம் வியர்த்து விட்டது – என்னைப் பார்த்ததும். நான் பார்க்காமல் இருந்து இருந்தால்– நழுவி இருப்பாள். நான் பார்ப்பதைக் கண்டு விட்டதால் என்ன பண்ணுவது என்று தெரியவில்லை. விழித்தாள். அப்புறம் அவனிடம்

என்னவோ சொன்னான். இருவரும் என் பக்கம் வந்தனர். "இவர் என் அப்பா... அப்பா... இவர் என் ப்ரண்ட்" என்றாள். அவன் "ஹலோ சார்..." என்று சிரித்தான். பிறகு "வர்றேன் மஞ்சு... வர்றேன் சார்... பஸ்ஸிற்கு டைமாச்சு..." என்று நடந்தான்.

"காலேஜுக்கு போகலையாம்மா?"

"இல்லப்பா. இவர் என் ப்ரண்ட். ஊருக்குப் போறேன்னு சொன்னார். வழியனுப்ப வந்தேன்" என்றாள் தயங்கியவாறு... இருவரும் நடந்தோம். மஞ்சு எதுவும் பேசவில்லை. "வெறும் ப்ரண்ட்ஷிப் மட்டும்தானா?" மஞ்சு எதுவும் பேசவில்லை.

"உன்னை இதுக்குத்தான் காலேஜுக்கு அனுப்பறதா?" அதற்கும் மஞ்சு எதுவும் பேசவில்லை. வீட்டிற்கு சேர்ந்தே வந்தோம். தனித் தனியாகக் காலையில் வெளியே போன நாங்கள் சேர்ந்து வருவதைக் கண்ட விஜயா, "என்னவென்று கேட்டாள். மஞ்சுவின் முகம் பேயறைந்தாற் போல் இருந்தது. "உம் பொண்ணு செய்த காரியத்தைப் பாரு... காலேஜுக்கு அனுப்பினா ஊர் சுத்திட்டு இருக்கா- பசங்களோட..."

"பசங்களோட சுத்தறாளா" என்று மேற்கொண்டு என்னவென்று கேட்காமல் தலை முடியைப் பிடித்து அடித்தாள். மஞ்சுவுக்கு எங்கிருந்து அத்தனை கோபம் வந்தது என்று தெரியவில்லை. "நா அவரை லவ் பண்றேன். அவரைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்!" என்று கத்தினாள். "பிள்ளையை வளர்த்த லட்சணத்தைப் பாருங்க. பொம்பளைப் பிள்ளைக்கு ரொம்பச் செல்லம் கொடுக்காதீங்கன்னு சொன்னேனே.. கேட்டீங்களா...?" என்று விஜயா மஞ்சுவை பளீர் பளீர் என்று அடித்தாள்.

மஞ்சு தன் அறைக்குள் சென்று படுத்துக் கொண்டாள். சாப்பிட மறுத்தாள். முகம் கொடுத்துப் பேச மறுத்தாள். "காலேஜுக்கு அனுப்பினா... இவ பண்ணின காரியத்தைப் பாருங்க. காலேஜுக்கு போற பொண்ணுகளை படிக்க விடக் கூடாதுன்னு வெட்டியா பசங்க சுத்தறாங்க.." என்று முணுமுணுத்தாள் விஜயா. அவரைப் பத்தி உனக்கு என்ன தெரியும்?" என்று கத்தினாள் மஞ்சு.

"நாளையில் இருந்து இவளை காலேஜுக்கு அனுப்பாதீங்க... இவ படிக்கக் கிழிச்சது போதும்" என்றாள் விஜயா... எனக்கும் அது தான் சரியென்று பட்டது. இவளை காலேஜுக்கு அனுப்பிவிட்டு இனி எங்களால் நிம்மதியாய் இருக்க முடியாது. இவள் காலேஜுக்குப் போகிறாளோ... இல்லை வேறு எங்கு போகிறாளோ என்று கண்காணித்துக் கொண்டு இருக்க முடியுமா?

"இத்தனை நாளும் கல்யாண புரோக்கர் கொண்டு வந்த வரன்களை எல்லாம் தட்டிக் கழிச்சீங்க, பொண்ணு படிப்பு முடியட்டும், படிப்பு முடியட்டும்ன்னு.. இனி வரன் பார்க்க வேண்டியதுதானே. இவ படிச்சக் கிழிச்ச லட்சணத்தைத் தான் பார்த்தோமே... சட்டுப் புட்டுன்னு பாருங்க. இவளை இனி வீட்டுல உட்கார்த்தி வைக்க முடியாது."

ஆமாம். இனி பையனைத் தேட வேண்டியதுதான். தரகர் ஓயாமல் ஏதாவது ஒரு வரனின் ஜாதகத்தைக் கொண்டு வந்து தரத்தான் செய்கிறார். நான்தான் தட்டிக்கழித்து கொண்டு வந்தேன். இனி என்ன... முடித்து விட வேண்டியதுதான்.

"நா அவரைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன். வேற யாரையும் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி வற்புறுத்தினா சூசைட் பண்ணிப்பேன்!" என்றாள் மஞ்சு.

"உனக்கு முன்னாடி நாங்க சாகறோம்" என்றதும் மஞ்சு பேசாமல் இருந்தாள். எங்களோடு பேசுவதை நிறுத்திக் கொண்டாள். வலுக்கட்டாயமாய்ப் பேசினால்- முகத்தில் அறைந்தாற்போல் பேசுவாள். அப்போது தோன்றியது. இத்தனை பிடிவாதமாய் இருக்கிறாளே. பேசாமல் அவனையே இவளுக்குப் பார்த்துவிட்டால் என்ன என்று தோன்றியது. மகளின் சந்தோஷம் தான் முக்கியம். பிறகு அவனைப் பற்றி விசாரித்தபோது- ஏமாற்றமே மிஞ்சியது.

"மஞ்சு.... நீ இத்தனை பிடிவாதமாய் இருப்பதைப் பார்க்க அவ

நலமா?

"அவர் ஒண்ணும் வெட்டியா பொண்ணுங்க பின்னாடி சுத்தறவர் கிடையாது. சேல்ஸ் ரெப்பா இருக்கார். கிராஜ்வேட்... நல்ல டேலண்ட்... நல்ல சாலரி வாங்குறார்... னுக்கே உன்னை முடிச்சிடலாம்னு நினைச்சு அவனைப் பற்றி விசாரித்தேன். சொல்லிக் கொள்ளும்படியா அவன் இல்ல. பெரிய குடும்பம்தான். ஆனாலும் அதைப்

பெரிசுபடுத்தல. அவனுக்கு நல்ல வருமானம். ஆனா மோசமான வாழ்க்கை வாழறான். இல்லாத கெட்ட பழக்கங்களை எல்லாம் பழகிக் கொண்டு இருக்கான். உன்னால் சந்தோஷமா வாழ முடியாது. அவனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா."

"நீங்க பெரிய யோக்கியன் மாதிரி பேசு நீங்க. நீங்களும்தானே தண்ணியடிக்கிறீங்க" என்றாள் செவிட்டில் அறைந்தது போல். "நானும்தான் சாப்பிடுறேன். ஒரு தப்புக்கு இன்னொரு தப்பு நியாயமாயிடுமா.. குடிகாரனுக்கு மனைவியா இருப்பதில் எத்தனை வேதனை உள்ளதுன்னு உன் அம்மாவிடம் கேளு... காதலுக்கு நா விரோதியில்ல. அவன் நல்ல பையனா இருந்து இருந்தா உனக்குப் பேசி இருப்பேன்!" என்றேன். அவளுக்கு என் மனது புரியவில்லை. நாங்கள் அரும்பாடு படுவது அவளது நல்ல வாழ்க்கைக்குத்தானே என்பது அவளுக்குப் புரியவில்லை. பொய்யெல்லாம் சொல்லவில்லை. பார்த்ததை, கேட்டதை, தீர விசாரித்ததைத்தான் சொன்னேன். அவன் மோசமானவனாய்த்தான் இருந்தான். எதை வைத்து இவளைக் கவர்ந்தான் என்று தெரியவில்லை.

நல்ல வரனாய் பார்த்தாயிற்று. திருமணத் தேதி குறித்தாயிற்று. வீட்டை விட்டு அவள் எங்கும் வெளியே செல்லாதவாறு பார்த்துக் கொண்டாயிற்று. எங்களிடம் அவள் பேசுவது இல்லை. சத்தியமாய் விரோதியின் வீட்டில் தங்கி இருக்க நேர்ந்தது போன்றுதான் இருக்கிறாள். அவள் எவ்வித அசம்பாவிதத்திற்கும் துணிந்து விடக் கூடாதே என்று கடுமையாய்க் கண்காணித்தோம். நான் சொன்னேன்: "நாளைக்கு கல்யாணத்துக்குப் பிறகு- எங்க மேல உள்ள கோபத்தால் புருஷன் கூட சண்டை போட்டுட்டு இங்க வரலாம்னு நினைக்காதே..."

அவள் எதுவும் பேசத் தயாராய் இல்லை. அவள் மனசிற்குள் ஏதேனும் திட்டம் தீட்டி வைத்து இருக்கிறாளோ... இத்தனைக்குப் பிறகும் அவள் தன் தலையில் மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்ள முயன்றால் நம்மால் என்ன செய்ய இயலும்.

திருமணம் முடிந்தது நல்லபடியாய்... மாப்பிள்ளை வீட்டிற்குப் போய்விட்டு இங்குவந்து இருந்த இரண்டு நாளும் மஞ்சு எங்களிடம் எதுவும் பேசவில்லை. பழைய மாதிரியேதான் இருந்தாள். கலக்கமாய் இருந்தது. மாப்பிள்ளையிடம் எவ்வாறு நடந்து கொள்கிறாளோ... அச்சமாய் இருந்தது. மாப்பிள்ளை மகிழ்ச்சியாய்த்தான் இருந்தார். அதுவரை சந்தோஷமே...

அவர்கள் வீட்டிற்குச் சென்று விட்டார்கள். சென்ற மறுநாள் தான் போன் பண்ணினேன். போனை எடுத்தவள் 'யார்?' என்று கேட்டாள். என் குரலைக் கேட்டதும் போனை வைத்து விட்டாள். அத்தனை கோபமா? கோபம் இன்னும் நீங்க வில்லையா... எனக்கும் கூட சற்று கோபம்தான். அவ்வளவு நெஞ்சழுத்தமா? அதான் அடுத்து வந்த நாட்களில் போன் செய்ய வில்லை. ஆனாலும் மனசு கேட்கவில்லை. பார்க்க வேண்டும் போல் இருக்கவே கிளம்பினேன்...

பஸ் ஊரை அடைந்தது. இரண்டு மணி நேர பிரயாணம்தான். இந்த ஒரு வாரமாய் மகளைப் பார்க்க வரவில்லையே என்று அவர்கள் ஏதேனும் நினைத்துக் கொள்வார்களோ... கட்டிக் கொடுத்ததோடு தொல்லை விட்டது என்று நாங்கள் எண்ணிவிட்டதாய் நினைப்பார்களோ?

பஸ் ஸ்டாண்ட் பக்கத்தில்தான் வீடு. வீட்டை நெருங்கினேன். கதவு பூட்டியிருந்தது. காலிங் பெல்லை அழுத்தினேன். கதவு திறந்தது. மாப்பிள்ளை... என்னைப் பார்த்ததும் முகத்தில் மகிழ்ச்சி வெள்ளம். துண்டு கட்டிக் கொண்டு நின்றார். தலையில் லேசான ஈரம்.. அப்போதுதான் குளித்து இருக்க வேண்டும். "வாங்க மாமா... மஞ்சு இங்க வா... யாரு வந்து இருக்காங்கன்னு பாரு..." என்று கூச்சலிட்டான் சந்தோஷமாய்.

"யாரு..." என்றவாறு கிச்சனில் இருந்து மஞ்சு எட்டிப் பார்த்தாள். "அப்பாவா", சட்டென்று முகத்தில் மலர்ச்சி. நைட்டியில் துள்ளிக் கொண்டு வந்தாள். அந்த மலர்ச்சியை நான் எதிர்பார்க்கவில்லை. "வாங்கப்பா... அம்மா வரலையா?" என்று கையில் இருந்த பையை விசுக்கென்று பிடுங்கினாள். "ஐய்... ஜிலேபி..." என்று ஒரு ஜிலேபியை எடுத்து வாயில் வைக்கப்போனாள். அவள் கையில் இருந்த ஜிலேபியை மாப்பிள்ளை பிடுங்கிச் சாப்பிட்டார். மஞ்சு முறைத்தவாறு சிரித்தாள். என்ன ஒரு சந்தோஷமான சூழல்.

நான் இத்தகைய சூழலை எதிர்பார்த்து இருக்கவில்லை. உண்மையிலேயே சந்தோஷப்பட்டேன்... "முதல்ல தலையைத் துவட்டுங்க" என்று பக்கத்து அறைக்கு மாப்பிள்ளையை விரட்டின கையோடு மஞ்சு என் காதோரம் கிசுகிசுத்தாள். "ஸாரிப்பா... உன்னையும், அம்மாவையும் இத்தனை நாளா புண்படுத்தினதுக்கு.." அவள் கண்களில் லேசாய்க் கண்ணீர்.

"சே... சே... அழக் கூடாது..." சொல்லியவாறு நானும் அழுதேன். ○

''சோனியா, சோனியா, சொக்க வைக்கும் சோனியா''

'சோனியாவின் வரவால் எங்கள் கண்டு விரலைக் கூட அசைக்க முடியாது' என்று பி.ஜே.பி.க்காரர்கள் மார்தட்டினாலும், உள்ளூர நடுக்கம்தான் போலும்! பேச்சு மூச்சிலெல்லாம் 'சோனியா எதிர்ப்பு' ஜெபம்தான். பாலிவுட் மசாலாக்களிலிருந்து சில படங்களில், அங்கேயும் இங்கேயுமாக வார்த்தை ஜாலம் புரிந்து, தங்கள் பிரசாரங்களை 'ஸூபர் ஹிட்'டாக்கிக் கொண்டிருக்கிறார்கள். 'நீயோ அந்நியன்; கூட எங்கே இருக்கப் போகிறாய்? முதல் வண்டியில் சொந்த ஊர் திரும்பி விடுவாய்'' என்ற 'பர்தேசி'ப்பாடலை, சோனியாவுக்கேற்ப, 'இதாலி பறந்து விடுவாய் என மாற்றி தூள் கிளப்புகிறார்கள். 'தில் தோ பாகல் ஹை'' (மனம் ஒரு முட்டாள்) என்ற பாடலை ''தில்லி தோ பாகல் ஹை''யாக்கி, சக்கைப் போடு போடுகிறார்கள். தாமரைச் சின்னம் பதித்த சந்நியாசிக் கலர் குல்லாய், அங்கவஸ்திரம், டீ ஷர்ட் வகையறாக்களுக்கு ஸ்பான்ஸர் பிடிக்கும் வேலை மும்முரமாகிக் கொண்டிருக்கிறது. தேர்தல் வாக்குறுதிகள் விஷயத்தில் மும்முனைத் தாக்குதலாம்! தலைமையகத்திலிருந்து ஒரு பட்டியல், மாநில அளவில் சிவசேனையுடன் இணைந்து ஒன்று, மற்றும் மும்பைக்கென்றே பிரத்யேகமாக ஒன்றும் தயார்!

யாருக்காக? இது யாருக்காக?

அயோத்தியில், ராமர் கோயிலுக்குப் பதிலாக தேசியச் சின்னம் ஒன்று உருவாக்கலாம் என்கிறார் சிவசேனைக்காரரான தாக்கரே! பி.ஜே.பி.க்காரரான கோபிநாத் முண்டேவோ, இஸ்லாம் ஜிம்கானாவில் நடந்த 'இஃப்தார்' பார்ட்டிக்கு தலைமை தாங்க அழைப்பு வந்ததைக் கௌரவமாகக் கருதி, அதில் கலந்து கொள்ள சந்தோஷம் காட்டுகிறார். காங்கிரஸ்காரர்களோ, 'அயோத்தியில் நடந்த தவறுக்கு எங்களை மன்னித்து விடுங்கள்' எனக் காலில் விழாத குறையாகக் கதறுகின்றனர். ஸமாஜ்வாடிக் கட்சிக்காரர்களோ நடிகர் திலீப் குமாரை தேர்தல் களத்தில் இறக்கப் படாத பாடு படுகின்றனர். இதற்கென முலாயம் சிங்கே தனிப்பட்ட முயற்சி எடுத்துக் கொண்டார்- இவை எல்லாம் யாருக்காக? இன்னும் எந்தப் பக்கமும் இட்டவட்டமாகச் சாயாமல், மௌன விரதம் அனுஷ்டிக்கும் முஸ்லிம்களின் கவனத்தைக் கவரத்தான்! அவர்களிடம் 'வோட்டு' என்ற விலைமதிக்க முடியாத விஷயம் இருக்கிறதே!

தாயே மீனாட்சி

பதினொரு, புகழ்பெற்ற மராத்திய மங்கையருடன், இந்த வருடத்திய, மாநில அரசின் காலெண்டரில் இடம் பெற்றிருப்பவர் மறைந்த மீனாதாயி! இவரது தனிப் பெரும் சிறப்பு என்ன? ''பால்தாக்கரேயின் மனைவியாயிற்றே'' என்கிறீர்களா? சீச்சீ! அப்படியெல்லாமில்லை! இவர் ஒரு முதியோர் இல்லத்தைத் தோற்றுவித்து, அதன் காரணமாய், அரசு, ஒவ்வொரு தாலுகாவிலும் ஒரு



மும்பை மசாலா:

விருத்தாச்ரமத்தை உருவாக்கும் திட்டத்துக்கு வித்திட்டவர் என்று ஒரு சிறு குறிப்பை அரசே வெளியிட்டிருக்கிறது!

'கண்ட்ரோலிலிருக்கும் கண்ட்ரோல் டவர்'

ஆனாலும் மும்பை போலீசுக்குப் பொறுப்புணர்ச்சி அதிகம்தான்! இல்லாவிட்டால், பொழுது போகாத மும்பையிலுள்ள 'இளசுகள்' டயல் செய்து, வம்படிக்க ஆசைப்பட்டால், ஜாலியாகப் பேசிக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு, 'ஐயையோ... இந்தச் சமயத்தில் யாருக்காவது உண்மையிலேயே உதவி தேவைப்பட்டால், ஆபத்தாகி விடுமே' என்றெல்லாம் அல்லல் படுவார்களா? வேலைமெனக்கெட்டு, இந்த அனாமதேயக் 'கால்'களெல்லாம் எங்கிருந்து வருகிறதென்று 'ட்ரேஸ்' பண்ணி, அவர்கள் பெற்றோரிடம் வத்தி வைப்பார்களா? அப்படி என்னத்தைப் பெரிசாகக் கேட்கிறார்கள் இந்த இளசுகள்? "நீங்கள் யார்? என்ன வேலை? இதுவரை தீர்த்துள்ள சுவையான 'க்ரைம்'கள் என்ன.....?" இன்னபிற தானே? அதற்குப் போய் 'லபோ'வென்று விழ வேண்டுமா? கண்ட்ரோல் டவரில் இருப்பவர்கள் எல்லாம் 50+ஐத் தாண்டிய கேஸுகளாயிற்றே!

குளுமையிழந்த சீதல்

பெண்கள் ரொம்பவும்தான் முன்னேறி விட்டனர். மனைவியின் கற்பில் சந்தேகப்பட்டு, கணவன் அவளை 'சதக்'கிய காலம் மலையேறி, கணவன் நடத்தை சரியில்லை என்று, மனைவி அவனைத் தீர்த்துக்கட்டும் காலம் வந்து விட்டது! காதலுக்காக பெற்றோர், சுற்றம் எல்லோரையும் தியாகித்து, மெர்செண்ட் நேவிக்காரரான 'கமலேஷைக் கைப் பிடித்த 'சீதல்', கணவன் தனக்கு துரோகம் செய்வதைக் கண்டுபிடித்து உக்கிரமானார். தானா வசந்த விஹாரில் தமது ஆறாவது மாடி 'பாஷ்' ஃப்ளாட்டில், கணவன் உறங்கிக் கொண்டிருந்தபோது, கத்தியலை எடுத்து அவன் தலையில் போட்டார் ஒரு போடு. சிதறிய குருதியை சுத்தமாகத் துடைத்தார், மறுநாள் காலை, ஒன்றுமே நடக்காதது போல், தம் இரண்டு பிள்ளைகளையும் தயார் செய்து, ஸ்கூலுக்கு அழைத்துச் சென்றார்; திரும்பியவர் அமைதியாக கமலேஷின் உடலை குளியலறைக்கு எடுத்துச் சென்று தீயிட்டார். கழுத்துவரை எரிந்தபின், ஆண்பாவம் பொல்லாதென்ற ஞானோதயத்தில், கூக்குரலெழுப்பி, அண்டை அயலாரை விளித்து, போலீசிலும் சரணடைந்தார். விசித்திரமான இந்த கோர சம்பவம் ஆண்வர்க்கத்தையே ஓர் உலுக்கு உலுக்கியிருக்கிறது! ○

மும்பையிலிருந்து : **ஜெயஸ்ரீ ராஜ்**



ஏழாம் அத்தியாயம்

சிரிப்பும் கொதிப்பும்

அரசுரிமையைப் பற்றிப் பழுவேட்டரையரின் வார்த்தைகளைக் கேட்டதும் வந்தியத்தேவன் உடனே ஒரு முடிவுக்கு வந்தான். அரசுரிமையைப் பற்றி இவர்கள் என்ன பேசப் போகிறார்கள்? இவர்கள் யார் பேசுவதற்கு? இந்தக் கூட்டத்தில் நடக்கப் போவதை அறிந்து கொண்டே தீரவேண்டும்! இங்கேயே உட்கார வேண்டியதுதான். இதைக் காட்டிலும் வசதியான இடம் வேறு கிடைக்காது. ஆழ்வார்க்கடியான் எப்படியாவது போகட்டும். அவனைப்பற்றி நமக்கு என்ன கவலை?

இன்றைக்கு இங்கு ஏதோ மர்மமான நிகழ்ச்சி நடைபெறப் போகிறது என்ற எண்ணம் வந்தியத்தேவன் மனத்தில் முன்னமே உண்டாகியிருந்தது. ஆழ்வார்க்கடியானின் விபரீதமான பொருள் தரும் வார்த்தைகள், கோட்டை வாசற் காவலர்களின் துடுக்கான நடத்தை, சம்புவரையரின் அரைமனதான வரவேற்பு, வெறியாட்டம் ஆடிய சந்நதக்காரனின் ஆவேச மொழிகள்–இவையெல்லாம் அவனுக்கு ஏதேதோ சந்தேகங்களை உண்டாக்கி

அமரர் கல்கி

யிருந்தன. அந்தச் சந்தேகங்களையெல்லாம் நீக்கிக் கொள்ளவும், உண்மையை அறிந்து கொள்ளவும் இதோ ஒரு சந்தர்ப்பம் தெய்வாதீனமாகக் கிடைத்திருக்கிறது. அதை ஏன் நழுவவிட வேண்டும்?

ஆகா! தன்னுடைய உயிருக்குயிரான நண்பன் என்று கருதி வந்த கந்தமாறன் கூடத் தன்னிடம் உண்மையைச் சொல்லவில்லை. தன்னைத் தூங்க வைத்துவிட்டு, இந்த ரகசிய நள்ளிரவுக் கூட்டத்துக்கு வந்திருக்கிறான். அவனை நாளைக்கு ஒரு கை பார்க்க வேண்டியதுதான்!

இதற்குள் கிழே பழுவேட்டரையர் பேசத் தொடங்கி விட்டார்: வந்தியத்தேவன் காதுகொடுத்துக் கவனமாகக் கேட்கலானான்.

"உங்களுக்கெல்லாம் மிக முக்கியமான ஒரு செய்தியை அறிவிக்கவே நான் வந்திருக்கிறேன். அதற்காகவே இந்தக் கூட்டத்தைச் சம்புவரையர் கூட்டியிருக்கிறார். சுந்தரசோழ மஹாராஜாவின் உடல்நிலை மிகக் கவலைக்கிடமாயிருக்கிறது. அரண்மனை வைத்தியர்களிடம் அந்தரங்கமாகக் கேட்டுப் பார்த்தேன். அவர்கள் 'இனிமேல் நம்பிக்கைக்கு இடமில்லை. அதிக காலம் உயிரோடு இருக்க மாட்டார்' என்று சொல்லி விட்டார்கள். ஆகவே, இனிமேல் நடக்க வேண்டிய காரியங்களைப்பற்றி நாம் இப்போது யோசித்தாக வேண்டும்!" என்று கூறிப் பழுவேட்டரையர் நிறுத்தினார்.

"ஜோசியர்கள் என்ன சொல்கிறார்கள்?" என்று கேட்டார் கூட்டத்தில் ஒருவர்.

"ஜோசியர்களைப் போய்க் கேட்பானேன்? சில நாளாகப் பின்மாலை நேரத்தில் வானத்தில் வால் நட்சத்திரம் தெரிகிறதே! அது போதாதா!" என்றார் ஒருவர்.


பின்னர் பழுவேட்டரையர் கூறினார்: "ஜோசியர்களையும் கேட்டாகிவிட்டது. அவர்கள் சிலகாலம் தள்ளிப் போடுகிறார்கள்; அவ்வளவுதான். எப்படியிருந்தாலும், அடுத்தாற்போல் பட்டத்துக்கு உரியவர் யார் என்பதை நாம் யோசித்தாக வேண்டும்..."

"அதைப் பற்றி இனி யோசித்து என்ன ஆவது? ஆதித்த கரிகாலருக்குத்தான் இளவரசுப் பட்டம் இரண்டு வருஷத்துக்கு முன்பே கட்டியாகிவிட்டதே!" என்று இன்னொரு கம்மலான குரல் கூறியது.

"உண்மைதான். ஆனால் அப்படி இளவரசுப் பட்டம் கட்டுவதற்கு முன்னால் நம்மில் யாருடைய யோசனையாவது கேட்கப்பட்டதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இங்கே கூடியுள்ள நாம் ஒவ்வொருவரும் நூறு ஆண்டுக்கு மேலாக, நாலு தலைமுறையாக, சோழ ராஜ்யத்தின் மேன்மைக்காகப் பாடுபட்ட பழங்குடியைச் சேர்ந்தவர்கள். என் பாட்டனாருக்குத் தந்தை திருப்புறம்பியம் போரில் இறந்தார். என் பாட்டனார் வேளூரில் நடந்த போரில் உயிர் விட்டார். என் தந்தை தக்கோலத்தில் உயிர்த் தியாகம் செய்தார். அம்மாதிரியே உங்கள் ஒவ்வொருவரின் மூதாதையரும் இந்தச் சோழநாட்டின் மேன்மையை நிலைநாட்டுவதற்காக உயிரைக் கொடுத்திருக்கிறார்கள். நம் ஒவ்வொருவருடைய குடும்பத்திலும் இளம் பிள்ளைகள் யுத்தகளத்தில் செத்திருக்கிறார்கள். இன்றைக்கும் ஈழநாட்டில் நம்முடைய குலத்தையும் குடும்பத்தையும் சேர்ந்த பிள்ளைகள் போர் செய்து வருகிறார்கள். ஆனால் அடுத்தபடியாகப் பட்டத்துக்கு வரவேண்டியவர் யார் என்பது பற்றித் தீர்மானிப்பதில் நம்முடைய அபிப்பிராயத்தை மகாராஜா கேட்கவில்லை. தசரதர்கூட இராமருக்குப் பட்டம் கட்டுவது பற்றி மந்திராலோசனை சபை கூட்டி யோசனை செய்தார். மந்திரிகளையும், சாமந்தர்களையும், சேனைத் தலைவர்களையும், சிற்றரசர்களையும் ஆலோசனை கேட்டார். ஆனால் சுந்தர சோழ மகாராஜா யாருடைய யோசனையையும் கேட்பது அவசியம் என்று கருதவில்லை...."

"நம்மை யோசனை கேட்கவில்லை யென்பது சரிதான். ஆனால் யாரையுமே யோசனை கேட்கவில்லையென்று இறை விதிக்கும் தேவர் கூறுவது சரியன்று. பெரிய பிராட்டியாரான **செம்பியன் மகாதேவியின்** யோசனையும், இளைய பிராட்டியாரான **குந்தவை தேவியின்** யோசனையும் கேட்கப்பட்டன. இல்லையென்று பழுவேட்டரையர் கூற முடியுமா?" என்று கேலியான தொனியில் ஒருவர் கூறவும், கூட்டத்தில் ஒரு சிலர் சிரித்தார்கள்.

"ஆகா! நீங்கள் சிரிக்கிறீர்கள்! எப்படித்தான் உங்களுக்குச் சிரிக்கத் தோன்றுகிறதோ, நான் அறியேன். நினைக்க நினைக்க எனக்கு வயிறு பற்றி எரிகிறது; இரத்தம் கொதிக்கிறது. எதற்காக இந்த உயிரை வைத்துக் கொண்டு வெட்கங் கெட்டு வாழ வேண்டும் என்று தோன்று கிறது. இன்று சந்நதம் வந்து ஆடிய 'தேவராளன்' துர்க்கை பலி கேட்பதாகச் சொன்னான். 'ஆயிரம் வருஷத்துப் பரம் பரை ராஜ வம்சத்தில் பிறந்த நரபலி வேண்டும்' என்று சொன்னான். என்னைப் பலி கொடுத்து விடுங்கள். என்னுடைய குலம் ஆயிரம் ஆண்டுகளுக்கும் தொன்மை யானது. நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள்



கத்தியினால் என் கழுத்தில் ஒரு போடு போட்டுப் பலி கொடுத்து விடுங்கள். அன்னை துர்க்கை திருப்தி அடைவாள்; என் ஆத்மாவும் சாந்தி அடையும்..."


இவ்விதம் ஆவேசம் வந்து ஆடிய சந்நதக்காரனைப் போலவே வெறி கொண்ட குரலில் சொல்லிப் பழுவேட்டரையர் நிறுத்தினார்.

சற்றுநேரம் மௌனம் குடிகொண்டிருந் தது. மேற்குத் திசைக் காற்று 'விர்' என்று அடிக்கும் சப்தமும், அந்தக் காற்றில் கோட்டைச் சுவருக்கு வெளியேயுள்ள மரங்கள் ஆடி அலையும் 'மர்மர' சப்தமும் கேட்டன.

"ஏதோ தெரியாத்தனமாகப் பேசிவிட்ட பரிகாசப் பேச்சையும், அதனால் விளைந்த சிரிப்பையும் பழுவூர் மன்னர் பொறுத் தருள வேண்டும். தாங்கள் எங்களுடைய இணையில்லாத் தலைவர். தாங்கள் இட்ட கட்டளையை நிறைவேற்ற இங்குள்ளவர் அனைவரும் சித்தமாயிருக்கிறோம். தாங்கள் காட்டிய வழியில் நடக்கிறோம். தயவு செய்து மன்னித்துக் கொள்ள வேண்டும்!" என்று சம்புவரையர் உணர்ச்சி யுடனே கூறினார்.

"நானும் கொஞ்சம் பொறுமை இழந்து விட்டேன். அதற்காக நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். ஒரு விஷயத்தை எண்ணிப் பாருங்கள். சரியாக இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னால் விஜயாலய சோழர் முத்தரையர்களை முறியடித்துத் தஞ்சாவூரைக் கைப்பற்றினார். திருப்புறம்பி யம் போரில் பல்லவ் சைன்யத்துக்குத் துணையாக நின்று மதுரைப் பாண்டியரின் படையை நிர்மூலமாக்கினார். அதுமுதல் சோழ ராஜ்யம் நாளுக்குநாள் பெருகி விஸ்தரித்து வந்திருக்கிறது. காவேரி நதிக்குக் கரையெடுத்த கரிகால் வளவர் காலத்திலேகூடச் சோழ ராஜ்யம் இவ் வளவு மகோன்னதத்தை அடைந்தது கிடையாது. இன்றைக்குத் தெற்கே குமரி முனையிலிருந்து வடக்கே துங்கபத்திரை- கிருஷ்ணை வரையில் சோழ சாம்ராஜ்யம் பரந்து விரிந்து கிடக்கிறது. பாண்டிய நாடு, நாஞ்சில் நாடு, யாருக்கும் இதுவரையில் வணங்காத சேரநாடு, தொண்டை மண்ட லம், பாகி நாடு, கங்கபாடி, நுளம்பபாடி, வைதும்பர் நாடு, சீட்புலிநாடு, பெரும் பாணப்பாடி, பொன்னி நதி உற்பத்தியாகும் குடகு நாடு- ஆகிய இத்தனை நாடுகளும் சோழ சாம்ராஜ்யத்துக்கு அடங்கிக் கப்பம் செலுத்தி வருகின்றன. இவ்வளவு நாடு களிலும் நம் சோழ நாட்டுப் புலிக்கொடி பறக்கிறது. தெற்கே ஈழமும் வடக்கே இரட்டை மண்டலமும் வேங்கியும் கூட இதற்குள் நமக்குப் பணிந்திருக்க வேண்டும். அப்படிப் பணியாததற்குக் காரணங்களை நான் சொல்ல வேண்டியதில்லை; அவை கள் எல்லாம் உங்களுக்குத் தெரிந்தது தான்!..."

"ஆம்; எல்லோருக்கும் தெரியும். ஈழமும் இரட்டைப்பாடியும் வேங்கியும் கலிங்கமும்




பணியாததற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒரு காரணம் வடதிசை மாதண்ட நாயகராகிய இளவரசர் ஆதித்த கரிகாலர்; இன்னொரு காரணம் தென் திசைப் படைத் தலைவரான அவருடைய தம்பி அருள்மொழிவர்மர்..."

மழவரையர் கூறும் காரணத்தை நான் ஒப்புக் கொள்கிறேன். சென்ற நூறாண்டு காலமாக இந்தச் சோழ நாட்டில் சேனாபதி நியமிக்கும் மரபு வேறாயிருந்தது. பல யுத்தங்களில் ஈடுபட்டு அநுபவம் பெற்ற வீராதி வீரர்களையே படைத் தலைவர்களாகவும் மாதண்ட நாயகர்களாகவும் நியமிப்பார்கள். ஆனால் இப்போது நடந்திருப்பது என்ன? மூத்த இளவரசர் வடதிசைச் சேனையின் சேனாபதி. அவர் என்ன செய்கிறார்? இரட்டை மண்டலத்தின் மீதும் வேங்கி நாடு மீதும் படையெடுத்துப் போகவில்லை. காஞ்சிபுரத்தில் உட்கார்ந்து கொண்டு பொன் மாளிகை கட்டிக் கொண்டிருக்கிறார். வீரப் பெருங்குடியில் பிறந்த வீராதி வீரர்களாகிய உங்களைக் கேட்கிறேன். இதற்கு முன்னால் தமிழகத்தில் எந்த மன்னராவது தாம் வசிப்பதற்குப் பொன்னால் மாளிகை கட்டியதுண்டா? உலகமெங்கும் புகழ் பரப்பி இப்போது கைலாச வாசியாயிருக்கும் மதுரையும் ஈழமும் கொண்ட பராந்தக சக்கரவர்த்திகூடத் தாம் வசிப்பதற்குப் பொன் மாளிகை கட்டிக் கொள்ளவில்லை. தில்லைச் சிற்றம்பலத்துக்குத்தான் பொன் கூரை வேய்ந்தார். ஆனால் இளவரசர் ஆதித்த கரிகாலர் தாம் வசிப்பதற்குக் காஞ்சிபுரத்தில் பொன் மாளிகை கட்டுகிறார்! பல்லவ சக்கரவர்த்திகள் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து ராஜ்ய பாரம் புரிந்த அரண்மனைகள் இவருடைய அந்தஸ்துக்குப் போதவில்லையாம். பொன்னிழைத்த அரண்மனை கட்டுகிறார். ரத்தினங்களையும் வைடூரியங்களையும் அப் பொன் மாளிகைச் சுவர்களில் பதிக்கிறார். கங்கபாடி, நுளம்பபாடி, குடகு முதலிய நாடுகளில் வெற்றியடைந்து, கைப்பற்றிக் கொண்டு வந்த பொருளில் ஒரு செப்புக் காசாவது தலைநகரிலுள்ள பொக்கிஷ சாலைக்கு அவர் இதுவரை அனுப்பவில்லை..."

"பொன் மாளிகை கட்டி முடிந்து விட்டதா?"

"ஆம், முடிந்து விட்டது என்று என்னுடைய அந்தரங்க ஒற்றர்கள் மூலம் அறிந்தேன். அத்துடன் சுந்தர சோழ மகாராஜாவுக்கு அவருடைய அருமை மூத்த புதல்வரிடமிருந்து கடிதங்களும் வந்தன. புதிதாக நிர்மாணித்திருக்கும் பொன் மாளிகையில் வந்து சுந்தர சோழ



மகாராஜா சிலகாலம் தங்கியிருக்க வேண்டும் என்று."

"மகாராஜா காஞ்சிக்குப் போகப் போகிறாரா?" என்று ஒருவர் கவலை ததும்பிய குரலில் கேட்டார்.

"அத்தகைய கவலை உங்களுக்கு வேண்டாம், அப்படி ஒன்றும் நேராமல் பார்த்துக் கொள்ள நான் இருக்கிறேன்; தஞ்சைக் கோட்டைக் காவலனாகிய என் சகோதரனும் இருக்கிறான். சின்னப் பழுவேட்டரையன் அனுமதி இல்லாமல் யாரும் தஞ்சைக் கோட்டைக்குள் புக முடியாது. என்னையறியாமல் யாரும் மகாராஜாவைப் பேட்டி காணவும் முடியாது; ஓலை கொடுக்கவும் முடியாது. இது வரையில் இரண்டு மூன்று தடவை வந்த ஓலைகளை நிறுத்தி விட்டேன்."

"வாழ்க பழுவேட்டரையர்!", "வாழ்க பழுவூர் மன்னரின் சாணக்ய தந்திரம்!", "வாழ்க அவர் வீரம்!" என்னும் கோஷங்கள் எழுந்தன.

"இன்னும் கேளுங்கள். பட்டத்து இளவரசர் செய்யும் காரியங்களைக் காட்டிலும் ஈழத்தில் போர் நடத்தச் சென்றிருக்கும் இளவரசர் அருள்மொழிவர்மரின் காரியங்கள் மிக மிக விசித்திரமாயிருக்கின்றன. யுத்த தர்மத்தைப் பற்றி நாம் அறிந்திருப்பதென்ன? பரம்பரையாகப் பல நூறு ஆண்டுகளாக 'நம் முன்னோர்கள் கடைப்பிடித்து வந்திருப்பதென்ன? **நம் நாட்டுப் படைகள் வேறு நாடுகளின் மீது படை எடுத்துச் சென்றால், நம் படைகளுக்கு வேண்டிய உணவுகளை அந்த வேற்று நாடுகளிலேயே சம்பாதித்துக் கொள்ள வேண்டும்.** அந்த நாடுகளில் கைப்பற்றும் பொருளைக் கொண்டே வீரர்களுக்கு ஊதியமும் கொடுக்க வேண்டும். மிகுந்த பொருளைத் தலைநகரிலுள்ள அரசாங்க பொக்கிஷத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். ஆனால் இளவரசர் அருள்மொழிவர்மர் என்ன செய்கிறார் தெரியுமா? ஈழ நாட்டிலுள்ள நம் போர் வீரர்களுக்கெல்லாம் இங்கிருந்து கப்பல்களில் உணவு அனுப்பி வைக்க வேண்டுமாம்! ஒரு வருஷ காலமாக நானும் பத்துத் தடவை பல கப்பல்களில் ஏற்றி உணவு அனுப்பி வந்திருக்கிறேன்..."

"விந்தை! விந்தை!", "இந்த அநியாயத்தைப் பொறுக்க முடியாது!", "இப்படிக் கேட்டதே இல்லை!" என்ற குரல்கள் எழுந்தன.

"இந்த அதிசயமான காரியத்துக்கு இளவரசர் அருள்மொழிவர்மர் கூறும் காரணத்தையும் கேட்டுவையுங்கள். படையெடுத்துச் சென்ற நாட்டில் நம் வீரர்களுக்கு வேண்டிய உணவுப் பொருளைச் சம்பாதிப்பது என்றால், அங்குள்ள குடிமக்களின் அதிருப்திக்கு உள்ளாக நேரிடுமாம். ஈழத்து அரச குலத்தாரோடு நமக்குச் சண்டையே தவிர ஈழத்து மக்களோடு எவ்விதச் சண்டையும் இல்லையாம். ஆகையால் அவர்களை எவ்விதத்திலும் கஷ்டப்படுத்தக் கூடாதாம்! அரச குலத்தாருடன் போராடி வென்ற பிறகு மக்களின் மனமார்ந்த விருப்பத்துடன் ஆட்சி நடத்த வேண்டுமாம். ஆகையால் பணமும் உணவும் இங்கிருந்து அனுப்ப வேண்டுமாம்!"

இச் சமயம் கூட்டத்தில் ஒருவர், "படையெடுத்துச் சென்ற நாடுகளில் உள்ள ஜனங்களிடம் ஒன்றுமே கேட்கக் கூடாது; அவர்களின் காலில் விழுந்து கும்பிட வேண்டும் என்ற யுத்த தர்மத்தை இதுவரை நாங்கள் கேட்டதே கிடையாது!" என்றார்.

"அதனால் விளையும் விபரீதத்தையும் கேளுங்கள். இரண்டு இளவரசர்களும்

சேர்ந்து செய்யும் காரியங்களினால் தஞ்சை அரண்மனைத் தன பொக்கிஷமும் தானிய பண்டாரமும் அடிக்கடி மிகக் குறைந்து போகின்றன. உங்களுக்கெல்லாம் அதிக வரி போட்டு வசூலிக்கும் நிர்ப்பந்தம் எனக்கு ஏற்படுகிறது. இதற்காகத்தான் என்னை இறை அதிகாரியாக நியமித் திருக்கிறார்கள்! சோழ நாட்டின் மேன் மையே முக்கியம் என்று நான் கருதியிரா விட்டால், எப்பொழுதோ இப்பதவியை விட்டுத் தொலைத்திருப்பேன்!

"ஆ! கூடவே கூடாது! தாங்கள் இப் பதவியிலிருப்பதுதான் எங்களுக்கெல்லாம் பெரிய பாதுகாப்பு. இந்த முறைகேடான காரியங்களைப் பற்றித் தாங்கள் மகாராஜா விடம் சொல்லிப் பார்க்க வில்லையா?"

"சொல்லாமல் என்ன! பல தடவை சொல்லியாகிவிட்டது. ஒவ்வொரு தடவை யும் பெரிய பிராட்டியிடம் கேளுங்கள்; இளைய பிராட்டியிடம் கேளுங்கள்!' என்ற மறுமொழிதான் கிடைக்கிறது. முன்னமே தான் சொன்னேனே, மகாராஜாவுக்குச் சுயமாகச் சிந்தனை செய்யும் சக்தியே இப்போது இல்லாமற் போய்விட்டது! முக்கியமான காரியங்களில் நம்முடைய யோசனைகளைக் கேட்பதும் இல்லை. அவருடைய பெரியன்னை செம்பியன் மாதேவியின் வாக்குத்தான் அவருக்கு வேதவாக்கு; அடுத்த படியாக, அவருடைய செல்வக் குமாரி குந்தவைப் பிராட்டியிடம் யோசனை கேட்கச் சொல்கிறார். இராஜ்ய சேவையில் தலை நரைத்துப் போன நானும் மற்ற அமைச்சர்களும் அந்தச் சின்னஞ்சிறு பெண்ணிடம்- கொள்ளிடத் துக்கு வடக்கேயும் குடமுருட்டிக்குத் தெற்கேயும் சென்றறியாத பெண்ணிடம்- யோசனை கேட்பதற்குப் போய் நிற்க வேண்டும். எப்படியிருக்கிறது கதை! இந்தச் சோழ ராஜ்யம் ஆரம்பமான காலத்தி லிருந்து இப்படி இராஜ்ய காரியங்களில் பெண்கள் தலையிட்டதாக நாம் கேள்விப் பட்டதில்லை! இத்தகைய அவமானத்தை எத்தனை நாள் நாம் பொறுத்திருக்க முடியும்? அல்லது நீங்கள் எல்லாரும் ஒருமுகமாகச் சொன்னால், நான் இந்த ராஜாங்கப் பொறுப்பையும், வரி விதித்துப் பொக்கிஷத்தை நிரப்பும் தொல்லையையும் விட்டு விட்டு என் சொந்த ஊரோடு இருந்து விடுகிறேன்......"

"கூடாது! கூடாது! பழுவூர்த் தேவர் அப்படி எங்களைக் கைவிட்டு விடக் கூடாது. அரும்பாடுபட்டு, ஆயிரமாயிரம் வீரர்கள் நாலு தலைமுறைகளாகத் தங்கள் இரத்தத்தைச் சிந்தி ஸ்தாபித்த சோழ சாம்ராஜ்யம் ஒரு நொடியில் சின்னாபின் னமாய்ப் போய் விடும்" என்றார் சம்பு வரையர்.

"அப்படியானால் இந்த நிலைமையில் என்ன செய்வது என்று நீங்கள்தான் எனக்கு யோசனை சொல்ல வேண்டும். அல்லி ராஜ்யத்தைவிடக் கேவலமாகி விட்ட இந்தப் பெண்ணரசுக்குப் பரிகாரம் என்ன என்று நீங்கள் தான் சொல்ல வேண்டும்" என்றார் பழுவூர் மன்னர்.

எட்டாம் அத்தியாயம்

பல்லக்கில் யார்?

சற்று நேரம் அந்தக் கூட்டத்தில் ஒருவருக்கொருவர் ஏதோ பேசி விவாதித்துக் கொண்டிருந்தார்கள். பல குரல்கள் ஒருங்கே கலந்து ஒலித்தபடியால் வந்தியத்தேவன் காதில் ஒன்றும் தெளிவாக விழ வில்லை.

சம்புவரையர் உரத்த குரலில், "பழுவூர் மன்னர் கேட்டதற்கு நாம் மறுமொழி சொல்ல வேண்டாமா? தலைக்குத் தலை பேசிக் கொண்டிருந்தால் என்ன ஆகிறது? இரவு மூன்றாம் ஜாமம் ஆரம்பமாகி விட் டது. அதோ சந்திரனும் வந்து விட்டது" என்றார்.


"எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. என்னைப் போல் இன்னும் சிலருடைய மனத்திலும் அது இருக்கலாம். பழுவூர்த் தேவர் கோபித்துக் கொள்வதில்லை யென்றால், அதைப் பற்றிக் கேட்க விரும்பு கிறேன்!" என்று முன்னால் ஒரு தடவை பேசிய கம்மல் குரல் சொல்லிற்று.

"இப்போது பேசுகிறது வணங்கா முடி

யார்தானே? எழுந்து நன்றாக வெளிச்சத்திற்கு வரட்டும்!" என்றார் பழுவேட்டரையர்.

"ஆமாம்; நான் தான். இதோ வெளிச்சத்துக்கு வந்து விட்டேன்."

"என்னுடைய கோபத்தையெல்லாம் நான் போர்க்களத்தில் காட்டுவதுதான் வழக்கம்; பகைவர்களிடம் காட்டுவது வழக்கம். என் சிநேகிதர்களிடம் காட்டமாட்டேன். ஆகையால் எது வேண்டுமானாலும் மனம் விட்டுத் தாராளமாகக் கேட்கலாம்."



"அப்படியானால் கேட்கிறேன். சுந்தரசோழ மகாராஜாவின் பேரில் பழுவேட்டரையர் என்ன குற்றம் சொல்கிறாரோ, அதே குற்றத்தைப் பழுவேட்டரையர்மீதும் சிலர் சுமத்துகிறார்கள்! அதை நான் நம்பாவிட்டாலும் இந்தச் சமயத்தில் கேட்டுத் தெளிய விரும்புகிறேன்!" என்றார் வணங்காமுடியார்.

"அது என்ன? எப்படி? விவரம் சொல்ல வேணும்?"

"பழுவூர்த்தேவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பெண்ணை மணம் புரிந்து கொண்டது நம் எல்லோருக்கும் தெரியும்..."

இச்சமயம், சம்புவரையரின் குரல் கோபத்தொனியில், "வணங்காமுடியார் இந்த விஷயத்தைப் பற்றிப் பேசுவதை நாங்கள் ஆட்சேபிக்கிறோம். நம் மாபெருந் தலைவரை, நமது பிரதம விருந்தாளியை, இவ்விதம் அசந்தர்ப்பமான கேள்வி கேட்பது சிறிதும் தகாத காரியம்..." என்றார்.

"சம்புவரையரைப் பொறுமையாயிருக்கும்படி நான் ரொம்பவும் கேட்டுக் கொள்கிறேன். வணங்காமுடியார் கேட்க விரும்புவதைத் தாராளமாகக் கேட்கட்டும். மனத்தில் ஒன்றை வைத்துக் கொண்டிருப்பதைவிடக் கேட்டு விடுவதே நல்லது. ஐம்பத்தைந்து பிராயத்துக்குமேல் நான் ஒரு பெண்ணை மணந்து கொண்டது உண்மைதான். அதைத் தாராளமாக ஒப்புக் கொள்கிறேன். ஆனால் நான்தான் கலியுக ராமாவதாரம் என்று எப்போதும் சொல்லிக் கொண்டதில்லை. ஏகபத்தினி விரதம் கொண்டவன் என்றும் சொல்லிக் கொண்டதில்லை. அந்தப் பெண்ணை நான் காதலித்தேன்; அவளும் என்னைக் காதலித்தாள். பழந் தமிழ்நாட்டு முறைப்படி இஷ்டப்பட்டு மணந்து கொண்டோம். இதில் என்ன தவறு?"

"ஒரு தவறும் இல்லை!" என்று பல குரல்கள் எழுந்தன.


"மணம் புரிந்து கொண்டது தவறு என்று நானும் சொல்லவில்லை. நம்மில் யார்தான் ஒரு தார விரதம் கொண்டவர்கள்? ஆனால்....ஆனால்...."

"ஆனால் என்ன! தயங்காமல் மனத்தைத் திறந்து கேட்டு விடுங்கள்!"

"புது மணம் புரிந்து கொண்ட இளைய ராணியின் சொல்லை எல்லா காரியங்களிலும் பழுவேட்டரையர் கேட்டு நடப்பதாகச் சிலர் சொல்கிறார்கள். இராஜரீக காரியங்களில் கூட இளைய ராணியின் யோசனையைக் கேட்பதாகச் சொல்லுகிறார்கள். தாம் போகுமிடங்களுக்கெல்லாம் இளைய ராணியையும் அழைத்துப் போவதாகச் சொல்லுகிறார்கள்."

இப்போது கூட்டத்தில் ஒரு சிரிப்புச் சப்தம் எழுந்தது.


சம்புவரையர் குதித்து எழுந்து, "சிரித்தது யார்? உடனே முன் வந்து சிரித்ததற்குக் காரணம் சொல்லட்டும்!" என்று கர்ஜித்துக் கத்தியை உறையிலிருந்து


ஸ்ரீ பத்மவாசன்...

உருவினார்.

"நான்தான் சிரித்தேன்! பதற வேண்டாம் சம்புவரையரே!" என்றார் பழுவேட்டரையர். பிறகு, "வணங்காமுடியாரே! தாலி கட்டி மணந்த மனைவியை நான் போகுமிடத்துக்கெல்லாம் அழைத்துப் போவது குற்றமா? அவ்விதம் நான் பல இடங்களுக்கு அழைத்துப் போவது உண்மைதான். ஆனால் ராஜரீக காரியங்களில் இளையராணியின் யோசனையைக் கேட்கிறேன் என்று சொல்வது மட்டும் பிசகு. அவ்விதம் நான் ஒரு நாளும் செய்வதில்லை...."

"அப்படியானால், இன்னும் ஒரே ஒரு சந்தேகத்தை மட்டும் நிவர்த்தி செய்யும்படி பழுவூர்த்தேவரை வேண்டிக் கொள்கிறேன். அந்தப்புரத்தில் இருந்திருக்க வேண்டிய



பல்லக்கு இங்கே நாம் அந்தரங்க யோசனை செய்யும் இடத்திற்கு ஏன் வந்திருக்கிறது? பல்லக்கிற்குள்ளே யாராவது இருக்கிறார்களா; இல்லையா? இல்லையென்றால் சற்று முன்பு கேட்ட கனைப்புச் சத்தமும், வளையல் குலுங்கும் சத்தமும் எங்கிருந்து வந்தன?"

இவ்விதம் வணங்காமுடியார் கேட்டதும் அந்தக் கூட்டத்தில் ஒரு விசித்திரமான நிசப்தம் நிலவிற்று. பலருடைய மனத்திலும் இதே

வித எண்ணமும் கேள்வியும் தோன்றியிருந்தபடியால், வணங்காமுடியாரை எதிர்த்துப் பேச யாருக்கும் உடனே துணிவு ஏற்படவில்லை. சம்புவரையரின் உதடுகள் ஏதோ முணுமுணுத்தன. ஆனால் அவர் வாயிலிருந்தும் வார்த்தை ஒன்றும் கேட்கவில்லை.

அந்த நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு பழுவேட்டரையர் கணீர் என்று கூறினார்: "சரியான கேள்வி; மறுமொழி சொல்ல நான் கடமைப்பட்டவன். இந்தக் கூட்டம் கலைவதற்கு முன்னால் உங்கள் சந்தேகத்தைத் தீர்த்து வைக்கிறேன். இன்னும் அரை நாழிகை பொறுத்திருக்கலாம் அல்லவா? அவ்வளவு நம்பிக்கை என்னிடம் உங்களுக்கு இருக்கிறதல்லவா?"

"இருக்கிறது, இருக்கிறது. பழுவேட்டரையரிடம் எங்களுக்குப் பரிபூரண நம்பிக்கை இருக்கிறது!'' என்று பல குரல்கள் கூவின.

"மற்றவர்களைக் காட்டிலும் பழுவேட்டரையரிடம் எனக்குப் பக்தியும் மரியாதையும் குறைவு என்று யாரும் எண்ண வேண்டாம். அவர் மனத்தைத் திறந்து கேட்கச் சொன்னபடியால் கேட்டேன். மற்றபடி அவர் இட்ட கட்டளையை நிறைவேற்றச் சித்தமாயிருக்கிறேன். இந்தக் கணத்தில் என் உயிரைக் கொடுக்கச் சொன்னாலும் கொடுக்கச் சித்தம்!'' என்றார் வணங்காமுடி முனையரையர்.

"வணங்காமுடியாரின் மனத்தை நான் அறிவேன். நீங்கள் எல்லோரும் என்னிடம் வைத்துள்ள நம்பிக்கையையும் அறிவேன். ஆகையால் இன்று எதற்காகக் கூடினோமோ அதைப் பற்றி முதலில் முடிவு கொள்வோம். சுந்தர சோழ மகாராஜா நீடூழி இவ்வுலகில் வாழ்ந்து இந்தச் சோழ சாம்ராஜ்யத்தை ஆளட்டும். ஆனால் ஒரு வேளை ஏதாவது அவருக்கு நேர்ந்துவிட்டால், வைத்தியர்களுடைய வாக்குப் பலித்து விட்டால், சில நாளாகத் தோன்றி வரும் தூமகேது முதலிய உற்பாதங்கள் பலித்து விட்டால், அடுத்தபடி இந்தச் சோழ சாம்ராஜ்யத்தின் பட்டத்திற்கு உரியவர் யார் என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும்."

"அது விஷயமாகத் தங்கள் கருத்தைத் தெரிவிக்கும்படி கோருகிறோம். தங்களுடைய கருத்துக்கு மாறாகச் சொல்லக் கூடியவர் இந்தக் கூட்டத்தில் யாரும் இல்லை."

''அது சரியல்ல. ஒவ்வொருவரும் சிந்தித்துத் தங்கள் கருத்தை வெளியிட வேண்டும். சில பழைய செய்திகளை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். மகா வீரரும் மகா ஞானியும் புண்ணிய புருஷருமான **கண்டராதித்ததேவர்** யாரும் எதிர்பாராத வண்ணம் இருபத்து நாலு ஆண்டுகளுக்கு முன்னால் காலமானார். அச்சமயம் அவருடைய புதல்வர் **மதுராந்தகத் தேவர்** ஒரு வயதுக் குழந்தை. ஆகவே தமது தம்பி **அரிஞ்சய தேவர்** பட்டத்துக்கு வர வேண்டும் என்று திருவாய் மலர்ந்து விட்டுப் போனார். இதை அவருடைய தர்ம பத்தினியும் பட்ட மகிஷியுமான **செம்பியன் மாதேவி** தான் நமக்கு அறிவித்தார்கள். அந்தப்படியே அரிஞ்சய சோழருக்கு முடிசூட்டி சக்கரவர்த்தி பீடத்தில் அமர்த்தினோம். ஆனால் விதிவசமாக அரிஞ்சய சக்கரவர்த்தி சோழ சிம்மாசனத்தில் ஓர் ஆண்டுக்கு மேல் அமர்ந்திருக்கவில்லை. அரிஞ்சய சோழருடைய மூத்த புதல்வர் **பராந்தக சுந்தர சோழர்** இருபது வயது இளங்காளைப் பருவம் எய்தியிருந்தார். எனவே, ராஜ்யத்தின் நன்மையை முன்னிட்டு மந்திரிகளும் சாமந்தர்களும் குறுநில மன்னர்களும் நகரத் தலைவர்களும் கூற்றத் தலைவர்களும் சேர்ந்து யோசித்துப் பராந்தக சுந்தர சோழருக்கு முடிசூட்டினோம். அதைக் குறித்து யாரும் வருத்தப்பட இடமில்லை. ஏனெனில், சுந்தர சோழ மகாராஜா இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் வரையில் நெறி தவறாமல் நாட்டைப் பரிபாலித்து வந்தார். நம்மையெல்லாம் நன்கு மதித்து யோசனை கேட்டு ராஜ்ய பாரம் நடத்தினார். இதனால் சோழ ராஜ்யம் மேலும் விஸ்தரித்துச் செழித்தது. இப்போது சுந்தர சோழ மகாராஜாவின் உடல்நிலை கவலைக்கிடமாயிருக்கிறது. இந்த நிலைமையில் அடுத்தபடி பட்டத்துக்குரியவர் யார்? கண்ட ராதித்த தேவரின்

திருக்குமாரர் **மதுராந்தகர்** இப்போது பிராயம் வந்து ராஜ்ய பரிபாலனம் செய்யக் கூடியவராயிருக்கிறார். அறிவினாலும் கல்வியினாலும் குணத்தினாலும் பக்தி சிரத்தையினாலும் எல்லா விதத்திலும் பட்டத்துக்கு தகுந்தவராயிருக்கிறார் அவரிலும் ஒரு வயது இளையவரான **ஆதித்த கரிகாலர்**- சுந்தர சோழரின் புதல்வர்-காஞ்சியில் வடதிசைப் படையின் சேனாதிபதியாக இருந்து வருகிறார். இந்த இருவரில் யார் பட்டத்துக்கு வருவது நியாயம்? குலமுறை என்ன? மனுநீதி என்ன? தமிழகத்தின் பழைமையான



மரபு என்ன? மூத்தவரின் புதல்வர் மதுராந்தகர் பட்டத்துக்கு வருவது நியாயமா? அல்லது இளையவரின் பேரர் பட்டத்துக்கு வருவது முறைமையா? நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் கருத்தை மனம் விட்டுச் சொல்ல வேண்டும்..."

''மூத்தவராகிய கண்டராதித்த தேவரின் புதல்வர் மதுராந்தகர்தான் பட்டத்துக்கு உரியவர். அதுதான் நியாயம். தர்மம், முறைமை" என்றார் சம்புவரையர்.

"என் அபிப்பிராயமும் அதுவே", "என் கருத்தும் அதுவே!" என்று அக்கூட்டத்தில் உள்ள ஒவ்வொருவரும் சொல்லி வந்தார்கள்.

"உங்கள் அபிப்பிராயம்தான் என் அபிப்பிராயமும். மதுராந்தகருக்குத்தான் பட்டம் உரியது. ஆனால் அந்த உரிமையை நிலை நாட்டுவதற்காக நாம் ஒவ்வொருவரும் பிரயத்தனம் செய்யச் சித்தமாயிருக்கிறோமா? உடல் பொருள் ஆவியைத் தத்தம் செய்து போராடச் சித்தமாயிருக்கிறோமா? இந்த நிமிஷத்தில் துர்க்கா தேவியின் பாதத்தில் ஆணையிட்டு அவ்விதம் சபதம் செய்வதற்குச் சித்தமாயிருக்கிறோமா?" என்று பழுவேட்டரையர் கேட்டபோது அவர் குரலில் அதுவரையில் இல்லாத ஆவேசம் தொனித்தது.

கூட்டத்தில் சிறிதுநேரம் மௌனம் குடிகொண்டிருந்தது. பிறகு சம்புவரையர், "அவ்விதமே தெய்வ சாட்சியாகச் சபதம் கூறச் சித்தமாயிருக்கிறோம். ஆனால் சபதம் எடுத்துக் கொள்வதற்கு முன்னால் ஒரு விஷயத்தைத் தாங்கள் தெளிவுபடுத்த வேண்டும். இளவரசர் மதுராந்தகரின் கருத்து என்ன? அவர் சிங்காதனம் ஏறி ராஜ்யபாரத்தை ஏற்கச் சித்தமாயிருக்கிறாரா? கண்டராதித்தரின் தவப் புதல்வர் உலக வாழ்க்கையை வெறுத்துச் சிவபக்தியில் பூரணமாக ஈடுபட்டுள்ளார் என்று கேள்விப்படுகிறோம். இராஜ்யத்தில் அவருக்கு விருப்பமில்லை என்று பலர் சொல்லவும் கேட்டிருக்கிறோம். அவருடைய அன்னையார் செம்பியன் மாதேவியார் தமது புதல்வர் பட்டத்துக்கு வருவதற்கு முற்றும் விரோதமாயிருக்கிறார் என்றும் கேட்டிருக்கிறோம். தங்களிடமிருந்து இதைப் பற்றிய உண்மையை அறிய விரும்புகிறோம்."

"சரியான கேள்வி; தக்க சமயத்தில் கேட்டீர்கள். இதைத் தெளிவுபடுத்தும் கடமையும் எனக்கு உண்டு. முன்னமே சொல்லியிருக்க வேண்டும். சொல்லத் தவறியதற்காக மன்னியுங்கள்'' என்று பீடிகை போட்டுக் கொண்டு பழுவேட்டரையர் கூறத் தொடங்கினார்: "செம்பியன் மாதேவி தமது ஏக புதல்வரை இராஜ்ய பார ஆசையிலிருந்து திருப்பிச் சிவபக்தி மார்க்கத்தில் செலுத்துவதற்குப் பிரயத்தனப் பட்டு வந்தது நாடு அறிந்த விஷயம். ஆனால் இதன் காரணம் என்னவென்பதை நாடும் அறியாது; மக்களும் அறியார்கள். மதுராந்தகருக்கு இராஜ்யமாளும் விருப்பம் இருப்பதாகத் தெரிந்தால் அவருடைய உயிருக்கே ஆபத்து வரலாம் என்று

பெரிய பிராட்டியார் பயந்தது தான் காரணம்...

"ஆஹா!" "அப்படியா?" என்ற குரல்கள் கூட்டத்தில் எழுந்தன.

"ஆம்; பெற்ற தாய்க்குத் தன் ஏக புதல்வன் சிம்மாசனம் ஏற வேண்டும் என்னும் ஆசையைக் காட்டிலும் பிள்ளை உயிரோடு இருக்க வேண்டும் என்ற ஆசை தானே அதிகமாயிருக்கும்? அன்னையின் வாக்கே தெய்வத்தின் வாக்கு என்று மதித்து வந்த மதுராந்தகரும் மனத்தை விரக்தி மார்க்கத்தில் செலுத்தியிருந்தார். சிவ பக்தியில் முழுதும் ஈடுபட்டிருந்தார். ஆனால் சில காலமாக அவருடைய மனது சிறிது சிறிதாக மாறி வந்திருக்கிறது. இந்தச் சோழ சாம்ராஜ்யம் தமக்கு உரியது, அதைப் பராமரிப்பது தம்முடைய கடமை என்ற எண்ணம் அவருடைய மனத்தில் வேரூன்றி வளர்ந்திருக்கிறது. நீங்கள் எல்லாம் அவரை ஆதரிப்பதாகத் தெரிந்தால், தக்க சமயத்தில் பகிரங்கமாக முன்வந்து சொல்லவும் சித்தமாயிருக்கிறார்..."

"இதற்கு அத்தாட்சி என்ன?"

"உங்களுக்கெல்லாம் திருப்தி தரக் கூடிய அத்தாட்சியை இப்போதே அளிக்கிறேன். அளித்தால் அனைவரும் பிரமாணம் செய்யச் சித்தமாயிருக்கிறீர்களா?"

பல குரல்கள் "இருக்கிறோம்! இருக்கிறோம்!" என்று ஒலித்தன.

"யாருடைய மனதிலும் வேறு எவ்விதச் சந்தேகமும் இல்லையே?"

"இல்லை! இல்லை!"

"அப்படியானால் இதோ அத்தாட்சி கொண்டுவருகிறேன். வணங்காமுடி முனையரையரின் சந்தேகத்தையும் இப்போதே தீர்த்து வைக்கிறேன்!" என்று கூறிக் கொண்டே பழுவேட்டரையர் எழுந்தார். கம்பீரமாக நடந்து அங்கே சமீபத்தில் வைக்கப்பட்டிருந்த மூடு பல்லக்கின் அருகில் சென்றார்.

"இளவரசே! பல்லக்கின் திரையை விலக்கிக் கொண்டு வெளியே எழுந்தருள வேண்டும். தங்களுக்காக உடல் பொருள் ஆவியை அர்ப்பணம் செய்யச் சித்தமான இந்த வீராதி வீரர்களுக்குத் தங்கள் முக தரிசனத்தைத் தந்தருள வேண்டும்!" என்று மிகவும் பணிவான குரலில் கூறினார்.

மேல்மாடத்தில் தூண் மறைவில் உட்கார்ந்து ஒரு வார்த்தை விடாமல் அடங்கா ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்த வந்தியத்தேவன் இப்போது ஜாக்கிரதையாகக் கீழே பார்த்தான். பல்லக்கின் திரையை முன்போலவே ஒரு கரம் விலக்கிற்று. அது பொன் வண்ணமான கரம். முன்னே ஒருமுறை அவன் பார்த்த அதே செக்கச் சிவந்த கரந்தான். ஆனால் அவன் முன்னம் வளையல் என்று நினைத்தது உண்மையில் அரசகுமாரர் அணியும் கங்கணம் என்பதை இப்போது கண்டான். அடுத்த கணம் பூரண சந்திரனையொத்த அந்தப் பொன் முகமும் தெரிந்தது. மன்மதனையொத்த ஓர் அழகிய உருவம் பல்லக்கிலிருந்து வெளியே வந்து புன்னகை புரிந்து நின்றது. ஆகா! கண்டராதித்த தேவரின் புதல்வரான இளவரசர் மதுராந்தகரா இவர்! பல்லக்கினுள் இருந்தபடியால் பெண்ணாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தினால் அல்லவா அந்தத் தவறைச் செய்து விட்டோம்? தன்னைப் போல் அதே தவறைச் செய்த ஆழ்வார்க்கடியான் நம்பி சுவர்மேல் தலையை நீட்டிக் கொண்டிருக்கிறானா என்று வந்தியத்தேவன் பார்த்தான். அந்த இடத்தில் மர நிழல் விழுந்து இருள் சூழ்ந்திருந்தது. ஆகையினால் அங்கு ஒன்றும் தெரியவில்லை.

இதற்குள் கீழே, "மதுராந்தகத் தேவர் வாழ்க! பட்டத்து இளவரசர் வாழ்க! வெற்றி வேல்! வீரவேல்!" என்ற ஆவேசமான முழக்கங்கள் கிளம்பின. கூட்டத்தில் இருந்தவர்கள் எல்லோரும் எழுந்து நின்று வாளையும் வேலையும் உயரத் தூக்கிப் பிடித்துக் கொண்டு அவ்விதம் கோஷமிட்டதை வந்தியத்தேவன் கண்டான். இனிமேல் அங்கிருப்பது அபாயமாக முடியலாம் என்று எண்ணி, தான் படுத்திருந்த இடத்துக்கு விரைந்து சென்று படுத்துக் கொண்டான்.

(தொடரும்)

மகாத்மா சுடப்பட்டு இறந்ததும்

அமரர் கல்கி எழுதினார்....



சத்தியம் செத்ததோ?

எத்தனை காலம் இனி வாழ்ந்திருந்தாலும், 1948-ம் வருஷம் ஜனவரி மாதம் 30-ந் தேதி வரையில் இருந்ததுபோல் இனி நம் வாழ்க்கை ஒருகாலும் இராது. பெரும் வித்தியாசம் இருக்கத்தான் இருக்கும்.

சூரியன் நிரந்தரமாக அஸ்தமித்து உலகில் முடிவில்லாத இருள் சூழ்ந்து விட்டால் உலகத்தின் வாழ்க்கை முன்போல் இருக்க முடியுமா? ஒருநாளும் முடியாது. அந்த நிலையிலேதான் இன்று நாம் இருக்கிறோம். நமது வாழ்வில் அப்படி இருள் கவிந்திருக்கிறது.

சென்ற முப்பது வருஷங்களாக, காந்தி மகானுடைய வாழ்க்கையைச் சுற்றி நம்மில் லட்சக்கணக்கானவர்களின் வாழ்க்கை சுழன்று வந்திருக்கிறது.

காந்தி சொன்னார்; கதர் அணிந்தோம். காந்தி சொன்னார் : காங்கிரஸில் சேர்ந்தோம். காந்தி சொன்னார்; மதுவிலக்குப் போர் நடத்தினோம். காந்தி சொன்னார்; தீண்டாமையை ஒழித்தோம். காந்தி சொன்னார்; 'ரகுபதி ராகவ' பாடினோம். காந்தி சொன்னார்; சட்டசபையைப் பகிஷ்கரித்தோம். காந்தி சொன்னார்; மஞ்சள் பெட்டியில் வோட்டுப் போட்டோம். காந்தி சொன்னார்; சிறை புகுந்தோம்; அடிபட்டோம்; நூல் நூற்றோம்.

காந்தி ஒரு விஷயத்தைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையென்றால், அதைப் பற்றி அவர் என்ன சொல்லக்கூடும் என்று யோசனை செய்தோம்.

"மகாத்மா காந்திக்கு ஜே!" என்ற கோஷத்தைச் சென்ற முப்பது வருஷத்தில் முப்பதினாயிரம் தடவை கோஷித்தோம்.

அத்தகைய மகாத்மா இன்று இந்த உலகில் இல்லை; இந்தியா சுதந்திரம் அடைந்து ஒரு வருஷம் பூர்த்தியாவதற்குள்ளே போய் விட்டார்.

உயிர் வாழ்ந்த போது இந்தியாவின் சுதந்திரத்துக்காக மகாத்மா போராடினார்; சுதந்திரம் கிட்டும்படியும் செய்தார்.

கிட்டிய சுதந்திரத்தை நமது மூடத்தனத்தினால் இழந்து விடாமல் பாதுகாத்துத் தரும்பொருட்டுத் தமது உயிரை அர்ப்பணம் செய்தார்.

அவருக்கு நாம் செலுத்தக்கூடிய நன்றி என்ன இருக்கிறது? என்ன இருக்க முடியும்? என்ன செய்தால்தான் நமது நன்றிக்கடன் தீரும்?

மகாத்மாவை இழந்து விட்ட நமது வாழ்க்கையை நாலாபுறமும் அந்தகாரம் சூழ்ந்துதானிருக்கிறது. எனினும், அந்த இருளினிடையே நமக்கு வழிகாட்ட ஒளி ஒன்று தோன்றாமற் போகவில்லை.

அன்பே தகளியாகவும், அஹிம்சையே நெய்யாகவும், என்புருகும் தியாகமே இடுதிரியாகவும் கொண்டு ஓர் அமர தீபத்தை - அழியாத சத்திய விளக்கை - மகாத்மா காந்தி ஏற்றிவைத்து விட்டுச் சென்றிருக்கிறார்.

அந்த சத்திய தீபத்தைத் தினம் தினம் போற்றி வழிபடுவோம்; காற்றும் புயலும் அதை அணைத்து விடாமல் பாதுகாப்போம்.

காந்திமகான் ஏற்றிவைத்த அமர தீபத்தின் ஒளியிலேயே நமது காரியங்களையெல்லாம் செய்வோம். இதுவே அந்தப் புண்ணிய புருஷருக்கு நாம் செலுத்தக்கூடிய சொற்ப கைம்மாறாகும். மகாத்மா காந்திக்கு ஜே!

– 'சத்தியம் செத்ததோ' (கல்கி 8.2.1948)

மாந்தருக்குள் ஒரு தெய்வம்

லண்டனுக்குப் போன புதிதில் மோகன்தாஸ் ஆங்கிலேய கனவான்களைப் போல் தோரணையாக வாழ்க்கை நடத்த முயன்றார். நவநாகரிக உடுப்புகள் தைத்துக் கொண்டார். நிலைக் கண்ணாடியின் முன்னால் நின்று தலையை ஜோராக வாரிக் கொள்வதில் தினம் பத்து நிமிஷம் சென்றது. பிறகு ஆங்கில நடனம் கற்றுக் கொள்ள முயன்றார். நடனப் பயிற்சிக்குத் தாள ஞானம் அவசியமாயிருந்தது. இதற்காக ஆங்கில சங்கீதம் கற்றுக் கொள்ளத் தொடங்கினார். ஒரு வயலினும் வாங்கினார். இதெல்லாம் சொற்ப காலந்தான் நீடித்திருந்தது. ஆங்கில நாகரிக மோகம் மூன்று மாதத்திற்குள்ளே மோகன்தாஸை விட்டுச் சென்றது.

"இங்கிலாந்தில் நாம் எப்போதும் வசிக்கப் போகிறோமா? பாரிஸ்டர் படிப்பு முடிந்ததும் தாய்நாடு திரும்ப வேண்டியதுதானே? இந்த அயல்நாட்டு நாகரிகம் எல்லாம் நமக்கு என்னத்திற்கு?" என்று எண்ணினார். "நம்முடைய ஒழுக்கத்தினால் நாம் கனவானாக வேண்டுமே தவிர இத்தகைய வெளி வேஷங்களினால் கனவானாவதில் என்ன பயன்?" என்றும் சிந்தனை செய்தார். இத்தனை நாளும் தாம் கொண்டிருந்தது பொய்யான வாழ்க்கை இலட்சியம் என்று தெரிந்தது. ஆங்கில நாகரிக ஆசையை விட்டுத் தொலைத்தார்.

தம்பி! இதற்கு முந்தைய ஜூதழில்

காந்திஜியின் சிறு பிராயத்துக் குறைபாடுகள் சிலவற்றைச் சொல்லியிருக்கிறேன். மேலேயும் குறிப்பிட்டிருந்தேன்.

"இப்பேர்ப்பட்ட மகானுடைய சரித்திரத்தில் இம்மாதிரி சிறு குறைகளையெல்லாம் ஏன் சொல்ல வேண்டும்? என்று நீ கருதலாம். அல்லது, "இந்த மாதிரி குறைகள் இருந்தவர் எப்படி மகாத்மா ஆனார்?" என்று ஆச்சரியப் படலாம்.

இதையெல்லாம் பற்றி மகாத்மா தமது சுய சரிதத்தில் தாமே எழுதியிருக்கிறார் என்பதை நீ ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். இம்மாதிரி சுயசரிதம் எழுதும் பிரமுகர்கள் சாதாரணமாகத் தங்களுடைய குறைகளைத் தாங்கள் சொல்ல மாட்டார்கள். தங்களுடைய பெருமையை உயர்த்தக்கூடிய முறையிலேயே சுயசரிதம் எழுதுவார்கள். தங்களுடைய குறைகளைக் கூடக் குணங்களைப் போல் மாற்றி மெருகு கொடுத்து எழுதுவார்கள்.

இதிலேதான் காந்திஜிக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தைக் காண வேண்டும். காந்திஜி உள்ளது உள்ளபடி தம்மிடமிருந்த குறைபாடுகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார். இதுமட்டுமல்ல; இந்தியாவின் மாபெரும் தலைவராகி, ''மகாத்மா'' என்று மக்கள் போற்றத் தொடங்கிய பிற்பாடு கூட, தாம் செய்த 'தவறு'களை வெளிப்படையாக எடுத்துச் சொல்வது அவர் வழக்கம். 1922-ம் ஆண்டில் ஒரு சமயம் ''இமாலயத் தவறு செய்து விட்டேன்'' என்று மகாத்மா காந்தி கூறியது பலராலும் பல தடவை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

உண்மையில், இத்தகைய சத்தியப் பற்றினாலேதான் காந்திஜி உலகம் போற்றும் மகா புருஷர் ஆனார்.

காந்திஜியின் இளம்பிராயக் குறைகளைப் படித்துத் தெரிந்து கொண்டதிலிருந்து நீ இன்னொரு விஷயம் அறியவேண்டும். மகாத்மா பிறக்கும்போதே மகாத்மாவாகப் பிறக்கவில்லை. சிறுபிராயத்தில் உன்னையும் என்னையும் போலவே பல குறைகள் உள்ள சாதாரணச் சிறுவராகவே இருந்தார். ஆயினும் சத்தியத்தின் உறுதியினாலும் மனத்தின் திட சங்கல்பத்தினாலும் இடைவிடாத பிரயாசையினாலும் அந்தக் குறைகளையெல்லாம் போக்கிக் கொண்டு மகாத்மா ஆனார். இது நமக்கெல்லாம் நம்பிக்கை தரவேண்டிய விஷயம். நம்மிடம் உள்ள குறைகளையும் நாம் பிரயாசைப்பட்டுப் போக்கிக் கொள்ளலாம். மகாத்மாவைப் போல் எல்லாரும் அவ்வளவு மகிமையடைய முடியாதுதான். மகாத்மாவைப் போன்ற மகா புருஷர் ஒருவர் உலகத்தை உத்தாரணம் செய்வதற்கு இரண்டாயிரம் வருஷத்துக்கொருமுறையே தோன்றக்கூடும். ஆயினும் பிரயாசைப்பட்டு நம்மை நாம் உயர்த்திக் கொள்ளலாம். நம்முடைய மனச்சாட்சியை நாம் திருப்தி செய்துகொள்ளலாம். "குறைகளைப் போக்கிக் கொள்ள நம்மால் முடியாது!" என்று நிராசையடைந்து மேலும் மேலும் படுகுழியில் இறங்கி முழுகிப் போய்விட வேண்டியதில்லை. நம்முடைய குறைகளுடன் நாம் போராடி வெற்றி கொள்ளலாம்.



இதற்காகத்தான் மகாத்மாவின் சிறு பிராயத்துக் குறைகளை விட்டு விடாமல் நான் குறிப்பிட்டேன்.

அந்தக் காலத்தில் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குப் படிக்கச் சென்ற மாணவர்கள் கலியாணமானவர்களாயிருந்தாலும் பிரம்மச்சாரிகளைப் போல் நடிப்பது வழக்கமாம். இப்படி நடிப்பதினால் ஆங்கிலக்

குடும்பங்களில் உள்ள கலியாணமாகாத பெண்களுடன் அவர்கள் சல்லாபம் செய்வது சாத்தியமாயிருந்தது. ஆங்கிலேயரில் பலர் விசால நோக்கம் படைத்தவர்கள். தங்கள் பெண்கள் இந்திய இளைஞர்கள் மேல் காதல் கொண்டால் அவர்களைக் கலியாணம் செய்து கொள்வதற்குப் பெற்றோர் ஆட்சேபிப்பதில்லை. இதை அறிந்து பல இந்திய இளைஞர்கள் பிரம்மச்சாரிகளைப் போல் நடித்துப் பொய் வாழ்க்கை நடத்தினார்கள்.

மோகன்தாஸும் இங்கிலாந்தில் வசித்த போது சில காலம் இத்தகைய பொய் வாழ்க்கை நடத்தினார். ஆங்கில சமூகத்தில் சாதாரணமாக இளமை மணம் கிடையாது. ஆகையால், பத்தொன்பது வயதேயான மோகன்தாஸுக்கு 'நான் கலியாணம் ஆனவன்' என்று சொல்லிக் கொள்ள மிகவும் சங்கோசமாயிருந்தது.

ஓர் ஆங்கில மூதாட்டி மோகன்தாஸின் பேரில் அபிமானம் கொண்டார். தம்முடைய வீட்டுக்கு அவரை அடிக்கடி அழைத்தார். அந்த வீட்டிலிருந்த கலியாணமாகாத பெண்கள் மோகன்தாஸிடம் கூச்சமின்றிச் சிநேக முறையில் பழகினார்கள்.

ஆனால் ஒரு பெண் விஷயத்தில் மோகன்தாஸுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. அவளைத் தமக்குக் கலியாணம் செய்து வைக்க அந்த வீட்டு மூதாட்டி எண்ணுகிறாளோ என்று தோன்றியது. இதனால் பெருங் கவலைக்குள் ஆழ்ந்தார். அவருடைய மனச்சாட்சி அவரை உறுத்தியது. கடைசியாக, மோகன்தாஸ் பின்வரும் கடிதத்தை அந்த அம்மாளுக்கு எழுதினார் :-

"பிரைட்டனில் நாம் முதன் முதலில் சந்தித்த தினத்திலிருந்து தாங்கள் என்னிடம் மிகவும் பிரியம் காட்டி வந்திருக்கிறீர்கள். என்னைத் தங்கள் புதல்வனாகவே எண்ணி என்பொருட்டுக் கவலை எடுத்து வந்திருக்கிறீர்கள். எனக்கு மணம் செய்து வைக்க வேண்டும் என்று விரும்பி, அதற்காக இளம் பெண்களை எனக்கு அறிமுகம் செயதுவைத்து வருகிறீர்கள். ஆனால் காரியம் மிஞ்சிப் போவதற்கு முன்னால், தங்களுடைய அன்புக்கு நான் அருகனல்லன் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தங்கள் வீட்டுக்கு வரத் தொடங்கியபோதே நான் இல்லறத்தான் என்பதைத் தெரிவித்திருக்க வேண்டும். இங்கிலாந்தில் இந்திய மாணாக்கர்கள் பிரும்மச்சாரிகள் போல் நடிப்பதை அறிந்து நானும் அவ்வாறு செய்துவந்தேன். என் தவறினை இப்போது உணர்கிறேன். சிறுவனாயிருந்த போதே எனக்கு மணம் ஆகிவிட்டது. இப்போது எனக்கு ஒரு புதல்வனும் உள்ளான். இத்தனை காலம் இந்த விவரங்களைத் தங்களுக்கு அறிவியாதிருந்ததன் பொருட்டு என் உள்ளம் வருந்துகிறது. இப்பொழுதேனும் உண்மை சொல்லுவதற்கு இறைவன் எனக்குத் தைரியம் அளித்தது பற்றி மகிழ்ச்சியடைகிறேன். என்னைத் தாங்கள் மன்னித்து விடுவீர்களா? எனக்குத் தாங்கள் அறிமுகம் செய்து வைத்த இளம்பெண் விஷயத்தில் தகுதியற்ற உரிமை எதையும் நான் எடுத்துக் கொண்டதில்லையென்று உறுதிகூறுகிறேன். நான் ஏற்கெனவே கலியாணமானவன் என்னும் விஷயம் தங்களுக்குத் தெரியாததலின், எங்களிருவருக்கும் விவாகமாக வேண்டுமென்று தாங்கள் விரும்பியது இயல்பே. விஷயம் இதற்கு மேல் போகக் கூடாது என்று உண்மை கூறலானேன்.

"இக்கடிதத்தைப் படித்ததும் தங்கள் அன்புக்கு அபாத்திரனாக நான் நடந்து கொண்டதாகத் தாங்கள் கருதினால் அதற்காகத் தங்கள்மீது வருத்தப்பட மாட்டேன். தாங்கள் இதுகாறும் என்மீது காட்டி வந்த பிரியத்துக்கும், செய்த உதவிக்கும் என்றென்றைக்கும் நன்றிக்கடன்பட்டவனாவேன். இதற்குப் பிறகும் தாங்கள் என்னைப் புறக்கணியாமல், தங்கள் வீட்டுக்கு வரத் தகுதியுள்ளவனாகக் கருதினால் நான் மகிழ்ச்சியடைவேனென்று சொல்ல வேண்டியதில்லை. தங்கள் அன்புக்கு இது மற்றோர் அறிகுறி என்று கருதுவதுடன் அந்த அன்புக்குப் பாத்திரமாக நடந்து கொள்ளவும் முயல்வேன்."

மறு தபாலில் அந்த ஆங்கில மூதாட்டியிடமிருந்து பின்வரும் பதில் வந்தது :-

"உண்மையறிவிக்கும் உமது கடிதம் பெற்றேன். நாங்கள் இருவரும் மிகுந்த மகிழ்ச்சியடைந்தோம், இடி இடியென்று சிரித்தோம். நீர் கூறும் பொய்மைக் குற்றம் மன்னிக்கற் பாலதே. ஆனால் உண்மை நிலையை எங்களுக்கு அறிவித்தது நலமேயாகும். உமக்கு நான் அனுப்பிய அழைப்பு இதனால் மாறுபடவில்லை. அடுத்த ஞாயிற்றுக்கிழமை கட்டாயமாக உம்மை எதிர்பார்க்கிறோம். உமது குழந்தை மணத்தைப் பற்றி எல்லா விவரங்களையும் கேட்டு மகிழ ஆவல் கொண்டிருக்கிறோம்."

மேற்படி பதில் கிடைத்த பிறகு மோகன்தாஸின் மனதில் இருந்த பெரும் பாரம் நீங்கிற்று. இதற்குப் பிறகு சந்தர்ப்பம் நேர்ந்த போதெல்லாம் தமக்கு விவாகம் ஆகிவிட்டது என்ற விவரத்தை அவர் தெரிவித்து விடுவது வழக்கமாம்!

— மாந்தருக்குள் ஒரு தெய்வம்
(கல்கி 22.2.1948)




• மாதிரி குடில்...

மகாத்மாவை நினைவூட்டும் மியூசியம்!

இந்த ஜனவரி 30ஆம் தேதி, மகாத்மா காந்தியின் மறைந்த ஐம்பதாவது நினைவு நாள். காந்தி இறந்தபின் டெல்லி, பாட்னா, கரக்பூர், மும்பை போன்ற இடங்களில் நினைவாலயங்கள் தோன்றின. காமராஜ் மதுரையில், ராணி மங்கம்மாள் அந்தக் காலத்தில் கட்டிய 'விருந்தினர் மாளிகை'யை வாங்கினார். அதற்கு அப்போதே பத்துக் கோடி ரூபாயை ஒதுக்கி, காந்தி மியூசியம் ஆக்கினார். தென்னிந்தியாவிலேயே சரித்திரப் புகழ் மிக்க முதல் மியூசியம் என்றாகி விட்டது.

காந்தி மியூசியம், அருங்காட்சியகம் - நூலகம் - ஆய்வகம் என்ற மூன்று பகுதிகளாக இயங்கி வருகிறது. மியூசியத்தின் உள்ளே காணப்படும் எளிமையே கம்பீரமாய் இருக்கிறது.



• அஸ்தி பாதுகாக்கப்படுகிறது...

ஆய்வுத்துறைத் தலைவர் ரவிச்சந்திரன், எத்தனையோ உலகத் தலைவர்கள் வரும்போதெல்லாம் காந்தி பற்றி விளக்கிச் சொல்லியிருக்கலாம். நமக்குச் சொன்ன போதும் இப்போது தான் காந்தியைப் பற்றி புதிதாகச் சொல்வது போல் உயிர்த்துடிப்போடு சொன்னது மனசுக்கு ஈர்ப்பாக இருந்தது. ரத்தக் கறை படிந்த துணியைப் பாதுகாக்கும் அறைக்கு வரும் போது சோகம் கசிந்த மௌனம். இறப்பின் துயரத்தில் நின்றது போன்ற பிரமை. அவருடைய மூக்குக் கண்ணாடி, பேனாக்கள், துளசி மாலை எல்லாம் மகாத்மாவையே நேரில் தரிசிப்பது போன்ற உணர்வை ஏற்படுத்துகின்றன.

வார்தாவில் உள்ள காந்தியின் ஆசிரமத்தை ஒத்த மாடல் குடிலை இங்கு கட்டியுள்ளனர். அஸ்தியைப் பாதுகாக்கும் சிறந்த புல்வெளியில்தான் ஒவ்வொரு வார வெள்ளிக்கிழமையும், 'சமய நல்லிணக்க மையம்' சார்பில் கூட்டம் நடைபெறுகிறது. 12 ஆண்டுகளாக ஒரு வெள்ளிக்கிழமைகூட தவறாமல் கூட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.



• ரவிச்சந்திரன்

"கூட்டம் நடத்த வெள்ளிக்கிழமையைத் தேர்ந்தெடுக்க விசேஷமான காரணம் ஏதும் இருக்கிறதா?" என்று ரவிச்சந்திரனிடம் கேட்டோம்.

"யேசுநாதர் சிலுவையில் ரத்தம் தோய மரித்த நாள்; மகாத்மாவின் ரத்தமும் அதே நாளில்தான் சிந்தியது. இந்துக்களுக்குப் புனிதநாள் வெள்ளிக்கிழமை. இசுலாமியர்களின் மதிப்புமிக்க ஜும்மா தொழுகை வெள்ளிக் கிழமைகளில்தான் நடக்கிறது. யூதர்கள், மௌன உண்ணாவிரதத்தை வெள்ளிக் கிழமைகளில்தான் கடைப்பிடிக்கின்றனர். அம்மனுக்கும் வெள்ளிக்கிழமைதானே!" என்றார்.

ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமை தாங்க சிறப்பாளரை ஏற்பாடு செய்கின்றனர். மௌன தியானம் முடிந்த பின் கூட்டுப் பிரார்த்தனை தொடர்கிறது. எல்லா மதங்களிலிருந்தும் ஒவ்வொரு பாடல் பாடப்படுகிறது. ⭘

— சு. வேணுகோபால்

படங்கள்: சங்கரலிங்கம்

கல்வியைக் காதலிக்கும் கரோடியா!

ராஜஸ்தானில் பசியோடும், பட்டினியோடும் போராட்டம் நடத்திய ஓர் ஏழைக் குடும்பத்தில் ஆறாவது குழந்தையாகப் பிறந்த ஜெய்கோபால் கரோடியாவால் பள்ளிக்கூட வாசலை மிதிக்க முடியவில்லை.

"இதன் காரணமாகவே நான் சின்னப் பையனாக இருந்தபோது ஏழைகள் படிப்பிற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொள்வேன். இப்போது அந்த எண்ணத்தைச் செயல்படுத்துவதையே எனது வாழ்க்கையாகக் கொண்டிருக்கிறேன்!" என்று சொல்லும் இவர், பத்து வருடங்களுக்கு முன்பு மனைவியை இழந்து விட்டவர். அண்ணாநகரில் உள்ள தமது விசாலமான பங்களாவின் தரைத்தளம் முழுவதையும் 'கரோடியா பவுண்டேஷன்' அலுவலகத்திற்காக ஒதுக்கியிருக்கிறார்.

இன்றைக்கு மிகப் பெரிய தொழிலதிபரான இவரது பண வசதியையும், பரந்த மனப்பான்மையையும் ஒரு சில அமைப்புகள் தத்தம் விருப்பத்திற்கு ஏற்ப பயன்படுத்திக் கொள்ள, இவரை பகடைக்காயாக்க முயன்றதில் வெறுத்துப் போயிருந்தார். ஏழை மாணவர்களின் கல்வி மேம்பாடு பற்றிய கவலை அதிகமாக யோசிக்க வைத்தது. எப்படி ஆரம்பிப்பது என்று காத்திருந்த சமயத்தில், வந்த அரசின் அறிவிப்பு திசை காட்டியது.

அரசாங்கப் பள்ளிக்கூடத்திற்கு யார் 5 லட்ச ரூபாய் நன்கொடை கொடுத்தாலும் அவர் பெயர் அதற்குச் சூட்டப்படும் என்று தமிழக அரசு 1991ல் அறிவித்திருந்தது தெரிய வந்தது. 1995ல் சென்னை, நங்கநல்லூர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, 'ஜெய் கோபால் கரோடியா அரசு மகளிர் மேல் நிலைப்பள்ளி'யாக பெயர் மாற்றிக் கொண்டது.

சென்னையில், சூளைமேடு, விருகம்பாக்கம், சைதாப்பேட்டை, மாதவரம், மணலி நியு டவுன், திருவொற்றியூர் மற்றும் பொன்னேரி என அரசின் எட்டு மேல்நிலைப்பள்ளிகள் மூன்று வருடங்களில் ஜெய்கோபால் கரோடியா பெயரை இணைத்துக் கொண்டு செயல்படுகின்றன.

இப்படிப்பட்ட அசாத்தியமான கல்விக் கொடையைப் பற்றி கேள்விப்பட்ட சபாநாயகர் பி.டி.ஆர். பழனிவேல்ராஜன், கரோடியாவைத் தொடர்பு கொண்டு மதுரைக்கும் நிதி ஒதுக்கும்படி கேட்டிருக்கிறார். உடனே கரோடியா கல்வி வரைபடத்தில் மதுரையும் இடம் பெற்று விட்டது.

பழங்காநத்தம் மற்றும் தல்லாகுளத்தில் மாநகராட்சி உயர்நிலைப்பள்ளிகள், அனுப்பானடியில் மாநகராட்சி நடுநிலைப் பள்ளி என மூன்று பள்ளிகளுக்கும் தலா மூன்று லட்சம் ரூபாய் செலவில் இப்போது கட்டடங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறார் கரோடியா. "அந்தப் பகுதியில் நல்ல ஒத்துழைப்புக் கிடைத்தால் இன்னும் அதிகமாக செலவழிக்கத் தயாராக இருக்கிறேன்" என்கிறார்.

ஐந்து லட்சம் கொடுத்தோம்; பெயர் சூட்டப்பட்டது; வேலை முடிந்தது... என்பதோடு இவர் நின்று விடுவதில்லை. தாம் கொடுக்கும் ஒவ்வொரு பைசாவும் முறையாகப் பயன்படுத்தப் பட வேண்டும் என்பதில் கரோடியா ரொம்ப கறார். அதனால் தான் ஐந்து லட்சத்தைப் பணமாகத் தராமல், பக்காவான வகுப்பறைக் கட்டடமாகக் கட்டிக் கொடுக்கிறார். தரமான சிமெண்ட், கம்பி போன்ற கட்டுமானப் பொருள்களை வாங்கி, நல்ல முறையில் கட்டிக் கொடுப்பதற்கு என்றே ஒரு கன்ஸ்ட்ரக்ஷன் குமையும் வைத்திருக்கிறார். இவர் தத்து எடுத்துக் கொண்டிருக்கும் அரசாங்கப் பள்ளிகளின் செயல்பாடுகள் பற்றி இவர் அலுவலகம் கவனித்துக்கொண்டே இருக்கிறது. எல்லாத் தகவல்களையும் தெரிந்து கொள்கிறார். சென்னையில் பேய் மழை கொட்டிய போது கரோடியா பவுண்டேஷன் அலுவலகத்திலிருந்து சைதாப்பேட்டை அரசினர் மகளிர் மேல் நிலைப் பள்ளிக்கு போன் வந்தது.

"நமது வகுப்பறைக் கட்டடத்தில் எங்காவது தண்ணீர் லீக் ஆகிறதா... என்று பார்த்துச் சொல்லுங்கள்... மேல்தளத்தில் குப்பை கூளங்கள் தேங்கியிருந்தால் அகற்றி விடுங்கள்...' என்று என்னிடம் சொன்னார்கள் ஸார்" என்கிறார் அந்தப் பள்ளியின் அலுவலக உதவியாளர் மணி.

கட்டடம் மட்டும் அல்ல; பள்ளி வளர்ச்சி, மாணவர் மேம்பாடு என ஒவ்வொரு விஷயத்திலும் அக்கறையோடு, பார்த்துப்

• சைதாப்பேட்டையிலுள்ள
கரோடியா மேல் நிலைப் பள்ளி



• கரோடியா

பார்த்துச் செய்கிறார் கல்விக் காதலரான கரோடியா.

சைதாப்பேட்டை அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் புதிய தலைமை ஆசிரியை ஜெயகுமாரி சுந்தர்ராஜ் பொறுப் பேற்றவுடன் மரியாதை நிமித்தமாக கரோடி யாவைச் சந்திக்கச் சென்றிருக்கிறார். சுதந்திர தின பொன்விழா கொண்டாட்டத்தையொட் டிய மாபெரும் கலை நிகழ்ச்சி ஒன்றில் தமது பள்ளி மாணவிகள் 150 பேர் கலந்து கொள்ளப் போகிறார்கள்; அதற்கான டிரஸ் வாங்க அவர்களுக்கு வசதி இல்லை என்று அப்போது பேச்சுவாக்கில் அவரிடம் சொல்லியிருக்கிறார்.

"அவ்வளவுதான்! உள்ளே போனார். பத்தா யிரம் ரூபாயைக் கொண்டு வந்து கையில் கொடுத்தார். ஸார்... நாங்கள் பணம் வாங்க வேண்டும் என்று நினைத்துப் போகவில்லை... பேசிக் கொண்டிருக்கும்போது ஒரு தகவலாகத் தான் சொன்னோம். உடனே அவர் பணம் கொடுத்ததும் நான் ஆனந்த அதிர்ச்சியில் கண் கலங்கினேன்" என்கிறார் இந்தப் பள்ளியின் உடற் கல்வி ஆசிரியை மைதிலி.


"இந்தப் பள்ளியில் ஐந்து லட்சம் ரூபாய் நன்கொடையுடன் வகுப்பறைக் கட்டடத்தை ஆரம் பித்து, கட்டி முடிக்கும்போது 12 லட்சம் செலவானது. எல்லாச் செலவையும் கரோடி யாவே ஏற்றுக் கொண்டார்" என்று நம்மிடம் சொல்லிப் பரவசப்படுகிறார் உதவித் தலைமை ஆசிரியை பகவதி. "இங்கு மட்டுமல்ல எல்லாப் பள்ளிகளுக்கும் இப்படித்தான் அதிகமாகச் செலவழிக்கிறோம்" என்று சர்வ சாதாரண மாக சொல்கிறார் கரோடியா.

ப்ளஸ் டூ தேர்வில் அதிக வெற்றியைச் சந் தித்த பள்ளிக்கு விருது, அதிகமான மாண வர்கள் எந்தப் பாடத்தில் வெற்றி பெற்றிருக் கிறார்களோ, அந்தந்தப் பாடம் நடத்தும் ஆசிரியர்களுக்குப் பரிசு என அரசாங்க ஆசிரியர்களை ஊக்கப்படுத்தி, தேர்வு களில் அமோக மகசூல் காண்கிறார் கரோடியா.

"நான் மட்டுமே செலவு செய்யவில்லை. லயன்ஸ் கிளப்; கில்ட் ஆஃப் சர்வீஸ், கொடை யாளர்கள் எல்லாம் உதவி செய்கிறார்கள். பணம் பெரிய விஷயமில்லை, மனசுதான் வேண்டும்!" என்று வேதாந்தி போல மெல்லிய குரலில் பேசும் கரோடியா, இப்போது இன் னொரு திட்டத்தைச் செயல்படுத்தும் சந்தர்ப்பத்திற்காகக் காத்திருக்கிறார்.

குப்பத்துக் குடிசைகளில் வசிக்கும் மாணவர்களுக்காக அந்தந்த பகுதியில் இலவச டியூஷன் மையங்களை ஆரம்பிக்க விரும்பு கிறார், கற்றுக் கொடுக்க முன்வருபவர்களுக்கு உரிய ஊதியமும் கொடுக்க முடியும் என்று சொல்லும் கரோடியா, இந்த திட்டத்தைச் செயல்படுத்த தகுந்த நபர்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்.

— ஆதித் கம்யூனிகேஷன்ஸ்



நான்

4

காதல் டைரிக்குறிப்பு:

கடை முழுக்க லட்சம் பொருள்கள். பரிசுப் பொருள் தேர்வுக்கு தவித்துப் போனேன்.

அரவிந்தால் தன் ஆச்சரியத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

இத்தனை சீக்கிரம் அவளை மறுபடியும் சந்திப்போம் என்று கொஞ்சமும் எதிர் பார்க்கவில்லை.

"டேக் யுவர் சீட்" என்றாள் யாமினி.

ஒரு ஃபைலை தன் மார்போடு அணைத் திருந்த பிருந்தா, நன்றி சொல்லி நாற்காலியை ஓசைப்படாமல் நகர்த்தி அமர்ந்து கொண் டாள்.

அவள் தன்னை இன்னும் கவனிக் காததில் அரவிந்திற்கு ஓர் ஏமாற்றம் ஏற்பட்டது.

யாமினி தன்னை அவனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தால் பரவாயில்லை என்று நினைத்தான். ஆனால் அவன் வியாபாரம் சம்பந்தப்பட்டவன். நான் இந்த அலுவலகத்திற்கு எந்த வகையிலும் தொடர்பில்லாதவன். எனவே அறிமுகப்படுத்த மாட்டாள் என்று தோன்றியது.

"சொல்லுங்க" என்றாள் யாமினி கால் மேல் கால் போட்டுக் கொண்டு சற்றே அலட்சிய தோரணையில்,

"மேடம் எங்க ஏஜன்சியை ஏன் டெர்மினேட் பண்ணக் கூடாதுன்னு கேட்டு நோட்டீஸ் அனுப்பியிருக்கீங்க."

"யா!"

"பதினஞ்சு வருஷமா உங்க நிறுவன; தோட ஏஜண்டா செயல்பட்டுக்கிட்டிரு கோம். பேமெண்ட்ல எப்பவுமே டிலே

உன்னை ஏமாற்றுவேன்!

பட்டுக்கோட்டை பிரபாகர்

செஞ்சதில்லை. அப்படி இருக்கறப்போ..."

"நான் அனுப்பிச்ச நோட்டீசை நீங்க சரியா படிக்கலையா? காரணத்தை கரெக்டா குறிப்பிட்டிருந்தேனே. மூணு வருஷமா நாங்க நிர்ணயம் செஞ்சிருந்த விற்பனை இலக்கை நீங்க தொடவே இல்லை. ஒவ்வொரு வருஷமும் உங்க டர்ன்-ஓவர் குறைஞ்சிட்டிருக்கு!"

"தொழில்ல போட்டிகள் இருக்கே மேடம்."

'ஏதாச்சும் எக்ஸ்க்யூஸ் சொல்லாதீங்க. எங்க கம்பெனி ஆனுவல் ரிப்போர்ட்ஸ் பார்க்கறீங்க இல்ல? மொத்தமா கம்பெனியோட விற்பனை அதிகரிச்சுக்கிட்டுதான் இருக்கு. சிடில மட்டும் எங்களுக்கு ஆறு ஏஜன்சிஸ் இருக்கு. மத்த அஞ்சு ஏஜன்சியும் டார்ஜெட்டுக்கும் மேல விற்பனை பண்ணிட்டிருக்காங்க. உங்க ஒரு ஏஜன்சி மட்டும்தான் மந்தமா இருக்கு. ஏன்னு தெரியலை."

"மேடம், உண்மையைச் சொல்லணும்னா எங்க ஏஜன்சிக்கு மூணு பார்ட்னர்ஸ். கொஞ்ச நாளா அவங்களுக்குள்ளே டெர்ம்ஸ் சரியில்லை. அதனால இந்த ஏஜன்சியை சரியா கவனிக்கலை."

"அப்புறம் எப்படி நான் ஏஜன்சியை டெர்மினேட் பண்ணாம இருக்க முடியும்?"

இல்லை மேடம், இப்போ எங்க ஓனர் அண்ணாமலை மத்த ரெண்டு பார்ட்னர்சை வெட்டி விட்டுட்டு முழுக்க ஏஜன்சியை அண்டர்டேக் பண்ணிக்கிற ஏற்பாட்டில இருக்கார். இந்த ஃபைனான்ஷியல் இயர்ல உங்க ஸேல்ஸ் டார்ஜெட்டை நிச்சயம் பூர்த்தி செஞ்சிடுவோம்."

"ஸாரிங்க. மூணு வருஷம் தொடர்ந்து கவனிச்சுட்டுத்தான் இந்த முடிவை எடுத்திருக்கேன். உங்க ஏரியாவில வேற ஏஜண்டை நியமனம் பண்ற ஏற்பாட்டிலயும் இறங்கிட்டேன். சட்டரீதியா பிரச்னை எதுவும் வரக் கூடாதுன்னுதான் முறையா நோட்டீஸ் அனுப்பிச்சேன்."

"பதினைஞ்சி வருஷமா நல்ல முறையில உழைச்ச ஏஜன்சி மேடம். கொஞ்சம் கன்சிடர் பண்ணுங்க. இந்த ஏஜன்சில நான் மானேஜரா சேர்ந்து ஒரு வருஷம் தான் ஆகுது. நிர்வாகத்தில இருக்கற பல குளறுபடிகளைச் 'சரி செஞ்சிட்டிருக்கேன். உங்க நோட்டீசுக்கு பதிலை தபால்ல எழுதிப் போட்டிருப்பேன். நேர்ல எடுத்துச் சொன்னா எடுபடுங்கற நம்பிக்கையிலதான் வந்தேன். இந்த ஒரு வருஷம் பார்த்துட்டு அப்புறம் நீங்க..."

"நான் முடிவு எடுக்கறதுக்கு முன்னாடி பத்துத் தடவை யோசிப்பேன். முடிவு எடுத்தப்புறம் மறுபடி அதை யோசிக்கிற பழக்கமில்லை. ஏதாச்சும் சாப்பிடறிங்களா?" என்றாள் யாமினி.

பிருந்தாவின் முகம் வாடிப் போனது.

அரவிந்திற்கு வருத்தமாக இருந்தது. அந்த வியாபாரப் பிரச்னையின் முழு விவரமும் தெரியாதென்றாலும் யாமினி கடுமையாகப் பேசியது கோபத்தை ஏற்படுத்தியது.

'நீங்க போகலாம்' என்பதை 'ஏதாச்சும் சாப்பிடறிங்களா?' என்று வேறு வார்த்தைகளில் யாமினி கேட்டதைப் புரிந்து கொண்ட பிருந்தா எழுந்து கொண்டாள்.

"மேடம், வற்புறுத்தறதா நினைக்க வேண்டாம். இப்ப எங்க ஏஜன்சில உங்க கம்பெனியோட ப்ராடக்ட்ஸ் மட்டும்தான் டீல் பண்ணிட்டிருக்கோம். நீங்க ஏஜன்சியை ரத்து செஞ்சிட்டா எங்க ஆபீசையே மூட வேண்டி வரும்."

"அதைப் பத்தியெல்லாம் உங்க முதலாளி பொறுப்பா முன்னாடியே கவலைப் பட்டிருக்கணும்."

"நானும்தான் கவலைப் படணும் மேடம். ஆபீசை மூடினா என்னை மாதிரி அங்க வேலை பார்க்கற ஒன்பது பேருக்கு வேலை போயிடும் மேடம்."

பிருந்தாவின் குரலுக்குள் வாழ்க்கை பயம் ஒளிந்திருந்தது.

"உங்க ஒன்பது பேருக்கும் என் கம்பெனில வேலை போட்டுக் கொடுக்கச் சொல்றீங்களா? வாட் நான்சென்ஸ்!"

யாமினியின் குரலுக்குள் அதிகாரத் திமிர் நிறைந்திருந்தது.

"நான் வர்றேன் மேடம்."

பிருந்தா விருட்டென்று வெளியேறினாள்.

அவள் கடைசிவரை தன்னை கவனிக்காததைவிட மிக முக்கியமான விஷயத்தில் ஏமாற்றமான பதிலைப் பெற்றுக் கொண்டு போவதில் அரவிந்திற்கு இனம் புரியாத இறுக்கம் மனதில் ஆழ்ந்தது.

''ஏன்க்கா அந்தப் பொண்ணுகிட்ட இப்படி முரட்டுத்தனமா பேசினே?''

"இதெல்லாம் பிசினெஸ் மேட்டர்ஸ். உனக்குத் தெரியாது" என்று மணியடித்து பியூனை அழைத்து, காத்திருக்கும் இன்னொரு நபரை உள்ளே அனுமதிக்கச் சொன்னாள் யாமினி.


அரவிந்த் எழுந்து கொண்டு, ''உன் பிசினெஸ் மேட்டர்சை முடி. பத்து நிமிஷம் கழிச்சு வர்றேன்'' என்றான்.

''ஏண்டா? உன்னைக் காக்க வைக்கிறேன்னு கோபமா?''

"இல்லை. ஒரு சிகரெட் பிடிச்சிட்டு வந்துடறேன்."

"விட்டுட்டுட்டதா சொன்னியே..."

"அதெல்லாம் நான் சொல்லலை."



''நம்ம தலைவருக்குக் கொஞ்சம்கூட அரசியல் அறிவு இல்லை.''

''எப்படிச் சொல்றே?''

''சோனியா'' காந்தி தேர்தல் பிரசாரம் செய்தால், அவருக்கெதிராக ''குண்டு கல்யாணத்தையும், பிந்துகோஷையும் வைத்துப் பிரசாரம் செய்வோம்''னு பேசி இருக்காரே!''

— பாளை. பாலு

வெளியே வந்த அரவிந்தன் கண்கள் பிருந்தாவைத் தேடின. வெயிட்டிங் ஹாலில் அவள் இல்லை. அலுவலக ஹாலில் பார்த்தான். இல்லை. மாடிப்படிகளில் குனிந்து பார்த்தான்.

செவ்வக அடுக்குகளாகக் கீழே கீழே இறங்கிச் சென்ற படிகளில் மூன்று மாடிகளுக்கும் கீழே பிருந்தா தளர்வாக இறங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

ஏதோ ஒரு தைரியத்தில், "ஹலோ!" என்று குரல் கொடுத்தான்

அவள் கழுத்தை உயர்த்தி அங்கிருந்து பார்த்து 'என்னையா?' என்பதுபோல ஜாடையில் கேட்டாள்.

"ஆமாம். ஒன் மினிட்" என்று இவன் அவசரமாக இறங்கினான்.

அவள் அருகில் வந்து நின்று மூச்சிரைத்தான்.

இவனைப் பார்த்த அவள் முகத்தில் 'எங்கேயோ பார்த்திருக்கிறோமே' என்கிற கேள்வி ரேகை குறுக்கே ஓடியது.

"மேடம்... என் பேர் அரவிந்த். இப்ப நீங்க மீட் பண்ணி பேசிட்டு வந்தீங்களே மிஸஸ் யாமினி, அவங்க பிரதர் நான். ரூமுக்குள்ளே நானும் இருந்தேன்."

"ஸாரி, நான் கவனிக்கலை. என்ன விஷயம்?"

"உங்களுக்கு நான் ஏதாவது ஒரு வகையில உதவி செய்ய முடியுமான்னு யோசிச்சேன். அப்படி உக்காந்து பேசலாமா? ப்ளீஸ்... கம்!"

சற்றுத் தள்ளி ஒரு சிறிய ஹாலில் போடப்பட்டிருந்த சோபாவை நோக்கி அவன் நடக்க, அவள் தொடர்ந்தாள். இடைவெளி விட்டு அமர்ந்தார்கள்.

"சூப்பர் மார்க்கெட்ல உங்களைப் பார்த்தேன்" என்றான்.

"யெஸ். இப்ப ஞாபகம் வருது..." என்றாள்.

"ஏஜன்சி குளோஸ் ஆனா நிஜமாவே உங்க ஆபீசை மூட வேண்டிய நிலைமையா? இல்லை ஒரு இரக்கத்தை ஏற்படுத்தறதுக்காக அப்படிச் சொன்னீங்களா?"

"அது உண்மையான நிலமைதான். எங்க ஏஜன்சியை நிர்வாகம் பண்ற அண்ணாமலை சாருக்கு ஏழெட்டுப் பிசினெஸ் இருக்கு. இங்க நான் வர்றதுக்கு முன்னாடி அவரைப் பார்த்துப் பேசிட்டுத்தான் வந்தேன்."

"என்ன சொன்னாரு?"

"கேட்டுப் பாருங்க. ஏஜன்சியை அவங்க டெர்மினேட் பண்றதா இருந்தா இந்த வியாபாரத்தை மூடுறதைத் தவிர வேற வழியில்லைன்னு சொன்னார்."

"எத்தனையோ டயர் கம்பெனி இருக்கே. வேற கம்பெனியோட டீலரா செயல்படலாமே..."

"பார்ட்னர்களுக்குள்ளே தகராறுன்னு சொன்னேனே. அதனால இதில அவருக்கு ஆர்வம்

போயிடுச்சி, இந்த ஏஜன்சி தொடர்ந்தா ஆபீஸ் தொடர்ந்து இயங்கும். இல்லைன்னா மூடிடுவாரு."

"ஒன்பது பேர் வேலை பார்க்கறதா சொன்னீங்க. உங்க முதலாளிக்கு ஏழெட்டுத் தொழில்ன்னு சொன்னீங்க. உங்க ஒன்பது பேருக்கும் தன்னோட வேற நிறுவனத்தில வேலை கொடுக்க மாட்டாரா?"

"வேற எங்கயும் இப்போ வேலை காலி இல்லைன்னு எனக்கு நல்லாத் தெரியும். இந்த ஏஜன்சில நான் வேலைல சேர்ந்ததிலேர்ந்து நிறைய சீர்திருத்தம் செஞ்சிருக்கேன். பிரமாதமா கொண்டாந்துட முடியும்னு நான் நம்பிட்டிருந்தப்பதான் அணுகுண்டு போட்ட மாதிரி இப்படி ஒரு நோட்டீஸ் அனுப்பிச்சிட்டாங்க."

அரவிந்த் யோசனையில் ஆழ்ந்தான்.

அவனோடு பேசிக் கொண்டிருக்கும் இந்த விநாடிகளை மிக மிக ரசித்தாலும், கவலையான ஒரு பிரச்னையைப் பற்றிப் பேசுகிறோம் என்பது நெருடலாக இருந்தது.

அவளின் நளினமும் பேச்சில் இருந்த கண்ணியமும், எல்லாவற்றுக்கும் மேல், உள்ளே வருடிக் கொடுக்கும் அந்த இதமான அழகும் இவளுக்கு எப்படியும் உதவி செய்ய வேண்டும் என்று அழுத்தமாக நினைக்க வைத்தது.

"நீங்களும் இதே ஆபீஸ்ல வேலை பார்க்கறீங்களா சார்?" என்றாள்.

"இல்லைங்க. நான் அக்காவைப் பார்க்கறதுக்காக வந்தேன்."

"நீங்க என்ன பண்றீங்க சார்?"

இரண்டு வருடங்களுக்கு முன்பாக நண்பனோடு சேர்ந்து ஊறுகாய், அப்பளம், சாம்பார் பொடி என்று தயாரித்து பிரமாதமாக விற்பனை செய்து கொண்டிருந்ததை இப்போதும் செய்து கொண்டிருப்பதாகப் பொய் சொல்வதா?

ஆஃப்செட் பிரிண்ட்டிங் பிரஸ் விரைவில் துவங்குவதற்காகச் செய்து கொண்டிருக்கும் ஏற்பாடுகளைப் பற்றி உண்மை சொல்வதா?


இரண்டையும் கலந்து சொல்லத் தீர்மானித்து, "ஒரு ஃபிரெண்டோட சேர்ந்து பிசினஸ் பண்ணிட்டிருந்தேங்க. ரொம்ப நம்பிக்கையானவன்னு நினைச்சிருந்த அவன் தில்லுமுல்லு பண்ணிட்டான். இப்ப சொந்தமா தனியா ஆஃப்செட் பிரஸ் ஆரம்பிக்கிற பிளான்ல இருக்கேன்" என்றான்.

"எங்க ஏஜன்சி கேன்சலாகாம இருக்கறதுக்கு உங்களால உதவி செய்ய முடியும்னு ஏதோ சொன்னீங்களே..."

"உங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிற நோட்டீஸ் தலைமை அலுவலகத்தில எடுத்த முடிவா? இல்லை என் சிஸ்டர் எடுத்த முடிவா?"

"உங்க சிஸ்டர் எடுத்த முடிவுதான்."

"இப்ப அவுங்க நினைச்சா உங்க ஏஜன்சியை தொடரச் செய்யலாமா?"



"இன்ஸ்பெக்டர் சார், ஏழாம் நம்பர் வார்டுல இருந்த கைதி, நாலாவது மெயின் ரோடு வழியா தப்பிச்சு ஓடறான்."

"மடையன், ஏழாவது குறுக்குத் தெரு வழியா தப்பிச்சு போகப் போறேன்'னு சொல்லிட்டு இப்போ பிளானை மாத்திட்டான் போலிருக்கு. பெரிய ரோதனையா போச்சு!"

— ஜெ. கண்ணன்

"செய்யலாம் சார்."

"நான் பேசிப் பார்க்கறேன். உங்க அட்ரஸ் கொடுங்களேன். அப்புறமா நான் உங்களை காண்டாக்ட் பண்றேன்."

பிருந்தா தன் கைப்பை திறந்து தன் அலுவலகத்தின் விசிட்டிங் கார்டை எடுத்துக் கொடுத்தாள்.

"இந்த உதவியை நீங்க செஞ்சீங்கன்னா ஒன்பது குடும்பத்தோட வாழ்க்கையைக் காப்பாத்தின மாதிரி சார்" என்றாள்.

'உனக்காக கண்டிப்பாக நான் செய்வேன் பிருந்தா' என்று நினைத்துக் கொண்டு எழுந்தான். அவளும் எழுந்து கொண்டாள்.

"நீங்க எங்க ஆபீசுக்கு வரணும்னு இல்லை சார். நீங்க போன் செஞ்சா நீங்க சொல்ற இடத்துக்கு நான் வந்து உங்களைப் பார்க்கறேன்" என்று சொல்லிவிட்டு முத்தாய்ப்பாக அவள் புன்னகைத்தாள்.

அந்த புன்னகைக்காக பூமிக்கே வெடிகுண்டு வைக்கலாம் போல இருந்தது.

அவள் படிகளில் இறங்கிச் சென்றாள்.

நான் சொல்கிற இடத்திற்கு வந்து என்னை சந்திக்கிறாளாம். முதல் சந்திப்பில் இப்படி எவள் சொல்வாள்? பின்னணியும், நோக்கமும் வேறென்றாலும் மனம் முழுக்க தித்தித்தது.

யாமினியிடம் பேசி அவளுக்குச் சாதகமாக முடித்துக் கொடுத்தால் என் மேல் மாறாத மதிப்பு ஏற்படும். பிறகு அந்த மதிப்பு காதலாக...

அரவிந்த் முழு உற்சாகத்துடன் மீண்டும் யாமினியின் அறை நோக்கிப் படிகளில் ஏறினான்.

சரி, யாமினி சம்மதிப்பாளா?

(தொடரும்)

கரும்பு சுவைக்க சன்மானமும் உண்டு!

ஸ்ரீராம் டிரஸ்ட் வழங்கும் சந்தா முதலீட்டுத் திட்டம்!

**ஸ்ரீராம் டிரஸ்டில் ரூ. 10,000 முதலீடு செய்யுங்கள்.
5 ஆண்டுகளில் ரூ. 20,000 (இரு மடங்கு) பெற்றுக் கொள்ளுங்கள்.**

அத்துடன்

● 4 இலக்கிய பொக்கிஷங்களை அன்பளிப்பாகப் பெறுங்கள் ●



1. 'கல்கி' வார இதழ் 5 ஆண்டுகளுக்கு (260 வாரங்களுக்கு) உங்கள் இல்லம் தேடி வரும்.
2. 'கல்கி' தீபாவளி மலர் 5 ஆண்டுகளுக்கு பதிவுத் தபாலில் உங்களுக்குக் கிடைக்கும்.
3. பொன்விழாக் காணும் 'அமுதசுரபி' இலக்கிய மாத இதழ் 5 ஆண்டுகளுக்கு உங்கள் இல்லம் தேடி வரும்.
4. 'அமுதசுரபி' தீபாவளி மலர் 5 ஆண்டுகளுக்குப் பதிவுத் தபாலில் உங்களுக்குக் கிடைக்கும்.



ரூ. 10,000 (ரூ. பத்தாயிரம்) 'ஸ்ரீராம் டிரஸ்ட்' பெயருக்கு செக்/டிராப்ட் அனுப்ப வேண்டிய முகவரி :

'ஸ்ரீராம் டிரஸ்ட்', ஏ-7, இரண்டாவது அவென்யூ, அண்ணாநகர் கிழக்கு,
சென்னை - 600 102. தொலைபேசி எண் : 628 6869, 628 7879

---

1. முழுப்பெயர் : திரு/திருமதி/செல்வி..............................
   முகவரி :..............................
   ....
   ....
2. கூட்டாக இடப்பட்டால் அவர்கள் பெயர் :
   முழுப்பெயர் :..............................
3. வாரிசுதாரர் :..............................
4. கல்கி, அமுதசுரபி இதழ்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி :..............................
   ....
   ....

CHEQUE.D.D. No. Dt. M

Rs. .... அன்புள்ள

இடம் ....

தேதி .... முதலீட்டாளர் கையொப்பம்

வட்டமேஜை

✉ 'வெள்ளி விழாவில் பித்தளை அறிக்கைகள்' என்ற கல்கி தலையங்கம் கண்டேன்! வழக்குகளில் சிக்கித் தவிக்கும் ஜெயலலிதா, இன்று தி.மு.க. மீது பழி சுமத்தி, மக்களை நம்பவைத்தாலும் கூட, நாளை அவர் தீர்ப்பிலிருந்து வரும் உண்மைகளைப் பொய்யாக்க முடியாது, என்று நீர் ஆணித்தரமாக அடித்துக் கூறியிருப்பது ஏகப் பொருத்தம்!
கும்பகோணம், எஸ். கே. மூர்த்தி.

'அம்மா'வுக்கு நன்றி சொல்லுங்க சார்!

✉ புலியாய்ச் சீறும் 'தென்பாண்டிச் சிங்கம்' கோபால்சாமியைப் பூனையாய் மாற்றியது; தன்மானம் ஒன்றேதான் எங்கள் கொள்கை என்றெல்லாம் முழங்கிக் கொண்டிருந்த 'இன்டிவனத்துப் பெரியார்' டாக்டர் ராமதாசை தமக்கு 'லாலி' பாட வைத்தது; இவையெல்லாம் தங்கத் தலைவியின் வெள்ளி விழா மாநாட்டுச் சாதனைகள்தானே! பத்தரைமாற்றுத் தங்கங்களாய்ப் பாவலா காட்டிக் கொண்டிருந்த தலைவர்களையெல்லாம் பதவிப் பிரியர்கள் - பயந்தாங்கொள்ளிகள் என்று அடையாளம் காட்டி, அவர்கள் முகமூடியைக் கிழிப்பதற்கு மாநாட்டைப் பயன்படுத்திக் கொண்ட 'அம்மா'வுக்கு நன்றி சொல்லுங்க சார்!
நெல்லையப்பபுரம், டி. செல்வன்.

✉ தமது ஒப்பற்ற நடிப்பால் பல ரசிகர்களை 'ஊர்' முழுக்க 'வசி'யம் செய்துள்ளவருக்குப் பானுமதி வாயால் புகழ் கிடைத்திருப்பது வசிஷ்டர் வாயால் பிரம்ம ரிஷி பட்டம் கிடைத்தது போல் உள்ளது!
வியாசர்காலனி, சிம்மவாஹினி.

✉ அஸ்ஸாம் மாநிலத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர் சமீப்குமார் தாஸின் துணிச்சலும், சமூக நல்லுணர்வும் பாராட்டுதற்குரியது! மக்களின் விழிப்புணர்வுக்கு அடிகோலும் இவர் போன்ற பத்திரிகையாளரை வெளிச்சத்துக்குக் கொண்டு வரும் 'கல்கி'யின் அரும்பணி பெரிதும் பாராட்டத்தக்கது.
வலையப்பட்டி, எம். பாலசுப்பிரமணியன்.

✉ புரியாத, கரடுமுரடான வார்த்தைகளை வட்டார வழக்கு எனக் கூறி, நாவலில் புகுத்தி படிப்பவரை மிரளச் செய்யும் 'இலக்கியவாதிகள்' மத்தியில், மீரான் அவர்களின் 'வடிவத்தை விட விஷயம் முக்கியம்' என்ற கூற்று பாராட்டப்பட வேண்டிய ஒன்று.
குடந்தை, ஜே. பாபு.

✉ கோலங்கள் பற்றிய அருமையான நூல் ஒன்றை அமரர் கல்கியின் துணைவியார் கலையழகோடு வெளியிட்டது வரவேற்புக்குரியது. வசூலாகும் தொகையை கல்கி அறக்கட்டளைக்கு அளிப்பது மகிழ்ச்சிக்குரியது; பாராட்டுக்குரியது!
சென்னை - 1, கே. ஆர். ரவீந்திரன்.


✉ பதவி பவுசு இருக்கிற சமயங்களில் பெருந்தலைகளைப் பேட்டி காண்பதை விட, அவை ஏதுமில்லாத சமயத்தில் சேஷனிடம் பேட்டி கண்டு, அவரின் இன்றைய சூழ்நிலையை நாங்கள் அறிந்து கொள்ள வழிவகுத்த கல்கியின் செயல் வித்தியாசமானது.
கும்பகோணம், ஆர். ஷண்முகம்.

✉ ரஜினி வீட்டு வாசலில் கருணாநிதி, மூப்பனார் குடுகுடுப்பைக்காரர்களாக நிற்கும் கார்ட்டூன் உண்மையிலேயே சிரிப்பை வரவழைத்தது. சபாஷ், அருமையான கார்ட்டூன்!
அரசரடி, நெல்லை வி. சிவா.

✉ சென்னை, கோவை வாசகர்களுக்கு மட்டும் ஜனவரி 1-ல் ஸ்வீட் கொடுத்து விட்டு, எங்களைப் போல் உள்ள வெளியூர் வாசகர்களுக்கெல்லாம் அல்வா கொடுத்ததுமில்லாமல், அவர்கள் ஸ்வீட் வாங்கிய நிகழ்ச்சி பற்றிய வர்ணனையையும் வெளியிட்டு, எங்களுக்கு ஏக்கத்தை உண்டுபண்ணி விட்டீர்களே! இது நியாயமா?
திருப்பரங்குன்றம், டி. கே. சுப்பிரமணியன்.

✉ வயதான காலத்தில் - மனைவியை இழந்து, தனித்து நிற்கும் ஒரு தந்தை தன் தனயன் குடும்பத்துடன்தான் சேர்ந்து வாழ வேண்டும் என்ற பொருள் பொதிந்த கருத்தினை மிக உருக்கமாக உணர்த்திய பிருதிவிராஜின் "சந்ததி" சிறுகதை மிகவும் அருமை!
மதுரை - 9, பி.எல். பரமசிவம்.

✉ பழனிமலைக்கு வரும் பக்தர்களின் சந்தேகத்தை விரட்டும் விதத்தில் பழனிக்கே நேரில் சென்று, பார்த்து, "பழனி விபூதி போலி விபூதியா?" என்ற சந்தேகத்தைத் தீர்த்து வைத்த கல்கிக்கு அந்தப் பழனிமுருகன் 'அருள்' வழங்குவாராக!
கோவை - 14, ஏ. எஸ். இராமசாமி.



• ஆயுசுக்கு...



• ...மறக்காத...



• ...ஆட்டம்!



• தவ வாழ்க்கை

● வைகை வளவன், மதுரை – 17.

? கேப்டன் பதவியிலிருந்து இறங்கிய பிறகு பழையபடி அசுரவேக ஆட்டம் ஆட ஆரம்பித்து விட்டாரே டெண்டுல்கர்....?

! ஒரு கேப்டனுக்கு உண்டான பொறுப்புகள் தரும் டென்ஷனிலிருந்து விடுபட்டது முக்கிய காரணமாக இருக்கலாம். வங்க தேசத்தில் அந்த ஃபைனல் ஆட்டம்; அவரும் கங்குலியும் ராபின் சிங்கும் விளாசியது; அப்புறம் ஏற்பட்ட பயங்கர டென்ஷன்; ஸ்ரீநாத்தின் கடைசிக்கட்ட இரட்டை ரன்கள்; மூன்று பாகிஸ்தான் ஃபீல்டர்கள் ஒன்று சேர்ந்து காட்ச்சைக் கோட்டை விட்டது; கனிட்கரின் வின்னிங் ஷாட்! மகிழ்ச்சியின் பொங்குமாங்கடல்! ஹய்யோ! ஹய்யோ! ஆயுசுக்கும் மறக்குமா...?

● எஸ். கானிதாஸ், திருவாரூர்.

? மத்தியில் பி.ஜே.பியும் தமிழ்நாட்டில் தி.மு.க. – த.மா.கா. கூட்டணியும் வெற்றி பெற வேண்டும் என்ற சோவின் முரண்பாடான ஆசை பற்றி...?

! அதானே! தீவிர அத்வானி ஆதரவாளரான அவர், "என்ன, பிஜேபி. தமிழ்நாட்டில் ஐந்து இடங்களில்தானே நிற்கிறது: அங்கே மட்டும் பி.ஜே.பிக்கு வோட்டு போடுங்கள்; மற்ற தொகுதிகளில் ஜெ. கூட்டணியை முறியடியுங்கள்" என்று சொல்லிவிட்டுப் போகலாம் தானே!



• கோல்மால் பேச்சு!



• அபாய எதிர்காலம்!

● கே. ஆர். ரவீந்திரன், சென்னை – 1.

? நந்தா மறைவு பற்றி...?

! காந்தியக் கொள்கைகளிலிருந்து மாறுபடாமல் வாழ்வதே மிகப் பெரிய தவம். அதில் வெற்றி பெற்றவர் குல்ஜாரி லால் நந்தா. இப்படி சில உன்னத மனிதர்களைக் காணும்போதுதான் இன்றைய பல தலைவர்களின் கடைத்தரம் இன்னும் பளிச்சென்று தெரிகிறது.

● க. கந்தையா, நாகர்கோயில்.

? இந்தத் தேர்தலிலும் ம.தி.மு.க.வுக்கு விடிவு இல்லையெனில் வை.கோவின் நிலை என்னவாகும்...?

! மிஞ்சியிருக்கும் கொஞ்சநஞ்ச கௌரவமும் போயே போய்விடும்!

● வி.பி. மகராசி, பாஸ்டின்நகர்.

? நிதி நிறுவன மோசடிகள் இன்னும் தொடர்கின்றனவே...?

! இனிமேலாவது மக்கள் உஷாராயிருந்தால் சரி.

● தேவந்தி துரைராஜ், திருவண்ணாமலை.

? தற்போதைய அரசியலில் திரி

சோவின் முரண்பாடான ஆசை பற்றி...?



• பெரிய பெரிய ஆசை!

சங்கு நிலையில் இருக்கும் தலைவர் யார்...?

! பார்லிமெண்ட் தேர்தலில் எல்லோருமே திரிசங்குதான் என்பதே இன்றைய அபிப்பிராய வாக்கெடுப்பின் முடிவு. தேர்தல் நெருங்க, நிலை மாறலாம்.

● **செ. சரவணன், கர்சுப்பள்ளி.**

? *மற்ற தொழில்களை விட பத்திரிகைத் தொழிலுக்குத் தகுதிக் குறைவாக இருந்தாலே போதும் அப்படித்தானே?*

! தப்பு! அரசியலைத் தவிர மற்ற எல்லா தொழில்களுக்கும் தகுதிகள் வேண்டும் என்பதுதான் இன்று இந்நாட்டில் நிலவும் துர்ப்பாக்கிய நிலை! அதிலும் பத்திரிகைத் தொழிலுக்கு, மற்ற பல தொழில்களை விட தகுதிகள் மிகுதியாக வேண்டும்!

● **எஸ்.எஸ்.டி. ராஜன், சிறுதையூர்.**


? *ஜெயின் கமிஷன் அறிக்கை வெளியான பிறகு வடமாநிலங்களுக்கும் தென் மாநிலங்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள இடைவெளியைக் குறைக்கவே அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்துள்ளதாக பாரதிய ஜனதா தலைவர் வாஜ்பாய் கூறியுள்ளதைப் பற்றி...?*

! அதெல்லாம் ஒரு புடலங்காயும் இல்லை. தமிழ்நாட்டில் ஒதுக்கப்பட்ட ஐந்து சீட்டில் மூன்றோ இரண்டோ கிடைத்தால் அந்த அளவுக்கு நாடாளுமன்றத்தில் மெஜாரிட்டியை நெருங்க மாட்டோமா என்ற ஆசைதான்!

● **மங்கை, பாளையங்கோட்டை.**

? *இல்லறம் சுகமா, அல்லது சுமையா...?*

! இல்லறத்தை ஒரு தர்மமாகத்தான் நம் நாடு போற்றுகிறது. சப்தபதியின் ஏழாவது – இறுதி – அடியை எடுத்து வைக்கும்போது உலக நலனுக்காகத் தம்பதிகள் தங்களை



• மாம்பழ தத்துவம்!



• சாணக்கியம்!

அர்ப்பணித்துக் கொள்கிறார்கள். சுகமான சுமை என்று சொல்வது பொருத்தம்.

● **பொ. முத்துலட்சுமி, வடக்கு நரிப்பையூர்.**

? *சோனியாவின் பிரசாரம் காங்கிரஸுக்குத்தான் வலு சேர்க்கும். தமிழ்நாட்டில் தாங்கள்தான் காங்கிரஸ் என்று மூப்பனார் கூறுகிறாரே...?*

! அதுதான் சாணக்கியம் என்பது. எதிரியையே பக்கபலமாக்கிக் கொள்கிறார் பாருங்



• 'நொண்டி' சாக்கு!



• அஞ்சிலே ரெண்டு மூணு!

கள்!

● **ஏ. ஆர். முத்தமிழன், திருவாரூர் - 51.**

? *ஒரு மனிதன் தன் உயிரை விட உன்னதமானது என்று எதையாவது, எப்போதாவது கருதுவதற்கு வாய்ப்பு உண்டா...?*

! கவரிமான் குறள் தெரியாதா...?!

● **அ. முஸ்தபா, தக்கோலம்.**

? *'எங்களுக்கு மாம்பழம் சின்னம் – எந்த வண்டும் துளைக்க முடியாது...' என்கிறாரே ராம்தாஸ்?*

! மனசாட்சியே துளைக்காதபோது வண்டு துளைத்தால் என்ன, துளைக்காவிட்டால் என்ன...!?

● **ஆர். ஜேஸ்மின் ரமேஷ், மதுரை – 20.**

? *'வருகின்ற தேர்தல்களில் நாம் கோல்மால் செய்தாவது வெற்றி பெறுவோம்' என்று சாத்தூர் ராமச்சந்திரன் பேசியுள்ளது பற்றி...?*

! ஜனநாயக விரோதப் பேச்சு. இம்மாதிரி பேசுவோரை ஓரம் கட்ட தேர்தல் கமிஷன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

● **என். சங்கரதாஸ், ஸ்ரீவில்லிப்புத்தூர்.**

? *'தமிழ்நாட்டில் கால் ஊன்றவே அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்துள்ளோம் என்று அத்வானி கூறியுள்ளாரே...?*

! காலூன்ற வேண்டும் என்பதற்காகப் புதை குழியிலா வைப்பார்கள்?!

● **ஜோதிதாசன், சென்னை – 29.** ❑

? *அமெரிக்காவின் ஒரு டாலர் என்பதற்கு இந்தியாவின் ஒரு ரூபாய் சமம் என்கிற அளவுக்கு நம் மதிப்பு உயர இந்திய மக்கள் என்ன செய்ய வேண்டும்...?*

! உழைப்பை வாழ்க்கை முறையாக்கிக் கொள்ள வேண்டும். அதற்குண்டான வாய்ப்புகளை அரசு பெருக்க வேண்டும்.

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
ஜோதிதாசன்,
3, பாளையம் தெரு,
அமைந்தகரை,
சென்னை - 600 029.

உலகை அணைத்தைப்

"நாங்கள் எல்லாம் எழுத்துலக ஏகலைவர்கள். கல்கிதான் எங்கள் குரு" என்று கி.ரா. போன்ற அன்றைய பல எழுத்தாளர்கள் எழுதியிருந்தார்கள். அது உண்மை. அதில் நான் ஒருவன்.

கல்கியை தியாகபூமியிலிருந்து கள்வனின் காதலியிலிருந்து நான் படித்தவன். பார்த்திபன் கனவில் வருகிற சிவனடியார் எங்கே தன் துணிமணிகளை ஒளித்து வைத்திருந்தார், எந்த அய்யனார் கோயில் மண் குதிரைகளுக்குள் என்று கல்கி எழுதுவார். மாயவரத்திலிருந்து வைத்தீஸ்வரன் கோவில் போகிற வழியில் உள்ள அய்யனார் கோயில்தான் அது என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும்.

சிவகாமியின் சபதத்தைப் படித்தபோது நரசிம்மவர்மரின் காதலியாய்த் துவங்கிய மகோன்னத நாட்டியப் பெண்ணின் கதை முடிவில் திருமணம் ஆகாதவளாய், இவன் பால் அன்பு கொண்ட சிவகாமியாய் நின்ற விதவைக் கோலம், என் கண்களை விட்டு அகலவில்லை; கண்ணீர் வராத நாளில்லை.

பொன்னியின் செல்வனில் எழுதுவார் முடிவில்: "வந்தியத் தேவா! உன் துயரம் நிறைந்த சிந்தனைகளை இப்போது நாங்கள் கலைக்க விரும்பவில்லை. உன்னைப் பிறகு சந்திக்கிறோம்" என்று. நம் கண்கள் கலங்கும்.

திருவழுந்தூர் சிவக்கொழுந்தின் ஊரும் எங்கள் ஊருக்கு அருகே உள்ள ஊர்தான். வீணை பவானியை யார் மறக்க முடியும்?

கல்கி ஒரு பெரிய கற்பனை உலகை எனக்கு சிருஷ்டித்துக் கொடுத்தார். "இன்றைய கனவுகள் - கற்பனைகள் தான் நாளைய நிஜங்கள்" என்கிறார் ஜேம்ஸ் ஆலன்.

மயிலாடுதுறை பள்ளியில் அப்போது பத்தாவது படித்துக் கொண்டிருந்தேன். வெள்ளிக்கிழமை பரீட்சை நான். அன்றுதான் கல்கி வரும். நான் காலை ஏழிலிருந்து ஒன்பது மணி வரை கல்கியைப் படித்து முடிப்பதில் மும்முரம் காட்டுவேனே ஒழிய, பரீட்சைக்குப் பாடம் படிக்கிற நினைப்போ, பயமோ இருக்காது. அவ்வளவு ஈடுபாடு.

அதுதான் எனக்குள்ளே என்னை அறியாமல் இருந்த ஜீவதாகம் போலிருக்கிறது.

சிறுவனாக இருந்தபோதே கதை கேட்பதில் மிகுந்த ஆர்வம். கிராமத்தில், மதிய வேளையில் வேறு ஒன்றும் பொழுது போக்கு இல்லை. அடுத்தடுத்த வீடுகளில் என்னைவிட வயதில் மூத்த சகோதரிகள் இருந்தார்கள். அவர்கள் நிறைய கதை சொல்வார்கள். பிறகு ஒருநாள் "நீ கதை சொல்லு" என்று என்னைக் கேட்கப் போக, இதுவரை நான் கேட்ட பல கதைகளையும் கலந்து ஒரு புது கலவைக் கதையைச் சொன்னது இன்னும் என் நினைவில் இருக்கிறது!

ஒரு சமயம் எட்டாம் வகுப்பு படிக்கும்போது நான் ஒரு கதை எழுதி இருந்தேன். என் அண்ணனிடம் காட்டினேன். "நீ கல்கியை காப்பி அடித்து எழுதி இருக்கிறாய்!" என்று சொல்லிவிட்டார். அது உண்மையல்ல. எனக்கு வருத்தமும் கூட. அதாவது நான் அத்தனை கல்கியின் கதையையும் படித்து மூழ்கி மூழ்கி நான் அதாகவே மாறிவிட்டேன் என்பதுதான் உண்மை என்ற விளக்கத்தைப் பின்னால்தான் தெரிந்து கொண்டேன்.

திரு எஸ்.ஏ.பி. காலமாவதற்கு இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன், அவரது அரசு கேள்வி பதிலை ஒரு வாரம் என்னை எழுது மாறு கேட்டிருந்தார்கள். கேள்விகள் தரப்பட்டன.

நான் எஸ்.ஏ.பி. கேள்வி பதிலை பெரிதும் ரசிப்பவன். எனவே பதில் எழுத முன் வந்த போது எஸ்.ஏ.பி. இதற்கு எப்படி பதிலளிப்பார் என்ற அவர் மன நிலைதான் என்னுள் எழுந்தது; என்னுள் மேலோங்கி இருந்தது. சில கேள்விகளுக்கு எஸ்.ஏ.பி. மறைமுகமாக செல்லமாக பதிலளிப்பது வழக்கம். பின் "ஹி.. ஹி.. ஹி.." என்பார்.

இதன் விளைவாக - பதில்களை நான் எழுதினாலும் - நான் எஸ்.ஏ.பியாக என்னை எண்ணிக் கொண்டு எழுதி, எனது பதில்களை





• உதயமூர்த்தியுடன் இருப்பது அவரது மாமா முத்தையாவும் அண்ணன் வள்ளலாரும்...

சந்தோஷமாக, வெற்றிப் புன்னகையுடன் அனுப்பி வைத்தேன். இரண்டு நாள் கழித்துத் தான் "என்ன முட்டாள்தனம் செய்து விட்டோம்" என்ற ஞானம் பிறந்தது. ஆனாலும் காலம் தாழ்ந்து விட்டது. ஏனெனில் அது உடனடியாக பிரசுரத்திற்குப் போய்விட்டது.

எனக்கோ மிகுந்த கவலை; வருத்தம், என் மீதே. வெளி வந்த பதில் எனது 'பர்சனாலிட்டியைப் பிரதிபலிக்காது. என்னை அப்படி என் வாசகர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்' என்பது எனக்கு நன்றாக தெரியும்.

குமுதம் வெளி வந்தது. அப்போதுதான் எஸ்.ஏ.பி. எவ்வளவு மகா கெட்டிக்காரர் என்பதைப் புரிந்து கொண்டேன். எனது கேள்வி

ஜொலித்தவர்

பதிலை "உதயமூர்த்தியின் நகைச்சுவைப் பதில்கள்" என்று தலைப்பிட்டு என்னை காப்பாற்றினார்!

இனி நாம் நாமாக இருக்க வேண்டும்; என்னை நானே கண்டித்துக் கொண்டேன். வேடிக்கையாகக் கூட பிறரை இமிடேட் செய்யக் கூடாது என்றும் சொல்லிக் கொண்டேன்.

நான் மாயவரம் முனிசிபல் பள்ளியில் படித்தவன். கல்கிக்கு மாயவரம் பகுதி மீது, தஞ்சை மீது அபரிமிதமான காதல்.

ஒரு சமயம் மாயவரம் முனிசிபல் உயர்நிலைப்பள்ளியில் மிகுந்த அருமையாக நிர்வாகம் செய்து 98% சதம் மாணவர்களை தேறச் செய்த தலைமையாசிரியர் என்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்களுக்கு நிர்வாகம் இடைஞ்சல் கொடுத்தது. கல்கி எழுதினார் பத்திரிக்கையில். மாயவரம் முனிசிபல் கமிஷனர் சாக்கடை நிர்வாகம் செய்கிறார் என்று எழுதி வெளுத்துக் கட்டினார். தஞ்சையில் ஓர் இரவு நாடகம் போட்ட சி.என். அண்ணாதுரையை தமிழ்நாட்டு பெர்னார்ட் ஷா என்று எழுதினார்.

கல்கி பிறரைப் பாராட்டுவதில் மன்னர். தஞ்சையிலுள்ள நாதஸ்வர வித்வான்கள் பலருக்கும் இவரால் பெருமை வந்தது. கலையும் இசையும் இவர் எழுத்துக்களால் புது மலர்ச்சி பெற்றன.

முதன் முதலாக 1942 வாக்கில் என்று நினைக்கிறேன். கல்கி சத்தியாகிரகப் போரில் இறங்கினார். மாயவரத்தில் சத்தியாக்கிரகம் செய்வதாக இருந்தது. மறு நாள் காலை முனிசிபல் அலுவலகம் முன்னால் சத்தியாகிரகம்; கைதாகப் போகிறார். முதல் நாள் இரவு மாயவரம் பெரிய ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள பெரிய வீட்டில் அவர் பேசுகிற கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். நுழைவுக் கட்டணம் 2½ அணா. நானும் என் பள்ளி ஆசிரியரும் போயிருந்தோம். கல்கி அவர்களைப் பார்த்தேன். சிறிய மெலிந்த உருவம். கீச்சுக் குரல் எனினும் கம்பீரமான தோற்றம்.

குமுதத்திலே ஆரம்ப காலத்தில் கல்கியைப் பற்றி ஒரு கட்டுரைப் போட்டி வைத்திருந்தார்கள். அதில் முதல் பரிசை இரண்டு பேருக்குக் கொடுத்தார்கள். அதில் நான் ஒருவன்; கல்கியைப் பற்றி எழுதி முதல் பரிசு பெற்றவன். அப்போது நான் அதிகம் துமிலன் அவர்கள் ஆசிரியராயிருந்த தினமணி கதிரில் நிறைய கதைகள், கட்டுரைகள் எழுதி வந்தாலும் கூட இதுதான் எனது முதல் பரிசு, இலக்கிய உலகில். நான் அதைப் பெரிதும் மதித்தேன். குமுதத்திலிருந்து பரிசுப் பணத்தைத் அனுப்பி இருந்தார்கள். நான் பணத்தைத் திருப்பி அனுப்பி விட்டு எழுதினேன். "ஐயா! நன்றி பரிசுக்கு! நீங்கள் கொடுக்கும் பணம் என் அன்றாட வாழ்வின் செலவுகளில் கலந்து காலப் போக்கில் காணாமல் போய்விடும். எனவே இதை ஒரு ஞாபகார்த்தமாக ஒரு மெடல் போலவோ, எதுவாகவோ அனுப்பினீர்களானால் காலத்திற்கும் அது என் நினைவிலிருக்கும். உதவும் என்று எழுதினேன்.

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

''தலைவர் பழக்க தோஷத்தால ரொம்பத் தான் தடுமாறிப் போயிடறார்...''

''எதனால் அப்படிச் சொல்றே?''

''பின்னே பாரேன்... நேத்து மீட்டிங்கிலே 'நிலையான ஊழலையும் திறமையான லஞ்சத்தையும் எங்களால் மட்டுமே தர முடியும்'னு உளறிட்டாரே!''

— இரா.சம்பத் குமார்



ஒரு பெரிய நிறுவனத்தில் அளிக்கப்பட்ட ஒரு சிறிய பரிசுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஏதாவது செய்வார்கள் என்று நான் எதிர் பார்க்கவில்லை. எஸ்.ஏ.பி. அவர்கள் ஒரு பதினைந்து நாளில் பவுனால் ஆன, கழுத்தில் போட்டுக் கொள்ளக் கூடிய ஒரு மெடலை கல்கி கட்டுரைப் போட்டி முதல் பரிசு என்று பொறித்து எனக்கு அனுப்பி இருந்தார்.

எனக்கு ஏற்பட்டது பெருமகிழ்ச்சி.

என் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள நான் எனது நண்பர் கல்கி ராஜேந்திரன் அவர்களைக் கூப்பிட்டேன். அவர் வீட்டில் இல்லை. அம்மா - அவரது தாயார் எடுத்தார்கள். கல்கி அவர்களின் மனைவி பேசுகிறார் என்று கேட்டதும் எனக்குப் பெருமகிழ்ச்சி ஏற்பட்டது. நான் எனக்கு பரிசு கிடைத்த விஷயத்தைச் சொன்னேன். அவர்கள் சொன்னார்கள்:

"நான் வயிற்றில் என் மகனை உண்டாகி இருந்தேன். எனவே 'இப்போது சத்தியாகிரகம் செய்து ஜெயிலுக்குப் போக வேண்டாம்' என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். மறுத்துட்டார்.

"பின் ராஜாஜியிடம் சொல்லி அவரைச் சொல்லச் சொன்னேன். அவரும் சொல்லிப் பார்த்தார். அவர் கேட்கவில்லை. ஜெயிலுக்குப் போக தீர்மானித்து விட்டார்.

"அப்போதுதான் எனக்குப் புரிந்தது. இவர் எனக்காக மட்டும் பிறக்கவில்லை. இவர் நாட்டுக்காகப் பிறந்திருக்கிறார் என்று!" கேட்ட எனக்கு மயிர் சிலிர்த்தது.

அவர் நாட்டுக்காகப் பிறந்தவர்.

''மாந்தருக்குள் ஒரு தெய்வத்தைக் காட்டியவர். மனிதர் குல மாணிக்கத்தை எடுத்து வெளியில் வைத்தவர். மூன்று மாதக் கடுங்காவலை இலக்கியமாக்கியவர்.

தம் எழுத்தால் சுதந்தரத்திற்கு முன்னும் பின்னும் ஒரு தலைமுறையைத் தம்வசமாக்கியவர்.

அப்போது 1950-ம் ஆண்டு கால கட்டம். நான் குடந்தை அரசினர் கல்லூரியில் வேதியல் துறையில் சோதனைக்கூட உதவி ஆசிரியராக பணியாற்றிக் கொண்டிருந்தேன்.

நன்றாக நினைவிருக்கிறது இன்றும். திடீரென்று ஒரு நாள் புதன்கிழமை என்று நினைக்கிறேன். மற்ற ஆசிரியர்களுடனும் எங்கள் துறைத் தலைவருடனும் பேசிக் கொண்டிருந்த போது கல்கி அவர்களின் எழுத்துக்களைப் பற்றிப் பேச்சு வந்தது. நான் கூறினேன்.

"கல்கி அவர்கள் போய்விட்டால் அவர் போல எழுத இனியார் இருக்கிறார்கள்?" என்றேன். இதையேதான் சுமார் மூன்று மணிநேரம் பேசிக் கொண்டிருந்தோம்.

என்னமோ தெரியவில்லை. வியாழக்கிழமையும் இதே விஷயம்தான் பேசினோம். வெள்ளிக் கிழமையும் கல்கி போய் விட்டால் என்றுதான் நான் பேசிக் கொண்டிருந்தேன். வெள்ளிக் கிழமை காலை வெளி வந்த கல்கி இதழில் கல்கிக்கு உடல் நிலை சரியில்லை என்றும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்றும் எழுதி இருந்தார்கள். எனக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. அடுத்த சனி, ஞாயிறு லீவு நாட்கள் போக திங்கள் காலை பத்திரிகையில் கல்கி அமரரானார் என்ற செய்தி வந்தது.

நான் சொல்லற்று, பேச்சிழந்து நின்றேன்.

இன்றும் நான் யோசிக்கிறேன். ஏன் கல்கி அவர்கள் இறக்கும் ஒரு வாரம் முன்பாக அவர் நினைவாக "அவர் போய் விட்டால்" என்று புலம்பிக் கொண்டிருந்தேன், என்று. என்ன அந்த உள்ளுணர்வு? என்ன அந்தத் தொடர்பு? பேசிப் பழகி, கூட ஒருவருடன் இருந்து வாழ்தல் வேண்டாம்; தேவையில்லை. அவரைப் பற்றிய உணர்வு - நினைவு அந்த நினைவின் ஆராதனை அவர் உடல் நிலையை எனக்குப் புலப்படுத்தியதா?

எனது எண்ணங்கள் மட்டும் என்னைச் செதுக்கி உருவாக்கவில்லை. நான் ஆராதித்த உயர் மனிதர்களின் உணர்வுகள் எல்லாம் எனக்கு வழிகாட்டி, என்னை உருவாக்கி வந்திருக்கின்றன என்றுதான் சொல்ல வேண்டும்.

(தொடரும்)



டைனிங் டேபிள்

சாப்பிடுவதும் தியானம் மாதிரிதான்!

சாயங்காலமானா தெருவோரக் கடைகள் களை கட்டிடுது. இளசுக தான் யமாகா, ஹீரோஹோண்டாவிலேன்னு பறந்து வந்து தெருக்கடைகள்ல சங்கமமாகறாங்கன்னா பெரியவங்களும் அங்கதான் படையெடுக்கறாங்க. இது எல்லா நகரங்களிலும் இப்போ ஃபேஷனாயிட்டது.

ரோட்டோரக் கடையில எப்பவாவது சாப்பிடுங்க. வேணான்னு சொல்லல. அதுக்காக தினம் தினம் சாயந்திரச் சாப்பாடு இங்கதான்னு மாமூலாக்கிடாதீங்க. டீன் ஏஜுங்க 'ஐ டோண்ட் கேர்'ன்னு சொல்லும். நீங்க அப்படிச் சொன்னா உங்க ஹெல்த்துக்கு ஆபத்தாயிடும்.

ரோட்டோரக் கடைகள்ல பேல்பூரி சாப்பிட ஆசையாத்தான் இருக்கும். ஆனா, நகருக்குள்ள ஓடற மாநகரப் பேருந்துகளும் ஆட்டோக்களும் டூவீலர்களும் விடற புகையெல்லாம் எங்கயும் போயிடாது. நீங்க சாப்பிடற பேல்பூரியிலும் மத்த பண்டங்களிலும்தான் படியறதுங்கிறதை மறந்திடாதீங்க. போதாக்குறைக்கு இந்த வருஷம் விழுந்த மழையில தார்ரோட்டையே காணோம். டர்ரு புர்ருன்னு போற வண்டிகளும் தூசியக் கிளப்பி விட்டுட்டுப் போகுது. அப்புறம் நோய் வராதா? தலைவச்சும் படுக்கக் கூடாது. ரோட்டோரக் கடைகள் இருக்கற பக்கத்துல.

அமெரிக்கா மாதிரி வெளி நாடுகளில் எல்லாம் தெருவோர கடைகளில்லையான்னு எங்கிட்ட சண்டை போட வராதீங்க. அங்க எக்கச்சக்கமான கார்கள் போனாக்கூட புகையே வராதுன்னு பிரேமி சொல்லியிருக்கா. லேசா புகை வந்ததுன்னு வச்சுக்கங்க, லைசென்ஸையே ரத்து செஞ்சிடுவாங்களாம். நம்மூரில அப்படியா இருக்கு? அங்கித்த கிளைமேட்டே சுற்றுப்புறம் அசுத்தமாகாம இருக்க உதவியா இருக்கு. மூணு மாசம் பனியா விழுந்து தூசி தும்பையெல்லாம் அள்ளிக்கிட்டுப் போயிடுது. அதே மாதிரி வருஷமெல்லாம் மும்மாரி பொழியுது. ஆனா, இங்க, சாக்கடைத் தண்ணீரெல்லாம் தான் பொங்கி ரோட்டோரத்தில நதிமாதிரி ஓடுது. அதுல கொசுக்கள் ஏகமாக் குடியிருக்குது. அப்புறம் நோய்க்குக் கேட்பானேன்!

தியானம் பண்றதுக்குத்தான் அமைதியான சூழல் வேணும்கிறது இல்லை. அட்மாஸ்பியர் நல்லா இருந்தாத்தான் பீஸ்புல்லா சாப்பிடவும் முடியும். அதனால எப்பவுமே சுத்தமான இடத்தில சுத்தமான சாப்பாட்டைத்தான் வாங்கிச் சாப்பிடணும். அப்பத்தான் உடம்புக்கு வராது.

ஹோட்டல்ன்னா டபுள் மடங்கு செலவாகுதேன்னு கணக்குப் போடாதீங்க. டாக்டருக்குக் கொடுக்க வேண்டியதையும் கணக்குப் போடுங்க. ஆயில், டால்டா அதிகமா கலப்பாங்க தெருக்கடைக்காரங்க. இல்லேன்னா ருசி வராது. ருசி இருந்தாத்தானே நாம நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டு போய்ச் சாப்பிடுவோம்! எண்ணெய் ஐயிட்டங்கள் காஸ் பிராப்ளத்தைத்தான் உண்டு பண்ணும். நல்ல உணவை நல்ல சுத்தமான இடத்தில உக்காந்து அமைதியா ரசிச்சுச் சாப்பிடுங்க. அதுதான் தேவாமிர்தம். ஆமாங்க, உடம்பைப் படுத்தாத எதுவுமே தேவாமிர்தம்தான்.

— கமி



டைப்ரைட்டரை சீராகப் பெற்றவர்!

மாநாட்டுப் பொறுப்பாளர் வள்ளியப்பாவின் முகத்தில் கலக்கம் அப்பியிருந்தது. நிகழ்ச்சியில் வெளியிட வேண்டிய நூல் இன்னும் கைக்கு வரவில்லை. தலைமை வகிப்பவர், வெளியிட வேண்டியவர், முதல் பிரதி பெறுபவர், சிறப்புச் சொற்பொழிவாளர் எல்லோரும் தயார். இதோ மேடையேறிவிட்டார்கள். இதய நோயாளியான வள்ளியப்பாவின் தவிப்பு கூடிக் கொண்டே போனது.

பத்து ஃபாரங்கள் கொண்ட மலரின் கடைசி இரண்டு பாரங்கள் இன்னும் அச்சாகவில்லை. இரவில் மிஷின் கோளாறு. காலையில் மின்சாரம் இல்லை. அட்டை கூட ரெடி.

"பயமில்லை, நிகழ்ச்சியைக் கொஞ்சம் நீட்டிக் கொள்ளுங்கள். ஒரு மணி நேரத்திற்குள் இரண்டு பிரதிகளுடன் வந்து விடுகிறேன்" என்று காரை எடுத்துக் கொண்டு பறந்தார் வள்ளியாப்பாவின் வலதுகை என்று புகழப்படும் அந்த நண்பர்.

தவிப்புடன் நிகழ்ச்சிகளைத் தொடங்கினார் குழந்தைக் கவிஞர். முக்கால் மணிக்குள், அழகான சாட்டின் ரிப்பன் சுற்றப்பட்ட இரண்டு பிரதிகளுடன் சொன்னபடி வந்துவிட்டார் நண்பர். மலரை வெளியிடும் நேரம். "புத்தகம் ஈரம் காயவில்லை. பிரித்தால் முதுகு தூக்கிக் கொண்டு விடும்" என்ற அன்பு எச்சரிக்கை நண்பரிடம் இருந்து வரவே, பிரித்துப் பார்க்காமலேயே மலர் வெளியீடு இனிது முடிந்தது.

"மின்சாரம் வந்துவிட்டது. இன்னும் ஒரு மணி நேரத்தில் நூறு பிரதிகள் அச்சாகி, பைண்டாகி வந்துவிடும்" என்று அச்சகத்தில் இருந்து தகவல், அவை வந்ததும் இரண்டு பிரதிகளை எடுத்துக் கொண்டு ஏற்கெனவே வெளியிட்ட இரண்டு பிரதிகளையும் திரும்ப வாங்கி வந்தார் நண்பர். மகிழ்ச்சியால் திகைத்துப் போயிருந்த வள்ளியப்பாவிடம், "வெளியிட்ட இரண்டிலும் கடைசி இரண்டு ஃபாரங்கள் இல்லை. அதான்" என்று சிரித்தார் நண்பர்.

வள்ளியப்பாவின் தவிப்பைப் போக்க இப்படித் திறமையாக நடவடிக்கை எடுத்த பெருமைக்கு உரியவர்தாம் அண்மையில் காலமான 'தம்பி' என்று நண்பர்களால் செல்லமாக அழைக்கப்படும் தம்பி சீனிவாசன். (அன்பு அக்காவின் பாசம் தன் பெயருடன் இணைந்தே இருக்க வேண்டும் என்பதற்காகச் சேர்க்கப்பட்டதே "தம்பி") இப்படி வெளியிடப்பட்ட நூல் குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் வெள்ளி விழா வெளியீடான 'குழந்தை இலக்கியம் ஒரு மதிப்பீடு'. தலைமை தாங்கியவர் தலைமை நீதிபதி பி.எஸ். கைலாசம் அவர்கள். முதல் பிரதியைப் பெற்றவர் கொடை வள்ளல் ஏவி. மெய்யப்ப செட்டியார் அவர்கள். நாள் 1976 , ஏப்ரல் 18.

மற்ற எவருக்கும் செய்யாத சிறப்பை வள்ளியப்பா தம்பிக்குச் செய்தார். தம்பியின் மேடை நாடகமான "தங்கக் குழந்தை"யை அவர் தமது சொந்தப் பதிப்பகமான குழந்தைப் புத்தக நிலையத்திலேயே பதிப்பித்துப் பெருமை சேர்த்தார். இது மத்திய அரசினரின் பரிசையும் பெற்றது.

குழந்தை எழுத்தாளராக மட்டுமின்றி பல திறன் படைத்த இலக்கிய ஆர்வலராக விளங்கியவர் தம்பி சீனிவாசன். சாஹித்ய அகாடமியில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

எளிமையாக வாழ்ந்த தம்பி, தம் திருமணத்தின்போது தம் தாய் மாமா (மாமனார்)விடம் பெற்ற சீர் என்ன தெரியுமா? ஒரு தமிழ் தட்டச்சுப் பொறி, ஒரு சைக்கிள் மட்டுமே! இந்த இரண்டுமே அவருக்கு மட்டுமல்ல, அவர் பொறுப்பேற்றிருந்த தமிழ் இலக்கிய அமைப்புகளின் வளர்ச்சிக்கும் கடைசிவரை பெரிதும் உதவின.

— ரேவதி

தமிழகத்தின்
தலைசிறந்த கண்காட்சி

கேளிக்கைகள், வேடிக்கைகள்.
மனதுக்கும், அறிவுக்கும் கூட
அருமையான விருந்துகள்!

சுதந்திரப் பொன்விழா சுற்றுலாப் பொருட்காட்சி


தீவுத் திடல், சென்னை-9


சிறந்த பொழுதுபோக்கு மகிழ்ச்சி மட்டுமல்ல... அனைவருக்கும் சீரிய அறிவியல் அறிவூட்டும் சுதந்திரப் பொன்விழா சுற்றுலாப் பொருட்காட்சி

இளைய தலைமுறையின் அறிவியல் திறனை வெளிப்படுத்தும் கூடம், ராட்சத ராட்டினங்கள், சிறுவர் ரயில், கலை நிகழ்ச்சிகள், மேலும் பல வழக்கத்திற்கு அதிகமான பொழுதுபோக்கு அம்சங்கள்...

இப்பொருட்காட்சி தரும் மகிழ்ச்சியில் திளைத்திட...

குடும்பத்துடன் குதூகலிக்க இன்றே வாருங்கள்





தினமும் பிற்பகல் 3 மணி முதல்-
ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை
நாட்களில் காலை 11 மணி முதல்.

ஒவ்வொரு மணி நேரத்திற்கும்
ஒரு பரிசு பெறும் வாய்ப்பு!

இன்றே
குடும்பத்துடன்
காண வாரீர்!

பொருட்காட்சி இரவு 10 மணிக்கு
முடிந்தபிறகும் பேருந்து வசதி!

"வேலைவாய்ப்பை
அதிகப்படுத்துவதிலும் சுற்றுப்புறச்
சூழலைப் பாதுகாப்பதிலும் சுற்றுலா
இருபத்தோராம் நூற்றாண்டின்
முன்னோடி"

தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
தீவுத்திடல், சென்னை - 600 009

தேர்தலுக்குப் பிறகு, 'குறைந்தபட்ச பொதுத் திட்டம்' தயாரிப்பதற்குப் பதில், இந்த முறை ஐக்கிய முன்னணி அதற்கும் ஒரு படி மேலே போய், பதின்மூன்று கட்சிகளின் தேர்தல் அறிக்கையையே தயார் செய்து அறிவிக்க முடிவு எடுத்திருக்கிறது. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் முன் நடக்கிற கட்சிப் பிரதிநிதிகளின் கூட்டம் எப்படி இருக்கும் என்று நம் கற்பனையில் பார்த்தோம்.

குஜ்ரால் : முதலில் நம் அயல்நாட்டுக் கொள்கை பற்றிச் சொல்லி விடுவோம்...

இந்திரஜித் குப்தா : நோ, நோ. உன் நாட்டுக் கொள்கை என்ன என்று முதலில் தெளிவாக்கி



விட்டுத்தான் அயல்நாட்டுக் கொள்கை!

குஜ்ரால் : ஓ.கே. அதற்கு முன்னால் பொருளாதாரக் கொள்கை என்ன என்பதை சிதம்பரம் விளக்கிவிடட்டும்.

சிதம்பரம் : தாராளமயமாக்கலைத் தாராளமாகச் செய்துவிட்டால், தாராளமயமாக்கல் தாராளமாகப் பொருளாதாரத் துறையில் பரவி, தாராளமாக்கலுக்குத் தாராளமாக உதவும்.

சுர்ஜித் : (தலைப்பாகையைப் பிய்த்துக் கொண்டு) எனக்கு ஒரு இழவும் புரியவில்லை. மக்களுக்கும் நிச்சயம் புரியாது! இதைக் கடைசியில் வைத்துக் கொள்ளலாம். பாஸ்வான், நீங்கள் சொல்லுங்கள்!

பாஸ்வான் : இனிமேல் ஒவ்வொரு ரயில் விபத்தின் போதும், இறந்தவர்களின் பிராணன் போகிறதுக்கு முன்னால் ஒரு லட்ச ரூபாயும், பிராணன் போன பிறகு இரண்டு லட்ச ரூபாயும் நஷ்ட ஈடு கொடுப்போம். விபத்து இல்லாமல் ரயில் ஓட்டும் இஞ்சின் டிரைவருக்கு 'இன்சென்டிவ்' தனியே.

சிதம்பரம் : அப்படியானால் பிளாட்பாரம் டிக்கட்டை பதினைந்து ரூபாய்க்கிவிட வேண்டியதுதான்! நடக்கிற காரியமாகப் பேசுங்கள். தைரியமாகப் பயணம் செய்யும் பிரயாணிகளுக்கு என்ன 'இன்சென்டிவ்' என்று எதிர்க் கட்சிகள் கேட்பார்கள்!

குஜ்ரால் : நம்முடைய அயல்நாட்டுக் கொள்கை என்னவென்றால்...

தேவேகௌடா : அதுதான் கடைசியில் என்று சொல்லி விட்டோமே! அப்புறம் ஏன் குறுக்கிடுகிறீர்கள்? மிஸ்டர் இந்திரஜித் குப்தா, ஆர்ட்டிகிள் 356 பற்றி...

இந்திரஜித் : ஆர்ட்டிகிள் 356 இருக்கிற வரை அதை உபயோகித்துத்தான் தீர வேண்டும். மாநில அரசை, நாம் கலைக்க இந்த வழியை விட்டால் வேறு வழி கிடையாது. அப்போதுதான் ஜனாதிபதி குறுக்கிட்டு, மறுபரிசீலனை செய்யக் கோருவார். அவருக்கும் மக்களிடமும், கட்சித் தலைவர்களிடமும் அவ்வப்போது கொஞ்சம் பாராட்டுக் கிடைக்க வேண்டாமா? இல்லாவிட்டால் அவருக்கே அந்தப் பதவி அலுத்து விடும்!

குஜ்ரால் : கருணாநிதி! நீங்கள் ஏதும் சொல்லவே இல்லையே?

கருணாநிதி : பெரியார், அம்பேத்கர், அண்ணல் காந்தி, அறிஞர் அண்ணா இவர்கள் வலியுறுத்திய 'மத்தியில் கூட்டாட்சி - மாநிலத்தில் சுயாட்சி'யை அறிக்கையில் சேர்க்க வேண்டுகிறேன். அதற்கு முன்னால், மாறன் என்ன சொல்ல விரும்புகிறார் என்று கேட்டுக் கொண்டு விடுங்கள்!

மாறன் : நானும் ஆரம்பத்தில் இருந்து பார்க்கிறேன். என்னை யாரும் ஒரு வார்த்தையும் கேட்கவில்லை! போகட்டும், நம் தொழில் கொள்கை என்ன என்று சொல்ல வேண்டாமா? மாருதியின் சுசுகிக்கு ஓர் எச்சரிக்கை நிச்சயம் அதில் இருக்க வேண்டும். இனி ஹூண்டாயும், ஃபோர்டும் நம் தெருக்களில் எல்லாம் ஓடும் என்பதை சுசுகி அறிய வேண்டும். பாலும் தேனும் ஓடினால் எல்லாரும் வழுக்கித்தான் விழுவார்கள்.



முலாயம்சிங் : எல்லாரும் இப்படி இங்கிலீஷிலேயே பேசிக் கொண்டிருந்தால் நான் கூட்டத்தை விட்டுப் போக வேண்டியிருக்கும். மரியாதை யாக இந்தியில் பேசுவதாக இருந்தால் நான் இங்கே இருக் கிறேன். இல்லை என்றால் எழுந்து போய் விடுகிறேன்...

குஜ்ரால் : (ஓடிவந்து அவர் கையைப் பிடித்துக் கொண்டு) அப்படி எல்லாம் செய்து விடா தீர்கள் முலாயம்ஜி!

கருணாநிதி : ஆங்... மொழிக் கொள்கை பற்றி நாலு வரி வேண்டாமா? இந்தியை எங்கள் தொண்டை வழியே திணிக்கக் கூடாது. நாங்களாக முன் வந்து, 'திணியுங்கள்!' என்று சொல்லும் வரை தயவு செய்து திணிக்காதீர் கள் என்று கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சிதம்பரம் : நான் பொருளாதாரக் கொள்கை என்ன என்று இன்னும் சொல்லவில்லை...

கர்ஜித் : (அவர் வாயைப் பொத்தி) போதும். இதற்கு மேல் எதுவும் வேண்டாம். உங்கள் பொருளாதாரக் கொள்கையை எல் லாம் பட்ஜெட் உரையில் சொல்லி விடுங்க. இப்போதே சொல்லி எல்லாரையும் பயமுறுத்த வேண்டாம்.

சிதம்பரம் : அதற்கு நான் நிறைய திரு வள்ளுவர், கம்பர், கவிஞர் இக்பால், தாகூர் இவர்கள் மேற்கோள்களைச் சேகரித்து வைத் திருக்கிறேன். பயப்படாதீர்கள்!

ஜோதிபாசு : ரொபீந்திர ஷொங்கீத் எல்லாக் கல்வி நிலையங்களிலும் கேட்க வேண் டும். பொம்மை அதற்கு ஆவன செய்ய வேண் டும்!

கருணாநிதி : ரொபீந்திர ஷொங்கீத்? அப்படி என்றால் என்ன மாறன்?

மாறன் : ஒன்றுமில்லை. ரவீந்திர சங்கீதம். அவ்வளவுதான்.

சந்திரபாபு : நான் ஒருவன் இருப்பதை நீங்கள் எல்லாரும் மறந்து விட்ட மாதிரி இருக் கிறது. மாநில உரிமைகள் பற்றி அறிக்கையில் கட்டாயம் இருக்க வேண்டும்!

சிதம்பரம் : அறிக்கையில்தானே? போட்டால் போச்சு! அதற்காக வி.டி.ஐ.எஸ். ஸில் பாதிப் பங்கு மாநிலங்களுக்குத் தர வேண் டும் என்று மட்டும் கேட்டு விடாதீர்கள்!

ஜோதிபாசு : மாநில கவர்னர்களை மாற்று கிற மாதிரி, ரிசர்வ் வங்கி கவர்னரையும் அவ் வப்போது மாற்றும் உரிமை பிரதமருக்கு இருக்க வேண்டும். அப்போதுதான் எது சரியான பொருளாதாரக் கொள்கை என்று புரியாமல் மக்கள் குழம்பிப் போவார்கள்.

கர்ஜித் : கரெக்ட்! ரங்கராஜன் போன வுடன் பிமல் ஜலான் புதுக் கொள்கை கொண்டு வந்தார் இப்போது. அது மாதிரி ஆறு மாதத்துக்கு ஒரு கொள்கை இருந்தால் நல்லது. ஈ.எம்.எஸ் அறிக்கை விடுவதற்குள் இதைச் சேர்த்து விட வேண்டும்.

முலாயம் : ரங்கராஜன், பிமல் ஜலான்! யார் இவர்கள் எல்லாம்? எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

குஜ்ரால் : புரியாவிட்டால் ஒன்றும் மோச மில்லை. முலாயம்ஜி! உங்களுக்கு அக்னி, பிருத்வி பற்றியாவது தெரிந்திருந்தால் போதும்.

முலாயம் : அதெல்லாம் எனக்கு எதற்குத் தெரிய வேண்டும்? எனக்கு வேண்டியது எல் லாம் கல்யாண் சிங்கையும், மாயாவதியையும் எப்படி தோற்கடிக்க வேண்டும் என்றுதான்...

சிதம்பரம் : இன்னும் தேர்தல் அறிக்கை யில் ஒரு வரி கூட எழுதியாகவில்லை. இப் படியே போய்க் கொண்டிருந்தால் எப்படி?

குஜ்ரால் : அடுத்த கூட்டத்தை ஹைதரா பாத்தில் சந்திரபாபு நாயுடு ஏற்பாடு செய்வார். அதில் எப்படியும் முடிவு செய்து விடலாம்.

ஃபாரூக் அப்துல்லா : கரெக்ட். அங்கே கிருஷ்ணா ஓபராய் ஹோட்டலில் சாப்பாடு பிரமாதம்.


தேவேகௌடா : ரைட். லெவில் மீட் அட் ஹைதராபாத்! (கொட்டாவி விடுகிறார்)

குஜ்ரால் : அந்தக் கூட்டத்துக்காவது மூப்பனார் வருவாரா...?

சிதம்பரம் : சோனியாவைக் கேட்டுச் சொல்றேன். ⊙

— சாருகேசி

“வியப்பைத் தரும் வளர்ச்சி!”
— கோபுலு



“சமீபகாலமாக அறிமுகமான கார்ட்டூனிஸ்டுகளில் உங்களை அதிகம் கவர்ந்தவர் யார்? ஏன்?” என்று கோபுலுவிடம் கேட்டோம்.

“மாலியை மானசீக குருவாக ஏற்றுக் கொண்டவன் நான். கார்ட்டூன் கலையை ஓர் அமைப்பின் கீழ் முறைப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கூட அவருக்கு இருந்தது. ராஜு, சில்பி, சிம்மா, சித்ரலேகா போன்ற பலர் இதில் பயன் அடையத் தொடங்கினோம். ஆனால் அவர் வாழ்க்கை சீக்கிரமே முடிந்துவிட்டது. அந்த முயற்சி வெற்றி பெற்றிருந்தால், இன்று புதிதாக பல இளைஞர்கள் கார்ட்டூன் களத்தில் இறங்கியிருக்கக் கூடும்” என்றவர், சில நிமிட சிந்தனைக்குப் பிறகு, கார்ட்டூனிஸ்ட்

● **உங்கள் குடும்பத்தில் வேறு யாருக்காவது கார்ட்டூன் வரையும் திறமை உண்டா?**

“இல்லை. என் அப்பா பிச்சுமணி ரிசர்வ் வங்கியில் வேலை செய்தவர். நாடகத்தில் பெரும் விருப்பம் கொண்டவர். திருவல்லிக்கேணி பைன் ஆர்ட்ஸ் அமைப்பில் பல நாடகங்களில் பெண் வேடமிட்டு நடித்திருக்கிறார். “மைலாப்பூர் மாமி” என்றே கூட அவரைக் குறிப்பிட்டதுண்டு. வங்கியில் அவரை ஹைதராபாத்திற்கு மாற்றி விட்டார்கள். அப்போது நான் குழந்தை. என் படிப்பு கோல்கொண்டாவில் தொடர்ந்தது. சின்ன வயதிலிருந்தே ஆயில் பெயிண்டிங் வரைய எனக்கு ரொம்பப் பிடிக்கும். எனக்கு சுமார் பதினைந்து வயதான போது அப்பாவுக்கு சென்னைக்கு மாற்றலாகிவிட்டது. என் ஓவியங்களில் சில சாம்பிள்களை ஆனந்த விகடனுக்கு அனுப்பி, வரைவதற்கு வாய்ப்புக் கேட்டேன் அப்படித்தான் என் பத்திரிகை உலகப் பிரவேசம் நிகழ்ந்தது.”

● **ஓவியராக இருந்த நீங்கள் கார்ட்டூனிஸ்டாக மாறியது எப்படி?**

“விகடனில் பிரபல கார்ட்டூனிஸ்டாக இருந்த ஸ்ரீதர்தான் என்னை இந்தத் துறைக்குக் கொண்டு வந்தவர். என்னை உருவாக்கியதில் அவருக்கு முக்கிய பங்குண்டு. 1982 டிசம்பரில் நடந்த இசை விழாவுக்கு என்னை அனுப்பி இசைக் கலைஞர்களை கார்ட்டூனாக வரைந்து வரச் சொன்னார். காலை எட்டு மணியிலிருந்து இரவு பதினோரு மணி வரை மியூசிக் அகாடமியே கதியென்று கிடந்தேன். அதை என் பயிற்சிக் களம் என்று கூடச் சொல்லலாம். பிறகு முழுச் சோம்பேறி முருகேஷ், தொண தொண துளசிங்கம் என்றெல்லாம் விகடனில் வெளியான என் கேரக்டர்கள் நல்ல வரவேற்பைப் பெற்றன.”

● **ஹிந்து நாளிதழில் சேர்ந்தது எப்படி?**

“சி.ஏ. படித்துக் கொண்டிருந்த நான் அதை முழுவதுமாகத் தொடரவில்லை. ஐ.டி.பி.ஐ. வங்கியில் பணி புரிந்தேன். அந்த சமயத்தில் இந்துஸ்தான் டைம்ஸ் நடத்திய கார்ட்டூன் போட்டியில் என்.டி.ஆர், ஜெயவர்தனே, எம்.எப் ஹுசேன் ஆகியோரை நான் கார்ட்டூனாக வரைந்ததற்காக மூன்று விருதுகள் கிடைத்தன. இதைக் கண்டதும் இந்து நாளிதழிலிருந்து எனக்கு அழைப்பு வந்தது. அங்கே ஏற்கெனவே சீனியர் கார்ட்டூனிஸ்டாக உன்னி இருந்தார் (இப்போது அவர் இந்தியன் எக்ஸ் பிரஸில்). அவர் பலவித லோக்கல் நியூஸ்களை கார்ட்டூன் ஆக்கியதால், நான் சர்வதேசச் செய்திகளில் என் கார்ட்டூன் திறமையை காட்டத் துவங்கினேன்.

“வங்கியில் இருந்தபோதே இந்து நாளிதழுக்கு ஓரளவு கார்ட்டூன் வரைந்து கொண்டிருந்தேன். என்றாலும் அரசு நிறுவனத்தில் இருந்து கொண்டே அரசுக்கு எதிரான கார்ட்டூன்கள் வரைவதா என்ற சங்கடம். இந்துவிலிருந்து அங்கேயே வேலைக்குச் சேர அழைப்பு வந்ததும் அந்தச் சங்கடம் தீர்ந்தது!”

“இன்று

● **கார்ட்டூனையே முழு நேரத் தொழிலாக ஏற்றுக் கொள்ளும் முடிவை எடுத்தது கஷ்டமாக இருந்ததா?**

“இருந்தது. ஆனால் நிரந்தரமான வங்கி

கேசவ்தான் (ஹிந்து நாளிதழ்) தம்மை அதிகம் கவர்ந்தவர்" என்றார். "அற்புதமான சிந்தனை. வித்தியாசமான கார்ட்டூன்கள். அவரது பரிணாம வளர்ச்சி வியப்பைத் தருகிறது. இது தான் தம் டெக்னிக் என்று தம்மை சுருக்கிக் கொள்ளவில்லை அவர். தவிர ஐந்து கார்ட்டூன் களுக்கு ஒன்று என்கிற விகிதத்தில்தான், பத்திரிகை ஆசிரியரால் தேர்வு செய்யப்படும் என்ற பொதுவான உண்மையை அறிந்திருப்ப தால், அவருக்கு இருக்கக் கூடிய திறமையை என்னால் இன்னமும் புரிந்து கொள்ள முடிகிறது" என்று கிரீடத்தைச் சூட்டினார்.

வேலையை விடுவதில் என் பெற்றோருக்கு நிறையத் தயக்கம். அரசியல் கார்ட்டூன்களி னால் விரோதங்கள் வருமோ என்ற பயத்தை வளரவிடாமல் செய்ய முடிந்தது. 'இந்து' கார்ட் டூனில் நேரடித் தாக்குதல் இருக்காது. அப்படி இல்லாமலும் இருக்க வேண்டும், கருத்தும் மக்களுக்குப் புரிய வேண்டுமென்பதற்காக அதிகம் மெனக்கிட வேண்டியிருக்கும். அது வரை இந்துவில் முதல் பக்க கார்ட்டூன் என்று இடம் பெற்றதேயில்லை. அப்படி ஒரு வாய்ப்பை ஆசிரியர் கஸ்தூரி எனக்களித்தார். நான் இன்று கார்ட்டூன் துறையில் பெயரெடுத் திருந்தால் அதற்கு முக்கிய காரணம் ஸ்ரீதரும், கஸ்தூரியும்தான். அதுவும் கோபுலு என்னை இந்தப் பகுதிக்காகத் தேர்ந்தெடுத்தது எனக்குப் பெரும் கௌரவம். ஸ்ரீமான் சுதர்ஸனம், மிஸ்டர் வேதாந்தம், துப்பறியும் சாம்பு போன்ற கோபுலுவுடைய கைவண்ணங்களைக் கண்டு பிரமித்து அவற்றைக் காப்பி எடுத்துப் பயிற்சி செய்த காலம் உண்டு."

● பத்திரிகை ஆசிரியர்கள் கார்ட் டூன் தேர்வில் மிகவும் கண்டிப்பு காட்டு வார்கள் என்ற பொருள்பட கோபுலு குறிப்பிட்டிருக்கிறாரே?

"அவர் காலத்தில் அது இருந்திருக்கலாம். அதில் தவறுமில்லை. காந்தி, நேரு போன்ற உயர்ந்த தலைவர்களைப் பற்றிக் கிண்டலடிப் பதற்கு பத்திரிகை ஆசிரியரும் ஒருமுறைக்கு இருமுறை யோசிப்பார். ராஜாஜி போன்ற ஒரு வரைக் கார்ட்டூனில் கேலி செய்வது சுலப மல்ல; அவரைப் பற்றிய சகல விஷயங்களை யும் அறிந்து கொண்டுதான் அப்படிச் செய்ய முடியும். இன்றைய அரசியல்வாதிகள் அப்படி அல்ல. இவர்களை யார் எப்படிக் கிண்டலடித் தாலும், அதில் தப்பில்லை என்கிற அளவுக்குத் தானே தரம் இருக்கிறது. அரசியல் தரம் வெகுவாகத் தாழ்ந்து விட்டதே!"

● உங்களுக்கு ஏதாவது வலிமையான சென்டிமென்ட் உண்டா...?

"பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒரு குறிப் பிட்ட பேனாவின் - அதன் 'நிப்'பைக் கூட மாற்றாமல் – கார்ட்டூன் வரைந்து கொண்டிருந் தேன். அது தொலைந்தபோது மனத்துக்குக் கஷ்டமாக இருந்தது. மத நம்பிக்கை உண்டு. மத உணர்வுகள் கேலி செய்யப்படக்கூடாது என்பதிலும் தீவிரமாக இருக்கிறேன். தவிர இந்து மத நம்பிக்கைகளை மட்டுமே கிண்ட லடிப்பவர்கள் மீது எனக்குக் கோபம் உண்டு. பொதுவாகவே கார்ட்டூனிஸ்டுகள் தாங்க ளாகவே ஓர் ஒழுக்க வட்டத்தைப் போட்டுக் கொண்டு அதை மீறாதிருப்பது நல்லது." என்கிறார் கேசவ்.

சந்திப்பு : **ஜி.எஸ்.எஸ்.**

"அரசியலின் தரம் தாழ்ந்து விட்டதே!"

— கேசவ்



கலைமகள் சபா உறுப்பினர்களுக்குக் கிடைத்தது ஒரு பேரிடி. அதுவும் பொங்கல் பொங்கின அன்று. 'இதன் நிறுவனர் 502 கோடி ரூபாய்ச் சொத்துக்களுடன் தலைமறைவாகி விட்டார்... அவர் மீது மோசடி வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது... டெல்லிக்கு ஓட்டம்...' என்றெல்லாம் பற்பல செய்திகள்.

இதன் பின்னணியில் சபாவின் தலைமையிடமான குமாரபாளையமே சுதி கலங்கிப் போனது. அலுவலர்கள் ஒரு பக்கம் 'சன் டீ.வி மறுப்பு வாசிக்கப் போகிறது. நாங்கள் ஒளிபரப்பும் ஹார்ட் டீ.வி.யில் விவரம் சொல்லப்படும். பல பத்திரிகைகளில் மறுப்பு வெளியிடப்பட்டுள்ளது...' என்று என்னதான் தேறுதல் கூறினாலும் திரண்டு நின்ற உறுப்பினர்கள் சமாதானமடைவதாய்க் காணோம்.

எந்தவொரு சீட்டு நிறுவனத்திலும் தவணை கட்டியதும் மெம்பராகி விடலாம். ஆனால் கலைமகள் சபாவில் மெம்பராக மூன்று வருடம் தொடர்ந்து மாதா மாதம் 250 ரூபாய் செலுத்த வேண்டும். பிறகுதான் பங்கு பத்திரம் கிடைக்கும். அதை வைத்துக் கொண்டு 2006-ல் கிடைக்கும் சொத்தில் பங்கோடு, இடையிடையே திருமண நிதி, பள்ளி உதவித் தொகை, மரண ஃபண்ட் என ஏரான ஸ்கீம் உள்ளதாகவும், செயல்பட்டு வருவதாகவும்... சொத்து மதிப்பு ஏற ஏற சேரும் புது உறுப்பினர்களுக்கு மாதத் தவணைத் தொகை உயர்த்தப்படும் என்றும் ஏகப்பட்ட விளம்பரங்கள்.

சபா ஆரம்பிக்கப்பட்ட இந்த 12 வருடங்களில் சேர்ந்த சொத்துக்கள் 13,000 ஏக்கர் நிலத்துடன், ஹார்ட் டீ.வி, சினிமா தியேட்டர், பல மாடிக் கட்டடங்கள் என ஏராளமாய் அடுக்குகின்றனர். காலனிகள், மினரல் வாட்டர், கொசு வர்த்திச் சுருள் தயாரிப்பு என இதன் திட்டங்கள் மேலும் நீளுகின்றன.

உண்மை நிலைதான் என்ன?

இதன் நிறுவனரும் ஜெனரல் மானேஜர் என்று தம்மைச் சொல்லிக் கொள்பவருமான ஜானை சேலம் அலுவலகத்தில், அவர் தலைமறைவானதாகச் சொல்லப்பட்டதற்கு அடுத்த நாள் சந்தித்தோம்! ஆக்ரோஷத்தோடு வந்த உறுப்பினர்களுக்குப் பதில் சொல்லியே ஒரு வழி ஆகிவிட்டிருந்த அவர், பத்திரிகைகளின் மீதான தமது கோபம் மாறாமலே நம்மிடம் பேசினார்.

“சபா ஒரு கூட்டுடைமை.... இந்த ஜான் மட்டுமில்லே, வேற எந்தத் தனிமனிதரும் இந்தச் சொத்துக்களை எடுத்துக் கொண்டு ஓடி விட முடியாது... பொதுவுடைமை, கலந்த கூட்டுத்தத்துவம் இது. இங்கே எல்லோருமே 'ஜாயிண்ட் ஓனர்ஸ்'. இது கூட்டுக்குடும்பம் மாதிரி.



* ஜான்


இதைக் கலைக்கிற நோக்குல செயல்படற தனிமனிதரா இருந்தாலும், பத்திரிகைகளா இருந்தாலும் வழக்குப் போடத்தான்



* பானு

கலைமகள் சபா: உண்மை நிலை என்ன?

— நேரடி ரிப்போர்ட்



• கவலையுடன் விவாதித்துக் கொண்டிருந்த கலைமகள் சபா உறுப்பினர்கள்...

போறோம்... அதுக்குக் கூட 'வழக்கு வசூல்' என்று தனியாக உறுப்பினருக்குப் பத்து ரூபாய் வீதம் வசூலிக்கத்தான் போறோம்... இது நேர்மையும் கண்ணியமும் மிக்க சபா...! இந்த உண்மை விரைவில் வெளியில் தெரியத்தான் போகுது...!'' என்றார்.

இவர் மீது புகார் கொடுத்த ஆடிட்டர் பாலு என்பவரைச் சந்தித்த போது அவர் தமது வக்கீலிடம் நம்மை கூட்டிப் போய்... ஏகப்பட்ட சட்ட நுணுக்கங்களைக் கையில் வைத்துக் கொண்டு பேசினார். இந்த 6.5 லட்சம் மெம்பர்களின் பதற்றத்திற்குத் தான்தான் காரணம் என்பதைவிட அவர்கள் அனைவரும் பெரும் ஏமாற்றத்திற்குள்ளாகப் போகிறார்கள் என்பதை நம்மிடம் அடித்துப் பேசினார்.


"நான் மெம்பர் இல்லை... இந்த சபா பத்திப் பேச தகுதியில்லேன்னு சொல்றாங்க. அது உண்மையில்லை. என் மகன் மைனர். அவன் மெம்பரா இருக்கும்போது அவனுக்குப் பதிலா நான்தானே பேசியாகணும்... எனக்கு இதன் மீது தனித்துவேஷமெல்லாம் கிடையாது... இந்த சபா பதிவு செய்யப்பட்டதிலிருந்து, நேற்று வரையிலான செயலாக்கம், சொத்துச் சேர்த்தது வரை ஏகப்பட்ட தவறுகள் உள்ளன.

"அதைக் கண்டுபிடிக்கச் சொன்னேன். சபாக்காரர்கள் ஏத்துக்கல. நா கொடுத்த மனுக்களும் முதல்ல தள்ளுபடியாச்சு. கண்டுக்காம இருந்தாங்க. இதுல போய்க் குவியற ஜனங்களுக்கு விழிப்புணர்ச்சி வரணும்... இதுதான் என் நோக்கம். தெரியாமல்தான் கேட்கிறேன். ஓரிரு பிள்ளைகள் உள்ள குடும்பத்திலேயே சொத்துப் பிரிச்சுக் கொடுக்கறதுல ஏகப்பட்ட சிக்கல். குடும்பமே கோர்ட், கேஸ்னு அலையுது. இந்த நிலைமையில ஆறரை லட்சம் பேருக்கு மேல் உள்ள உறுப்பினர்கள் 'கி.பி. 2006'-ல் பிரித்துக் கொள்வதாவது? ஒரு மடங்குக்கு மூன்று மாதத்தில் மூன்று மடங்கு கொடுத்தாலே அது சட்டப்படி குற்றம். ஆனா இவங்க மூன்று வருஷங்களுக்கு மாதம் 250 ரூபாய் வாங்கி இருபது வருடத்தில் 16,00,000 கொடுப்பது எந்த வகைன்னு நீங்க சொல்லுங்க...! பார்த்துக் கொண்டேயிருங்கள். இதன் சொத்து எப்படி முடக்கப்பட்டு, சபாவே காணாமல் போகும் என்று...!'' என்றார் உறுதியாக.

கட்டுரை, புகைப்படங்கள்:
கேயெஸ்வி



• சேடப்பட்டி



• காளிமுத்து

பூரிப்பில் சேடப்பட்டி; ஆத்தில்லாமல் காளிமுத்து!

ஜெயலலிதா தமது கட்சியின் வேட்பாளர் பட்டியல் வெளியிடும் வைபவத்தைக் காண அ.தி.மு.க. அலுவலகம் முன் தொண்டர்கள் திரண்டிருந்தனர். சீட் கேட்டிருந்த ஒவ்வொருவரும் தங்களுக்குத்தான் சீட் கிடைக்கும் என்ற ஆனந்தத்தில் தொண்டர்கள் சூழப் போவதும் வருவதுமாய் இருந்தனர்.

பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி கொடுத்த ஜெயலலிதா அதிரடி பதில்களைச் சொல்லும் போது நிருபர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். "நான் தவறு செய்தேன் என்று சொல்ல சோ ஒன்றும் நீதிபதி அல்ல!'' என்றவர், "தினம் தினம் குண்டு வெடிக்கிறது. பஸ் கட்டணம் உயர்ந்திருக்கிறது... இதைப் பற்றியெல்லாம் அந்த நடிகர் ஏன் வாய் திறக்கவில்லை?'' என்று ரஜினியை ஒரு பிடிபிடித்தார்.

"சிதம்பரம் பல மோசடிகள் செய்திருக்கிறார். தேர்தல் முடிந்ததும் அவர் ஜெயிலுக்குள் இருப்பார்" என்றதும் பின்னால் நின்ற நிருபர்களின் சிரிப்பு அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்தது. அவர்களின் வாயை அடைக்கும்விதமாக மற்றொரு கேள்விக்குப் பதில் வந்தது. சோனியாவை "She is a hypocrite" என்றதும் கூட்டமே அதிர்ச்சிக்குள்ளானது போல் இருந்தது.

● வேட்பாளர் பட்டியலைப் பார்த்துப் பார்த்து பூரித்துப் போய் இருந்தவர் சேடப்பட்டி முத்தையா தான். செல்வேந்திரனை ஓரங்கட்டி, பெரியகுளம் 'சீட்'டைப் பிடித்து விட்டதால் அம்மாவிடம் தமக்கிருக்கும் செல்வாக்கைப் பார் என்பது போல் சாய்ந்து அமர்ந்து இருந்தார்.

● படியிறங்கிப் போன காளிமுத்துவைத் தொண்டர்கள் வெற்றிபெற அட்வான்ஸ் வாழ்த்துக்கள் கூறினர். ஆனால் அவர் முகத்தில் சுரத்தே இல்லை. தெருவுக்கு வரும் வரை அவர் பின்னால் வந்த தொண்டர்கள், தலையைத் தொங்கப் போட்டு வந்தனர். சிவகங்கைத் தொகுதியைக் காளிமுத்து விரும்பவில்லை என்று தெரிந்தது. "அண்ணனை இந்தம்மா பலிகடா ஆக்கிட்டாங்களே" என்று உயிர்த் தொண்டர் சொன்னதும், "வாயை வச்சுக் கிட்டு வாங்கப்பா" என்று மற்றொரு தொண்டர் அடக்கினார்.

● "ராமராஜனுக்கு சீட்டா" என்று தொண்டர்கள் அதிர்ச்சியடைந்தனர். "பாத்தியா அம்மா லேசுபட்ட ஆளில்லை. எப்படி டஃப் கேண்டிடேட்டா போட்டுருக்காங்கன்னு பாருங்க" என்று வேட்பாளர் பட்டியலைப் படித்துச் சொன்னார். "அதில்லப்பா, கட்சி மாறாத ஆளுங்களாப் பார்த்து போட்டிருக்கு பாத்தியா!" என்று ஓர் உண்மையைச் சுட்டிக்காட்டினார்.

● பெரியகுளத்திலிருந்து வந்திருந்த தொண்டர்கள் மூட்டை முடிச்சுகளைத் தூக்கிக் கொண்டு நின்றிருந்தனர். "நம்ம அண்ணன் எவ்வளவு உழைச்சும் என்ன புண்ணியம்? இந்த ஆளு சுரடியா புகுந்து கால வாரி விட்டாரே!" என்று அழாத குறையாக சேடப்பட்டியாரை, செல்வேந்திரன் ஆட்கள் திட்டிக் கொண்டு பஸ்ஸுக்காகக் காத்திருந்தனர்.

● அ.தி.மு.க. பலவீனமாக உள்ள இடங்களில் தோழமைக் கட்சிகளைத் தள்ளிவிட்டதாகக் கூட்டணியினர் முணுமுணுத்துக் கொண்டனர். அலுவலகத்தை விட்டு ஜெ. கிளம்பியபோது தொண்டர்கள், "தமிழகத்தின் நிரந்தர முதல்வர்" என்று கோஷமிட்டனர். "இவ்வளவு கூட்டம் வந்திருக்கில்லை. சன் டி.வி.யில கூட்டமே வரலைன்னு சொல்லுவாங்க. அது மட்டுமில்ல. சீட் கிடைக்காததால் கோஷ்டி மோதல் ஏற்பட்டதுன்னும் புளுகுவாங்க!" என்று தம் தீர்க்கதரிசனத்தையும் வெளியிட்டுச் சென்றனர். ●

— சிக்கல் சிவராமன்



காதலே நிம்மதி

“கதையே சரணம்” (முக்கியமாகக் காதல் கதை) என்று கோடம்பாக்கம் தீவிரத் தேடலில் இறங்கியிருப்பதற்கான இன்னொரு உதாரணம் இந்தப் படம். பிரபலங்களின் மசாலாப் படங்கள் படுதோல்வியடைந்ததால் விளைந்துள்ள panic reaction!

ஆனால், காதலே இல்லாமல் ஒரு காதல் கதை! "காதலர்கள் சந்திக்கும் எல்லாக் கஷ்டங்களையும் காதலிக்காமலேயே இவங்க ரெண்டு பேரும் அனுபவிச்சிருக்காங்க. எனவே இவங்களை இணைத்து வைப்பதுதான் நியாயம்" என்கிறார் முரளி க்ளைமாக்ஸில். முன்பின் அறியாத இருவரைக் காதலர்களாகக் கருதி அந்தப் பெண்ணின் குடும்பம், அவனை உடலாலும், அவளை மனதாலும் சித்திரவதை செய்கிறது. இறுதியில் நிழல் நிஜமாகிறது!

தவறிழைக்கப்படும் அப்பாவி பாத்திரத்துக்கு (அப்பாவைப் போலவே) சூர்யாவும் சிக்கெனப் பொருந்துகிறார். (நடிப்பில் இன்னமும் உயிர்ப்பு இருந்திருக்கலாம், என்பது வேறு விஷயம்). என்றாலும் அனுபவஸ்தரான முரளி, பெருந்தன்மையான பாத்திரமும் கைகொடுக்க, மனத்தில் மேலும் பதிகிறார்.

படத்தில் டூயட் இல்லாததும் (பாடல்களே இல்லாமல் இருந்திருக்கலாம்), எந்த இடத்திலும் கதைப் போக்கை பாதிக்கும்படி நடிகர்களுக்கு ஸ்கோப் அளிக்காததும் குறிப்பிடத்தக்க விஷயங்கள்.

நாயகி கவிதா புதுவரவு. ஹோம்லியான தோற்றம் என்பதற்காகத் தேர்வு செய்திருக்கிறார்கள். அந்தக் கோணம் நன்றாகவே கை கொடுக்கிறது. மற்றபடி, நடிப்புத் திறமையை வரும் படங்களில் வளர்த்துக் கொள்ளமாட்டாரா என்ன?

இலக்கியத்தை அனைத்துத் தரப்பு மக்களிடமும் எடுத்துச் செல்லும் ஒரு முயற்சியும் புல்லரிக்க வைக்கிறது! "டாவு டாவு டாவுடா டாவில்லாட்டி டையிடா" என்கிறது ஒரு பாடல். (என்னே, இலக்கியத் தரம்!).


கோவில் பிராகாரத்தில் உள்ள சிற்பங்களைப் புகைப்படம் எடுக்கிறார் சூர்யா. கண்ணடித்தும், வா என்று கை நீட்டியும், பறக்கும் முத்தம் கொடுத்தும் தன் தங்கை அவனுக்குக் காதல் போஸ் கொடுப்பதாகத் தவறாக நினைக்கிறார் நாசர். உண்மையில் ஹீரோயின் அப்படியெல்லாம் அபிநயிப்பது வேறொரு தூணின் பின்னால் மறைந்து கொண்டிருக்கும் சிறுமியான தனது அண்ணன் மகளிடம்தான். ஆனால் பின்னர் தன்மீது தவறாகக் காதல் குற்றம் சுமத்தப்படும் போதெல்லாம் "நான் அவனுக்குப் போஸ் கொடுக்கவில்லை. குழந்தையுடன்தான் விளையாடினேன்" என்பதை நாயகி ஏனோ கடைசிவரை சொல்லக் காணோம். என்றாலும் மற்ற சம்பவ நகர்த்தல்கள் வெகு இயல்பாக விரிகின்றன. ○

— ஜி.

நடக்குமென்பார், நடக்கும்!


ஜனவரி 28 முதல் பிப்ரவரி 3 வரை

அக்னிசர்மா பக்கம்



மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

அமைதி இல்லாதென் மனமேன்னு கண்டசாலா குரல்ல பாடிட்டு இருந்தீங்களா? டோன்ட் ஒர்ரி! உங்களை வாட்டிட்டு இருந்த கவலையெல்லாம் போயே போச்சு! இந்த வாரம் தொடங்கி, காம்ப்ளான் பாய் உற்சாகத்துக்கு நான் கேரண்டி! வீட்டுல புது மகிழ்ச்சியும் பெரியவங்களோட அன்பும் அக்கறையும் பெருகும். கணவன் மனைவி உறவுல ஒரு நூதனமான ஜோர் உருவாகப் போவுது. உல்லாசமா எங்கனா உலா போகப் போறீங்க. சில பேருக்கு அது தூர தேசப் பிரயாணமாகக் கூட இருக்கலாம். பணப் பிரச்னை கொஞ்ச நாளுக்கு இருக்காது. உடல் நலத்துல மட்டும் கவனமா இருங்க.




ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

குரு மாற்றம் உங்களுக்கு சில பிரச்னைகள் தந்துட்டு இருக்குது. எதானும் ஒரு தடை.. அலைச்சல், அலைக்கழிப்பு, இல்லையா? ஆனா செவ்வாயோட பலத்தால உங்க ஆற்றல் முழுமையா வெளிப்படற சமயமும் இதுதான்! வீட்டுலயும் சரி, ஆபீஸ்லயும் சரி கொஞ்சம் விட்டுக் கொடுத்துப் போற மனப் போக்கை வளர்த்துக் கிட்டீங்கன்னா, சிக்கல்கள்லேருந்து சுலபமா மீளலாம்! கொடுக்கல் வாங்கல் விஷயத்துல கவனமா இருங்க. யாரையும் லேசுல நம்பிட வேணாம்! கல்யாணத்துக்குக் காத்திருக்கிற பெண்களுக்கு இப்ப அதுக்கான டயம் கூடி வருது. ஆண்கள் சில பேருக்கு உத்தியோக ரீதில இட மாறுதல் இருக்கலாம்.




மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

பொருளாதார ரீதில ரொம்ப வலுவா இருக்கப் போறீங்க. நினைச்ச காரியத்தை சுலபமா முடிக்க, நீங்க எதிர்பாராத இடங்களிலேருந்தெல்லாம் உதவி கிடைக்கும். சில பேருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கலாம். ஆசிரியர்கள், உயர் அதிகாரிகளுக்கு ரொம்ப சாதகமான வாரம் இது. பண விஷயத்திலும் சரி; மத்த விஷயங்களிலும் சரி; அதிகமா பிரச்னை எதுவுமே வராத வாரம் இது.



கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

ரொம்ப ஜாக்கிரதையா இருக்க வேண்டிய காலகட்டம். ரொம்ப அவசியம் ஏற்பட்டாலொழிய யாருக்கும் பணம் கடன் குடுக்காதீங்க. பயணங்களின் போது கவனமா இருங்க. வீட்டுலே கூட வயசான அப்பா, அம்மா இருக்காங்கன்னா, அவங்க உடல் நலன்லேயும் அக்கறை அவசியம். கட்டடத் துறைல இருக்கறவங்களுக்கு சங்கடமான நேரம். சுலபமா முடிய வேண்டிய வழக்கெல்லாம் இழுத்தடிக்கலாம். கணவர் மனைவிக்குள்ள அடிக்கடி ஏதாவது பிரச்னை வந்து போகும். படிக்கற பசங்க கூட ரொம்ப கஷ்டப்பட்டுப் படிச்சாத்தான் தேற முடியும். சமயோசிதமா நடந்துக்கங்க. ஒரு பத்து நாள்ள நிலவரம் மாறலாம்!



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*


சின்னச் சின்ன பிரச்னைகளால மனம்துவண்டு போயிட்டிருந்த உங்களுக்கு, இனி அது மாதிரி நச்சரிப்புகள் இருக்காது. உங்க சிந்தனைத் தெளிவும் விவேகமும் கஷ்டமான சமயங்கள்ல கைகொடுக்கும். சில பேருக்கு, நீண்ட நாள் ஆசை ஏதாவது நிறைவேறலாம். அது ஏதாவது புண்ணியத்தல யாத்திரையாகவும் இருக்கலாம். வீடு, பிளாட் வாங்கற பிளான்ல இருக்கறவங்க. உடனடியா செயல்பட்டா, பலன் நிச்சயம்.



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

நல்லதும் கெட்டதும் கலந்து வர்ற நேரம் இது. குரு மாற்றத்தின் காரணமாக உங்க அறிவாற்றல் பிரகாசமா இருக்கும். கணிதம், எழுத்துத் துறைல இருக்கறவங்களுக்குக் கூடுதலா சில நல்ல பலன்கள் நடக்கலாம். நல்ல காரியங்கள் பொதுச் சேவை மாதிரி செய்ய சந்தர்ப்பம் வந்தா அதைப் பயன்படுத்திக்கங்க. உங்க ஏரியாவுல நீங்க ஒரு ஸ்டார் ஆக அதன் மூலம் வாய்ப்பு இருக்கு. ஆனாலும் திடீர் பிரயாணங்கள், உடல் நலக் குறைவு மூலம் சிலருக்கு பண/மனக்

கஷ்டம் வந்து கொஞ்சம் படுத்தலாம். புன்னை யாரைப் பிடிச்சிக்கங்க. அவர்தான் இந்த வாரம் உங்களுக்கு உதவப்போற தெய்வம்.




துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*

புது டிரெஸ், நகை வாங்கற யோகம் கண்டிப்பா இந்த வாரம், இந்த ராசிப் பெண்களுக்கு இருக்குது. ஆண்களைப் பொறுத்த வரைக்கும் உத்தியோக ரீதில சிலருக்குப் புதிய இடமாறுதல், தேங்கிக் கிடந்த பல நாள் வேலை ஒன்றை இப்ப முடிக்க முடியும். முக்கியமான விஷயம் – கண்ணுக்குத் தெரியாத ஒரு எதிரி நமநமப்பு இருந்துட்டே இருந்திச்சின்னா, இப்ப அந்த முகமூடி கிழிஞ்சி ஆள் அடையாளம் தெரிஞ்சிடும். சாதுக்கள், ஆன்மிகப் பெரியோர்களின் ஆசி, இப்ப சிலருக்குக் கிடைக்கும். பயணம் போகும்போது எச்சரிக்கையா இருங்க. டூ-வீலர் வெச்சிருக்கறவங்களுக்கு சிறு விபத்து ஒண்ணு ஏற்படற சான்ஸ் இருக்குது.




கும்ப ராசிக்காரரான குற்றாலீஸ்வரன் கொஞ்சம் கவனமா இருக்கணும். சோம்பலுக்கு இடம் கொடுக்கக் கூடாது!

விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*




துணிச்சலும் தன்னம்பிக்கையுமா காரியம் செய்யற உங்களை அடிச்சிக்க யார் சார் இருக்காங்க? இந்த வாரம் உங்க மனசு குளிர்றாப்பல ஒரு நல்ல காரியம் நடக்கும். அது உங்க பசங்க மூலமா இருக்கலாம். வழக்கு ஏதாவது நிலுவைல இருக்கா, இப்ப பைசலாயிடும். சிலருக்கு லாட்டரி, ஷேர்ல கொஞ்சமா லாபம் கிடைக்கலாம். குடும்பத்துல விசேஷம் ஏதாவது வரும். வீடு, மனைல முதலீடு செய்யறது மட்டும் இப்ப வேணாம். இந்த ராசிக்காரப் பத்திரிகையாளர்களுக்கு நல்ல பாராட்டு வந்து சேரும் நேரம் இது.

தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*



அலைச்சல், பொருள் விரயம், மனக்கவலை. வேற வழி இல்லை. தனக்குவமை இல்லாதவனின்தாள் சேர்ந்துடுங்க. இந்த வாரம் சில பேருக்கு 'இன்ஸல்ட்' கெட்ட பெயர், மேலதிகாரிகளோட திட்டு இந்த மாதிரி சில விரும்பத்தகாத சமாசாரங்கள் நடக்கலாம். சில பேருக்குத் தந்தை உடல் நலம் கவலை தரலாம். குடும்பத்துல கருத்துமாறுபாடுகள் காரணமா சில மனஸ்தாபங்கள், கோப விஷயங்கள் இருக்கும். இசை, சினிமாத் துறைல இருக்கறவங்களுக்கு மட்டும் வளர்ச்சிக்கான வழி தெரியும். முருக வழிபாடு இப்ப உங்களுக்கு நல்லது செய்யும்.




மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

தோற்றப் பொலிவு பளிச்சிடும் வாரம். அதனாலேயே எடுத்த காரியம் வெற்றி! பெரியவங்க ஆசியும் உங்களுக்குப் பக்கபலமா இருக்கும் போது வேறென்ன கவலை? வியாபாரிகளுக்கு குறிப்பா கடல் வியாபாரம் பண்றவங்களுக்கு ரொம்ப வளமான சமயம். புதிய ஒப்பந்தங்களால மகிழ்ச்சியடைவீங்க. சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகளும் வெளியூர் பிரயாணத்தால பண வரவும் இருக்கும். கலைத்துறைல இருக்கறவங்களுக்குப் புகழ் சேரும். மருத்துவர்களும், கணிதத் துறைல இருக்கறவங்களும் இடமாறுதலை எதிர்பார்க்கலாம்.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

வீண் விவகாரங்கள்ல தலையிடாதீங்க. யார் எக்கேடு கெட்டா நமக்கென்னான்னு கொஞ்ச நாள் வாயை மூடிட்டு இருந்தீங்கன்னா நல்லது. ஒரு நீண்ட நாள் நண்பரால நீங்க எதிர்பாராத சிக்கல் ஏதாவது வரலாம்! சோம்பல் ரொம்பப் படுத்தும். வழக்கு விவகாரங்களும் ஏமாற்றம் தரலாம். அவசரப்படாம, யோசிச்சு செய்யற காரியங்கள் மட்டுமே சிறப்பா நடக்கும். உங்களோட பலவீனமே, உங்க அவசர புத்திதான்! அந்த விஷயத்துல கவனமா இருந்தீங்கன்னா, சில பிரச்னைகளைத் தவிர்க்கலாம்.



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

செலவு கட்டுக்கடங்காது. ஆனாலும் சமாளிக்கற அளவுக்குப் பண வரவு இருக்கும். உறவினர்களால் உதவி எதிர்பார்க்கலாம். வெளி நாடுகளிலேருந்து ஏதாவது நல்ல செய்தி எதிர்பார்த்துட்டிருக்கறவங்களுக்கு இந்த வாரம் அது வரலாம். இயந்திரப் பணியாளர்கள் கவனமா இருந்தா, சிறு விபத்துக்களைத் தவிர்க்கலாம். கொடுக்கல் வாங்கல் வேணாம். லாட்டரி, ஷேர் - வேணவே வேணாம்!

"உங்கள் ரெக்கார்டு என்ன, மனுபா?"

"கல்லூரிக்கு இடையேயான பந்தயங்கள் அக்டோபரில் நடந்தன. அதில் நூறு மீட்டரில் 12.1 செகண்டிலும், இருநூறு மீட்டரில் 25.3 செகண்டிலும் வந்ததுதான்!'' என்கிறார் மனுபா.

- பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டிகளை, கடந்த டிசம்பரில் நேரு ஸ்டேடியத்தில் முதன் முதலாக தமிழ்நாடு ஸ்போர்ட்ஸ் அத்தாரிடி, நடத்தியபோது உதயமான நம்பிக்கை நட்சத்திரம். நூறு மீட்டரிலும், இருநூறு மீட்டரிலும் முதலாவதாக வந்த இளம் புயல். ரிலேயிலும் முதல்!

போர்ட் டிரஸ்ட்டில் பணிபுரியும் அப்பா மாதவனும், பெண்கள் ஹாக்கி பிளேயரான அம்மா லீலாவும் தான் மனுபா விளையாட்டுப் போட்டிகளில் உற்சாகமாகப் பங்கெடுக்கக் காரணம்.

ஏழாவது படிக்கும்போதே நூறு மீட்டர், இருநூறு மீட்டர் ஓட்டப்பந்தயங்களில் கலந்துகொண்டதுதான் இந்த வெற்றிகளுக்கு வித்து. வில்லிவாக்கத்தில் செயின்ட் ஜான்ஸ் பள்ளி மாணவியாக இருந்த மனுபாவுக்கு, அப்போது கோச் ஐ.சி.எஃப்பில் இருந்த பாலசந்திரன். இப்போது, ஞானசேகரன்.

'90-ல், தமிழ்நாடு ஸ்போர்ட்ஸ் அசோசியேஷன் நடத்திய முதல் 'ஸ்டேட் மீட்'டில் நாகர்கோயிலில் பரிசு பெற்றதும், 92-ல் ஜூனியர் நேஷனலில் மூன்றாவதாக வந்ததும் ஆரம்ப உற்சாகங்கள்.



மாநில அளவிலான பிளேயர்களுக்கு இடையே எர்ணாகுளத்தில், ஜூனியர் நேஷனல் மெடல் சம்பத்திய பெருமை.

"மனுபா நம்பிக்கை தரும் வீராங்கனை. அமைதியான பெண். கடினமாக உழைப்பாள். தீர்மானமாக இருப்பாள். படிப்பிலும் கெட்டிக்காரி. ஸ்காலர்ஷிப்பில் படிக்கிறாள். சம்பளம் முழுவதையும் கல்லூரியே கொடுத்து விடுகிறது. தவிர, மெடல் வாங்கி வரும் போதெல்லாம், பரிசுத் தொகையும் கொடுப்பார் கல்லூரி

இருபது விநாடிக்கு இரண்டரைக் கோடி செலவு!

இருபது விநாடிகள் ஒளிபரப்பாகும் ஒரு விளம்பரப் படத்துக்கு இரண்டரைக் கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள் என்றால் நம்ப முடிகிறதா? அதுவும் சிகரெட் விளம்பரம் ஒன்றுக்கு!

''சத்தியமாக இது நிஜம்!'' என்கிறார் மும்பையிலுள்ள விளம்பர நிறுவனங்களில் மொழிமாற்ற வல்லுனராய்ப் பணியாற்றும் ராகவன்.



நம்பிக்கை நட்சத்திரம்

ரெடி, ஸ்டெடி, வெற்றி!

முதல்வர் டாக்டர் இந்திராணி ஸ்ரீதரன்!'' என்கிறார் மனுபாவின் ஸ்போர்ட்ஸ் துறைப் பேராசிரியை நீதா குணசீலன்.

சென்னை - எத்திராஜ் கல்லூரியில் பி.காம். மாணவியான மனுபாவை அவரது காமர்ஸ் துறையும் பிரமாதமாக ஊக்குவிக்கிறது!

காலையில் இரண்டு மணி நேரம். மாலையில் இரண்டு மணி நேரம் கடுமையான பயிற்சி. பால், முட்டை (2), சூப், ஓட்ஸ் இவை கட்டாயம் - சாப்பாடு தவிர.

"பந்தயங்களில் கலந்து கொள்ள வெளியூர் போக வேண்டி வந்தால் என்ன செய்கிறீர்கள்?"

"அட்டென்டென்ஸ் கொடுத்து விடுவார்கள், சலுகையாக!" என்கிறார் மனுபா.

மனுபாவின் ரோல் மாடல் யார்?

"அசுவினி நாச்சப்பாதான்!"

"ஏன்?"

"ஐ லைக் ஹெர் ரன்னிங் ஸ்டைல்!"

மனுபாவின் லட்சியம், "ஒலிம்பிக்கில் ஒரு மெடல் வாங்கிவிட வேண்டும்!" ●

— சித்தார்த்

படங்கள் : பாலாஜி

இத்தனை செலவு செய்து அப்படி எதைத்தான் எடுத்திருக்கிறார்கள்?

• ராகவன்



கையில் ஈட்டியுடன் குதிரையில் சவாரி செய்யும் வீரர்கள், கீழே ஓரிடத்தில் கிடக்கும் ஒரு பொருளைக் குதிரைச் சவாரி செய்தபடியே ஈட்டியால் குத்தி எடுப்பதை!

இந்த விளையாட்டில் ஈட்டியால் குத்தி எடுக்கப்படும் அந்தப் பொருள் சம்பந்தப்பட்ட சிகரெட் பாக்கெட்!

இதுதான் விளம்பரம்!

இதற்காக எழுபது குதிரைகளும் வீரர்களும் தயார் செய்யப்பட்டனர். நேபாளத்தில் நடைபெறும் ஒரு விழாவின் பின்னணியில் இது படமாக்கப்பட வேண்டும் என்பதற்காகக் குதிரைகள் உள்பட ஒரு பெரிய கோஷ்டியே நேபாளத்துக்கு விமானப் பயணம் செய்தது. போய்ப் படம்பிடித்து விட்டு வந்து செலவுக் கணக்குப் பார்த்த போது நிகர செலவு இரண்டரைக் கோடி ரூபாய்! ●

தகவல் : பி.எஸ்.

பருத்தி விவசாயிகளின் தற்கொலை ஏன்?

பருத்தி சாகுபடியில் ஈடுபட்ட ஏழை - நடுத்தர விவசாயிகளில் இருபத்து நான்கு பேர் ஆந்திராவில் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளனர். பருத்தி பயிரிட்டால் கடன்களை அடைத்துக் கை தூக்கி விடும் என்று விவசாயிகள் காணும் கனவு, ஒவ்வொரு முறையும் இப்படி பரிதாபத்தில் போய் முடிகிறது. ஏற்கெனவே ஐந்தாண்டுகளுக்கு முன் 'பருத்தி', விவசாயிகளை ஏமாற்றியதால் இதே போல் முந்நூறுக்கும் மேற்பட்ட குடும்பத் தலைவர்கள் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்ட துயரத்தை ஆந்திர அரசு ஒரு படிப்பினையாக எடுத்துக் கொள்ளவில்லை.

"திரும்பத் திரும்ப ஏன் இப்படி நிகழ்கிறது?" என்று விவசாய அறிஞர் எஸ்.எஸ். நாகராஜனிடம் கேட்டபோது, பல காரணங்களைச் சொன்னார்:

"விவசாயிகளுக்கு அரசாங்கம் முறையாகப் பயிற்சி அளிப்பதில்லை. விவசாயிகளுக்கு உழைப்பு இருக்கிற அளவுக்கு நவீன தொழில் நுட்பத்தை எப்படிப் பயன்படுத்த வேண்டும்? எப்படி நிர்வாகம் செய்ய வேண்டும்? என்பது தெரிவதில்லை!" என்றார்.

நல்ல மகசூல் எடுத்து விடலாம் என்ற ஆசையில்தான் களத்தில் குதிக்கின்றனர். ஆனால் சுற்றுப்புறச் சூழல் எந்தளவுக்கு மாசு படிந்திருக்கிறது என்ற விஷயம் அவர்களுக்குத் தெரிவதில்லை.

விவசாயிகளிடம் உள்ள நிதானமற்ற தன்மைகளைப் பற்றியும் எஸ்.எஸ். நாகராஜன் கவலை தெரிவித்தார். "பருத்தி பயிரிட்ட அறுபது நாளுக்குப் பிறகுதான் மருந்து தெளிக்க வேண்டும். இவர்கள் 45ஆவது நாளிலிருந்தே தெளிக்கத் தொடங்கி விடுகிறார்கள். சரி, செடியில் பூச்சி இருக்கிறதா என்று பார்த்தும் தெளிப்பதில்லை. பக்கத்துத் தோட்டத்தில் மருந்து தெளித்ததும் இவர்களும் தெளிக்கத் தொடங்கி விடுகிறார்கள். அப்படியே பூச்சி, புழு இருந்தாலும் மைல்டான மருந்து தெளித்தே கட்டுப்படுத்தலாம். இவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் ஹெவி டோஸ் கொடுத்து, இளஞ் செடிகளை மிரளச் செய்து விடுகிறார்கள். புழுவும், பூச்சியும் இன்றைக்கு எவ்வளவு ஹெவியான மருந்தைத் தெளித்தாலும் அதை ஜீரணித்து ஏப்பம் விட்டு விடுகிறது. செடிக்குத் தேவையான நல்ல பூச்சிகள்தான் செத்துப் போகின்றன" என்றார்.

ஆந்திராவில் தொழிலதிபர்கள் தங்கள் தொழில் வெற்றிகரமாக நடக்க விவசாயிகளிடம் 'பருத்தி பயிரிடுங்கள்' என்று ஆசை வார்த்தை காட்டுகின்றனர். விவசாயிகளுக்கு நல்ல பயிற்சி அளிக்க முன் வருவது மட்டும் இல்லை. விவசாயிகளி



டமும் உடனே முதலாளி ஆகி விட வேண்டும் என்ற பேராசை வந்து விடுகிறது. பரம்பிக்குளம் - ஆழியாறு அணை கட்டிய வுடன் பொள்ளாச்சி மக்களுக்கு நல்ல வரப்பிரசாதமாக அமைந்தது. தமிழக அரசு நீர்வரத்துக்கு ஏற்ற விதமாகத் தென்னை நடுங்கள் என்று ஓயாமல் கத்தியும் விவசாயிகள் காதில் போட்டுக் கொள்ளவில்லை. தம்மிடம் இருந்த எல்லா நிலத்திலும் எல்லா விவசாயிகளும் தென்னை பயிரிட்டனர். மறுவருடம் மழை பொய்த்து விட்டது! லட்சக்கணக்கில் செலவு செய்து நட்ட தென்னங்கன்றுகள் கருக ஆரம்பித்ததும் நஷ்டம் தாங்காமல் இதேபோல்தான் தூக்குப் போட்டுக் கொண்டு இறந்தனர்'' என்றார் நாகராஜன்.


"பொதுவாக உயர்தரப் பருத்தி பயிரிட்டால் அதிகப் பூச்சி வரும். அதனால் அதிகமான மருந்து தெளிக்க வேண்டிய தாகி விடுகிறது. நம் புறச்சூழலைத் தாங்கக் கூடிய பருத்தி ரகங்களின் மகசூல் சற்று குறைவாக இருந்தாலும் நோய்களால் பாதிக்காது. ஆனால் விவசாயிகள் ஆசை காரணமாக உயர் தரப் பருத்தியைப் பயிரிட்டு நிர்வகிக்கத் தெரியாமல் அவர் களாகவே துயரத்தை வரவழைத்துக் கொள்கின்றனர். புழு பூச்சிகள் தென்பட்ட உடனே கட்டுப்படுத்தி விட வேண்டும். கை விட்டுப் போன பின்பு, கட்டுப்படுத்துகிறேன் பேர்வழி என்று மருந்துகளை ஏறுக்கு மாறாக தெளித்து செடிகளை மொர மொரப்பாக மாற்றி விடுகின்றனர்'' என்று சொன்ன நாகராஜன், பயிர்ப் பாதுகாப்புக்கு அதிகச் செலவில்லாத இயற் கையான முறைகள் ஏராளமாக இருப்பதாகவும் சொன்னார்.

பக்கத்துத் தோட்டக்காரன் காரம் மிக்க மருந்து தெளிப்பதால் அங்கிருக்கும் பூச்சிகள் அடுத்த தோட்டத்திற்கு மாறுகிறதே தவிர அழிவதில்லை. இப்படி ஒரே பரப்பில் உள்ள தோட்டக்காரர்களின் மத்தியில் ஒரே வகை மருந்தை தெளிக் காமல் அவரவர் இஷ்டத்திற்கு தெளிப்பதாலேயே எல்லா தோட்டங்களும் பாழாகின்றன.

"பிலிப்பைன்ஸ் நாட்டில் பத்தாயிரம் ஏக்கர் பருத்தி பயிரிட்டால் அந்தப் பகுதி முழுக்க ஒருமுறைக்கு ஒரே மருந்து தான் தெளிக்கின்றனர். அவர்களிடம் அப்படி ஓர் ஒற்றுமை இருக்கிறது. அது மட்டுமல்ல, முன் இரவில் பூச்சிகளைப் பிடிக்க விளக்குப் பொறி வைப்பார்கள். நிலமில்லாத ஏழைகள் தங்கள் பங்கிற்கு அடுத்தவர் தோட்டத்தில் அந்த விளக்குப் பொறி (ராந்தல் போன்றது) வைப்பார்கள். இப்படி ஒற்றுமை யோடு, விவசாயம் ஒரு சமூக இயக்கமாக இந்தியாவில் வளரவில்லை!'' என்கிறார் எஸ்.எஸ். நாகராஜன்.


"ஆந்திர விவசாயிகள் தூக்குப் போட்டுக் கொண்டு தற் கொலை செய்து கொண்டது மருந்து தெளிக்கிற முறையினால் ஏற்பட்ட கோளாறும், நஷ்டமும் மட்டும் காரணமல்ல. பருத்தி பயிரிட்டால்தான் பெரிய பெரிய பைனான்ஸியர்கள் விவசாயி களுக்குக் கடன் தருகிறார்கள். அரசும் இதே போக்கைத்தான் கை கொள்கிறது. பருத்திச் செடி ஏமாற்றியதும் கடன் கொடுத் தவர்கள் நூற்றுக்குப் பத்து வட்டி போட்டு அவர்களை இம் சைப் படுத்துகின்றனர். அதோடு வீட்டின் முன் நின்று அவர் களைத் தரக்குறைவாகப் பேசி ஜப்தி செய்கின்றனர். இதன் காரணமாக மனம் வெதும்பி எடுத்த முடிவுகள்தான் இந்தத் தற்கொலைகள்!'' என்று அழுத்தமாகச் சொன்னார் நாகராஜன். ●

— யுகாந்தன்



"உங்கள் அபிமான வேட்பாளரான எனக்கு, உங்கள் பொன்னான வாக்குகளை அளித்து வெற்றி பெறச் செய்யுமாறு இங்கே கூடியுள்ள ஏழு வாக்காளப் பெருமக்களையும் பணிவன்புடன் கேட்டுக் கொள் கிறேன்!''

— உ. ராஜாஜி



"எங்க அப்பா லெட்டர் போட்டிருக்கார்..." என்றாள் வத்சலா. அலுவலகத்திலிருந்து வந்து சட்டையைக் கழற்றிக் கொண்டிருந்தேன். தூங்கிக் கொண்டிருந்த குழந்தையைப் பார்த்தபடியே சுவாரஸ்யமில்லாமல் கேட்டேன்.

"என்னவாம்?"

"என் தம்பி கோபிக்கு இங்கே என்ஜினியரிங் காலேஜ்ல சீட் கிடைச்சிருக்காம்... அடுத்த வாரம் வர்றானாம்..."

திடுக்கிட்டு நிமிர்ந்தேன். அவள் என் பார்வையைத் தவிர்த்து சுவரைப் பார்த்தாள். நான் அறையை ஒருமுறை நோட்டம் விட்டேன்.

பத்துக்குப் பத்து. ஒரே அறை. ஒண்டுக் குடித்தனம். வலது பக்க மூலையில் மேஜை. அதன் மேல் நடுத்தர மக்களின் வாழ்க்கைக்கு அவசியமான(?)டி.வி. அதற்கடுத்து புத்தகங்கள் நிறைந்த ஷெல்ப். அதன் மேல் கண்ணாடி, பவுடர் இத்யாதிகள். இடது பக்க மூலையில் தண்ணீர் பிடித்து வைக்கும் அண்டா. (ஒரு நாள் விட்டு ஒரு நாள் தான் தண்ணீர் வரும்) சில குடங்கள். பக்கத்தில் சமையல் மேடை. சற்று தள்ளி ஒரு நாற்காலி.

தேவையில்லாத நிறைய சாமான்கள் பரணிலிருந்தன. இவ்வளவு தான் அறை. மீதமிருக்கிற இடத்தில் நான், வத்சலா, குழந்தை புழங்கிக் கொள்வோம்.

எங்களைத் தவிர இன்னும் மூன்று குடித்தனக்காரர்கள் இருக்கிறார்கள். பொது பாத்ரூம். காலையில் வரிசையில் நிற்க வேண்டும். வீட்டுக்குச் சொந்தக்காரர் இங்கே இல்லை. அண்ணா நகரில் இருக்கிறார். மனிதர் உஷார் பேர்வழி. திடீர், திடீர் என்று சர்ப்ரைஸ் விசிட் அடித்து வீட்டில் எத்தனை பேர் இருக்கிறார்கள், புதியவர்கள் யாராவது வந்திருக்கிறார்களா என்று கணக்கெடுத்துக் கொள்வார்.

கோபி வந்தால் இடம் போதுமா? வீட்டுக்காரர் வாடகையில் ஐம்பது ரூபாய்

ஏற்றுவார். கரண்ட் பில் எகிறும். சாப்பாட்டுச் செலவு அதிகரிக்கும். இந்த மாத பட்ஜெட் ஏற்கெனவே தீர்மானித்தாகிவிட்டது. இவன் செலவுகளுக்கு எங்கிருந்து பணம் எடுப்பது? எல்லாவற்றுக்கும் சிகரமாய் எங்கள் தனிமை?

"என்ன யோசிக்கிறீங்க?"

"கோபி வந்தான்னா இங்கே இடம் போதுமா?"

"அட்ஜஸ்ட் செஞ்சிக்கலாம்..."

தம்பியை விட்டுக் கொடுப்பாளா...

"ஒரு நாள், ரெண்டு நாள்னா பரவாயில்லை. நாலு வருஷம் தங்கப் போறான்... எப்படி சமாளிக்கப் போகிறோம்... நீ நாசூக்கா பதில் எழுதிடேன்..."

"என்னன்னு எழுதறது?"

"இங்கே வந்து தங்கறது எங்களுக்குச் சந்தோஷம்தான்... ஆனா வீட்டில் தான் இடமில்லைன்னு எழுது..."

"நான் எழுத மாட்டேன்... ஏன் போன மாசம் உங்க தம்பி வந்து நாலுநாள் இருந்துட்டுப் போகலை... அப்ப நீங்க சும்மா தானே இருந்தீங்க..."

"அப்பவே நம்ம வீட்டுக்காரர் எப்படிக் குதித்தார்னு பார்த்தாயே... என் தம்பி, யார்? எங்கே வேலை செய்யறான்? எத்தனை நாள் தங்கப் போறான்? என்று அவனுக்குப் பொண்ணு கொடுக்கும் மாமனார் மாதிரி எப்படி விசாரிச்சார்னு தெரியுமில்லை... பேச்சுவாக்கில் வாடகையை ஏத்தணும்னு சொல்லிட்டுப் போனார்..."

"ஐம்பது ரூபாய் ஏற்றிக் கேட்பார்... அவ்வளவு தானே... கொடுத்துட்டாப் போறது.. இல்லேன்னா என் தம்பி நம்ம வீட்டை விட்டுட்டு எங்கே தங்குவான்... ஏன் எங்க வீட்டிலிருந்து யாரும் வரக் கூடாதுன்னு நினைக்கறீங்களா..."

கேள்விகளால் மடக்கினாள். திணறினேன். விடமாட்டாள் போலிருந்தது.

"சரி... வரட்டும் பார்த்துக்கலாம்..."

இப்போது அவள் முகத்தில் சிறியதாய் ஒரு வெளிச்சம்.

'இவனுக்குத் தெரியாமல் அவனிடம் விஷயத்தைச் சொல்லி அனுப்பிவிட வேண்டியது தான்!

இடம்

கார்த்திகேயன்

சூரியன் ஏழுமுறை உதித்து மறைந்தான்.

அன்று காலையிலிருந்தே வத்சலா உற்சாகமாயிருந்தாள். அடிக்கடி வாசலை எட்டிப் பார்த்தாள். நான் பேப்பர் படிக்கும் பாவனையில் அவள் நடவடிக்கைகளை கவனித்துக் கொண்டிருந்தேன்.

அவன் வரவில்லை என்றால் நன்றாயிருக்கும். ஓர் ஆசை மனதிலிருந்தது.

ஆனால்...

கோபி வந்தே விட்டான்!

அவன் கையிலிருந்த பெரிய சூட்கேஸைப் பார்த்தவுடன் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. வீட்டை ஒட்டு மொத்தமாய்க் கொண்டு வந்து விட்டானா? அந்த சூட்கேஸை எங்கே வைப்பது?

"அக்கா எப்படியிருக்கே? மாமா சௌக்கியமா? ரம்யா எங்கே?" பேசிக் கொண்டே புன்னகை செய்தபடி உள்ளே நுழைய, எனக்கு வயிற்றில் அமிலம் சுரந்தது.

"வா கோபி... அம்மா, அப்பா எப்படியிருக்காங்க?"

அக்காவும், தம்பியும் பாசமழையில் நனைந்தனர். நானும் வேண்டா வெறுப்பாய் விசாரித்து வைத்தேன். இல்லையென்றால் வத்சலாவிடம் யார் வாங்கிக் கட்டிக் கொள்வது?

அவன் பாயில் உட்கார்ந்து அறையைச் சுற்றி பார்வையை ஓட்டினான். நான் புரிந்து கொண்டேன்.

"வீடு (அறை?) சின்னதாயிருக்கிறது இல்லை."

வத்சலா என்னை முறைத்தபடி- நான் முடிக்குமுன்பே என் வார்த்தைகளை அவன் கேட்டு விடாதபடி- உரக்கப் பேசினாள்.

"மெரிட்ல தானே சீட் கிடைத்தது..."

"ஆமாக்கா..."

ரம்யாவிற்கு ஸ்வீட் பாக்ஸ் கொடுத்தான்.

"அம்மா உனக்குப் பிடித்த அதிரசம் பண்ணிக் கொடுத்து அனுப்பியிருக்காங்க... சீடை, முறுக்கு எல்லாம் கொண்டு வந்திருக்கேன்..."

பெரிய பையை எடுத்து வத்சலாவிடம் கொடுத்தேன். அவள் முகமெல்லாம் சூரியனாய் வாங்கிக் கொண்டாள். என்னிடம் குனிந்து கிசுகிசுத்தாள்.

"உங்க தம்பியும் வந்தாரே... வெறுங் கையை வீசிக்கிட்டு..."

"மாமா... உங்களுக்கு இந்த வருஷ டைரி.."

"தாங்க்ஸ்ப்பா..."

அழகாயிருந்தது. இங்கே வாங்க வேண்டும் என்றால் நூறு ரூபாய் சொல்லுவார்கள்.

பெரிய அஸ்திவாரம் போடுகிறான்.

'அப்பா கோபி... இதெல்லாம் எதுவும் வேண்டாம்... நீ இடத்தைக் காலி செய்தாலே போதும்.'

மனம் அலை பாய்ந்தது.

"என்ன மாமா டல்லாயிருக்கீங்க.. உடம்பு சரியில்லையா?"

"ஆமா கோபி... அவருக்கு ஒரு வாரமா உள்ளுக்குள்ளே காய்ச்சல்..."

அர்த்தத்துடன் என்னைப் பார்த்தாள்.

அன்று சமையலை பிரமாதப்படுத்தியிருந்தாள். நன்றாய் சாப்பிட்டான்.

"ஒரேயடியாக இன்னைக்கே கவனிச்சிடாதே... கொஞ்சம் மீதி வைச்சுக்கோ...நாலு வருஷம் தங்கப் போறான்... அப்பப்ப பார்த்துக்கலாம்..."

வெறுப்புடன் சொன்னேன்.

"மதியம் சாப்பிட்டவுடன் கொஞ்ச நேரம் படுத்தால் நன்றாயிருக்கும்..."

கால்களை நீட்டிப் படுத்தவுடன் நிம்மதியாய்த் தூங்கிவிட்டான். அவன் உயரத்திற்கு அறையை முழுதாய் அடைத்துக் கொண்டான்.

எனக்கு யோசனையாக இருந்தது. எப்படி இவனை இங்கிருந்து ஓட்டப் போகிறோம்?

மாலை.

சூடாக காபியும், டிபனுமாய் உபசரித்தாள்.

"இப்படியெல்லாம் நீ செஞ்சிக்கிட்டிருந்தால் அவன் பர்மனென்ட்டா இங்கேயே 'டேரா' போட்டு விடுவான்..."

என் வேலையைப் பற்றி விசாரித்தான். பதில் சொல்லிவிட்டு அவன் மேல் அதிக அக்கறை இருப்பதாய்க் காட்டிக் கொண்டு உபதேசிக்க ஆரம்பித்தேன்.

சிலர் உபதேசங்களைத் தாங்க முடியாமல் விட்டால் போதும் என்று ஓடிவிடுவார்கள். அந்த உத்தியையும் கடைப்பிடித்தேன்.

அவன் கவனமாய் கேட்டுக் கொண்டான். சலித்துப் போய்விட்டேன். உட்கார்ந்து விட்டான். இனி இவனைக் கிளப்ப முடியாது!

ஆறுமணிக்கு சட்டையைப் போட்டுக் கொண்டு தயாரானான். வத்சலா புருவம் சுருக்கினாள்.

"எங்கே போறே கோபி..?"

"அக்கா... நம்ம ஊர்ப் பசங்க அந்த காலேஜ்லதான் படிக்கறானுங்க... அவங்க காலேஜ்க்கு பக்கத்திலேயே ரூம் எடுத்துத் தங்கியிருக்காங்க... நானும் அவங்க கூட போய் தங்கிக் கொள்ள போகிறேன்... அப்பா தான் சொல்லியனுப்பினார். ஏற்கெனவே அட்வான்ஸ் எல்லாம் கொடுத்தாச்சு.. சரி.. வந்தவுடனே உங்களைப் பார்த்துட்டுப் போகலாமேன்னு தான் நேரா இங்கே வந்தேன். வரேன் அக்கா.. டைம் கிடைக்கும்போது மறுபடியும் வரேன்... அப்பாவுக்கு நான் வந்துட்டுப் போனதாக லெட்டர் எழுதிவிடு..."

"நாங்க இருக்கும் போது நீ ஏன் அங்கே தங்கணும்?"

"நான் இங்கேயிருந்தா உங்களுக்குத் தொந்தரவாக இருக்கும்... நண்பர்களோட தங்கறது தான் சரின்னு தோணுது..."


சூட்கேஸை எடுத்துக் கொண்டான். ரம்யாவிற்கு முத்தம் கொடுத்தான்.

"வரேன் மாமா..."

என்னிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியே நடந்தான்.

வத்சலா கண் கலங்கி விட்டாள். எனக்கு மனம் என்னவோ செய்தது!

இப்போது அறையைப் பார்த்தேன். அண்டாவை வெளியே வைத்து விட்டு, நாற்காலியைப் பரண்மேல் போட்டால் இன்னும் ஒருவர் தங்கலாம் என்று தோன்றியது! ●



"நாம ஓடிப் போயிடலாமா டார்லிங்?"

"ஓ கே... எங்கே போகலாம் சொல்லுங்கள்!"

"நீ உன் வீட்டுக்கும் நான் என் வீட்டுக்கும்!"

– நெற்குப்பை கி. மனோகரன்

பக்தன், பகவானுக்கு தாரித்ரியம் உண்டு என்று அடித்துச் சொன்னதும் அவன் விதண்டாவாதம் பண்ணவில்லை.

"எங்கே? எனக்கு ஏது தாரித்ரியம்...?'' என்று கேட்டான்.

"உன்னை மாதிரி இன்னொருத்தனைக் காட்டு..." என்றான் பக்தன்.

பகவான் பதிலே சொல்லவில்லை! வாயை மூடிக் கொண்டு விட்டான்!

அவன் வாயை மூடிக் கொண்டதைப் பார்த்ததும் இவருக்கு (பக்தருக்கு) தைரியம் வந்துவிட்டது:

"இந்த விஷயத்திலே- உனக்குச் சமானமானவன் உளன் என்கிற விஷயத்திலே- தாரித்ரியம் நிறைய இருக்கிறதே...'' என்றார்.

"உண்டு உண்டு" என்று ஒப்புக் கொண்டான் பரமாத்மா. ஏனென்றால் தன்னைப் போல் இன்னொருவனை அவனால் காட்ட முடியவில்லை அல்லவா...!

''உனக்கு ஒப்பார்தான் இல்லை; மிக்கார் உண்டென்றால் காட்டு...''- இது பக்தனின் அடுத்த கேள்வி. மிக்காரும் இல்லை... என்பதே பதிலானதனாலே பகவானிடத்திலே பதிலும் இல்லை.

"இப்போது நான் அர்ச்சனை பண்ணப் போகிறேன். வாயை மூடிக் கொண்டு கேட்டுக் கொண்டிருக்க வேண்டும்..." என்றார் பக்தர்.

பரமாத்மாவுக்கு ஒரே சந்தோஷம்! அவனுடைய சர்வேசரத்வத்தைத் தெரிவிக்கும்படியான அர்ச்சனை அல்லவா அது!

விஷ்ணு என்கிற பெயரினாலே சொல்லப்படுகிற குணங்களில் ஒன்று இந்த சர்வேசரத்வம்.

விஷ்ணு புராணத்திலே பராசர மஹரிஷியைப் பார்த்து மைத்ரேயர் கேள்வி கேட்கிறார்:

இந்த உலகம் எங்கிருந்து வந்தது?

எதனால் ரக்ஷிக்கப்படுகிறது?

இதற்கெல்லாம் காரணம் யார்...?

இதற்கு ஒரு சுலோகத்தில் பராசரர் பதில் சொல்கிறார்:

"ஹே மைத்ரேயா... ஒவ்வொன்றாகச் சொல்லி 'இதற்கெல்லாம் காரணம் யார்' என்று கேட்டாயே... அத்தனையும் விஷ்ணுவிடமிருந்து தோன்றின. வேறெங்கிருந்தோ கொண்டு வந்து இவற்றையெல்லாம் அவன் உண்டாக்கவில்லை. அவனுக்குள்ளிருந்தே தான் யாவும் தோன்றின. ஜகத் மொத்தமும் அவனிடத்திலேயேதான் இருக்கிறது.... ஜகத்துக்கே காரணமானவன் விஷ்ணுதான்..."

சர்வக்ஞனான எம்பெருமானே விஷ்ணு சப்தத்தினாலே சொல்லப்படுகிறான்.

அடுத்த குணம் ஸ்ரீயஃப்பதித்வம். இதையும் விஷ்ணுபுராணத்திலிருந்துதான் ஆசார்யர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள்:

மஹாலக்ஷ்மிக்கு அவன் பதி. - இப்படிச் சொல்லும்போது எல்லாருக்கும் ஒரு சந்தேகம். 'சர்வ வியாபியாய் எல்லா பதார்த்தங்களிலேயும் பகவான் இருக்கிறான் என்று சாஸ்திரம் சொல்கிறதே... அவனுடைய தர்ம பத்னியான மஹாலக்ஷ்மியோ வைகுண்டத்திலே உட்கார்ந்திருக்கிறாள். இவன் எல்லா பதார்த்தங்களிலேயும் இருக்கிறான்... அது எப்படி...? அவள் எல்லா பதார்த்தங்களிலேயும் எப்படி இருக்க முடியும்?...' என்று சந்தேகம் வருகிறது. 'அப்படியானால் அவள் மட்டும் வைகுண்டத்திலே தனியாக உட்கார்ந்திருக்கிறாளா? எப்போது அவளைப் பார்க்க வேண்டும் என்று தோன்றுகிறதோ அப்போது மட்டும் போய்ப் பார்த்துவிட்டு வருகிறானோ...?' என்று நினைக்கத் தோன்றுகிறது!

மைத்ரேயருக்குப் பராசரர் விளக்கம் சொல்கிறார்:

எப்படி சர்வ வியாபியாய் எல்லா பதார்த்தங்களிலேயும் நிறைந்திருக்கிறானோ மஹாவிஷ்ணு, அப்படியே அவளும் (லக்ஷ்மியும்) அவனுடன் சர்வ பதார்த்தங்களிலேயும் நிறைந்திருக்கிறாள். அதனாலே நாராயணனைச் சொன்னவிடமெல்லாம் லக்ஷ்மியையும் சொல்வதாகவே ஆகிறது.

'நாராயணன் வந்தான்' என்று சொன்னால், லக்ஷ்மியோடு வந்தான் என்றுதான் அர்த்தம். தனித்து நாராயணன் வந்தான் என்று பொருளே அல்ல...


ஸ்ரீசூக்தம் இருக்கிறது. லக்ஷ்மியுடைய சூக்தம் அது. ஆனால், அது யாரிடத்திலே என்ன பிரார்த்தனை பண்ணுகிறது என்று பார்த்தால், 'ஹே ஜாதவேதா! விஷ்ணு! நாரா

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

யணா! உன்னிடத்திலே இருக்கும்படியான லக்ஷ்மியை என்னிடத்தில் இருக்கும்படியாகப் பண்ணு...' என்கிறது!

சூக்தம் ஸ்ரீ சூக்தம்; பிரார்த்தனையோ நாராயணனிடத்திலே! அவனுடைய பெருமையெல்லாம் அவளிடத்திலே. அவளுடைய பெருமையெல்லாம் அவனிடத்திலே!

இதைப் பாஞ்சராத்ர ஆகமத்திலே பகவானே அழகாகச் சொல்கிறான். தன்னை பூஜை பண்ண வேண்டிய விதானம்-தன்னை ஆராதனம் பண்ண வேண்டிய விதானத்தை-பகவானே சொல்கிறான். ஐந்து ராத்திரிகளிலே அவன் சொன்ன விளக்கம் பாஞ்சராத்ர ஆகமம். பல வகை ஆகமங்கள் உண்டு. ஒவ்வொன்றையும் ஒவ்வொரு ஸ்தலத்திலே கடைப்பிடித்து அதன்படி முறையாக பூஜை, வழிபாடு நடத்துவார்கள். மட்டபள்ளி, திருப்பதி க்ஷேத்ரங்களில் வைகாசை ஆகமம். ஸ்ரீரங்கம்-



காஞ்சியில் பாஞ்சராத்ர ஆகமம்- இப்படி பூர்விகத்திலேயிருந்து எந்த ஆகமப்படி வந்திருக்கிறதோ, அந்தந்த கோவிலில் அப்படி அப்படி அனுஷ்டானம்...

இப்படிப்பட்ட பாஞ்சராத்ர ஆகமத்தில் தன்னைப் பற்றித் தானே சொல்லிக் கொள்கிறான்.

"இந்த லக்ஷ்மி-நாராயண இரட்டை இருக்கிறதே... இது ரொம்ப சூக்ஷ்மமானது. ஒன்றை இட்டு ஒன்றைச் சொல்ல வேண்டும்...

"இந்த மிதுனம் இப்படி சூக்ஷ்மமாக இருக்கிறதே... இது எப்பொழுதிலிருந்து இப்படி இரட்டையாக இருக்கிறது...?' என்று கேட்டால் சொல்ல முடியுமா?

அதற்கும் அவனே பதில் சொல்கிறான்: "ஆதியிலிருந்தே ஒன்றோடொன்று சேர்ந்து இருப்பதனாலே இந்த இரட்டையைப் பிரிக்காமல் சேர்ந்தே அனுபவிக்க வேண்டும். இந்த தம்பதி பிரிக்க முடியாத தம்பதி-சேர்ந்தே இருக்கக் கூடியவர்கள்."

இஞ்சிமேட்டு அழகியசிங்கர் பல மகான்களைத் தோற்றுவித்த மகான் ஆவார்.

அப்படிப்பட்டவர் ரொம்ப அழகாகச் சொல்வார்:

"ஆசார்யருக்கு ஆசார்யருக்கு ஆசார்யர் யார்...? என்று கேட்டால், லக்ஷ்மிநாராயணன்தான்..." என்பார்.

"இப்படி ஆசார்ய பரம்பரையை வகுத்துக் கொண்டே போனோமானால் லக்ஷ்மியோடு சேர்ந்திருக்கும்படியான நாராயணன் நமக்கு குரு. இவர்களைப் பிரிக்காதே; சேர்த்தே அனுபவி!" என்பார்.

"பிரித்தால் என்ன ஆகும்...?"

"அனர்த்தப்படுவாய்!"

ராவணன் என்ன பண்ணினான்...? சீதையை அபகரித்தான். ராமனிடத்திலே அவனுக்கு பக்தி இல்லை. லக்ஷ்மியை மட்டும் காதலித்தான். அவன் என்ன ஆனான்...? கிளையோடு தானும் மாண்டான்! அவன் குலமே அழிந்தது! இலங்கையே அழிந்தது! ஏன்...? அவன் தம்பதியைப் பிரித்ததனாலே...

அவன் தங்கை இருக்கிறானே சூர்ப்பனகை... அவள் என்ன பண்ணினாள்...? ராமனையே வரித்தாள்; மூக்கறுபட்டு பங்கப்பட்டுப் போனாள்!

ஆகையினாலே பிரித்தவர்களுக்கு பங்கம். சேர்த்து வைத்த விபீஷணன் ராஜ்ய ஸ்ரீயுடன் வாழ்ந்தான்...

அந்த தம்பதிகளைச் சேர்த்து வைக்கக் கூடியவர்களுக்குத்தான் பெருமை ஏற்படுமேயொழிய, பிரித்து வைக்கக் கூடியவர்களுக்கு ஒரு நாளும் பெருமை ஏற்படாது.


அதனால்தான் அஹோபிலத்திலே லக்ஷ்மி நரசிம்ஹன், அவள் எழுந்திராத வண்ணம் மடியிலே இறுத்தி கையாலே அணைத்துக் கொண்டிருக்கிறான். அவள் எங்கே எழுந்து போக முடியும்...? அவன் போனால்தான் அவளாலே போக முடியும்! அவளும் அவனைச் சேர்த்து அணைத்திருக்கிறாள்! இப்படி இருவரும் சேர்ந்து நிற்கிற அழகே அழகு! மாலோலன் என்று அந்த நரசிம்ஹனுக்குப் பெயர்.

மா! என்றால் லக்ஷ்மி. லக்ஷ்மி லோலனாய் எப்போதும் இருக்கிறான் பகவான். அதனால் நமக்குப் பலன் சுத்தம்... ஏனென்றால் அவன் எப்போதும் சந்தோஷமாக இருக்கிறானே! அவன் கோபமாக இருந்தால் நமக்குக் காரியம் ஆகுமா...? அவன் லக்ஷ்மியோடு ஆனந்தமாக இருக்கிற சமயத்திலேதான் நமக்கு எல்லாம் பலிக்கும்!

ராமதாஸர்கூட "அம்மா, தல்லி! நீ சொல்லு உன் பர்த்தாவினிடத்திலே... என்னை ரக்ஷிக்கும்படி சொல்லு..." என்று கேட்டுக் கொள்கிறார்.

காராகிருஹத்திலே ராமதாஸருக்குக் 'கொரடா தப்பை' (பலமான அடி) கிடைத்தது. அந்த அடிதாளாமல் பகவானை ஏசிவிடுகிறார் அவர்: "உனக்கு இவ்வளவு அழகான ஆபரணங்களைப் போட்டிருக்கிறேனே... எதற்கு இவ்வளவு செலவழித்தேன் என்று நினைத்தாய்...? இந்த நகைகளை உன் பாட்டனா செய்து போட்டான்? சீதம்மாவுக்கு, புளியங்கொழுந்து போலிருக்கும்படியான அழகான பதக்கம் பண்ணிப் போட்டிருக்கிறேனே... உன் பத்னியை சற்று நேரத்துக்கொருதரம் அழகு பார்க்கிறாயே...? அந்த ஆபரணத்தை என்ன உன் மாமனார் ஜனகமகாராஜரா பண்ணிப் போட்டார்?"

-இப்படியே ஒவ்வொரு ஆபரணத்தின் பெயராகச் சொல்லிச் சொல்லி கேள்வி கேட்டுவிடுகிறார் ராமதாஸர். ஆபரணப்



"என்னடா நியூஸ் பேப்பரை நீட்டறே?"

"சூடாக ஏதாவது கொண்டான்னீங்களே! கேசரிக்கு எதிராக மம்தா பானர்ஜி அறிக்கை வந்திருக்கு... படிச்சுப் பாருங்க... செம சூடு!"

— உ. ராஜாஜி

அருள்வாக்கு

பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத அழகுள்ளது சந்திரன். நிலாச் சாப்பாடு, நிலாவில் பாட்டுக் கச்சேரி எல்லாம் வைத்துக் கொண்டு சந்தோஷப்படுகிறோம். இருந்தாலும் எலெக்ட்ரிக் ஜோடனை அதிகமாகிவிட்ட இக் காலத்தவர்களுக்குச் சந்திரனின் அருமை தெரிந்திருக்க நியாயமில்லை. சீதளமான அதன் பிரகாசம் அலாதியானது. கண்ணை உறுத்தாத ஒளி வாய்ந்தது சந்திரன். அதிலும் பௌர்ணமி சந்திரனின் அழகு விசேஷம். இந்த அழகு விசேஷமாகத் தெரிய வேண்டும் என்பதற்கே ஈசுவர நியதியில் முப்பது நாட்களுக்கு ஒரு முறைதான் பூர்ணிமை வருகிறது. தினமும் பௌர்ணமியிருந்தால் பூரண சந்திரனில் நாம் இத்தனை சந்தோஷம் அடைய முடியாது. இந்தப் பூரண சந்திர மண்டலத்தை முதலில் தியானித்து, அதில் அம்பாளைத் தியானிக்க வேண்டும்.

பூரண சந்திரனைத் தியானிக்கிறபோதே மனசும் அது போல் குளிர்ந்து போகிறது. அங்கே துக்கத்துக்கும் த்வேஷத்துக்கும் இடமில்லாமல் சாந்தமாகிறது. வெளிப் பிரபஞ்சமெல்லாம் ஜீவனுக்குள்ளே இருக்கிறது. அண்டத்திலுள்ளதெல்லாம் பிண்டத்திலும் உண்டு என்பார்கள். சகல ஜீவ ராசிகளுக்கும் அந்தராத்மாவாக இருக்கிற பராசக்தியின் மனஸே சந்திரனாக ஆகியிருக்கிறது.'புருஷ ஸூக்த'த்தில் இப்படித்தான் சொல்லியிருக்கிறது. இதனால் ஜீவராசிகளின் மனத்துக்கும் சந்திரனுக்கும் சம்பந்தம் இருக்கிறது. இங்கிலீஷில் சித்தப் பிரமை பிடித்தவர்களை Lunatic என்கிறார்கள். Lunar என்றாலே சந்திரனைப் பற்றியது என்றுதான் அர்த்தம். இது சித்தத்தின் விபரீத நிலையைச் சந்திரனோடு சேர்த்துச் சொல்கிறது. சித்தசுத்திக்கு அதே சந்திர மண்டலத்தில் அம்பாள் தியானத்தை நம் சாஸ்திரங்கள் சொல்கின்றன.

சந்திரனில் அம்பாள் அமர்ந்திருப்பதாகத் தியானிக்க வேண்டும். தியானம் செய்கிறவனுக்கோ புலித் தோலை ஆசனமாக விதித்திருக்கிறது. சந்திரனுக்கு நேர் எதிராக புலி என்றால் உக்கிரமாக இருக்கிறது. புலி எப்படி தன் இலட்சியமான இரையை ஒரே பாய்ச்சலில் பிடித்து விடுகிறதோ, அப்படி நம் தியான லட்சியத்தை மனசு விடாப் பிடியாகப்பிடித்துக் கொள்வதற்கே வியாக்ராஸனம் விதித்திருக்கிறது. அதில் அமர்ந்து அம்பாளைச் சந்திர மண்டல வாஸினியாக தியானித்தால் நம் மனமும் அவள் மனத்திலிருந்து வந்த சந்திரனைப்போல் குளிர்ச்சி அடையும். சந்திரன் தாபத்தைப் போக்குவது போல் நம் தாபமும் சமனமாகும். சந்திரிகையில் இருட்டு விலகுகிற மாதிரி நம் அஞ்ஞானம் விலகும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.



பெயரைச் சொல்வது, அவர் பண்ணியதா, இவர் பண்ணியதா..? என்று கேள்வி எழுப்புவது....

–இப்படியெல்லாம் பேசிவிட்டு 'ஐயோ! சிறையில் வாங்கிய அடியின் வலி தாளாமல் சொல்லி விட்டேன்...'' என்று ஒரு நாள் மன்னிப்பு வேண்டி சீதம்மாவைப் பாடுகிறார். 'நன்னுப்ரோவ மனி செப்பவே...' என்று... 'என்னை ரக்ஷிக்கும்படியாக நீ எடுத்துச் சொல்லு...' என்று லக்ஷ்மியினிடத்திலே பிரார்த்தனை செய்கிறார். 'உன்னோடு அவன் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருக்கும் போது எடுத்துச் சொல்லு...' என்கிறார்!

மாலோலன்– எப்போதும் சந்தோஷமாக இருப்பவன். அவனிடத்திலே நாம் பிரார்த்தனை செய்தால் உடனே கைகூடும். ஆகையினாலே பிரிக்காதே; சேர்த்தே அனுபவி... என்கிறது சாஸ்திரம்.

நம் திருவேங்கடமுடையானிடத்திலும் நாம் இதைப் பார்க்கலாம். ஸ்ரீயை எப்போதும் தரித்திருக்கிறான்.

அவனுடைய வக்ஷஸ்தலத்திலிருக்கிற லக்ஷ்மியினுடைய கடாக்ஷம், நமக்கு எப்போதும் இருக்க வேண்டும். லக்ஷ்மி கடாக்ஷம் வழியாக வரக்கூடிய செல்வம்தான் நிலையானது. அழியாதது! 'நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்' என்றது இதைத்தான்....

தினையளவும் திருமகளைப் பிரியாதவன் பெருமான். தினை என்கிற தானியம் இருக்கிறது பாருங்கள்... மிகச் சிறியது. அந்த அளவுக்குக் கூட அவன் லக்ஷ்மியை விட்டுப் பிரிவதில்லை; சேர்ந்தே இருக்கிறான்!

மஹாபாவி ஒருவன் பகவானைப் பார்க்க வேண்டும் என்று வருகிறான்... பகவான் அவனைப் பார்க்க விரும்பாமல் தலையைக் குனிந்து கொண்டுவிட்டானாம்... இதைக் கவனித்த மஹாலக்ஷ்மி என்ன செய்தாள் தெரியுமா..?

(தொடரும்)



• வண்ணப்படம் : ஜீன்டு

நான் சொல்ல மாட்டேன்!

முன்னாள் பிரதமரும் சமாஜ்வாதி ஜனதா கட்சித் தலைவருமான சந்திரசேகர், தேர்தலுக்குச் சம்பந்தமில்லாத ஏதோ பர்ஸனல் விஷயமாகக் கடந்த வாரம் புதுதில்லி வந்திருந்தார். சமாஜ்வாதி ஜனதா இன்னமும் அரசியல் கட்சியாகத்தான் இருக்கிறதென்றாலும், சந்திரசேகர் தன்னளவில் அரசியலை விட்டு மிக விலகி இருப்பதாகவே தெரிகிறது.

வட இந்தியப் பத்திரிகைகளுக்கு ரெகுலராக அரசியல் விமர்சனக் கட்டுரைகள் எழுதிக் கொண்டிருக்கும் சந்திரசேகர், "என் கருத்துக்களை நீங்கள் (பத்திரிகையாளர்கள்) சரிவர வெளியிடாத காரணத்தால்தான் நானே இனி எழுதுவது என்று தீர்மானித்து விட்டேன்!" என்கிறார் தமாஷாக.

இந்தத் தேர்தலில் சாதி அரசியல்தான் புகுந்து விளையாடப் போகிறது என்பது சந்திரசேகரின் கணிப்பு.

"இன, மதவாதப் பேச்சுக்கள் எத்தனை தூரம் ஓங்கி ஒலிக்கப் போகிறது பாருங்கள். எந்தெந்தக் கட்சிகள் என்று நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் எந்த சாதிப் பேச்சை வைத்து அக் கட்சிகள் வோட்டு வாங்கப் போகிறதோ, அதே சாதி, இன மதவாதப் போக்கினாலேயே அவை அழியப்போவதும் உறுதி" என்றார் படு சீரியஸாக.

சந்திரசேகருக்கு ஏற்கெனவே 'நிழல் காங்கிரஸ்காரர்' என்ற பட்டப் பெயர் உண்டு.

"ஒருவேளை மதச்சார்பற்ற கட்சிகள் ஒன்றுசேர்ந்து ஆட்சியமைக்க வாய்ப்பு உருவானால் - பிரச்னை இல்லாத உங்களைத் தலைமை தாங்கக் கூப்பிட்டால் சம்மதிப்பீர்களா?" என்று பத்திரிகையாளர்கள் கேட்டபோது புன்னகையுடன் தலையசைத்து, "கருத்துச் சொல்ல விருப்பமில்லை" என்று கூறி விட்டார்.

அவருக்கா தெரியாது, இதெல்லாம் நடக்கிற கதை இல்லை என்று!

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621.
Annual Subscription : India : Rs. 250/-; Overseas : Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 125/-; Overseas : Rs. 800/- (Air Mail)

பார்க் டவுன் பெனிபிட் பண்டு லிமிடெட்

மத்திய அரசாங்க அங்கீகாரம் பெற்ற ''நிதி''கம்பெனி
துவக்கம் 1985. பதிவு எண்: 11600/85

பதிவு அலுவலகம்

223, தெற்கு தங்க சாலை தெரு, சென்னை - 600 003 ✆ 5352676, 5354354

கிளைகள்

2, கிழக்கு மாட வீதி, திருவான்மியூர், சென்னை - 600 041. ✆ 413582, 416417

995-P II அவின்யூ, 12வது மெயின் ரோடு ஜங்ஷன்,
அண்ணாநகர், சென்னை - 600 040 ✆ 6262656, 6280750

73 & 74 ஆற்காடு ரோடு, முதல் மாடி கோடம்பாக்கம்,
சென்னை - 600 024. ✆ 4846528

215, எம்.டி.எச். ரோடு, முதல் மாடி அம்பத்தூர்,
சென்னை 600 053, ✆ 6357725

73, ரங்கநாதன் தெரு, பேஸ்மெண்ட், தியாகராயர் நகர்,
சென்னை - 600 017, ✆ 4344319

537, T.H.ரோடு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை - 600 021
✆ 5965208, 5965251

22. நந்திகோயில் தெரு, தெப்பக்குளம், திருச்சி - 620 002
✆ 0413 706187, 706681, 706368



- நகைகள் மற்றும் வீடுகளின் பேரில் கடன் வழங்கப்படும்



நிர்வாக இயக்குநர்
Dr. P. பாலசுப்ரமணியம் B.Sc.,

இயக்குநர் குழு தலைவர்
Dr. R. விவேகானந்தன் B.com., MBA.,

அலுவலக நேரம்

காலை 8.30 மணி முதல் 12.30 மணி வரை மாலை 2.00 மணி முதல் 6.00 மணி வரை

ஞாயிறு: காலை 8.30 மணி முதல் 12.00 மணி வரை

• வார விடுமுறை வெள்ளிக்கிழமை •

நற்செய்தி

ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் இயற்றியருளிய மகாமந்திரமான **சண்முக கவசத்திற்குச்** சித்தாந்தச் செல்வர் பேராசிரியர் டாக்டர் ப. இராமன் அவர்கள் தெளிவான பொழிப்புரையும் விளக்க உரையும் எழுதியுள்ளார்கள். பார்க் டவுன் பெனிபிட் பண்டு லிமிடெட் சார்பில் இந்நூல் வெளியிடப்படுகிறது. எங்கள் கிளைகள் அனைத்திலும் உறுப்பினர்களுக்கு மானிய விலை ரூ.2-ல் கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392/ 97 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka